Q23:38.211AV
N28
58967
58967

23:38-2 1140
N28

திருமுது

# விருத்தாசல

திருக்கைலாசபரம்பரை மெய்கண்டசந்தான

துறையூரிலிருக்கும்

ஸ்ரீ சிவப்பிரகாசதேசிகாதீனம் இரண்டாம்பட்டம்

ஞானக்கூத்தசிவப்பிரகாசதேசிகர்

அருளிச்செய்தது.

---

இஃது

திருக்கைலாசபரம்பரை பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலைய தேசிகாதீனத்துச்

சிதம்பரம் ஈசானியமடம்

## ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள்

மாணாக்கர்களில் ஒருவராகிய

## திருவேங்கடவுபாத்தியாயரால்

திருத்திப்புதுக்கப்பட்ட உரையோடு,

இரத்தின மங்களம்,

ஷ. கோவிந்தராஜு முதலியாரால்,

பதிப்பிக்கப்பட்டது.

---

1928.

3:38-2114.V
N28
58727



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF ... MADRAS 14 A

1. விருத்தாசலஸ்தலமான்மியம்
2. திருமுதுகுன்றத் தேவாரப்பதிகங்கள்
3. சிவக்ஷேத்திரக்கோவைத்திருவெண்பா
4. பழமலையந்தாதி
5. இராமலிங்கசுவாமிகள் திருமுதுகுன்றப்பதிகம்
6. பெரியநாயகியம்மை விருத்தம்
7. பெரியநாயகியம்மை கட்டளைக்கலித்துறை
8. பெரியநாயகியம்மை பதிகம்
9. பிக்ஷாடன நவமணிமாலை
10. ஞானக்கூத்தசிவப்பிரகாச தேசிகர்வரலாறு

இவை பாராயணத்திற்கு உபயோகமாக
இதிற் சேர்க்கப்பட்டுள்ளன.

இதன் விலை ரூபா 1 8 0

## ...வகராதி.


| | சருக்கம். | பாடற்றொகை |
|---|---|---|
| 1 | பாயிரம் ... ... ... ... | 19 |
| 121 | கிரிச்சருக்கம் ... ... ... | 39 |
| 138 | தலச்சருக்கம் ... ... ... | 15 |
| 148 | தீர்த்தச்சருக்கம் ... ... | 31 |
| 165 | விதர்க்கணச்சருக்கம் ... ... | 23 |
| 177 | விபசத்துச்சருக்கம் ... ... | 45 |
| 198 | கிருத்தச்சருக்கம் ... ... ... | 24 |
| 210 | அகத்தியச்சருக்கம் ... ... | 14 |
| 218 | கலிங்கச்சருக்கம் ... ... | 21 |
| 228 | கலியகல்சருக்கம் ... ... ... | 20 |
| 237 | சுவேதச்சருக்கம் ... ... ... | 20 |
| 247 | அன்பர்பூசைச்சருக்கம் ... ... ... | 15 |
| 255 | சிவபூசாவிதிச்சருக்கம் ... ... ... | 44 |
| 276 | விபூதிச்சருக்கம்... ... ... | 18 |
| 285 | உருத்திராக்கச்சருக்கம்... ... ... | 17 |
| 295 | சிவகீர்த்திச்சருக்கம் ... ... | 10 |
| 301 | கோபர்வதச்சருக்கம் ... ... ... | 21 |
| 312 | பிருடிச்சருக்கம் ... ... | 12 |
| 318 | சசிவன்னச்சருக்கம் ... ... ... | 30 |




சிவமயம்.

# விருத்தாசல ஸ்தலமான்மியம்

### விநாயகர் காப்பு.

வெண்பா.

உலகிற் கொருமணியாம் உம்பர்மி...ாழும் விருத்தா
சலமகிமை வாசகமாய்ச் சாற்ற ...நிலவணியும்
சுந்தரனின்மைந்தாவெனை... ...ந்தமுங்காத்தருள
வந்தருள்வா யானைமுக வா...

## 1-வது கிரிப்படலம்.

நைமிசாரண்ய ரிஷிகளிடம் சூதமகாமுனிவர்...ன்றி புகல்வதாவது: ஹே! ரிஷிகுமாரர்களே! பூலோகத்தில் திருமுதுகுன்றமென்னும் விருத்தகிரியானது விருத்தாசலமென் கிற தலமானது ஆதியில் சர்வேசுவரன் சங்கரித்தருளியதை உங்கட்கு விபரத்தை மொழிகின்றேன் கவனியுங்களெனக் கூறுவார்:—அத்தகைய விருத்தாசலமானது, கைலைக்குச் சமானமானது இதைத்தெரிசித்தால் அந்த ஜெகதீசனைத் தெரிசித்தபலன் கிடைத்து சொர்க்கமேயடைகுவார், தேவர்களும், ரிஷிகளும், யோகிகளும், சித்தர்களும் வசிப்பார்கள் வேதத்திற்குச் சமானமானது, அதனது வெல்லையோ ஐந்து காததூரமாகும், மூன்றுயுகங்களிலு மெத்தன்மைத் தாயினவோ அதேபடி இக்கலியிலும் பேதமில்லை, இங்கு வசிப

போர்கட்குத் திரிகுணபேதம், வியாதி, பசி, தீவினை, நவக்ரக பீடை, தரித்ரம், இராக்கத வதையுமில்லை, பிரமதேவர் முற்காலத்தில் ஜலத்தை சிருஷ்டித்து, அதில் தன் வீரியத்தை விட முட்டையாகவும், அதனை யுடைத்ததால் முக்குணமாயாக, அதனுள் பஞ்ச பூதங்களுண்டாயின, மகாவிஷ்ணு மூர்த்தியின் இருகாதிலுள்ள குறும்பியிடம், மதுகைடவரென்கிற அரக்கருற்பவித்து, அவ் விஷ்ணுவையே எதிர்த்துத் தோல்வியடையச்செய்து, அன்னவர் கேட்டவாறு தங் கையில் நம்மிருவர் மாளவேண்டுமென, அப்படியேயென, உடனே அவ்வசுரர்களைக் கொன்றனர், அவர்களது மாமிசமான மேதையை, ப்ரமன் சிருஷ்டித்த ஜலத்தில் விட்டதால் இப்பூமிக்கு மேதினி எனப் பெயராகியது, அந்த மாமிசமும் ஜலமு மொன்றாயிருக்கும்படி ப்ரமா ஈசனை ப்ரார்த்திக்க, ஜெகதீசன் கிரிவடிவமாய் ஜ்வலித்தனர், அதுகண்ட ப்ரமன் செருக்கடைந்த அநேக மலைகளைச் சிருட்டித்துப்பரவ அனுப்ப அவைகட் கிடமில்லாமல் வருந்துரைக்க, விதி அஞ்சினனாய் ஈஸ்வரனை ஸ்மரிக்க, சுவாமி அவைகளை நிலைக்கச்செய்து ப்ரமன் கோரியவாறு விருத்தகிரியாக இப்பூமிக் காதாரமாக நிலைத்திட யருள்கூர்ந்து, எக்காலத்திலும் பஞ்ச லிங்கங்களும் மாறாகவிருக்கும் அவைகளில் நமது விருத்தகிரி பிரதமலிங்கமாக நாவலந்தீவிற் பிரகாசிக்கும், இதனைச் சூழ்ந்த நான்கு திசைகளிலுள்ள நான்கு தீவுகளிலும், மற்ற நான்கு லிங்கங்களும் ப்ரகாசிக்கும், அதனாலேயே இதற்கு பழமலையெனப் பெயராகும். அன்றியும் இங்ஙன் வருவோர் தீவினைகளையும் போக்கி சொர்க்கமே தருவோம், எல்வித வியாதி



களும் பைசாசபீடித முதலானவைகளும் போக்கி ரக்ஷிக்கக் கடவோமென மறைந்தருளினர் ப்ரமதேவன் மனக்களிப்புடன் தன் சத்தியலோக மடைந்தனர்.

## 2-வது தலப்படலம்.

பிரம்மதேவருக்கு அனுக்ரஹித்த இச்சரிதையைக்கேட்டு களிப்படைந்தவரும் பிறர்க்குத் தெரிவித்தோரும், திரிகாலங்களிற் சிந்திப்போரும், இறந்தாராயினும் மாண்டனரல்லரென்று நான்மறைகளை யுணர்ந்த நாதசன்மா மொழிகின்றார். எக்காலத்தும் இடைவிட்டகலாது சிந்தித்திருப்பவர்கள் நீங்காத் துன்பமு மகலும், பவக்கடலி லழுந்தார்கள் இங்கு வசிப்பவர்களும், இதன் பெருமையைக் கேள்வியுற்று வந்திறப்பவர்களும், பிறப்பவர்களும், சிவசொரூப மாவாரென்பது திண்ணம். துர்க்கிருத்யஞ்செய்தவர்கள், ஸ்திரீஹத்தி, சிசுஹத்தி, பிரம்மஹத்தி முதலானவை செய்தவர்களும், குருமாதை பிறர்தாரம் விரும்பின் சண்டாளர்கள் அங்கிருக்கும் திருமணி முத்தநதியில் ஸ்நானஞ்செய்து பழமலைநாதரைத் தரிசித்து, விபூதி படுக்கையிற் சயனித்து, மூன்று வருடபரியந்தம் வசிப்பாராகில் சிவசொரூபமாவார். எத்தகைய சண்டாளத்துவம் புரினும் இத்தலத்தைச் சேவித்தால் முத்தியே யடைகுவார். யானைமுத லெறும்பீறாக உள்ளவைகட்கு பிராரத்வ முடிந்திருந்தால் பழமலைநாதர் அவைகட்குபதேசிக்கவும், பெரியநாயகி யம்மையார் தன் கையாற் றடவி முன்றானையால் வீசிப் பிறவிக்களையை மாற்றுவார். இங்கு வினுவிற் பிராணனை விடுவோர் வைரவக்கடவுளால் குத்துண்பார், சித்தியடைய மாட்டனர் வேறு தலங்களிற்

செய்த பாதகங்களானது இவ்விடம் நீங்கவேண்டுமேயல்லது மற்றெவ்விடமும் நீங்கா, பிராமணர்கள். தலைமைபெற்ற தவசிகள், ஒரு பாதகஞ்செய்தாலவர்கள் மூடராகப்பிறந்து அந்தியத்தில் வைரவருடைய சூலத்தினாற் குத்துண்டு வருந்துவார்கள். இங்கு பரபாசாரியரால், பஞ்சாக்ஷரத்தை உபதேசம்பெற்று தினம் ஐயாயிரத்தைந்நூறுதரஞ் செபித்தாலும், அக்ஷரலக்ஷம் ஜெபித்தாலும் முந்தியபாவங்கள் தொலைந்து சாரூபமடைகுவார். இத்தலத்தில் நம்பிக்கையில்லாமல், இதை விடுத்துக் காசித்தலத் தேகிடினும் பயனேயில்லை; மோக்ஷமுமில்லை. எவ்வித கூன், குருடு, செவிடு, பேடு, ஊமை, பல வியாதியஸ்தர், அவயவக்குறைவானவர் திருமணிமுத்த நதியில் மூழ்கி பழமலை நாதரையும், பெரிய நாயகியும் தெரிசித்தால் யாவுந் தொலையும் மணல், நக்ஷத்ரங்கள், மழைத் தாரைகளை எண்ணினும், வரம்பெற்றோரை அளவிட்டுச் சொல்லவேயாகா; இத்தலத்திற்கு எத்தலமு மிணையில்லையென்பது கண்டிதமாய்ச் சொல்லலாம். அடியார்கட்கு மடாலயங்கட்டித் தருவாராகில் கற்பகாலங் கைலாயத்தில் வாழ்வார்கள்.

## 3-வது தீர்த்தப்படலம்.

சந்நிதிக்குக் கீழ்ப்புறத்தில், தேவர், முனிவர், அஷ்டதிக்குப்பாலகா, சித்தர் யோகிகள் முதல் யாவரும் ஆருதாரங்களின் வழிகளைத் திறந்து, சாக்ஷாத் சொரூபத்தை த்யானித்த சமயம் பிரமானந்தப் பெருக்குண்டாயிற்று, அதுவேதான் மணிமுத்தாநதி எனப் பெயரமைந்தது சிற்சத்திசொரூபமாகிய நதி, பாதகர்கட்கு அக்னிபோன்றும் புண்ணியர்



கட்கு சீதளமாகியும் தோன்றும், அந்நதியின் பரிசம்பட்ட சகலமும் நற்கதியேயடையும்! அதில் மூழ்குவோர்கள் சிவபெருமானின் அடியார்களாகுவார்கள். சகலவருத்தமும் நீங்கும், தரித்ரமும் கஷ்டமும் நீங்கி, ஐஸ்வரியங்கள் விருத்தியாகும் அஷ்டசித்தியும் மோக்ஷமுங்கிடைக்கும், சந்தானமுண்டாகும், சகல பாபகர்ம பிணிகளும் விலகும், பூமியையிழந்தவர் மறுபடியுமடைகுவர், அதில் மூழ்குங்கால் ஒருவரைநினைந்தால் அன்னவரும் பாகதியடைகுவர். கையினாலதைப் புரோக்ஷித்துக் கொண்டாலும் அருகில் வசித்திருந்தாலும் பாபகர்மந் தீரும். அமாவாசை, பௌர்ணமி, தக்ஷிணாயணம், உத்தராயணம், சங்கராந்தி, மற்ற மாதப்பிறப்புகள், ஆதிரை, வைசாக பௌர்ணமி, மாசிமகம் இவைகளில் ஸ்நானஞ்செய்தாலும், தலத்தை மூன்றுதரம் வலம்வந்தாலும் அப்பலனைச் சொல்லவே முடியாது, கங்கை, யமுனை, காவிரி, முதலாய பலநதிகளில் மூழ்கி, பலனடைவதற்குமேல் இதிலடையலாம். க்ஷயரோகி, சொத்தை பற்களுடையவன், குறைந்த கைகளையுடையவன், குஷ்டன், துர்க்கந்தசரீரன். முயலகனென்னும் வலியை யுடையவனாகிய ஆறுபேரும் அகத்தியமுனிவர் கூறினவாறு இம் மணிமுத்தா நதியில் நீராடி தம்கர்மத்தையொழித்தனர். இதற்கு த்ருஷ்டாந்தமாக சியோச்சயநகரில் சுகேசனென்னும் செட்டியிருந்தான் அவனுக்கு யாதினும் சமர்த்தர்களான ஆறு சற்புத்திரா குபேரன் போலிருந்தனர். பழமலையிற் சென்று பேறுபெற்றவர்களால்தனது மகிமையையறிந்து அந்நதியில் நீராடிநீறணிந்து, பிராம்மணருக்கு பற்பல தானமளித்து அருகிருந்தமாத்தடியி லிருந்தனர். அச்சமயம் பிறவிக் குருடனுக்கு ஒருவன்

செய்த பாதகங்களானது இவ்விடம் நீங்கவேண்டுமேயல்லது மற்றெவ்விடமும் நீங்கா, பிராமணர்கள், தலைமைபெற்ற தவசிகள், ஒரு பாதகஞ்செய்தா லவர்கள் மூடராகப்பிறந்து அந்தியத்தில் வைரவருடைய சூலத்தினாற் குத்துண்டு வருந்துவார்கள். இங்கு பராசாரியரால், பஞ்சாக்ஷரத்தை உபதேசம்பெற்று தினம் ஐயாயிரத்தைந்நூறுதரஞ் செபித்தாலும், அக்ஷரலக்ஷம் ஜெபித்தாலும் முந்தியபாவங்கள் தொலைந்து சாரூப மடைகுவார். இத்தலத்தில் நம்பிக்கை யில்லாமல், இதை விடுத்துக் காசித்தலத் தேகிடினும் பயனேயில்லை; மோக்ஷமுமில்லை. எவ்வித ஊன், குருடு, செவிடு, பேடு, ஊமை, பல வியாதியஸ்தர், அவயவக்குறைவானவர் திருமணிமுத்தா நதியில் மூழ்கி பழமலை நாதரையும், பெரிய நாயகியும் தெரிசித்தால் யாவுந் தொலையும் மணல், நக்ஷத்ரங்கள், மழைத் தாரைகளை எண்ணினும், வரம்பெற்றோரை அளவிட்டுச் சொல்லவேயாகா; இத்தலத்திற்கு எத்தலமு மிணையில்லையென்பது கண்டிதமாய்ச் சொல்லலாம். அடியார்கட்கு மடாலயங்கட்டித் தருவாராகில் கற்பகாலங் கைலாயத்தில் வாழ்வார்கள்.

## 3-வது தீர்த்தப்படலம்.

சந்நிதிக்குக் கீழ்ப்புறத்தில், தேவர், முனிவர், அஷ்டதிக்குப்பாலகர், சித்தர் யோகிகள் முதல் யாவரும் ஆருதாரங்களின் வழிகளைத் திறந்து, சாக்ஷாத் சொரூபத்தை தரிசித்த சமயம் பிரமானந்தப் பெருக்குண்டாயிற்று, அதுவே தான் மணிமுத்தாநதி எனப் பெயரமைந்தது சிற்சத்திசொரூபமாகிய நதி, பாதகர்கட்கு அக்னிபோன்றும் புண்ணியர்



கட்கு சீதளமாகியும் தோன்றும், அந்நதியின் பரிசம்பட்ட சகலமும் நற்கதியேயடையும்! அதில் மூழ்குவோர்கள் சிவபெருமானின் அடியார்களாகுவார்கள். சகலவருத்தமும் நீங்கும், தரித்ரமும் கஷ்டமும் நீங்கி, ஐஸ்வரியங்கள் விருத்தியாகும் அஷ்டசித்தியும் மோக்ஷமுங்கிடைக்கும், சந்தானமுண்டாகும், சகல பாபகர்ம பிணிகளும் விலகும், பூமியையிழந்தவர் மறுபடியுமடைகுவர், அதில் மூழ்குங்கால் ஒருவரை நினைந்தால் அன்னவரும் பரகதியடைகுவர். கையினலதைப் புரோக்ஷித்துக் கொண்டாலும் அருகில் வசித்திருந்தாலும் பாபகர்மந் தீரும். அமாவாசை, பௌர்ணிமி, தக்ஷிணாயனம், உத்தராயணம், சங்கராந்தி, மற்ற மாதப்பிறப்புகள், ஆதிரை, வைசாக பௌர்ணிமி, மாசிமகம் இவைகளில் ஸ்நானஞ்செய்தாலும், தலத்தை மூன்றுதரம் வலம்வந்தாலும் அப்பலனைச் சொல்லவே முடியாது, கங்கை, யமுனை, காவிரி, முதலாய பலநதிகளில் மூழ்கி, பலனடைவதற்குமேல் இதிலடையலாம். க்ஷயரோகி, சொத்தை பற்களுடையவன், குறைந்த கைகளையுடையவன், குஷ்டன், துர்க்கந்தசரீரன். முயலக னென்னும் வலியை யுடையவனாகிய ஆறுபேரும் அகத்தியமுனிவர் கூறினவாறு இம் மணிமுத்தா நதியில் நீராடி தம்கர்மத்தை யொழித்தனர். இதற்கு திருஷ்டாந்தமாக நியோச்சயநகரில் சுகேசனென்னும் செட்டியிருந்தான் அவனுக்கு யாதினும் சமர்த்தர்களான ஆறு சற்புத்திரா குபேரன் போலிருந்தனர். பழமலையிற் சென்று பேறுபெற்றவர்களால்தனது மகிமையையறிந்து அந்நதியில் நீராடிநீறணிந்து, பிராம்மணருக்கு பற்பல தானமளித்து அருகிருந்தமாத்தடியி லிருந்தனர். அச்சமயம் பிறவிக் குருடனுக்கு ஒருவன்

முன் வழி காட்டவந்து இந்நதியில் பயனறியாது மூழ்க, அவன் கண்கள் விளங்கியதாற் களிக்கக்கண்ட, வணிகபுத்ரராறுவரும் சந்தோஷித்து அவனை யருகிலழைத்து யாதெனக் கேட்க, கண்களடைந்தவன் சொல்லுகிறான். ஐயா, இந்நதியில் மூழ்கி எழுந்தபோது விஸ்வரூபத்துட னொருவர்வந்து காதில் யாதொரு சப்தம் புகன்றனர். யானதைக் கவனியாததால் அவரென்னைத்தேற்றி கண்கட்குயாதோ தடவினதால், குருட்டுத்தன்மை நீங்கிற்று. அவரது அழகை என்னெனப் பகர்வேன், ஆஆவென மகிழ்ந்ததை யறிந்த இவர்கள் மகிழ்ந்து தங்கள் நகர மடைந்தார்கள். அத்தலத்துள்ள வன்னி விருக்ஷத்தின் மேற்பால், ப்ரமனுற்பவித்த சித்தியானந்தகூபமென்றொரு தீர்த்தமும், அக்கினிதிசையிலொரு தீர்த்தமும், நிருதிதிசையிலே மகாவிஷ்ணு ஒரு தீர்த்தமுண்டாக்கினர். அத்தீர்த்தங்களில் ஸ்நானம் புரிந்தவர் சகலபாவ நிவாசணராகி ஸ்வர்க்கமேயடைவா ரென்பதிற் சந்தேகமேயிராதென்று முன்னோர் மொழிந்தனர்.

## 4-வது விதர்க்கணப்படலம்.

ஹே! நைமிசாரணய முனிவர்காள்! இவ்விருத்தகிரியை யடைபவர் தெய்வவிமானமேறி எங்குந்திரிவாராம். ஈசன் புகன்ற அதன் விபரத்தை உனக்கு இயம்புகிறேனென்று புகல்வதாயினார். கோசலதேசத்தில் மணிபிங்கலை நகரில் பிராமணனாகிய விபசிதனென்பவனுக்கு தாரித்ரக்கொடுமை மேலிட்டு, பசிக்குயாவர் உதவுவாரோவென வருந்தி, காடு, மலை, வனம், வனாந்திரம், குகை முதலான இடங்களில் திரிந்தும், அலைந்தும் மேடு பள்ளத்தில் வீழ்ந்தும் அலண்டு போகையில் சூரியக்ரஹணமாக, அதனால் அங்கொரு தடாகத்தில் மூழ்கி சிவார்ச்சனைபுரிந்து அப்பால்நடக்க கல், முள் தைக்க, உதிரம்வடிய, நாவரண்டு தாகக்களையாகி, பசியால் மெலிந்து ஆறுநாள் வரையிலும் அங்ஙனே திரிந்துழன்று, நாம் பிராமணனாகி, சகல வேதங்கள் படித்தும் யாது பயனென மெலிந்து, செல்வமில்லாததாலன்றோ இவ்விதம் நேர்ந்ததென துக்கப்பட்டு, பிராரத்துவத்தி லில்லாதது வருகாது, உள்ளதும் நீங்காதென சிந்தித்து வருந்தி ஏகும்போது, முன் செய்துள்ள சிவபூஜா பலத்தால், தெய்வவிமானம் வரக்கண்ட அந்தணன் மகிழ்ந்து நெருங்க, அதில் கணேசரிருக்க அவரைப் போற்றிசெய்ய கஜமுகன் மகிழ்ந்தாசீர்வதிக்க, தாம்யாரோவென அந்தணன் கேட்க, விநாயகர் யானே! பழமலைநாதருடைய கணநாதனாகும் நீ முன்செய்த தவத்தினாலெனதரிசனம் நீயடைந்தனை; யான் முற்பிறப்பி னியற்றியதைக் கேளென, பாஞ்சாலதேசத்தில் விதைய மென்னும் பட்டணத்திலிருந்த விதர்க்கணசெட்டி மகன் யான் கொடிய தாரித்ரத்தை யடைந்து வருந்தி கூலிச்சுமைகளை யெடுத்து ஜீவிப்பதாயிருந்து ஓர்நாள் ஒருவர்த்தகனுக்கு கூலிச்சுமைதாங்கி விருத்தாசலஞ் சென்றேன் அன்று மார்கழி ஆதிரைநாளாயிருந்ததால் அங்குற்ற முனீஸ்வரரைத் தெரிசித் தன்னவர்கள் மணிமுத்தாநதியில் மூழ்க யானும் குளித்து சிவனைப் பூஜித்து, இதுகாறடைந்த துயரை விட்டிருந்தேன் பிறகு மரணம் பூரித்து பாஞ்சாலமேகி சின்னுளிருக்குங்கால், எமதூதர் வந்தனர் அவர்கள் வருமுன் சிவகணங்கள்சூழ் பழமலையார் பெரியநாயகியாரோடு காக்ஷிதந்து எமதண்டனை யாகா

யென மொழிந்து வலச்செவியி லுபதேசிக்கவே எனக்கு சிவஞான முண்டாக்கிச் சென்றனர். யான் இவ்விமானமீது சதா சஞ்சரிக்கிறேனென மொழிந்து, ஏ! அந்தணா நீ அத்தலமதனுகி மணிமுத்தாநதியில் மூழ்குவாயேயாகில் என்னைப் போலாகுவையென மொழிந்து மறைந்தனர்.

## 5-வது விபசித்துப்படலம்.

கணநாதர் மொழியைக்கேட்ட விபசித்து ஆனந்தபாஷ்பம் பொங்கி அங்குள்ள ஜலையில் மூழ்கினதும் அங்குதேவ சப்தஸ்திரீகளும் அங்கிறங்கி நீராடி விமானமேறிப் போகும் சமயம் குபேரன் தங்கையின் மூக்கணி காணோமென வருந்தினர்; அதனையோர் சிச்சிலிப்பறவை உணவென்றெடுத்தேகிபிறகு அங்கிருந்த விபசித்திடம்போட அந்தவேதியன் இது யாதோவென சிந்தித்திருக்கையில், தேவஸ்திரீகள் ஒருவர்க்கொருவர் யாமெடுத்திருக்கில் ரௌரவாதியாக மடைவோமென சபதங்கூற, குபேரன் தங்கை அதனை எவரேனு மீந்தாரேயாகில் என் ஆபரணமுழுவதும் சிவாக்கினைப்படி கொடுப்பேனென, கேட்டிருந்த விபசித்தர் அங்கேகி மூக்கணியீந்தனர். கண்ட மாது மகிழ்ந்து, ஐயா, நீர் யாவர், இது உமதிடம் வந்ததேதென, விபசித்து தன் விருத்தாந்த மொழிந்து, விருத்தாசலத் திசையின்கணிருக்கின்ற ஓர்மாத்தடியிலே உறங்கும் சமயம், எனது மடிமீது வந்து விழுந்ததாலும்மிட மீந்தேனென மொழிய மாதர் சந்தோஷித்து நல்வரட் செயல்தானென அமுதமளித்து, தம்முடன்விமான மீதேற்றி, தான் கூறியபடி ஆபரணம் யாவுமீந்து பழமலை



நாதர் திருப்பணிக்காக உபயோகிக்கக் கூறி விருத்தாசல மகிமையும் புகன்று அவ்விடம் விட்டு மாதுலகமடைந்தனர். பிறகு விபசித்து அங்கு அசரீரிபுகன்றபடி தேவாபரணங்களை வன்னிமரத்தடியில் வைத்து, உரோமச முனிவர்பாலேகி, உபதேசம் பெற்று மணி முத்தாநதியிற் குளித்து, ஈஸ்வரனைப்பூசித்து, திருவிளக்கிட்டு, பஞ்சாக்னி மத்தியில் தன் காற் பெருவிரலையூன்றி தவம்புரிதலால் அத் தபாக்னி எங்கும் வீசுதலால் பெரியநாயகி விரும்ப, சர்வேஸ்வரன் ப்ரசன்னமாகி மகிழ்ந்து நம் ஆலயத்திருப்பணி யியற்றுவாயென்று மறைந்தவுடன் விபசித்து மனம்பூரித்து அன்பு வன்னி மரமீது வைத்த குபேரன் தங்கையீந்த ஆபரணாதிகளை எடுப்பதற்காக ஏறும்போது, அம்மரமானது கூறுகின்றது. ஏ! முனிவரே, நானோ தேவலோகத்தி லிராநின்ற கற்பக விருக்ஷமாகும், பழமலைநாதர்க்குரிய திருப்பணிக்காக வேண்டியதைத் தருகின்றேன் இதற்காகவேதான் வன்னிமரமாயிருக்கின்றேனெனப் புகல, விபசித்து பிரதிதினமும் வேண்டுமானபொருளையடைந்து திருப்பணிசெய்து, சுவாமிக்குத் திருத்தேரும், அத்தேரோடும் வீதியுமமைத்து சிவனடியார்களை குடிபுகவுமேற்படுத்தி, சகல விழாவும் நடத்தி மடாலயமுமுண்டாக்கி பிறகு சிவ பெருமானோடு இரண்டறக் கலந்தனர்

## 6-வது நிருத்தப்படலம்.

எவ்வித பாபக்ருத்யங்களும் சதாபுரியும் சண்டாளர்கள் அனுவேனும் தவம்புரியாமல் விருத்தகிரி யடைந்து ஈஸ்வரனது பதத்தை எளிதிலடை கின்றோரேயென

தேவாதிகள் முதலாயினோர், பழமலை யடைந்து ஈசனை பஜித்து நிற்க ஸாக்ஷாத் எம்பெருமான் ப்ரஸன்னராகி, ஹே! தேவாதிகாள் உங்கள் மனதிலுள்ளதை யறிந்தோம், இவ்விருத்தகிரியோ நம்சொரூபம், மணிமுத்தா நதியானது சத்தி சொரூபமாகும், யாவராயினும் சரி இங்குவரில் அத்தகையோர்க்கு உடனே மோக்ஷங்கிட்டும், இனி நீங்கள் யாவரும், இங்ஙனே வசிப்பீர்களாக என அவ்வாறே வசியாநின்றனர், சிவபெருமா னவர்கட்கு சிவஞான சமாதி நிஷ்டையின்னதென விளக்கிக் காட்டினர்.

## 7-வது. அகத்தியப்படலம்.

முன்னொருகால் விந்தமலையானது வளர்ந்து சந்த்ராதித்தர்களைத் தடைப்பட்டதால், இராப்பகலறியாது முனிவர் முதல்யாவரும் ப்ரம்மனிடம் புகல, அவர் தம்புத்திரராகிய அகத்தியரை அம்மலையின் கர்வத்தை யடக்கவனுப்ப, அவ்வக்குஷ்டர், எண்டிசையதிர விந்தியமணுக, அம்மலை இவரைக்கண்டடி பணிய முனிவர் ஆசிர்வதித்து நீரியே யான் தென்திசைக் கேகவேண்டும் உனமீதேறிப் போகலாகாது ஆதலின் பூமிக்குச்சமமாகக் கடவாயென அப்படியே பர்வதங்குறுகிற்று, இதனால், சகலமுஞ் செழித்தன. இப்பால், முனிவர்தமைக் கொல்லாநின்ற வில்வலன், வாதாபியென்னுமாக்களிடம்செல்ல, கண்ட அசுரர்மனத்துள் தூர்எண்ணம் வகித்து வணங்கி விருந்திற்கு வரச்சொல்ல, அகத்தியரிசைந்து புக, வில்வலன் வாதாபியை ஆட்டுவடிவமாக்கி யறுத்து சமைத்து முனிவர் குணவிட உட்கொண்டபின் வில்வலன்



வழக்கம்போல வாதாபியென வழைக்க, முனிவர் அவனது மோசமறிந்து தன்வயிற்றைத்தடவி ஜீர்ணபி என்று இருபேரையும் நீறாக்கி, வாதாவியின் மாமிசத்தைப் புசித்த பாவத்தைநீக்கவிருத்தாசலத்திற்கணுகி, திருமணிமுத்தாநதியில் நீராடி சிவனைத்தொழுது காக்ஷிபெற்று தம்பதியடைந்தனர்.

## 8-வது. கலிங்கப்படலம்.

எவனொருவன் இப்பழமலைநாதரையும், தலத்தையும் தூஷித்தாலும், நிந்திக்க எண்ணினாலும், பைசாசமாகி, துயரமேயடைகுவான் அதற்கு திருஷ்டாந்தமாக, உரோமச முனிவர்; ஓமவிறகு, தர்ப்பை, புஷ்பம், மாவிலை கைக்கொண்டு போகும்போது, பிசாசுரூபமுள்ளவனொருவன் எதிர் வந்துவணங்க, அப்பா! நீயார் இச்சரீரமெப்படி யுண்டாயதென, அவன் ஐயா! சகல சம்பத்துமுள்ளவனாக யிருக்குங்கால் யார் யார் எவைகேட்கினும் உடனே தருவேன், பசியென்பார்க்கு அன்னமிடுவேன் இல்லையென்றுரையேனிப்படியிருக்கும் நாளில் ஓர்யோகீஸ்வரர்வர, என்முன் கர்மத்தால் அன்னவர்க்கு மரியாதை செய்யாததால், கடிந்து உன்வாழ்வை மைந்தர்க்களித்து தவஞ்செய்யக் கடவாயென்னவும், யானதைக்கவனியாது, அடேமுனியே, நீ ஆபரணத்திற்கும், நல்ல உடைகளின்றி, சாம்பலைப்பூசி வீடுவீடாய்ப் பிக்ஷையெடுத்து காடு, மலைகளில் திரியக்கடவாயெனப் புகன்றேன். அவர் கோபாவேசமாகி, அடே நீ பைசாசமாகக் கடவதென சாபமீந்ததால், உடனே கெஞ்சிக்கேட்கவும், அவர் நகைத்து விருத்தாசலத்திற்குப்போனாலங்கு உரோமசமுனிவர் இச்சா

பத்தை நீக்குவாரென்றதால் உம்மைக் கண்டேன் ஆதரிக்க வேண்டும் சுவாமியென, முனிவர் களித்து ஏ! கலிங்கா! நின்சாபம் தீர்த்துவிடுகின்றேன் அஞ்சாதே மனிதனுருவாகக் கடவாயாகவென அக்கலிங்கன் மணிமுத்தாநதியில் மூழ்கி ஈஸ்வரனைத் தொழுது தன் பதியை யடைந்தனன்.

## 9-வது கலியகல் படலம்.

சூதர், ஹே! நைமிகாரண்யவாசிகளே, கவனியுங்கள், ஓர் காலத்தில் சனற்குமாரமுனிவர் முதல் சகலரும் நான்முகனை வணங்கி, சகலரும் கலிவசப்பட்டதால், அரசர் சூக்திராஜியும், மேகமும் மழையும் குறைந்தும், தவம், தானம், தருமம், வேதம், யாகம், இவைகளுமில்லை, வேதியர் மறைகளோதுவதுமில்லை அரசர்மொழியும் ஏவலை பிராமணர் புரிகின்றனர், சகலமும் நீங்கினதால் தேவர்கட்குப் பூசையுமில்லை, குடும்பமேமோக்ஷமென்கிறார், நன்மைவிடுத்து தீதினையே புரிகின்றனர், பொய்மிகுத்து மெய்தாழ்ந்தது, சூது, ஸ்திரீசகவாசம் அதிகரித்தது, கொலையே தொழிலாயது, இரக்ஷிக்கவேண்டுமெனக்கேட்க, நான்முகன் ஏ! முனிவர்களே!, கலியணுகாப் பதியாகிய விருத்தாசலஞ் சென்று ஈசனை துதிப்பீரேல் எவ்வித இடையூறும் சம்பவியாது, திருவிடை மருதூரிலிருந்து தவஞ்செய்த தேவலரும், எண்வகைச் சித்திகளையுடைய யாக்கினவர்க்கியரென்னு முனிவரும், சுக்கிராச்சாரியும் தவம்புரிந்து அசுரவாசிரியராயும், மிருத சஞ்சீவனமென்னும் மந்திரசித்தியும் பெற்றார்கள். சித்திரச்சிகண்டியும், கோசிகனும் வேதமுனிவரானோர்கள், வசிஷ்டர், அகத்தியர், தேவர்கள் முதலானவர் யாகத்தில் உற்பவித்த அவிர்ப்பாகமுண்டனர்கள், அசுரர்களை தேவர்கள் கொன்றனர், நாகலோகத்தாரும் கீர்த்தியடைந்தனர் ஆகலின் நீங்கள் யாவரும் பழமலையாகிய விருத்தாசலமேகி ஈசனைத்தொழுவீர்களெனப் புகன்றவாறே அனைவருமேகி பஜித்து பெருமை பெற்றனர்,



## 10-வது சுவேதப்படலம்.

துவாபரயுகத்தில் குருகுலத்திற் பிறந்த சுவேதனென்பான் ஐம்பதுகோடி யோசனையுள்ள பூமியையாண்டு பூப்ரதக்ஷணஞ்செய்ய தன் மனைவியுடன் செல்லுங்கால், மனைவி மரணாவஸ்தையிலிருக்க, அரசன் வருந்தினவனாய், சுக்கிரபகவானால் மிருதசஞ்சீவனமென்னும் மந்திரசித்திபெற்று, காவிரியில் ஸ்நானம் செய்து, திருமழபாடி, திருவையாறு திருவிடையுமடைந்து சுவேத முனிவரென்னும் பேரடைந்து விருத்தகிரியணுகி திருமணிமுத்த நதியில் நீராடி, அகத்தியர் புகன்றவாறு, ஈசனைத் துதிக்க, சுவாமி பிரத்தியக்ஷராகி ஹே! சுவேதமுனி, உன் தவத்திற்கிரங்கி யான்சந்தித்தேன்; இதுமுதல் சுதபனெனப் பெயர் வழங்கக்கடவது, நந்தியின் பதமு முனக்கீந்தேனென மொழிய சுவேதன் ஜெகதீசா! இப்பிறவிக்கடலை நீக்கி என்னை யாதரிக்க வேண்டுமென, பரமேச்சரர் ஆனந்தித்து தன் பதத்திற் சேர்த்துக் கொண்டனர்,

## 11-வது அன்பர் பூசைப் படலம்.

பூர்வத்தில் விவேகியாகிய வைசியனுக்கு நான்கு புத்திரருண்டு, அவர்களில் பிரதம புத்திரன் தவ முதிர்ச்சியடையும்படி காசிவாசிகளை விசுவநாதராகப் பூசித்தவரது பாதமடைந்தனன். 2-வது புத்திரன் சோமேசுரரைப் பஜித்து அவர் பாத மடைந்தனன், 3-வது புத்திரன் தில்லையடியார்களைப் பூசித்தன்னவரது பாதமுற்றனன்; நான்காம் புத்திரனோ வேசிப்காலனும் சகலரையும் இம்ஸித்துக் கொல்லுவதும், பிறர் பொருளைக்கவருதலே தொழிலாக விருந்ததாலும், பிரமஹத்திதோஷம் பிடித்து வருந்தி மூர்ச்சித்ததைக் கண்டு, பெற்றோன் ஓர் வயோதிக பிராமணர்பால் முறையிட, அன்னவர் விருத்தாசலம்சென்றா லிஃது நீங்குமெனப் புகல, அவ்வாறே சென்று, மணிமுத்தாநதியில் மூழ்கிப் பழமலைநாதரை நூற்றெட்டு பிரதக்ஷிணஞ் செய்து ஈசனை த்யானிக்க, அவன் வியாதி நீக்கிப், புனிதனாக்கி தன் பதவி தந்தருளினர். அக் குடும்பத்தோர்க்கும் பதவிதந்தனரென அகத்தியர் சுவேதனுக்குச் சொல்லினர். சுவேதன் செய்த திருமஞ்சனத்தைத் தன் பெயரால் சுவேதநதியெனப் பெயரமைத்து தில்லையில் முனிவர்களோடு நடன தெரிசனங்கண்டு நற்கெதி யடைந்தான். எவனொருவன் அந்த பழமலைநாதரைப் பூசிக்கின்றானோ அத் தவப்பலத்தா லிருபத்தொரு தலைமுறையாயுள்ள சுற்றத்தார்களும் பிறவிக்கடலை நீந்தி மோக்ஷமாகிய கரையேறுவார்கள்.



## 12 வது. சிவபூசாவிதிப்படலம்.

சிவலிங்கபூசையானது எவ்வகைப்பட்ட பூசையிலும் சிறந்ததேயாகும்; சோமசூரியாக்கினியாகிய முச்சுடர்கள் இருதயம், பிரமாந்திரம், திருமுறை, மணல், மண், அரிசிமா, திருநீறு, ஞானசொரூபமாகிய பூரணகலசம், கொன்றை, வில்வம், ஜலம், தர்ப்பை, க்ஷீர, வேதிகை, சுவரிலெழுதிய சித்திரம், பசுவின்சாணம், விளக்குமுற்ற எள் முதலிய எவற்றிலும் பரசிவத்தை ஆவாகனஞ்செய்து பூசிக்கவேண்டும், அங்ஙனம் பூசியாவிடில் சேற்றி லழுந்துவான் கரையேறவே மாட்டானன். கல்வி கற்றோனாயினும், தத்வம், யாகம் எவ்வளவு செய்யினும் பரமனைப் பூசியானாயின் பிணமாகுவான். நரகமேதான் கெதி, தினேதினே பிறந்துகொண்டே யிருப்பான், புலையனுமாகுவான்; இங்ஙனமின்றி சிவலிங்கமீது ஒருகை ஜலம்விட்டும், ஒரு புஷ்பஞ் சாற்றியும் பூசித்தால் சகல நதி தீரங்களிலும் வசித்து நெடுநாள் தவஞ்செய்து அறஞ்செய்ததற்கு சமானமாகும். ஒருநாள் சிவபூசைசெய்தால், வெகு விரதங்களும், சாந்திகளும், கோடி அஸ்வமேத பலனு முண்டாம் மரணாவஸ்தையில்லை, தேவபோகத்தையே யடைகுவான். பத்திரம், புஷ்பம், நீறு, சந்தனம் இவைகளால் அர்ச்சித்தால் தேவர்கள்போல் நித்தியமங்களகீர்த்தியாகும், சகல தேவர் முனிவர்கள் யாவரும் இதனால் நிலைத்தனர்கள். ஆரிட, தேவ, இராக்கத, படிகம், சுயம்பு, மலை முதலிய லிங்கங்களைப் பூசித்தால் எமன் வரவே மாட்டான், மோக்ஷத்தையே யடைகுவான். அநேக கோடி பாபங்களைச் செய்தவர்கள் இச்சிவபூசை செய்வாராயின், அத்தோஷ நிவாரணமேயாகும். சிவபூசையைச் செய்பவர்க்கிணை

எவருமில்லை, ஜனனவியாதியை வேரோட்டறுக்கும், முக்காலமும் தொழுதால் ஸ்வர்க்கமேயாம் அன்றியும் பிரதோஷகாலத்தில் வணங்கினுல் த்ரிகால தெரிசனபலனாகும். குழந்தை, தாய், தந்தை, கருவு, அஸ்வம், பசு, ஸ்திரீகள், பிராமணர்களை வருத்தினுல் பிரதோஷ தெரிசனம் நிவாரணமாக்கும். அச்சமயம், நெய், தயிர், பால், தேன், எண்ணெய், கரும்பின் ரசம், இளநீர், சந்தனம், பழரசங்கள், வில்வப் பழமிவைகளால், அபிஷேகஞ்செய்தால் நூறுகோடி காலவளவும் சிவலோக சித்தி கிடைக்கும், அஷ்டமியில் பசுவின் பாலினும் அபிஷேகத்தாலும், சூரியக்ரஹண காலங்களில் அனந்தங்கோடி பசுக்களை பிராமணர்களுக்குத் தானஞ்செய்தால், சந்திரன்போல வாழலாம். தன் நந்தவன புட்பங்களையும், ஒரு வெள்ளெருக்கம் பூவையும், ஸ்மர்ணம், அலரி, வில்வ முதலிய மலர்களாலர்ச்சித்தால் தேடற்கரிய சித்தியுண்டாகும், முனிவர் சித்தரால் தாபித்த லிங்கங்கள் பாவனை, சுயம்பு. வாண, படிக, பஞ்சலோக, ரசம் காந்தம், நவரத்னம், வெள்ளி, ஸ்வர்ணலிங்கமாகிய இவையனைத்தும் நான்கு வருணத்தார்களும் பூசிக்கலாகும், அன்னியசாதியோர் பூசிக்க லாகாது. மாதர்களும் பூசிக்கலாகாது என்பது விதி. மீறி ஸ்திரீகள் பூசித்தால் நரகமேகெதி. பழுதாகியும் வெந்ததும், வெடித்ததுமான லிங்கங்களை ஜலமாறுதநதி, கூபம், தடாக முதலியவைகளில் விடலாம் விடாமல் பூசிக்கில் வியாதி பிடித்து, தாரித்ரனுகுவான் பூசிக்கும்போது வடதிசை நோக்கவேண்டும், ஒரு ரசலிங்கம் பத்துக்கோடிலிங்கங்கட்குசமானம் இரசலிங்கத்தைப் பூசித்தால் சத்துருநாசம், மோக்ஷமு முண்டாகும். சிவாகமவிதியாற் பூசிக்கும் பூசாதிரவியங்களைவிர



மாலியமென்று சொல்லுவாம். சிவலிங்கத்தைப் பூசிக்கும் படியான தவத்தையுடையவர்கட்கு மகாலிங்கபேதங்களில்லையென நன்குரைப்பாம்.

## 13-வது விபூதிப்படலம்.

சன்னியாசி, வானப்ரஸ்தன், கிருகஸ்தன், பிரம்மசாரியிஞேர்க்கு பரமனனுக்ரகித்தபடி அவரவர் வெண்ணீறு அவரதே; மடாலயம், யாகசாலையிலுண்டாகிய கற்பநீறும் அக்குலத்தவர்க்கே யுரிமை, விறகிலும், மடைப்பள்ளியிலும், பெரியோர் மனையிலுமுள்ள நீறை ஏனையோரும் ஸ்திரீகளுந் தரிக்கலாகும், நீறை வடித்து சலத்திற் குழைத்து, நான்கு வருணத்தாரும் தரிக்கலாம், சன்னியாசி முதலோர் தரிக்கலாகாது. திரேகமாத்யந்தமுமணிந்து மூன்று விரல் தோணத் தரித்தால் நூறு யாகங்கள் செய்து திரிலோகத்தை பிராமணருக்கு தானம் செய்த பலனைத் தரும், திலர்தமாகவும், சதுரமாகவும், சூலம் போலவும் தரிக்கலாகாது வாசனையுடன் சேர்த்தணியலாகாது, தரிக்கின்றவனை நிந்தைசெய்பவனும், உடன் பட்டிருப்பவனும் நரகமே யடைவான், முற்கால் கௌதமரைத் தூஷித்த பிராமணர்மேற் கோபித்து, தூஷித்து, நரகமடைவீரெனசபித்தனர். மந்திரம், ஜெபம், தவம், இம்மை, மறுமை, வீடு இவைகட் குரியனவாம். இதனுல் ஜென்மாந்தர வினையும் விலகும். விபூதி, ருத்திராக்ஷ கண்டிகை தரிப்பவரை தூஷித்தால் நீங்கா நரகமே எய்தும், அதுவே சிவமுத்திரை; சகல தீர்த்தங்களும் இவ்விபூதிக் கடக்கமே, சகலபாபசாபவிமோசனங்களை நீக்கும், அவ்வற்ற

சம்பத்தைத்தரும், இதுவே பிணியைத் தீர்க்கும் ஔடதம், எவற்றிற்கும் இத்திருநீறில்லாவிட்டால் பயனிலதாகும், இதற்கு இரக்ஷையெனவும் பெயர் கூறலாம், முத்திமார்க்கத்திற்கு இதுவே சத்தியென வறைகுவாம்,

## 14-வது உருத்திராக்கப் படலம்.

எப்போதும் தேவர்களையும், ரிஷிகளையும் துன்பம்செய்துவரும் தாரகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி என்கிற திரிபுராதிகளை வெல்லமுடியாமல் சிவனைத்யானித்தால் ஈஸ்வரன் பிராப்தமாய் அவர்களை தூளியாக்கி, அச்சூரரை வென்று தேவரீர்கட்கு திடப்படுத்தினர், அவர்களே சிவனடியார்கள், சிவசின்னங்களான நீறு, உருத்திராக்க மணிந்தவர்கள் ஆதலால் யாவரேனும் வெல்லமுடியாதிருந்தன. சிவத்தினிட மூன்றுகண்களினு முண்டான நீர்த்துளிகளே உருத்திராக்க மணிகளாகும் அவற்றுள்,

| உற்பவம். | ஜாதி | வகை. | நிறம், |
|---|---|---|---|
| சூரியநேத்ரம் | க்ஷத்திரியர், வைசியர், | 12 | செம்மை, மஞ்சள், |
| சந்த்ரநேத்ரம் | பிராமணர் | 16 | வெண்மை, |
| அக்கினிநேத்ரம் | சூத்திரர் | 10 | கருமை. |

உருத்திராக்ஷ மணிகள்போலவே காய்க்கும் மரங்கள் முப்பத்தெட்டு விதங்களாகும்,

ஒரு முகமணியும் இருமுகமணியும் சிவசொரூபம், இவைகளைத் தரித்தால் பிரமஹத்தி தோஷம் நீங்கும். மும்



முகமணி அக்கினி சொரூபம், இதைத்தரித்தால் ஸ்திரீஹத்தி தோஷம் நீங்கும். நான்முகமணி பிரம்ம சொரூபம், இதைத் தரித்தால் மனித வதை தோஷம் நீங்கும். ஐம்முகமணி காலாக்கினி சொரூபம், இதைத் தரித்தால் உணவு தோஷம் நீங்கும். அறுமுகமணி முருக சொரூபம், இதைத் தரித்தால் பிரம்மஹத்தி தோஷம் நீங்கும். எழுமுகமணி சேஷ சொரூபம் இதைத் தரித்தால் பொன் களவு செய்த தோஷம் நீங்கும், எண்முகமணி கணபதி சொரூபம், இதைத் தரித்தால் குருபத்தினி தோஷம் நீங்கும். ஒன்பது முகமணி வைரவசொரூபம், இதைத்தரித்தால் சாயுச்சபதவிகிடைக்கும். தசமுகமணி விஷ்ணு சொரூபம், இதைத் தரித்தால் பைசாசபயமும், மிருக பயமும் நீங்கும், பதினொருமுகமணி ஏகாதச சொரூபம், இதைத் தரித்தால் அதிக யாகபலனுண்டாகும். பன்னிரண்டு முகமணி சூரிய சொரூபம், இதைத் தரித்தால் அஸ்வமேதபலனுண்டாவதுடன் அவயவ பங்கமும்போம், பதின்மூன்று முகமணி முருகசொரூபம், இதைத் தரித்தால் எண்வகைசித்தியும் பெறலாம்.

பதின்மூன்றுமுக மணிகட்கு மேற்பட்டமணிகளில்லை, எப்படி தரிப்பதெனின், சிகையிடமொருமணியும், முப்பத்தாறு மணிமாலை சிரத்திலும் முப்பத்திரண்டு மணிமாலை கழுத்திலும், மார்பில் நூற்றெட்டு மணிமாலையும், கைமணிக்கட்டுகளில் தனித்தனி பன்னிரண்டு மணிமாலையும், செவியில் தனித்தனி அவ்வாறு மணிமாலையும் சூட்டுக, இப்படி தரித்தாராயின் நமனேசனுகான். இதற்குத் திருஷ்டாந்த

மாக, நருமதாதீரத்தில், ஆயிடநகரில், விசுவசித்தென்பான க்கணிகையை விரும்பி, இடபம், ஒட்டகமிதன்மீது சாக்கேற்ற கழுதையொன்றின்மீது, உருத்திராக்கப் பொதியையேற்ற, அது விந்தியமலை யேறாமல் மாள, அச்சமயம் எமதூதர்வர, அவர்களை சிவகணங்களொருங்கி துரத்தி, அக்கழுதையை விமானமீதேற்றி கைலை சேர்த்து நூறு கற்பகாலம் வாழப் பெற்றது, ஏன் அவ்வுருத்திராக்கப்பொதி சுமந்ததாலேயே பதமடைந்ததென்றால் அதைத் தரித்தால் எவ்வளவு சிலாக்கியமாகுமோ கவனியுங்கள். அவைகளைப் பஞ்சாக்ஷர தியானம் புரிந்து தரித்தால் இன்பமாம் எவ்வித இடையூறு முதலான சம்பவத்தில் இடைவிடாது தரித்திருத்தலே மேன்மை; அவர்களிடம் சதா பரமன் தங்கியிருப்பார், அத்தகையோர் மோக்ஷமடைந்து தேவராவார், பிறவித் துன்பம் நீங்கி ஞானம் பெருகும், இதனைப் பற்றி நாதசன்மாவும்அனவர்த்தினைக்கு மவ்வாறே செய்தனர். ஸாக்ஷாத் சிவபெருமானுடைய சொரூபம் அவரே யாகுவாரென்பது உண்மை.

## 15-வது சிவகீர்த்திப் படலம்.

ஹே! மாதரசி, அனவர்த்தினியையே கேளென, நாதசன்மா கூறுகின்றனர். கலியுக மகிமையால் இம்மை மறுமைப் பயனடைகுறது அருமையேயாகும், அதற்காக எத்தலத்தினு சிறந்த இவ் விருத்தாசலத்தை சிந்தித்தால் தீருமே யொழிய இதரஸ்தலத்தாலு முடியாது கடன்நீங்குவதற்கு முன் ஒருவருடம் வசித்தாலும், அத்தல புராணத்தை படித்தாலும், படிக்கக்கேட்டாலும், எழுதினாலும், துதித்தா



லும், துதித்தேனென்றாலும் முத்தி யுடனே சித்திக்கும்; சிவசிவாவென்று புகன்றனரேல் எத்தகைய பாதகமானஇடறு மறுபட்டுப்போம், மனமாறப் பஜிக்கினும், செவிடர்க்கினிய உரைக்கினும் அத்தகையோர் பாதகராயினும் மோக்ஷசாதனமே யடைகுவர்; பூசையுந் தான தருமமும் செய்யவேண்டியதில்லை, மனதிலிருந்தாலே போதும், பஞ்சாக்ஷரஞ் செபித்து நந்தீசரது பீஜத்தைப் பரிசித்துகொண்டு, இரு கொம்புகட்கு மத்தியில் பரமனை தெரிசித்தால் பலகோடி தீராத பாவமுந் தீரும் தவமும் பலிதமாகும், சிவத்தைத் தொழுது ஒருதரஞ் சுற்றிவந்தால், பலகோடி பிரதக்ஷிணம் செய்த பலனாகும், அவமிருத்துவு நீங்கும். மூன்று பிரதக்ஷிணஞ் செய்தால் கொடும்வியாதி நீங்கும். ஐந்து பிரதக்ஷிணஞ் செய்தால் சந்தானம், சம்பத்து முண்டாகும், நூறு பிரதக்ஷிணஞ் செய்தால், பிறவித்துன்பம் தொலையும், ஆயிரம் பிரதக்ஷிணஞ்செய்தால் தேவேந்திரனாகுவான், வலமுமிடமும் பிரதக்ஷிணஞ் செய்தால் கோடிபிரதக்ஷிண பலனாகும்;

அங்கப் பிரதக்ஷிணமுதலான பலவாறான பிரதக்ஷிணஞ் செய்தால் சகல பாபசாப நிவாரணராகி மேலான பதமடைகுவார்கள் சன்னியாசிகள் இடமாகவும், பிரமசாரிகள் வலமாகவும், வானப்பிரஸ்தன் கிரகஸ்தன் இவர்களிருவரும் வலமுமிடமாகவும் பிரதக்ஷிணஞ் செய்வாராகில் சூரியனுக் கொப்புவமையாவார், எவரொருவர் பஞ்சாக்ஷரஞ் செபித்து, உருத்திராக்க கண்டிகையணிந்து தொழுகின்றாரோ, அவர்களிடம் நமனே நாடான், ஸ்வர்க்கமே ஆக்ஷியடைகுவார்.

## 16-வது கோபர்வதப் படலம்.

சாக்ஷாத் சொரூபமான சிவம் கைலையை விடுத்து ரிஷபாரூடராய் விருத்தகிரியடைந்து, தாருகாவன ரிஷிகளையும், அன்னவர் தேவிகளையும் பரிசோதிக்க திருமால் மோகினி ரூபமாக வரச்செய்து இருவருஞ் சென்றனர்கள். இங்கு உமாதேவியார் சிவலிங்கமும் ஈசான்யதிக்கில் ஒரு தீர்த்தத்தையும் திடமெனக்கண்டதால் மகிழ்ந்து நந்தீசுரர் பணிசெய்ய, அந்த லிங்கத்தைப் பூசித்தனராதலின் கோபர்வதமென்றும், சத்தீச்சரமென்றும் இரு திருநாமம் அமைக்கப்பட்டது. அதுசமயம்கண்ட சிவம் தாருகாவனத்திருந்தவாறே தேவியாருக்கும் நந்திதேவருக்கும் காக்ஷியிருந்து யாது வேண்டுமென, ஈஸ்வரி தொழுது, சுவாமி இதனைத்தொழும் பக்தர்கட்கு உமது பதமருளவேண்டுமென, அனுக்கிரகித்தனர், அதுமுதல் எத்தகைய சண்டாளராகிய பாவிகளாகினும் சிவபதவியே யடைந்தனர், பற்பல தவத்தைச்செய்து தேறின கணநாதரொருவரிருக்கின்றனர். சேவித்தவர்கட்கு சகலவரங்களுமவரே தருகுவார், அவரைக் கவனிக்காதிருந்த அநேக ஹத்திகளைச்செய்த சுந்தர தேசத்தில் பிராமணனாகிய துருவிருத்தனை இட்டவாமற்படிக்கு ஆக்யபித்தனர், அவன் அநேககாலம் தவம்புரிந்து சகலபாவமுந்தீர்ந்து ஈசான்ய கங்கையில் நீராடி கணநாதரையும் நந்தீச்சுரரையும் பணியவும், அவனது வரலாறை மனத்துள்ளறிந்து, ஹே! அந்தணனே! உன்பாப சாப நிவர்த்தியாகின் உனக்கு சீக்கிரமாகத்தானே பதவி கிடைக்குமென திருவாய் மலர்ந்தருளினபடியே அத்துவிதானந்த நிலையைப்பெற்றான். இப்பர்வதத்



தின் கண் தேவராதியர், மானிடர், சண்டாளராகினும் சரி அத்தலத்தில் மூன்று நாள்வரைக்கும் விஷய வாசனையையொழித்து வசிக்கின் சத்தீச்சுராதிகளைப் பெறுவார்களென்பது உண்மையேயாம்.

## 17-வது பிருடிப்படலம்.

பூர்வத்தில் மகததேசத்தில் நான்மறையுணர்ந்த பிருடி என்னும் அந்தணன், நல்லமுருசி என்னும் தேவியுடன் பூப்ரதக்ஷிணஞ் செய்து அவஸ்தைப்பட்டு, பிரணவதலமணுகி, துவாரகை யடைந்து வித்துருமதலமேகி கங்கையகாடி கனகயம், திரியம்பகம் முதலான அநேக தலங்களைத் தெரிசித்து, பிறகு கோகரண முதலானவைகளைச் சேவித்து, மறுபடி துவாரகையடைய, கண்ட ஒருவேதியர் இவ்வளவு பிரயாசையா யெங்கிருந்துவருகிறீரென பிருடிதன் சகலமுந் தெரிவிக்க, யோகீஸ்வரர் நகைத்து, சித்தியைத்தரும் தலங்கட்கு ஏகவில்லையே அந்தோ பாலமென, நெருங்கிய கண்டகி ரீமை, அச்சுதை சுத்தமானக்ருஷ்ணவேணி, மணிவர்ணிகை சாயி, நர்மதா, மாகாளம், கரிகாளம், திருவாலவாய், திரிசிரபுரம், திருவாரூர், விருத்தாசலம், கோபர்வதம் முதலாயபல க்ஷேத்திரங்கள் முத்தியைத் தருவனவாச்சேயென, நீங்கள் களைத்திருப்பதால் இத்திருநீற்றை யணிந்தேகுவீரேல் சுலபவழி யடைந்து கோபர்வதமடைந்து ஈசான்ய கங்கையில் நீராடி, சிவகணத்தைத்தொழ அவர் காக்ஷிதந்து வேண்டிய வரமளித்து மறைந்தனர். பிறகு அவ்விருவரும் சிவசொரூபமே யடையலுற்றனர்.

## 18-வது சசிவன்னப் படலம்.

இந்தப் பூமண்டலத்தில் கொடிய பாபக்ருத்தியங்களைச் செய்த அந்தணனாகிய சசிவன்னன், யாவரையும் நிந்திப்பதே கொள்கை, சகல ஹத்திகளையும் செய்பவன், மெய்தவிர மற்

றதெல்லார் நிரக்கற்றவன், இச்சகன், அடுத்துக் கெடுப்பவன்,
மது, மாமிசமுண்பவன்; ஒரு புலைச்சியை மனையாளாக்கிக்
கெட்ட மாபாதகன், கடைசியில் தான் செய்த பாவங்கள்
இரண்டு பிணியுடன் பீடிக்க, நரகமும் நடுங்கிற்று, அத்தகை
யோன் படுமவஸ்தையை பிதாவாகிய பாவவெச்சன் கண்டு
சகியாதவனாகி, தேவபத்தனிட முறையிட, அவர் கோபர்
வதமேகினால் இவ்வினை அடியோடே போமென, அவ்வாறே
தன் மகனுடன் அங்கணுகி, ஈசான்யகங்கையில் மூழ்கி சத்தீ
ஈரனை பலதாமுந் தொழுதடிபணிய யோகீஸ்வரர் ஆதரித்து
திருநீற்றை உச்சிமுதல் உள்ளங்கால்பரியந்த மிட்டு ஆசீர்
வதிக்க நற்கெதியடைந்தானென, ஈசன் நாரணர்க்கு மொழி
ந்து மறுபடியுங் கூறலாயினர், சுவகை என்னும் வேசியான
வள் எப்பேர்ப்பட்ட ஞானிகளையுங் கெடுப்பாள், தனக்கிணங்
காவிடில் கொல்லுவாள். அப்பாதகங்களெல்லாம் வியாதி
யால் பீடிக்கப்பட்டு ஒரு சிவயோகியாரிடம் முறையிட.
அவர் கிருபாநோக்கம்வைத்து அவளது விபரம் யாவுமுணர்
ந்து அவ்வினைநீக்கி, ஞானோபதேசஞ் செய்து, உடனே அவ
ளது பிறவி துலைந்து நற்கெதியே யடைந்தனள், நாம் பக்தர்
களிடத்தில் அன்பு வையாதிருக்கில் யாது பயனாகும் ஆத
லின் எத்தகைப் வினையைக் கொய்து நற்பதமீதலே நலம்.

முற்காலத்தில் தேவாதியர்களால் தொழப்பட்ட விருத்
தாசலமும், சிதம்பரமும், ஒன்றேதான் என, பரமனுலகிர்
தோராதலால் ஆனந்தமகிழ்வெய்தினர். "இரசக்குளிகை
நன்மையுற்றதாகில் இரும்பு பொன்னாவது சத்தியம்" அச்
சிவபெருமானது திருவிளையாடலைப் புகல நம்மாலேயாவது
அளவிட்டுக்கூறவும் முடியுமோ." என்றவாறு.

விருக்காசல மான்மியம் சம்பூரணம்.

---

OFFICE OF THE REGISTRAR OF ...
14 APR 1928
MADRAS

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

அருளிச் செய்த

* திருமுதுகுன்றத்

# தேவாரப்பதிகங்கள்.

(*)

பண்-நட்டபாடை (முதல் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மத்தாவரைநிறுவிக்கடல்கடைந்தவ்விடமுண்ட
தொத்தார்தருமணிநீண்முடிச்சுடர்வண்ணனதிடமாங்
கொத்தார்மலர்குளிர்சந்தகிலொளிர்குங்குமங்கொண்டு
முத்தாறுவந்தடிவீழ்தருமுதுகுன்றடைவோமே. (க)

தழையார்வடவியவீதனிற்றவமேபுரிசைவ
னிழையாரிடைமடவாளொடுமினிதாவுறைவிடமாம்
மழைவானிடைமுழவவ்வெழில்வளைவாளுகிரெரிகண்
முழைவாளரிகுமிறும்முயர்முதுகுன்றடைவோமே. (உ)

விளையாததொர்பரிசில்வருபசுபாசவேதனையொண்
டளையாயினதவிரவ்வருடலைவன்னதுசார்பாங்
களையார்தருகதிராயிரமுடையவ்வவனோடு
முளைமாமதிதவழும்முயர்முதுகுன்றடைவோமே. (ங)

* திருமுதுகுன்றம் என்பது விருத்தாசலம்.

சரர்மாதவர்தொகுதிக் கணராவரோதொலைவில்லா
நரர்ஞானபன்முனிவர்... நாணிடலமா
...வரவணிபொற்கலனவைகொண்டுபன்னாளு
முரசார்வருமணமொய்ப்புனல்முதுகுன்றடைவோமே. (௪)

அறையார்கழலந்தன்றனையயின்மூவிலையழகார்
கறையார்நெடுவேலின்மிசையேற்றானிடங்கருதின்
மறையாயினபலசொல்லியொண்மலர்சாந்தவைகொண்டு
முறையான்மிகுமுனிவர்தொழுமுதுகுன்றடைவோமே. (௫)

...வார்சிலையெயினன்னுருவாகியெழில்விசயற்
கோவாதவின்னருள்செய்தவெம்மொருவற்கிடமுலகிற்
சாவாதவர்பிறவாதவர்தவமேமிகவுடையார்
மூவாதபன்முனிவர்தொழுமுதுகுன்றடைவோமே. (௬)

தழல்சேர்தருதிருமேனியர்சசிசேர்சடைமுடியர்
மழமால்விடைமிகவேறியவிறையோனுறைகோயில்
விழவோடொலிமிகுமங்கையர்தகுமாடகசாலை
முழவோடிசைநடமுன்செயுமுதுகுன்றடைவோமே. (௭)

செதுவாய்மைகள்கருதிவ்வரையெடுத்ததிறலரக்கன்
கதுவாய்கள்பத்தலறியிடக்கண்டானுறைகோயில்
மதுவாயசெங்காந்தண்மலர்நிறையக்குறைவில்லா
முதுவேய்கண்முத்துதிரும்பொழின்முதுகுன்றடைவோமே. (௮)

இயலாடியபிரமன்னரியிருவர்க்கறிவரிய
செயலாடியதீயாருருவாகியெழுசெல்வன்
புயலாரும்வண்பொழில்சூழ்புனற்படப்பைத்தடத்தருகே
முயலோடவெண்கயல்பாய்தருமுதுகுன்றடைவோமே. (௯)



அருகரொடுபுத்தரவர்அறியாவரன்மலையான்
மருகன்வருமிடபக்கொடியுடையானிடமலரார்
கருகுழன்மடவார்கடிகுறிஞ்சியதுபாடி
முருகன்னதுபெருமைபகர்முதுகுன்றடைவோமே. (௰)

முகில்சேர்தருமுதுகுன்றுடையானைமிகுதொல்சீர்ப்
புகலிந்நகர்மறைஞானசம்பந்தனுரைசெய்த
நிகரில்லனதமிழ்மாலைகளிசையோடிவைபத்தும்
பகரும்மடியவர்கட்கிடர்பாவம்மடையாவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## பண்-பழந்தக்கராகம். (முதல் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

தேவராயுமசுரராயுஞ்சித்தர்செழுமறைசேர்
நாவராயுநண்ணுபாரும்விண்ணெரிகாலீரு
மேவராயவிரைமலரோன்செங்கண்மாலீசனென்னு
மூவராயமுதலொருவன்மேயதுமுதுகுன்றே. (௧)

பற்றுமாகிவானுளோர்க்குப்பல்கதிரோன்மதிபா
ரெற்றுநீர்தீக்காலுமேலைவிண்ணியமானனோடு
மற்றுமாதோர்பல்லுயிராய்மாலயனும்மறைகண்
முற்றுமாகிவேறுமானான்மேயதுமுதுகுன்றே. (௨)

வாரிமாகம்வைகுதிங்கள்வாளரவஞ்சூடி
நாரிபாகநயந்துபூமேனான்முகன்றன்றலையிற்
சீரிதாகப்பலிகொள்செல்வன்செற்றலுந்தோன்றியதோர்
மூரிநாகத்துரிவைபோர்த்தான்மேயதுமுதுகுன்றே. (௩)

பாடுவாருக்கருளுமெந்தைபனிமுதுபௌவமுந்நீர்
நீடுபாருமுழுதமோடியண்டர்நிலைகெடலு
காடுதானுமூடமோடிஞாலநான்முகனு
மூடுகாணமூடும்வெள்ளத்துயர்ந்தமுதுகுன்றே. (௪)

வழங்குதிங்கள்வன்னிமத்தமாசுணமீதணவிச்
செழுங்கல்வேந்தன்செல்விகாணத்தேவர்திசைவணங்கத்
தழங்குமொந்தைதக்கைமிக்கபேய்க்கணம்பூதஞ்சூழ
முழங்குசெந்தீயேந்தியாடிமேயதுமுதுகுன்றே. (௫)

சுழிந்தகங்கைதோய்ந்ததிங்கட்டொல்லராநல்விதழி
சழிந்தசென்னிச்சைவவேடந்தானினைந்தைம்புலனு
மழிந்தசிந்தையந்தணாளர்க்கறம்பொருளின்பம்வீடு
மொழிந்தவாயான்முக்கணாதிமேயதுமுதுகுன்றே. (௬,௭)

மயங்குமாயம்வல்லராகிவானினொடுநீரு
மியங்குவோருக்கிறைவனாயவிராவணன்றோணெரித்த
புயங்கராகமாநடத்தன்புணர்முலைமாதுமையாள்
முயங்குமார்பன் முனிவரேத்தமேயதுமுதுகுன்றே. (௮)

ஞாலமுண்டமாலுமற்றைநான்முகனுமறியாக்
கோலமண்டர்சிந்தைகொள்ளாராயினுங்கொய்மலரா
லேலவிண்டைகட்டிநாமமிசையவெப்போதுமேத்து
மூலமுண்டநீற்றர்வாயான்மேயதுமுதுகுன்றே (௯)

உறிகொள்கையர்சீவரத்தருண்டுழன்மிண்டர்சொல்லை
நெறிகளென்னநினைவுறாதேநித்தலுங்கைதொழுமின்
மறிகொள்கையன்வங்கமுந்நீர்ப்பொங்குவிடத்தையுண்ட
முறிகொண்மேனிமங்கைபங்கன்மேயதுமுதுகுன்றே. (௧௦)



மொய்த்துவானோர்பல்கணங்கள்வணங்குமுதுகுன்றைப்
பித்தர்வேடம்பெருமையென்னும்பிரமபுரத்தலைவன், (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருமுதுகுன்றம்-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நின்றுமலர்தூவி
யின்றுமுதுகுன்றை
நன்றுமேத்துவீர்க்
கென்றுமின்பமே. (1)

அத்தன்முதுகுன்றைப்
பத்தியாகிநீர்
நித்தமேத்துவீர்க்
குய்த்தல்செல்வமே. (2)

ஐயன்முதுகுன்றைப்
பொய்கள்கெடநின்று
கைகள்கூப்புவீர்
வையமுமதாமே. (3)

ஈசன்முதுகுன்றை
நேசமாகிநீர்
வாசமலர்தூவப்
பாசவினைபோமே. (4)

மணியார்முதுகுன்றைப்
பணிவாரவர்கண்டீர்
பிணியாயினகெட்டுத்
தணிவாருலகிலே. (5)

மொய்யார்முதுகுன்றி
லையாவெனவல்லார்
பொய்யாரிரவோர்க்குச்
செய்யாளணியாளே (6)

விடையான்முதுகுன்றை
யிடையாதேத்துவார்
படையாயினசூழ
வுடையாருலகமே. (7)

பத்துத்தலையானைக்
கத்தவிரலூன்று
மத்தன்முதுகுன்றை
மொய்த்துப்பணிமினே. (8)

இருவரறியாத
வொருவன்முதுகுன்றை
யுருகிநினைவார்கள்
பெருகிநிகழ்வோரே. (9)

தேரரமணருஞ்
சேரும்வகையில்லா
நேரின்முதுகுன்றை
நீர்நின்றுள்குமே. (10)

நின்றுமுதுகுன்றை
நன்றுசம்பந்த
னொன்றுமுரைவல்லா
ரென்றுமுயர்வோரே (11)

திருச்சிற்றம்பலம்.

---

## திருமுதுகுன்றம் - பண் - மேகராகக்குறிஞ்சி.

---

### திருச்சிற்றம்பலம்.

மெய்த்தாறுசுவையுமேழிசையுமெண்குணங்களும்விருப்புநால்வே
தத்தாலுமறிவொண்ணாநடைதெளியப்பளிங்கேபோலரிவைபாக
மொத்தாறுசமயங்கட்கொருதலைவன்கருதுமூருலகுதெண்ணீர்
முத்தாறுவெதிருதிரநித்திலம்வாரிக்கொழிக்குமுதுகுன்றமே. (1)

வேரிமிகுகுழலியொடுவேடுவனாய்வெங்கானில்விசையன்மேவு
போரின்மிகுபொறையளந்துபாசுபதம்புரிந்தளித்தபுராணர்கோயில்
காரின்மலிகடிபொழில்கள்கனிகள்பலமலருதிர்த்துக்கயமுயங்கி
மூரிவளங்கிளர்தென்றற்றிருமுன்றிற்புகுந்துலவுமுதுகுன்றமே. (2)

தக்கனதுபெருவேள்விச்சந்திரனிந்திரனெச்சனருக்கனங்கி
மிக்கவிதாதாவினொடும்விதிவழியேதண்டித்தவிமலர்கோயில்[சோலை
கொக்கினியகொழும்வருக்கைகதலிகமுகுயர்தெங்கின்குலைகொள்
முக்கனியின்சாறொழுகிச்சேறுலராநீள்வயல்சூழ்முதுகுன்றமே. (3)

வெம்மைமிகுபுரவாணர்மிகைசெய்யவிறலழிந்துவிண்ணுளோர்கள்
செம்மலரோனிந்திரன்மால்சென்றிரப்பத்தேவர்களேதேராக
மைம்மருவுமேருவிலுமாசுணநாணரியெரிகால்வாளியாக
மும்மதிலுநொடியளவிற்பொடிசெய்தமுதல்வனிடமுதுகுன்றமே.

இழைமேவுகலையல்குலேந்திழையாளொருபாலாயொருபால்வெள்தா
ழைமேவுமுரியுடுத்தவொருவனிருப்பிடமென்பரும்பரோங்கு
கழைமேவுமடமந்திமழைகண்டுமகவினொடும்புகவொண்கல்லின்
முழைமேவுமால்யானையிரைதேருமளர்சாரன்முதுகுன்றமே. (5)



கரையார்வெண்டலைமாலைமுடிக்கணிந்தநாதனிடன்முத்தாறு
வகைபாரும்வரைப்பண்டங்கொண்டிரண்டுகரையருகுமறியமோதித்
தகையாரும்வரப்பிடறிச்சாலிகழுநீர்குவளைசாயப்பாய்ந்து
முகையார்செந்தாமரைகண்முகமலரவயறழுவுமுதுகுன்றமே. (6)

அறங்கிளருநால்வேதமாலின்கீழிருந்தருளியமரர்வேண்ட [யில்
நிறங்கிளர்செந்தாமரையோன்சிரமைந்திலொன்றறுத்தநிமலர்கோ
திறங்கொண்மணித்தரளங்கள்வரத்திரண்டங்கெழிற்குறவர்சிறுமி
[யார்கண்
முறங்களினாற்கொழித்துமணிசெலவிலகிமுத்துலைப்பெய்முதுகுன்
[றமே.

கதிரொளியநெடுமுடிபத்துடையகடலிலங்கையர்கோ கண்ணும்வா
[யும்
பிதிரொலியகனல்பிறங்கப்பெருங்கயிலைமலையைநிலைபெயர்த்தஞா
[ன்று
மதிலளகைக்கிறைமுரலமலரடியொன்றூன்றிமறையாடவாங்கே
முதிரொளியசுடர்நெடுவாண்முன்னீந்தான்வாய்ந்தபதிமுதுகுன்ற
[மே.

பூவார்பொற்றவிசின்மிசையிருந்தவனும்பூந்துழாய்புனைந்தமாலு
மோவாதுகழுகேனமாயுயர்ந்தாழ்ந்துறநாடியுண்மைகாணாத்
தேவாருந்திருவுருவன்சேருமலைசெழுநிலத்தைமூடவந்த
மூவாதமூழங்கொலிநீர்கீழ்தாழமேலுயர்ந்தமுதுகுன்றமே. (9)

மேனியிற்சீவரத்தாரும்விரிதருதட்டுடையாரும்விரவலாகா
வூனிகளாயுள்ளார்சொற்கொள்ளாதுமுள்ளுணர்ந்தங்குய்மின்றொண்
[டீர்
ஞானிகளாயுள்ளார்களுண்மறையைமுழுதுணர்ந்தைம்புலன்கள்
[செற்று
மோனிகளாய்முனிச்செல்வர்தனித்திருந்துதவம்புரியுமுதுகுன்றமே.

முழங்கொலிநீர்முத்தாறுவலஞ்செய்யுமுதுகுன்றத்திறையைமூவாப்
பழங்கிழமைப்பன்னிருபேர்படைத்துடையகழுமலமேபதியாக்கொ [ண்டு
தழங்கெரிமூன்றோம்புதொழிற்றமிழ்ஞானசம்பந்தன்சமைத்தபாடல்
வழங்குமிசைகூடும்வகைபாடுமவர்நீடுலகமாள்வர்தாமே. (11

திருச்சிற்றம்பலம்.

---

## திருமுதுகுன்றம் - பண் - காந்தாரம்,

திருச்சிற்றம்பலம்.

---

தேவாசிறியோம்பிழையைப்பொறுப்பாய்பெரியோனே
யாவாவென்றங்கடியார்தங்கட்கருள்செய்வா
யோவாவுவரிகொள்ளவுயர்ந்தாயென்றேத்தி
மூவாமுனிவர்வணங்குங்கோயின்முதுகுன்றே. (1)
எந்தையிவனென்றிரவிமுதலாவிறைஞ்சுவார்
சிந்தையுள்ளேகோவிலாகத்திகழ்வானை
மந்தியேறியினமாய்மலர்கள்பலகொண்டு
முந்தித்தொழுதுவணங்குங்கோயின்முதுகுன்றே. (2)
நீடுமலரும்புனலுங்கொண்டுநிரந்தரந்
தேடுமடியார்சிந்தையுள்ளேதிகழ்வானைப்
பாடுங்குயிலினயலேகிள்ளைபயின்றேத்த
மூடுஞ்சோலைமுகிறோய்கோயின்முதுகுன்றே. (3)
தெரிந்தவடியார்சிவனேயென்றுதிசைதோறுங்
குருந்தமலருங்குரவினலருங்கொண்டேந்தி
யிருந்துநின்றுமிரவும்பகலுமேத்துஞ்சீர்
முரிந்துமேகந்தவழுஞ்சோலைமுதுகுன்றமே, (4)



வைத்தநிதியேமணியேயென்றுவருந்தித்தஞ்
சித்தநைந்துசிவனேயென்பார்சிந்தையார்
கொத்தார்சந்துங்குரவுவாரிக்கொணர்ந்துந்து
முத்தாறுடையமுதல்வர்கோயின்முதுகுன்றே. (5)
வம்பார்கொன்றைவன்னிமத்தமலர்தூவி
நம்பாவென்னநல்கும்பெருமானுறைகோயில்
கொம்பார்குரவுகொகுடிமுல்லைகுவிந்தெங்கு
மொய்ம்பார்சோலைவண்டுபாடுமுதுகுன்றே. (6,7)
வாசங்கமழும்பொழில்சூழிலங்கைவாழ்வேந்தை
நாசஞ்செய்தநங்கள்பெருமானமர்கோயில்
பூசைசெய்தவடியார்நின்றுபுகழ்ந்தேத்த
மூசிவண்டுபாடுஞ்சோலைமுதுகுன்றே. (8)
அல்லிமலர்மேலயனுமரவினணையானுஞ்
சொல்லிப்பரவித்தொடரவொண்ணாச்சோதியூர்
கொல்லைவேடர்கூடிநின்றுகும்பிட
முல்லையயலேமுறுவல்செய்யுமுதுகுன்றே. (9)
கருகுமுடலார்கஞ்சியுண்டுகடுவேதின்
றுருகுசிந்தையில்லார்க்கயலானுறைகோயி
றிருகல்வேய்கள்சிறிதேவளையச்சிறுமந்தி
முருகின்பணைமேலிருந்துநடஞ்செய்முதுகுன்றே. (10)
அறையார்கடல்சூழ்தண்காழிச்சம்பந்தன்
முறையான்முனிவர்வணங்குங்கோயின்முதுகுன்றைக்
குறையாப்பனுவல்கூடிப்பாடவல்லார்கள்
பிறையார்சடையெம்பெருமான்கழல்கள்பிரியாரே. (11)

திருச்சிற்றம்பலம்.

---

பண்-கொல்லி. (3-ம்-திருமுறை.)

———(*)———

திருச்சிற்றம்பலம்.

வண்ணமாமலர்கொடுவானவர்வழிபட
வண்ணலாராயிழையாளொடுமமர்விடம்
விண்ணின்மாமழைபொழிந்திழியவெள்ளருவிசேர்
திண்ணலார்புறவணிதிருமுதுகுன்றமே. (1)

வெறியுலாங்கொன்றையந்தாரினன்மேதகு
பொறியுலாமரவசைத்தாடியோர்புண்ணியன்
மறியுலாங்கையினன்மங்கையோடமர்விடஞ்
செறியுளார்புறவணிதிருமுதுகுன்றமே. (2)

ஏறினார்விடைமிசையிமையவர்தொழவுமை
கூறனார்கொல்புலித்தோலினார்மேனிமே
னீறனார்நிறைபுனற்சடையனார்நிகழ்விடந்
தேறலார்பொழிலணிதிருமுதுகுன்றமே. (3)

உரையினாருறுபொருளாயினானுமையொடும்
விரையினார்கொன்றைசேர்சடையினான்மேவிட
முரையினாலொலியெனவோங்குமுத்தாறுமெய்த்
திரையினாரெறிபுனற்றிருமுதுகுன்றமே. (4)

கடியவாயினகுரற்களிற்றினைப்பிளிறவோ
ரிடியவெங்குரலினோடாளிசென்றிடுநெறி
வடிவமாய்மழுவினன்மங்கையோடமர்விடஞ்
செடியதார்புறவணிதிருமுதுகுன்றமே. (5)



கானமார்கரியினீருரிவையர்பெரியதோர்
வானமார்மதியினோடரவர்தாமருவிட
மூனமாயினபிணியவைகெடுத்துமையொடுந்
தேனமார்பொழிலணிதிருமுதுகுன்றமே. (6)

மஞ்சர்தாமலர்கொடுவானவர்வணங்கிட
வெஞ்சொலார்வேடரோடாடவர்விரும்பவே
யஞ்சொலாளுமையொடுமமர்விடமணிகலைச்
செஞ்சொலார்பயிறருந்திருமுதுகுன்றமே. (7)

காரினாரமர்தருங்கயிலைநன்மலையினை
யேரினார்முடியிராவணனெடுத்தானிற
வாரினார்முலையொடுமன்னினார்மருவிடஞ்
சீரினார்திகழ்தருந்திருமுதுகுன்றமே. (8)

ஆடினார்கானகத்தருமறையின்பொருள்
பாடினார்பலபுகழ்ப்பரமனாரிணையடி
யேடினார்மலர்மிசையயனுமாலிருவருந்
தேடினாறிவொணார்திருமுதுகுன்றமே. (9)

மாசுசெய்தூசுகொண்டுழல்சமண்சாக்கியர்
பேசமெய்யுளவலபேணுவீர்காணுமின்
வாசமார்தருபொழில்வண்டினமிசைசெயத்
தேசமார்புகழ்மிகுந்திருமுதுகுன்றமே. (10)

திண்ணினார்புறவணிதிருமுதுகுன்றரை
நண்ணினான்காழியுண்ஞானசம்பந்தன்சொ
லெண்ணினானீரைந்துமாலையியலுமாப்
பண்ணினாற்பாடுவார்க்கில்லையாம்பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்.

———

## திருமுக்கால்.

—(*)—

பண்-சாதாரி. (3-ம் திருமுறை.)

முரசதிர்ந்தெழுதருமுதுகுன்றமேவிய
பரசமர்படையுடையீரே
பரசமர்படையுடையீருமைப்பரவுவா
ரரசர்களுலகிலாவாரே. (1)

மொய்குழலாளொடுமுதுகுன்றமேவிய
பையரவம்மசைத்தீரே
பையரவம்மசைத்தீருமைப்பாடுவார்
நைவிலாராடொறுநலமே. (2)

முழவமர்பொழிலணிமுதுகுன்றமேவிய
மழவிடையதுவுடையீரே
மழவிடையதுவுடையீருமைவாழ்த்துவார்
பழியொடுபகையிலர்தாமே. (3)

முருகமர்பொழிலணிமுதுகுன்றமேவிய
வுருவமர்சடைமுடியீரே
யுருவமர்சடைமுடியீருமையோதுவார்
திருவொடுதேசினர்தாமே. (4,5,6,7)

முத்திதருமுயர்முதுகுன்றமேவிய
பத்துமுடியடர்த்தீரே
பத்துமுடியடர்த்தீருமைப்பாடுவார்
சித்தநல்லவ்வடியாரே. (8)



முயன்றவருள்பெறுமுதுகுன்றமேவியன்
றியன்றவரறிவரியீரே
யியன்றவரறிவரியீருமையேத்துவார்
பயன்றலைநிற்பவர்தாமே. (9)

மொட்டலர்பொழிலணிமுதுகுன்றமேவிய
கட்டமண்டேரைக்காய்ந்தீரே
கட்டமண்டேரைக்காய்ந்தீருமைக்கருதுவார்
சிட்டர்கள்சீர்பெறுவாரே. (10)

மூடியசோலைசூழ்முதுகுன்றத்தீசனை
நாடியஞானசம்பந்த
னாடியஞானசம்பந்தன்செந்தமிழ்
பாடியவவர்பழியிலரே. (11)

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுநாயனார்

அருளிச்செய்த

### திருத்தாண்டகம் (6-ம் திருமுறை.)

—(*)—

திருச்சிற்றம்பலம்.

கருமணியைக்கனகத்தின்குன்றொப்பானைக்
கருதுவார்க்காற்றவெளியான்றன்னைக்
குருமணியைக்கோளரவமாட்டுவானைக்
கொல்வேங்கையதளானைக்கோவணவன்றன்னை

யருமணியையடைந்தவர்கட்கமுதொப்பானை
யானஞ்சுமாடியைநானபயம்புக்க
திருமணியைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (1)

காரொளியகண்டத்தெங்கடவுடன்னைக்
காபாலிகட்டங்கமேந்தினானைப்
பாரொளியைவிண்ணொளியைப்பாதாளத்தானைப்
பான்மதியஞ்சூடியோர்பண்பன்றன்னைப்
பேரொளியைப்பெண்பாகம்வைத்தான்றன்னைப்
பேணுவார்தம்வினையைப்பேணிவாங்குஞ்
சீரொளியைத்திருமுதுகுன்றுடையான்றன்னைப்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (2)

எத்திசையும்வானவர்கடொழநின்றானை
யேறூர்ந்தபெம்மானையெம்மானென்று
பத்தனாயப்பணிந்தடியேன்றன்னைப்பன்னாட்
பாமாலைபாடப்பயில்வித்தானை
முத்தினையென்மணியைமாணிக்கத்தை
முளைத்தெழுந்தசெம்பவளக்கொழுந்தொப்பானைச்
சித்தனையென்றிருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (3)

ஊன்கருவினுண்ணின்றசோதியானை
யுத்தமனைப்பத்தர்மனங்குடிகொண்டானைக்
கான்றிரிந்துகாண்டீபமேந்தினானைக்
கார்மேகமிடற்றானைக்கனலைக்காற்றைத்
தான்றெரிந்தங்கடியேனையாளாக்கொண்டு
தன்னுடையதிருவடியென்றலைமேல்வைத்த



தீன்கரும்பைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (4)

தக்கனதுபெருவேள்விதகர்த்தானாகித்
தாமரையானான்முகனுந்தானேயாகி
மிக்கதொருதீவளிநீராகாசமாய்
மேலுலகுக்கப்பாலாயிப்பாலானை
யக்கினொடுமுத்தினையுமணிந்துதொண்டர்க்
கங்கங்கேயறுசமயமாகிநின்ற
திக்கினையென்றிருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (5)

புகழொளியைப்புரமெரித்தபுனிதன்றன்னைப்
பொன்பொதிந்தமேனியனைப்புராணன்றன்னை
விழவொலியும்விண்ணொலியுமானான்றன்னை
வெண்காடுமேவியவிகிர்தன்றன்னைக்
கழலொலியுங்கைவளையுமார்ப்பவார்ப்பக்
கடைதோறுமிடுபிச்சைக்கென்றுசெல்லுந்
திகழொளியைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (6)

போர்த்தானையின்னுரிதோல்பொங்கப்பொங்கப்
புலியதளேயுடையாகத்திரிவான்றன்னைக்
கார்த்தானையைம்புலனும்புரங்கண்மூன்றுங்
காலனையுங்குரைகழலாற்காய்ந்தான்றன்னை
மாத்தாடிப்பத்தராய்வணங்குந்தொண்டர்
வல்வினைவேரறும்வண்ணமருந்துமாகித்
தீர்த்தானைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே.

துறவாதேயாக்கைதுறந்தான்றன்னைச்
சோதிமுழுமுதலாய்நின்றான்றன்னைப்
பிறவாதேயெவ்வுயிர்க்குந்தானேயாகிப்
பெண்ணினோடாணுருவாய்நின்றான்றன்னை
மறவாதேதன்றிறமேவாழ்த்துந்தொண்டர்
மனத்தகத்தேயனவரதமன்னிநின்ற
திறலானைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (8)

பொற்றூணைப்புலானாறுகபாலமேந்திப்
புவலோகமெல்லாமுழிதர்தானை
முற்றாதவெண்டிங்கட்கண்ணியானை
முழுமுதலாய்மூவுலகுமுடிவொன்றில்லாக்
கற்றூணைக்காளத்திமலையான்றன்னைக்
கருதார்தார்புரமூன்றுமெரியவம்பாற்
செற்றானைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (9)

இகழ்ந்தானையிருபதுதோளெரியவூன்றி
யெழுநரம்பினிசைபாடவினிதுகேட்டுப்
புகழ்ந்தானைப்பூந்துருத்திமேயான்றன்னைப்
புண்ணியனைவிண்ணவர்கணிதியந்தன்னை
மகிழ்ந்தானைமலைமகளோர்பாகம்வைத்து
வளர்மதியஞ்சடைவைத்துமாலோர்பாகந்
திகழ்ந்தானைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (10)

திருச்சிற்றம்பலம்.

———(*)———



## திருமுதுகுன்றம்.

பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

---

நஞ்சியிடையின்றுநாளையென்றும்மைநச்சுவார்
துஞ்சியிட்டாற்பின்னைச்செய்வதென்னடிகேள்சொலீர்
பஞ்சியிடப்புட்டில்கீறுமோபணியீரருள்
முஞ்சியிடைச்சங்கமார்க்குஞ்சீர்முதுகுன்றரே. 1

ஏரிக்கனகக்கமலமலரன்னசேவடி
ஊரித்தனையுந்திரிந்தக்காலவைநோங்கொலோ
வாரிக்கட்சென்றுவளைக்கப்பட்டுவருந்திப்போய்
மூரிக்களிறுமுழக்குறுமுதுகுன்றரே. 2

தொண்டர்கள்பாடவிண்ணோர்களேத்தவுழிதர்வீர்
பண்டகந்தோறும்பலிக்குச்செல்வதுபான்மையே
கண்டகர்வாளிகள்வில்லிகள்புறங்காக்குஞ்சீர்
மொண்டகைவேள்விமுழக்கருமுதுகுன்றரே. 3

இளைப்பறியீரிம்மையேத்தவார்க்கம்மைசெய்வதென்
விளைப்பறியாதவெங்காலனையுயிர்வீட்டினீர்
அளைப்பிரியாவரவல்குலாளொடுகங்கைசேர்
முளைப்பிறைச்சென்னிச்சடைமுடிமுதுகுன்றரே. 4

ஆடியசைந்தடியாருநீருமகந்தொறும்
பாடிப்படைத்தபொருளெலாமுமையாளுக்கோ
மாடமதிலணிகோபுரமணிமண்டப
மூடிமுகிறவழ்சோலைசூழ்முதுகுன்றரே. 5

இழைவளர் நுண்ணிடைமங்கையொடிடுகாட்டிடைக்
குழைவளர்காதுகண்மோதநின்றுகுனிப்பதோ
மழைவளருஞ்செந்நெற்கோட்டிடைமதயானைகண்
முழைவளராளிமுழக்குருமுதுகுன்றரே 6

சென்றிலிடைச்செடிநாய்குரைக்கச்செடிச்சிகண்
மன்றிலிடைப்பலிதேரப்போவதுவாழ்க்கையே
குன்றிலிடைக்களிறாளிகொள்ளக்குறத்திகண்
முன்றிலிடைப்பிடிகன்றிடுமுதுகுன்றரே. 7

அந்திதிரிந்தடியாருருமகவொதொடுஞ்
சந்திகடோறும்பலிக்குச்செல்வதுதக்கதே
மந்திகடுவனுக்குண்பழநாடிமலைப்புற
முந்தியடிதொழநின்றசீர்முதுகுன்றரே. 8

செட்டிநின்காதலிபூர்கடோறுமறஞ்செய
வட்டமின்சில்பலிக்கென்றகங்கடைநிற்பதே
பட்டிவெள்ளேறுகந்தேறுவீர்பரிசென்கொலோ
முட்டியடிதொழநின்றசீர்முதுகுன்றரே. 9

எத்திசையுந்திரிந்தேற்றக்காற்பிறரென்சொலார்
பத்தியினாலிடுவாரிடைப்பலிகொண்மினோ
வெத்திசையுந்திரையேறமோதிக்கரைகண்மேன்
முத்திமுத்தாறுவலஞ்செயும்முதுகுன்றரே. 10

முத்திமுத்தாறுவலஞ்செயும்முதுகுன்றரைப்
பித்தனொப்பானடித்தொண்டனூரன்பிதற்றிவை
தத்துவஞானிகளாயினார்தடுமாற்றிலா
ரேதவத்தோர்களுமேத்தவார்க்கிடரில்லையே. 11

திருச்சிற்றம்பலம்

---



சுந்தரமூர்த்திநாயனார், திருக்கூடலையாற்றூரை அக
ன்று, திருமுதுகுன்றுக்குப் போய், சிவபிரானை வணங்கி,
"நஞ்சியிடை யின்றுநாளை" என்னும் திருப்பதிகம் பாடிச்
சிலநாள் அங்கே எழுந்தருளி யிருந்தார்.

## நம்பியென்றதிருப்பதிகம்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

மெய்யைமுற்றப்பொடிபூசியொர்நம்பி
வேதநான்கும்விரித்தோதியொர்நம்பி
கையிலோர்வெண்மழுவேந்தியொர்நம்பி
கண்ணுமூன்றுடையாயொருநம்பி
செய்யநம்பிசிறுச்செஞ்சடைநம்பி
திரிபுரந்தீயெழச்செற்றதோர்வில்லா
லெய்தநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. 1

திங்கணம்பிமுடிமேலடியார்பாற்
சிறந்தநம்பிபிறந்தவுயிர்க்கெல்லா
மங்கணம்பியருண்மால்விசும்பாளு
மமரர்நம்பிகுமரன்முதற்றேவர்
தங்கணம்பிதவத்துக்கொருநம்பி
தாதையென்றுனசரண்பணிந்தேத்து
மெங்கணம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. 2

வருந்தவன் றும்மதயானையுரித்த
வழகநம்பிமுழக்குங்கடனஞ்ச
மருந்தநம்பியமரர்க்கமுதீந்த
வருளனம்பிபொருளால்வருநட்டம்
புரிந்தநம்பிபுரிநூலுடைநம்பி
பொழுதும்விண்ணும்முழுதும்பலவாகி
யிருந்தநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. 3

ஊறநம்பியமுதாவுயிர்க்கெல்லா
முரியநம்பிதெரியம்மறையங்கங்
கூறநம்பிமுனிவர்க்கருங்கூற்றைக்
குமைத்தநம்பிகுமையாப்புலனைந்துஞ்
சீறநம்பிதிருவெள்ளடைநம்பி
செங்கண்வெள்ளைச்செழுங்கோட்டெருதென்று
மேறநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே 4

குற்றநம்பிகுறுகாரெயின்மூன்றைக்
குலைத்தநம்பிசிலையாவரைகையிற்
பற்றநம்பிபரமானந்தவெள்ளம்
பணிக்குநம்பியெனப்பாடுதலல்லான்
மற்றநம்பியுனக்கென்செயவல்லேன்
மதியிலேன்படுவெந்துயரெல்லா
மெற்றநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. 5

அரித்தநம்பியடிகைதொழுவார்நோ
யாண்டநம்பிமுன்னைவிண்ணுலகங்க



டெரித்தநம்பியொருசேவுடைநம்பி
சில்பலிக்கென்றகந்தோறுமெய்வேடந்
தரித்தநம்பிசமயங்களினம்பி
தக்கன்றன்வேள்விபுக்கன்றிமையோரை
யிரித்தநம்பியென்னையாளுடைநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. 6

பின்னைநம்பும்புயத்தானெடுமாலும்
பிரமனுமென்றிவர்நாடியுங்காணா
வண்ணநம்பியொருவர்க்கெய்தலாமே
யுவருநம்பியுரைசெய்யுமதல்லான்
முன்னைநம்பிபின்னும்வார்சடைநம்பி
முழுதிவையித்தனையுந்தொகுத்தாண்ட
தென்னைநம்பியெம்பிரானுமாநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே 7

சொல்லைநம்பிபொருளாய்நின்றநம்பி
தோற்றமீறுமுதலாகியநம்பி
வல்லைநம்பியடியார்க்கருள்செய்ய
வருந்திநம்பியுனக்காட்செயகில்லா
நல்லநம்பிபடுகின்றதென்னடி
யணங்கொருபாகம்வைத்தெண்கணம்போற்ற
வில்லநம்பியிடுபிச்சைகொணம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. 8

காணநம்பிகழற்சேவடியென்றுங்
கலந்துனைக்காதலித்தாட்செய்கிற்பாரை
யாண்டநம்பியவர்முன்கதிசேர

வருளுநம்பிகுருமாப்பிறைபாம்பைத்
தீண்டுநம்பிசென்னியிற்கன்னிதங்கத்
திருத்துநம்பிபொய்ச்சமண்பொருளாகி
யீண்டுநம்பியிமையோர்தொழுநம்பி
யெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. 9

காக்குநம்பிகசியாதவர்தம்மைக்
கசிந்தவர்க்கிம்மையோடம்மையிலின்பம்
பெருக்குநம்பிபெருகக்கருத்தா. 10

திருச்சிற்றம்பலம்.

---

சுந்தரமூர்த்திநாயனார், திருமுதுகுன்றத்தில் எழுந்தருளியிருக்கும் நாட்களிலே, ஒருநாள் வழக்கப்படி திருக்கோயிலுக்குப்போய் சுவாமியை வணங்கி, தமக்குப் பொன் வேண்டும்கருத்தை மனத்துட்கொண்ட குறிப்போடு, "மெய்யைமுற்றப்பொடிபூசியோர் நம்பி" என்னும் திருப்பதிகம் பாடிய போது, பழமலைநாதர்பன்னீராயிரம் பொன் கொடுத்தருள ; நம்பியாரூரர் வணங்கிநின்று, "சுவாமி ! தேவரீர் கொடுத்தருளிய இப் பொன்னெல்லாம் திருவாரூரிலே வரச் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அப்பொழுது சிவபிரானுடைய திருவருளினாலே, "சுந்தரனே ! நீ இப்பொன்னெல்லாவற்றையும் மணிமுத்தநதியிலேபோட்டுத் திருவாரூர் கமலாலயக் குளத்திலே போய் எடுத்துக்கொள்" என்று ஒரு அசரீரிவாக்கு எழுந்தது. அதைக்கேட்டசுந்தரமூர்த்தி சுவாமிகள் மச்சம் வெட்டி வைத்துக்கொண்டு,



பொன்னெல்லாவற்றையும் மணிமுத்தநதியிலே புகவிட்டு, "அன்றென்னை வலிந்தாண்ட திருவருளை அறிவேன்" என்று சொல்லி துதித்துக்கொண்டு மடாலயத்துக்கு எழுந்தருளினார்.

---

## பொன்பெற்றதிருப்பதிகம்.

—(*)—

பண்-நட்டராகம். (எ-ம். திருமுறை,)

---

திருச்சிற்றம்பலம்.

பொன்செய்தமேனியினீர்புலித்தோலையரைக்கசைத்தீர்
முன்செய்தமூவெயிலுமெரித்தீர்முதுகுன்றமர்ந்தீர்
மின்செய்தநுண்ணிடையாள்பரவையிவடன்முகப்பே
யென்செய்தவாறடிகேளடியேனிட்டளங்கெடவே. (1)

உம்பரும்வானவருமுடனேநிற்கவேயெனக்குச்
செம்பொனைத்தந்தருளித்திகழுமுதுகுன்றமர்ந்தீர்
வம்பமருங்குழலாள்பரவையிவள்வாடுகின்றா
ளெம்பெருமானருளீரடியேனிட்டளங்கெடவே. (2)

பத்தாபத்தர்களுக்கருள்செய்யும்பரம்பரனே
முத்தாமுக்கணனேமுதுகுன்றமர்ந்தவனே
மைத்தாருந்தடங்கண்பரவையிவள்வாடாமே
யத்தாதந்தருளாயடியேனிட்டளங்கெடவே. (3)

மங்கையொர்கூறமர்ந்தீர்மறைநான்கும்விரித்துகந்தீர்
திங்கள்சடைக்கணிந்தீர்திகழும்முதுகுன்றமர்ந்தீர்
கொங்கைநல்லாள்பரவைகுணங்கொண்டிருந்தாண்முகப்பே
யங்கணனேயருளாயடியேனிட்டளங்கெடவே. (4)

மையாருமிடற்றாய்மருவார்புரமூன்றெரித்த
செய்யார்மேனியனேதிகழும்முதுகுன்றமர்ந்தாய்
பையாருமரவேரல்குலாளிவள்வாடுகின்ற
ஐயாதந்தருளாயடியேனிட்டளங்கெடவே. (5)

நெடியானான்முகனுமிரவியொடுமிந்திரனு
முடியால்வந்திறைஞ்சமுதுகுன்றமமர்ந்தவனே
படியாருமியலாள்பரவையிவடன்முகப்பே
யடிகேடந்தருளாயடியேனிட்டளங்கெடவே. (6)

கொந்தணவும்பொழில்சூழ்குளிர்மாமதின்மாளிகைமேல்
வந்தணவும்மதிசேர்சடைமாமுதுகுன்றுடையாய்
பந்தணவும்விரலாள்பரவையிவடன்முகப்பே
யந்தணனேயருளாயடியேனிட்டளங்கெடவே. (7)

பரசாருங்கரவாபதினெண்கணமுஞ்சூழ
முரசார்வந்ததிரமுதுகுன்றமமர்ந்தவனே
விரைசேருங்குழலாள்பரவையிவடன்முகப்பே
யரசேதந்தருளாயடியேனிட்டளங்கெடவே. (8)

எத்தாதிருந்தறியேனிமையோர்தனிநாயகனே
மூத்தாயுலகுக்கெல்லாமுதுகுன்றமமர்ந்தவனே
பூத்தாருங்குழலாள்பரவையிவடன்முகப்பே
கூத்தாதந்தருளாய்கொடியேனிட்டளங்கெடவே. (9)



பிறையாருஞ்சடையெம்பெருமானருளாயென்று
முறையால்வந்தமரர்வணங்கும்முதுகுன்றர்தம்மை
மறையார்தங்குரிசில்வயனாவலாரூரன்சொன்ன
விறையார்பாடல்வல்லார்க்கெளிதாஞ்சிவலோகமதே. (10)

சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரப்பதிகம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரம்.

[சுந்தரமூர்த்திநாயனார், திருவாரூரிலே பரவையாரோடு எழுந்தருளியிருக்கும் நாளில், ஒருநாள் பரவையாரை நோக்கி, 'எனக்குத்திருமுதுகுன்றனார்கொடுத்தருளியபொன்னை மணிமுத்த நதியிலே புகவிட்டு வந்தேன். அதை இப்போது இந்த ஸ்தலத்திலிருக்கின்ற 'கமலாலயம்' என்னும் குளத்திலே போய் எடுத்துக்கொண்டு வருவோம் வா" என்றார். பரவையார், "இது என்ன அதிசயம்" என்றுசொல்லி புன்னகை செய்ய, நம்பியாரூரர், "பெண்ணே! நமது பெருமானுடைய திருவருளினாலே பொன் முழுதும் குளத்திலே எடுத்து உனக்குத் தருவேன். இது சத்தியம்" என்று சொல்லி, பரவையாரும் கூடவர, பூங்கோயிலிலே பிரவேசித்து, வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு, திருக்கோயிலுக்கு மேற்றிசையில் இருக்கின்ற திருக்குளத்தை அடைந்து, அதன்வடகீழ்க் கரையிலேபோய், பரவையாரைநிறுத்தி சிவபிரானை வணங்கி, குளத்திலே இறங்கித் தடவினார். "அப்

பொழுது, பழமலைநாதர் சுந்தரப்பெருமாளைக்கொண்டு திருப
பதிகம் பாடுவிக்கவேண்டும் என்னும் திருவிளையாட்டினால்,
பொன்னை அக்குளத்தில் வருவியா தொழிந்தருள; பரவை
யார் நகைத்து, "ஆற்றிலே இட்டுக் குளத்திலே தேடுகி
றீரா" என்றார். அதுகேட்ட ஆளுடையநம்பிகள், "சுவாமி!
தேவரீர் முன்னருளிச் செய்தபடி பொன்னைத்தாரும்",
என்று திருமுதுகுன்றர்மேல், "பொன்செய்த மேனியினீர்"
என்னும் திருப்பதிகம் பாடி; கடவுளுடைய பெருங்கருணை
யினாலே வந்தெழுந்த பொற்குவியலை எடுத்து, கரையிலேற்றி
அப்பொன்னையும் முன்கொண்டுவந்த மச்சத்தையும் உரைப்
பித்து, மச்சத்திலும் பார்க்க இது உரைதாழ்ந்தது கண்டு,
பின்னும் சுவாமியைப் பாடினார், அப்போது, சுவாமியான
வர் உரைதாழாது அருள் செய்ய; சுந்தரமூர்த்திநாயனார் மன
மகிழ்ந்து, பொற்றிரள்களை ஆட்களிற் சுமத்தி, பரவையா
ரோடு வீட்டுக்கனுப்பி, தாம் திருக்கோயிலிலேபோய் வன்
மீகநாதரை வணங்கிக்கொண்டு, தம்முடைய திருமாளிகை
யை அடைந்து பரவையாருடன் இன்புற்று வாழ்ந்திருந்
தார்.]

இந்த க்ஷேத்திரம் "விருத்தாசலம்" என்று வழங்கி
வருகின்றது, இவ்வாலயத்தில் வீற்றிருந்தருளும் சிவபிரான்
திருநாமம் பழமலைநாதர். தேவியார் திருநாமம் பெரியநாயகி
யம்மை. தீர்த்தம் மணிமுத்தாறு, ஸ்தலவிருக்ஷம் வன்னி,
இது காசியினு மேம்பட்ட தெய்வத் திருநகர். "விருத்த



காசி" என்றுஞ் சொல்லப்படும். இங்கே உயிர்விடும் பிரா
ணிகளுக்கெல்லாம் உமாதேவியார் தமது முன்றானையினால்
வீசி இளைப்பாற்ற, சிவபிரான் ஸ்ரீ பஞ்சாக்ஷரோபதேசம்
செய்து அப்பிராணிகளைத் தமது ரூபமாக்குமாம். இதனை,
"தூசினு லம்மை வீசத் தொடையின்மேற் கிடத்தித்துஞ்சு
மாசிலா வுயிர்கட் கெல்லா மஞ்செழுத் தியல்பு கூறி—யீச
னே தனது கோல மீந்திடு மியல்பா லந்தக்—காசியின் விழு
மிதான முதுகுன்ற வரையுங் கண்டான்." எனதரும் கந்த
புராணம் வழிநடைப்படலத்தாலும் உணர்க. இத்திருப்பதி
திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் திருநாவுக்கரசுநாயனார்
அருளிச்செய்த தேவாரத்துடன் திருப்புகழையும் உடையது
என்க.

இந்த ஸ்தலம் தென்னிந்தியா இருப்புப் பாதையில்
விழுப்புறத்திலிருந்து திருச்சிக்குச் செல்லும் மார்க்கத்தினு
ள்ளதும் மேற்படி இருப்புப்பாதை கூடலூரிலிருந்து செல்
லும் விருத்தாசலம் ஜங்ஷனுக்கும் தென்கிழக்கே சுமார் ஒன்
றரைமைலிலுள்ளது.

## அருணகிரிநாதர் திருப்புகழ்.

குடத்தாமரை யாமென வேயிரு
தனத்தார்மதி வாணுத லாரிருள்
குழற்காடின மாமுகில் போன்முது கலைமோதக்
குலக்கார் மயிலாமென வேகயல்
விழித்தார்கர மேல்கொடு மாமுலை
குடத்த்யாழ்கிளி யாமென வேகுயில் குரலோசை
படித்தார்மயி லாமென வேநடை
நெளித்தார்பல காமுகர் வார்கலை
பழிப்பாரவ ராசையை மேல்கொடு விலைமாதர்
படிக்கார்மின லாமென வேநகை
புரித்தார்பலர் வாயிதழ் சேர்பொருள்
பறிப்பார்பழி காரிக ளாரிக ளுறவாமோ
வடைத்தார்கட லோர்வலி ராவண
குலத்தோடரி யோர்சர ணார்சின
மழித்தார்முகி லேய்திற ராகவர் மருகோனே
யறுத்தாரய னார்தலை யேபுர
மெரித்தாரதி லேபுல னாருயி
ரளித்தாருடல் பாதியி லேயுமை யருள்பாலா
விடத்தாரசு ரார்பதி வேரற
வடித்தாய்கதிர் வேல்கொடு சேவகம்
விளைத்தாய்குடி வாழும ரோர்சிறை மிடிதீர
விழித்தாமரை போலழ காகுற
மகட்கானவ ளாவென தாயுறை
விருத்தாசலம் வாழ்மயில் வாகன பெருமாளே

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரத்தில் தேய்வீகமுற்று விளங்கிய
குருநமசிவாயதேவசுவாமிகள் அருளிச்செய்த

# சிவக்ஷேத்திரக் கோவைத் திருவெண்பா.

—(*)—

## திருமுதுகுன்றம்.

—(*)—

மூத்தா நதித்துறையின் மூழ்கி யாகரவென்
றித்தா ரணிதழைக்க வேத்தியே-யத்தா
பழமலைவா ணாவென்று பாடிப் பாவத்தை
யெழமலைவார் பேறே யினிது. (1)

மூத்தா நதித்துறையின் மூழ்குவார் நேயமுடன்
சத்தாய மாமறைநூல் சாற்றுவார்-மெய்த்தாமஞ்
சாத்துவார் விர்த்தகிரித் தாணுவையே தோத்திரஞ்செய்
தேத்துவார் பேறெண்சொல் கேம். (2)

நீற்றை யணிந்து நினைந்துருகி நெஞ்சமே
போற்று செழுந்திருவின் பூமானுஞ்-சாற்றுங்
கலைக்கிழத்தி கோனுங் கருதரிய கோல
மலைக்கிழத்தி கோமான் வரும். (8)

வணங்குந் தவத்தோர் மலரடியென் சென்னி
பிணங்குந் தவம்பெறுவ தென்னாள்-பிணங்கு
மூரகா பரணா வொளியா மொருவா
வரகாப் பரணா வுனை. (4)

சத்தமுத லைந்தின் றளையறத்தாட் கொண்டேயுண்
மெத்துபொருட் டானாகி மேவுவாய்-சத்தமுழு
பானார் காத்தேத்து மன்னாகிய நீயே
[illegible]ணாப் பழமலைவாணா. (5)

மன்னுருளை யோர்மச்சி வாய்குரு ராயனது
பொன்னடியி லென்னைப் பொருத்துவாய் - தன்னுமலர்ப்
பாதா மலைக்கிழத்தி பாகா பரமசிவ
நாதா பழமலைவாணா. (6)

வாரேறுங் கொங்கை மலையரையன் பாவையொடு
தேரேறுங் காட்சி தெரிசித்தேன் - காரேறும்
பாவங்க ளெல்லாம் பதிகொடுத்தேன் பத்தராது
நாவன் பழமலைவா ணன். (7)

மாதர்கிளை மக்களெனு மாயா மயக்கமறப்
பாதமல ரைநாலைமேற் பாலித்தா - னீதிபுனை
செம்பொன் றியாகன் றிருமணிமுத் தாருடைய
நம்பன் பழமலைவா ணன். (8)

விருப்பாய் முதுகுன்றின் மெய்ப்புதுமை கேளீர்
நெருப்பா மலையொன்று நிற்கும்-பொருப்பிலொரு
பச்சைக் கொடியும் படரு மதனருகே
யுச்சிக்கே யாறுமோ டும். (9)

---

குருநமசிவாயதேவசுவாமிகள் திருவண்ணாமலையிலே அருணாசலேசுரர் அநுக்கிரகம் பெற்றுவிளங்கிய தமதாசிரியராகிய குகைநமசிவாய தேவசுவாமிகள் அருளியபடி சிவஸ்தலயாத்திரைசெய்து துதித்துவருங்கால் இவ்விருத்தாசலத்தை யடைந்து, இரதோற்சவதரிசனம்



கிடைக்கப்பெற்று பெருமானைத்தரிசித்து, ஆராமையால் அவ்வற்புத காட்சியையும் பெருமான்பாலிருக்கும் திருவருட்பெருக்கையும் அடியவர் புரியுந் தொண்டின்மேன்மையையும் இங்ஙனம் வியந்துபுகழ்ந்து, பின்பு; ஒவ்வொருதலங்களிலும் அம்பிகையைத்துதித்து அத்தேவியாரால் அளிக்கப்படும் திருவமுதையுட்கொள்வது நியமமாதலால் அந்தப்படியே இத்தலத்திலும் பெரியநாயகியம்மையாரைத் தரிசித்து,

கன்றிபுனை யும்பெரிய நாயகியெனுங்கிழத்தி
யென்றுஞ் சிவனாரிடக்கிழத்தி-நின்ற
நிலைக்கிழத்தி மேனிமுழு நீலக் கிழத்தி
மலைக்கிழத்தி சோறுகொண்டு வா.

என்று துதித்தனர். அப்போது பெரியநாயகியம்மையார் பால்ய வடிவமர்ந்த தரிசனந்தந்தளித்து "ஏனப்பா என்னைப்பலவாற்றாலும் கிழத்தியென்று பாடினாய்" என்று கேட்டருள; சுவாமிகள் மிகக்களி கூர்ந்து,

முத்தாநதி சூழு முதுகுன் றுறைவாளே
பத்தர் பணியும்பதத்தாளே-யத்த
னிடத்தாளே முற்றா விளமுலைமே லார
வடத்தாளே சோறுகொண்டு வா.

என்று மீட்டுந்துதித்து, அத்தேவியாரளித்ததிருவமுதை அடியவர்களுடன் றுகர்ந்து, வசித்திருந்தனர். அதுமுதல் அத்தலத்திலே பெரியநாயகியம்மையார் விருத்தாம்பிகை வாலாம்பிகையென்னும் இரண்டுதிருவுருவாய்த் திருக்கோயில் கொண்டெழுந்தருளி விளங்குகின்றனர். இதனை ஷை சுவாமிகள் சரித்திரக்கோவையுட்காண்க.

திருச்சிற்றம்பலம்.

---

கணபதி துணை.

# பழமலையந்தாதி.

## காப்பு.

### கட்டளைக்கலித்துறை.

சீரதங் கோட்டு முனிகேட்ட நூற்படி செங்கரும்பா
லோரதங் கோட்டு வயல்சூழ் முதுகுன் றிறையவனைப்
பூரதங் கோட்டு மலையானைப் பாடப் புரந்தருளும்
பாரதங் கோட்டு நதியா லெழுதிய பண்ணவனே.

---

## நூல்.

திருவருந்தங்கவருங்கல்விமாதுசிறப்புவருங்
கருவருந்தங்கிலையாதென்றுள்ளங்கரைந்திறைஞ்சிற்
பொருவருந்தங்கமலைபோலுங்குன்றைப்புராதனனை
யிருவருந்தங்கடலையாலிறைஞ்சுமிறைவனையே. (1)

இறைக்குவளையுமிளங்கிளையுமழகென்பவர்சேர்
துறைக்குவளையுமெகினமும்வாவிக்குத்தூயவிதழ்
கறைக்குவளையுமழகாமுதுகிரிநாதர்க்கின்றிப்
பிறைக்குவளையுமுடல்வந்தவாறென்கொல்பேசகவே. (2)

பேசகவீரவருநாளென்றெல்லைப்பெருங்கடல்சே
ராசுகவீரபழமலைவாணனென்றன்பினைத்து
பூசுகவீரமதிவேணிநீற்றைப்புலவிர்பிறர்
காசகவீரவனையுகவீர்மெய்க்கதிதருமே. (3)



கதியிலைவேலைமடவார்க்கியற்றக்கருதுளமே
பொதியிலைவேலையுண்டோற்றோன்றொழும்பழம்பூதரத்தன
நதியிலைவேலைகிழ்வீரன்றந்தையைநோக்கிலை
யொதியிலைவேலைவளர்ப்பாய்தருவையொடித்தெறிந்தே. (4)

ஓடியமருங்குலைக்கொங்கைகள்வாட்டுறமோடரிக்கட்
டொடியமருங்குலைக்காந்தளங்கைம்மகள்சேரமதன்
கடியமருங்குலைத்தீப்போன்மதியங்கனன்றெழுத
லடியமருங்குலைசெம்முதுகுன்றர்க்கறைகுவமே. (5)

மேருக்குவடுநிகர்தோட்பழமலைமேவுநிருத்
தேருக்குவடுவசமாடுபாடத்தெருவினிற்போய்
நீருக்குவடுவிழிபெழின்மாய்ந்தெதிர்நின்றுநம
ரூருக்குவடுவினைத்தனளேயின்றொழிலறவே. (6)

ஒழியாக்கவலையொழிவதென்றோசொல்லுழல்புலத்தின்
வழியாக்கவலையிடைப்படுமோனின்மயங்கிநின்று
பழியாக்கவலைமனமேபணித்துபாவிலைவேல்
விழியாக்கவலைமகளிறைதாழ்பழவெற்பினையே. (7)

வெற்றிக்குமாரனையீன்றபழமலைவேந்தனின்று
முற்றிக்குமாரனைநோக்குங்கொலோவென் பர்மூலைவாய்புச்
சொற்றிக்குமாரனைவார்மடவாரவன்றோண்மூலையோ
டொற்றிக்குமாரனையோன்முனஞ்சேரவுழலுவரே. (8)

உழவரைச்சந்தவினைவாளைபாய்வயலோங்குகுன்றைக்
கிழவரைச்சந்தநினைவாய்நற்கிளைவளரும்
பழவரைச்சந்தநந்தமைவாங்கிப்பரவினரே
ளொழவரைச்சந்தமயிலியல்பூசவுமெண்ணினனே. (9)

எண்ணிவருந்தினைகொங்கேதாம்பழமலையெய்திலர்கா
ணண்ணிவருந்தினமின்றேயினிக்கதிரப்புறவி
மண்ணிவருந்தினைமாவாலெழுந்துகள்வந்துடலின்
கண்ணிவருந்தினைவர்ன்மதிறேய்க்குங்கடிநகரே. (10)

கடிக்கஞ்சமனையுவர்துல்காக்குறுங்காரணனோர்
முடிக்கஞ்சமனைதொறும்பலியேற்றமுதுகிரியான்
யடிக்கஞ்சமனைவருந்தொழவாழ்வர்விரவுறமெய்
குடிக்கஞ்சமனைவெருவுதலேயின்றுக்கல்வனென்றே. (11)

கொல்லைக்குறவரைவாயனையார்கரிக்கோட்டைவிலை
செல்லைக்குறவரையாதுகொளகாணத்திரேயவரைவான்
தில்லைக்குறவரைநம்முதுகுன்றரைச்சேர்வலென்று
செல்லைக்குறவரைமாத்திலரக்கோலமீகுவரே. (12)

ஈகையிலங்கைதவ்வளவெங்ஙனமெய்துவமென்
றேகையிலங்கைவடிவேலொடுவருந்தோன்றறந்தை
வாகையிலங்கையரசிறவூன்றியவன்னன்மழு
மாகையிலங்கைம்முகமுதுகுன்றன்மலர்ப்பதமே. (13)

பதம்பரவைக்குவருந்துபிராற்குப்பசுமையின்மேற்
கதம்பரவைக்குவாச்சுற்றுகட்செவிக்கங்கணற்குச்
சிதம்பரவைக்குமுதுகுன்றவாணற்குச்செல்வமெல்லா
மதப்பரவைக்குநிகர்கரித்தோறலைமாலைகளே. (14)

மாலைக்கலுழ்செய்யோனெனத்தாங்கவயங்குரு
ஞாலைக்கலுழவொழியெனுமேற்றிவர்சோன்மையனும்
பாலைக்கலுழவொருமகற்கீந்தபழமலையான்
மூலைக்கலுழாடம்புரிவானெம்முதற்றெய்வமே. (15)



தெய்வசிகாமணியேமணிகூட்டிற்சென்றவிற்ற
மெய்வசிகாமணிகண்டாபழமலைவித்தகமீ
னெய்வசிகாமணிமாவெனுங்கண்ணியைநெஞ்சகத்து
வைவசிகாமணிநீனுவாதெனையின்பவாழ்வளித்தே. (16)

வாழமரிக்குமடநெஞ்சமேமென்மலர்ப்பகழி
தாழமரிக்குமதற்காய்த்தந்தையுந்தாயுமொரு
வேழமரிக்குமிகவுறவாம்பழவெற்பினயல்
சூழமரிக்குமியல்பையெஞ்ஞான்றுந்துணிந்திலையே (17)

நத்துமியும்பரியம்புப்பழமலைசூழ்துரையீர்
நற்றுமியுப்பரியாவிலையேவாடியுணேம்புலவீர்
சிற்றுமியுப்பரிவாலுதவார்த்துதிசெய்விர்மல
முற்றுமியுப்பரிபாகமுண்டோசொல்லுமுங்களுக்கே. (18)

கேட்டுப்புவனங்கொள்வுமெண்ணேயக்கிராதனின்முன்
ஞட்டுப்புவனம்பயின்மான்றசையுண்டநாதனராப்
பூட்டுப்புவனங்கொளுமெய்ப்பழமலைப்புண்ணியன்றன்
வேட்டுப்புவனம்பதிஞன்குரல்கிலும்வேண்டிலமே. (19)

வேண்டவநக்கவினைவதன்றண்மலர்வேட்கைமணி
பூண்டவசக்கணறுநுதலார்மயல்போக்குவது
நீண்டவடுக்கனயமாதினைமுலைசேர்த்துதவ
மாண்டவடுக்கனிகர்தோட்பழமலைமன்னவனே. (20)

மன்னவமாதவனுடம்பழமலைவாணமணி
யன்னவமாதவனன்மலைக்காற்கசைத்தம்மதிகண்
டென்னவமாதவனல்லினவந்தானென்றிரங்கிமதன்
றின்னவமாதவரோமேயென்செல்வத்திருந்திழையே. (21)

திருந்தியவேதம்புகல்பரிசேயறஞ்செய்துடலம்
வருந்தியவேதம்பொருளெனவாழ்பழநாமலையான்
பொருந்தியவேதந்தருநஞ்சுணுமெனிற்பூமலர்கா
மருந்தியவேதம்புயமலையாட்கணிமங்கலமே. (22)

மங்கலமாவிமலைசேர்பழமலைவாணமணிச்
செங்கலமாவிமலர்க்கைக்குருகொடுசெல்கவெயர்க்
கிங்கலமாவிவளைநீயணைத்தினியுனைதிர்
தங்கலமாவிதரிற்கொடுசேறுமெந்தண்மனைக்கே. (23)

தண்டங்கமண்டலங்கொண்டுபழமலைச்சங்கரநாட்
புண்டங்கமண்டலங்கண்டுசென்றுலுமெய்ப்போதமுறார்
பண்டங்கமண்டலங்காரமின்னுக்கினன்பாட்டியலை
கொண்டங்கமண்டலம்பாழாக்கியவினைக்கூறலரே. (24)

கூற்றைக்கொடியங்கடப்பானருளெனக்கூய்ப்பரவி
யேற்றைக்கொடியங்கரஞ்சேர்பழமலையீசனணி
நீற்றைக்கொடியங்குளமேவெறுத்திகறைபெருகு
மூற்றைக்கொடியங்கினமோடருந்துமுடம்பினையே. (25)

உடற்குவலையர்தகன்கைக்கயிறென்றுணர்த்துளமே
கடற்குவலையும்புகழ்சீர்முதுகிரிக்கண்ணுதற்கு
மடற்குவலையம்புலாகளத்தாற்குநம்மன்றமர்ந்த
நடற்குவலையம்பணியாமலற்கன்புநண்ணுகவே. (26)

நட்டுவனரையறிகிலன்றண்ணுமைநந்திநின்று
கொட்டுவனுரையிரைதேர்கயமுதுகுன்றுடையாய்
தட்டுவனுரையகலாதநான்முகன்றனமுயர்
குட்டுவனுரைவனைவான்பரவுநின்கூத்தினுக்கே. (27)



கூத்துகந்தம்பலமேவுறயோர்முதுகுன்றனைநம்
பாத்துகந்தம்பலமாரினுமெள்ளினும்பண்பனைத்தான்
சாத்துகந்தம்பலமாமறையாற்புகழ்தாணுவைநா
மேத்துகந்தம்பலமாமபொதுமாதரையெள்ளினமே. (28)

எள்ளாதவனையெலும்பாபழமலையென்றிருந்த
கள்ளாதவனைமகவரிந்தாக்கெனக்கட்டுரைத்து
விள்ளாதவனைமகிழ்பரமாவழல்வெண்மதியைத்
தள்ளாதவனைமுடிசூடெம்மாதுதருக்குதற்கே. (21)

தருவினிலையினிமன்னவற்கில்லையித்தண்புனத்தின்
மருவினிலையினிமைக்கூற்றெனக்கந்திலானநிக
ருருவினிலையினியவ்வேற்குகனையுதவியகோன்
கருவினிலைபினிகர்தோன்பழமலைக்காரிகையே. (30)

காரிகையார்க்குவரும்பொதுவோவல்காண்விசும்பிற்
பூரிகையார்க்குமுதுகுன்றநாயகன்பொங்குமருண்
வாரிகையார்க்குமருந்தனையான்மலைமன்னனரு
ணாரிகையார்க்குமெழுவுறழதோட்கணறுநுதலே. (31)

நுதலரிக்கும்பருவங்குறையென்றவனுக்கடையா
முதலரிக்கும்பருமேத்துந்தமிழர்முருகுபெரு
குதலரிக்கும்பருநற்கருங்காமுதுகுன்றரிலார்
சிதலரிக்கும்பருமாமரம்போற்றுயர்தின்பவரே. (32)

இன்னக்கனியைவிழைகூனினமந்திநீங்கனியீ
தென்னக்கனியையிரவியிற்பாய்பொழிலீண்டுகுன்றை
நன்னக்கனியைமதிவேணியனிநாம்பயந்த
சின்னக்கனியைவலத்தில்வைத்தால்வருந்தீங்கென்னையே. ()

நீங்குதிரைக்கடனேர்சார்காடுயர்செம்மலத்திற்
காங்குதிரைக்கடாய்க்கிரையென்றிர்தவாகமய
னீங்குதிரைக்கடாச்முதுகுன்றர்க்கர்கிப்பனுக்கு
வாங்குதிரைக்கடனீயவல்லார்கருவணங்குமினே. (34)

வணங்கக்கரமுமொழியப்பழமலைமன்னுருவா
யிணங்கக்கரமிருப்பவைத்தேபுணரேந்திழையார்
பிணங்கக்காமுறுமலியுபோலவர்பின்றொடர்வீ
ரணங்கக்காமுதலைபோலுமைப்பற்றுமந்தகனே. (35)

அந்தரங்கங்கைதவரறியாமலமுதருள்சம்
பந்தரங்கங்கைவலிபோன்மின்னுக்கினர்பாடியுலைச்
செந்தரங்கங்கைரவமொண்கமலந்திரைத்துவருஞ்
சந்தரங்கங்கைவிரும்புமுத்தாறுடைத்தொன்மலையே. (36)

மலங்கலையங்கலைகற்றேன்றனக்கருள்வாழ்வளிப்போன்
கலங்கலையங்கலைநல்லோர்பரவுங்கழலடியான்
விலங்கலையங்கலைவேலோன்பிதாமுதுவெற்பிடத்திற்
பொலங்கலையங்கலையான்மூடமீனைப்புதைத்தவனே. (37)

புதைத்துக்கரக்கும்பொருளாளர்வெஞ்சொற்பொருமறலி
கதைத்துக்கரக்குங்குமமுலைபாகன்மெய்கண்டடியார்
பதைத்துக்கரக்குஞ்சிறிதாவுருகும்பழமலையான்
வதைத்துக்கரக்குஞ்சரமீர்த்தவன்றருவாழ்விலரே. (38)

இலங்குமரியுமருள்கோன்முதுவெற்பிடத்தாற்கால்
விலங்குமரியுமுழலல்லாமுன்னிவெய்துயிராக்
கலங்குமரியுமிருந்துயர்கூருங்கலுழ்ந்திரந்தாய்க்
குலங்குமரியமொருவனும்போகுங்கொடுஞ்சுரத்தே. (39)



கொடுவரியானையடர்ந்துறுமாறெனக்கொண்டுயர்து
ணெடுவரியானையுறவடிப்போமென்றொருங்குவந்தே
யடுவரியானைநிகர்நமன்றூதாடிருடிமன்
னடுவுரியானைமுதுகுன்றொடேசுரர்தமையே. (40)

நாகாவலர்மடவார்க்குள்ளுருகிக்கலைக்காவிருப்ப
வாகாவலர்புனைந்துன்றனையேத்திலராய்த்தறிவா
லுரகாவலரெனவுய்ந்தாரினருளமுற்றகுன்றைப்
புரகாவலரிலருட்கோயிலாகுப்புராந்தகனே. (41)

புரந்தானஞ்சபழமலைவாணன்புலவர்தொழுந்
துரந்தானஞ்சதலைநாககங்கணன்றொண்டுறயா
னிரந்தாரஞ்சதொழுதேத்துதற்குளநேயமொடு
வரந்தாரஞ்சகளந்துவைத்தானென்பர்மாதவரே. (42)

மாதரைக்கொன்றுவரம்மேனிவைத்தவமாசனைத்தை
யீதரைக்கொன்றுசிறுநாணென்றூர்க்குமெழிலுடையாய்
நீதரைக்கொன்றுநலஞ்செயல்வேண்டுகினையிகழும்
வாதரைக்கொன்றுமுதுகுன்றமாநகர்மாசொழித்தே. (43)

மாசியதிகந்துறந்தார்மகிழ்குன்றைமாநகரோ
காசியதிகங்கொலோவென்பிராயினக்காசியெனப்
பேசியதிகந்தகன்றிருந்தான்பரன்பேரடலை
பூசியதிகம்பரனீங்கிலானிப்புரியினையே. (44)

புரிசடையானபழமலைவாணபொருப்பெடுத்த
கரிசடையானதிகந்தீர்த்தருளக்கடவையின்ற
பரிசடையானமுடையாயொழித்தனன்பட்டினைத்
துரிசடையானதழுக்காமெனுநின்றுசிலினுக்கே (45)

துகிலங்குருகுந்துறந்தாளுயிருந்துறக்கநின்று
ளகிலங்குருகுமணிமுடியாயெனுமத்தவனை
முகிலங்குருகுமடியாய்பரந்தமுதகிரியாஞ்
சகிலங்குருகுலமெத்திறைவாமைத்தடங்கண்ணியே. (46)

நடுக்கமலத்திலொடுங்குதக்போலக்கன்றாளிலுறு
மொடுக்கமலத்தினிகழ்வால்வளையினமூர்ந்திடச்சேன்
மடுக்கமலத்திலுகள்வயல்சூழ்குன்றைமாநகரோ
யடுக்கமலத்திபுனையலங்காரவருளுகவே. (47)

அருவரைவில்லையுமிழ்மணிநாகமுமத்திகளு
முருவரைவில்லையெனப்பூண்பவரையவ்வும்பர்தொழும்
பொருவரைவில்லையுறமுதுகுன்றைநகரப்போர்த்துமரு
ளொருவரைவில்லைவரிலொற்றினையெனவுற்றனமே. (48)

உற்கைக்குமாறுபடுமணிநாகமொளித்துலவி
விற்கைக்குமாறுசமர்ந்தவசேர்முதுவெற்பினின்பா
னிற்கைக்குமாறுவழுவாகடக்கைக்குநேரிழையார்
சொற்கைக்குமாறுந்தமியேனுக்கென்றுணைசெய்கையே. ()

செய்க்குத்தனங்கமலமலர்சேர்தருஞ்செய்யதிரு
மெய்க்குத்தனங்கடரவடுவாங்கிதொல்வெற்பிடத்திற்
கைக்குத்தனங்கவொழியினுந்தாடனைக்காய்வதிலேன்
வைக்குத்தனங்களழித்திறையாதிந்தவையகமே. (50)

வைத்துமதிக்குமருங்கிற்கைத்தரயெனமந்தரமத்
துய்த்துமதிக்குமனையின்மையான்மறையோதியமுன்
னெய்த்துமதிக்குமுடிமிசைக்கங்கையையேற்றினையோ
மெய்த்துமதிக்குமனுகவொண்ணுமுதுவெற்பினனே. (51)



வெற்புக்குமையவடிவேலெறிந்தசெவ்வேண்மதவேள்
பொற்புக்குமையவனோடரன்வாழ்முதுபூதரத்தி
னிற்புக்குமையவளொத்திருந்தாள்குறைவின்றிவளர்
கற்புக்குமையவள்போலுறங்காதற்கருங்கண்ணியே. (52)

கருந்தடங்கட்குமுதவாய்மயிலெங்கள்கண்களுக்கு
விருந்தடங்கட்குநலமெனப்போந்தவிண்மீன்பொரியு
மருந்தடங்கட்குவளையோடையாகுகவம்புயங்கள்
பெருந்தடங்கட்குமுகமாகுங்குன்றைப்பெருந்தகையே. (53)

பெருமுதலைவளையான்போற்றுங்குன்றைப்பெருந்தகையை
யிருமுதலைவளைமூப்படைந்தாண்டவர்க்கின்மகவைக்
கருமுதலைவனைவாயிறந்தானைமுன்கண்டமுது
பொருமுதலைவளைத்தனண்மேவினள்பூங்கொடியே. (54)

பூங்குமிழூர்படிமுன்னும்பொருந்திப்புளினர்பொருள்
வாங்குமிழும்படிமோதுமெனல்கொடுமால்விழுங்கி
யாங்குமிழும்படிவந்தவெம்பாலையடைந்தவன்கால்
வேங்குமிழும்படியென்னும்பழமலைவித்தகனே. (55)

வித்துருமத்தைநிகர்வாயுயிர்செய்வினையருத்துங்
கத்துருமத்தையிடுதயிர்போலக்கலக்குமதன்
சத்துருமத்தைவனைமுதுகுன்றிறைதான்கொடுவா
னத்துருமத்தையிலவாகவெள்ளுவர்நற்றவரே. (56)

நற்றவராகமறையவராகவிக்கானிலத்தி
லற்றவராகமணமுடையார்கன்றியச்சமற
வுற்றவராகமறியாதொளித்தநின்றொண்பதங்கள்
பற்றவராகமலாலயன்போற்றும்பழமலையே. (57)

பழங்கவிகடமகமர்திக்கிபொழிற்பண்டைமறை
முழங்கவிகடவனர்க்கீயுங்குன்றைமுதல்வனைவே
ளழங்கவிகடவிழிதிருக்தானையடிபரவார்
கிழங்கவிகடமறவரிற்றேன்றிக்கெடுவர்களே. (58)

கெடுத்துப்பணியுமுடையும்வெள்காமற்கிழத்திமுலை
வடுத்துப்பணியுமுரம்வேட்டுநின்றனள்வல்லியத [ள்
ளுடுத்துப்பணியுமரைக்கசைத்தோய்தொண்டருள்ளமெல்லா
கொடுத்துப்பணியுமலர்த்தாட்டிருமுதுகுன்றத்தனே. (59)

குன்றுகளுங்களையொவ்வாவெனுமுலைக்குன்றதிர்க்குஞ்
சென்றுகளுங்களையுண்வண்டுமோவிசெழுங்கொன்றைமான்
கன்றுகளுங்களைகண்மதிவேணிக்கடவுளை
யென்றுகளுங்களையெம்மானைக்குன்றையிறைவனையே. (60)

இறவாதவானந்தவெள்ளத்தழுத்தியெனையருளாற்
றுறவாதவானந்தவான்வடிதன்றேயெய்த்துறவர்தொழு
மறவாதவானந்தனஞ்சூழ்முதுகுன்றடைந்தவர்த
முறவாதவானந்தகோபாலனென்றற்குடையவனே. (61)

உடையமடங்கலுழைத்தபொற்பாதவொளிசெய்பழுப்
படையமடங்கன்முகற்காய்த்தவீரப்பழமலையாய்
கடையமடங்கலொடுபகலுந்தொழக்கற்றிலமெம்
விடையமடங்கல்வருவதெஞ்ஞான்றுவினம்புகவே. (62)

விளங்கவலம்புரிமால்போற்றுகன்முதவெற்பகஞ்சேர்
துளங்கவலம்புரியாய்மாய்பிறிதொருடம்படையாய்
துளங்கவலம்புரிமென்குழன்மாதர்க்குச்சூழ்ந்தின்று
களங்கவலம்புரியிவ்வெற்பையேகிலைகைவருமே. (63)



வருந்தாதவரைவளைத்திட்டவபவன்பிணிக்கு
மருந்தாதவரைமருவும்பழமலைவாணவனைப்
பொருந்தாதவரையுயிர்செகுத்துண்ணும்புலிமழுங்கத்
திருந்தாதவரைவரக்கூவுறுததென்சேவல்களே. (64)

சேவாலங்காட்டுபொழுதகஞ்சாயச்செலுத்திவரி
மாவாலங்காட்டுமுதுகிரிவாணவவ்வானமுய்ய
வேவாலங்காட்டுமிடற்றாய்நின்சீர்த்திவிரித்துரையா
நாவாலங்காட்டுவிலங்காயினேனிந்தநானிலத்தே. (65)

நிலக்கடந்தானைமகிழ்வானைத்தன்னடிக்கன்றெடுங்கும்
புலக்கடந்தானைமுதுகுன்றவாணனைப்போற்றிலர்தந்
நலங்கடந்தானைமுழுதுமிழந்தர்க்கரினிற்போ
யிலங்கடந்தானைதுணிசிறையாக்கொண்டிருப்பார்களே. (66)

இரப்பாரிலாரையிலரெனின்வைவரிரந்திடிற்றும்
கரப்பாரிலாரைமுகநோக்குறார்மழுக்கைக்குன்றையா
யுரப்பாரிலாரையறவாகக்கொள்வர்தம்முன்னையோர்
சிரப்பாரிலாரையவிப்பார்தம்மக்களைநீத்திருந்தே. (67)

இருப்புவலியையகன்றபொன்வலியையெண்ணுதலாம்
விருப்புவலியையுலையாரணங்கினர்விண்ணுறுதல்
பொருப்புவலியையிடத்தில்வைத்தாய்மலர்ப்பூங்கணைசேர்
கருப்புவலியையொழித்தாய்பழமலைக்கண்ணுதலே. (68)

கண்டந்தரிக்கும்விடத்தார்பழமலைக்கண்ணுதலார்
பண்டந்தரிக்குமருங்களித்தார்தம்பழவடியா
ரெண்டந்தரிக்குமிதாகும்பாதரிருங்கருமா
வெண்டந்தரிக்குமதற்காய்த்தவரொனுமெல்லியலே. (69)

மெல்லவணங்குநினைவாலெதிர்ந்திடவேனெடுங்க
ணல்லவணங்குவளையுடையோர்நடேர்திலனீ
கொல்லவணங்குமதிசமர்தேநின்றகொள்கையென்னே
வெல்லவணங்குமலையாய்முதுகிரிவேதியனே. (70)

வேதியவாவிதனக்காவியாகியவித்தகபெண்
பாதியவாவிமலர்த்தேன்பெருகும்பழமலைவாழ்
சோதியவாவிவருவிடைப்பாகனென்றெண்டருறு
நீதியவாவியவரையென்றேசென்றுநோர்குவனே. (71)

சேருமடியர்தமக்குறவாயவர்சேசமறச்
சோருமடியர்தமையணுகாதவர்தம்பியினும்
சாருமடியர்மணிநிறவண்ணன்றரையிடர்து
தேருமடியர்முதுகுன்றவாணுதற்கண்ணரே. (72)

கண்டரவர்தனைநேர்த்தாங்கருகக்களிற்றினைமுன்
கொண்டரவந்தனைவானேர்செயுமுதுகுன்றனொடு
வண்டரவர்தனைநேர்தானைக்கோலமதனனெய்யும்
புண்டரவர்தனைசேர்தியென்றேதுமின்போமின்களே. (73)

போதுமின்மாலைவலைகலையர்கவப்பொற்றொடியீ
ரோதுமின்மாலைதரின்வம்மினில்லையென்றோட்டினரேன்
மாதுமின்மாலைவருமுனஞ்சாவென்றுவண்கைமலர்
மோதுமின்மாலைமகிழ்குன்றைவாணர்தம்முன்னடைந்தே. ()

முன்னஞ்சிலம்புசிலையாக்கியவன்முதுகிரியாய்
பொன்னஞ்சிலம்புசிலம்புதலோடையிற்பூஞ்சிறக
ரன்னஞ்சிலம்புகடைவினமானையனங்கனெய்து
தன்னஞ்சிலம்புகுவளையல்லாததணந்தனனே. (75)



தணந்தவளக்கரிமேனியனாங்கொல்வெண்சங்கினங்கண்
மணந்தவளக்கரினின்றழுமோவலவாவுயிர்க
ளுணந்தவளக்கரிதாமுதுகுன்றரனேங்கமா
கணந்தவளக்கரியானேந்நிறையன்றிக்காட்பிலையே. (76)

காப்புக்கரியுர்திருமகணாயகன்காப்பவற்றின்
பூப்புக்கரியுந்தலையுடையானும்பொருந்தவைத்தான்
மாப்புக்கரியுங்குயிலும்பயில்பொழில்வண்டில்லையான்
மூப்புக்கரியும்புலியுங்கொன்றீர்தமுதுகுன்றனே. (77)

முதுமறையர்தமுறுபொருளோன் முழுப்படணிக்கு
விதுமறையர்தநூடியாய்ப்புராணம்விளங்கிரண்டோன்
பதுமறையர்தமுதுகுன்றவாணநின்பாதம்வணங்
குதுமறையர்தனைமார்பிலெம்மைக்குறகிடினே. (78)

குறகுமுனிவனையன்றுண்டவிம்முதுகுன்றனுக்கு
மறகுமுனிவனைசெய்தாலுய்வாரெவர்வந்தருளென்
றறகுமுனிவனைபோதும்டார்கமனுர்முனிவு
முறகுமுனிவனையெய்தாறிவறமூடரினே. (79)

மூடாகமாதிமிரையடைந்தாயலென்முன்னனுகண்
மீடாகமாதிபெருமானுதைக்கினுமெய்ப்புகழைப்
பாடாகமாதியெழுத்தைத்துமோதிப்பழமலைவாழ்
வீடாகமாதியடியாரடியருண்மேவினமே. (80)

மேவத்தகரையிவர்மகவீன்றதொல்வெற்பாச
சேவத்தகரைவொபூசித்துன்னைவிண்செல்வமுறும்
பூவத்தகரைகுவேமெமக்குநின்பொங்கருளா
லோவத்தகவைவைப்பாசமுந்தம்முரங்குலைத்தே. (81)

குலையாநிலமும்விசும்புந்தொழுமுதுகுன்றமதிக்
கலையாநிலமும்மடியழல்காயவக்காய்கனலின்

மலையாநிலமுமுடன்கூடவேமெனவாங்குகழைச்
சிலையாளிலமுமெமதில்லமாய்நின்றசிறுவனே (82)

சிறிரையாகமதியுனும்பாம்பணிசெல்வமறை
மாறிரையாகமலிமுதுகுன்றமருவுதற்குச்
சேறிரையாகயிலாசவிலாசகதேவவெண்மின்
றேறிரையாகநிலையென்றவாழன்மின்றொண்டர்களே. (83)

தொண்டரைக்கூடல்விழையார்பொழின்மலர்த்தூளுதிர்த்தல்
விண்டரைக்கூடலறவுதல்போலுக்தொல்வெற்புறமைக்
கண்டரைக்கூடலுடையாரைப்போற்றிலர்கற்றறியா
மிண்டரைக்கூடல்வழியோடத்துபுவீழ்த்தவரே. (84)

வீழிவலஞ்சுழிதில்லைசிராப்பளிமேவதவனங்
காழிவலஞ்சுழியன்மேவுகுன்றைக்கடவுள்விடி
ஞாழிவலஞ்சுழிவென்வளையானனையன்னகல்விப்
பாழிவலஞ்சுழியுந்தியுன்வாங்குவர்பாவையரே. (85)

பாவலருக்குமலிபொருளீந்துகொள்பாட்டினர்க்கு
மேவலருக்குமழுவார்க்குநன்முதுவெற்பினுக்குக்
காவலருக்குமயலாகின்றகலந்தின்று
யாவலருக்குவிளைநிலமாயினையாயிழையே. (86)

ஆயக்கலையகலுஞ்சேர்முதுகுன்றாசமுனஞ்
சாயக்கலையனிமிர்த்தசெம்மேனியதப்பவில்லா
நேயக்கலையபுழுக்கூடெனுமுடனேயமெல்லா
மாயக்கலையமலமாயைகன்மங்கள்வந்தருளே. (87)

வந்திக்கசாவினிலையேவழுத்தமலர்விழியாள்
முந்திக்களுவிதொலைத்தோய்கின தமுதவெற்பையே
சிந்திக்காவிமதநாறுமாதரைச்சேருமிஞ்ப
சந்திக்கனுவிணுழிவாமென்றுன்னுறசல்குதியே. (88)



கல்குரவேகல்லுரைதான்முதுகுன்றர்காட்டுனக்குச்
சொல்குரவேகல்குரவுறுவேலம்தொடைகள்பல
மக்குரவேனலிதண்விட்டகப்புக்கமானையிந்த
வொல்குரவேனல்லிடைக்கொடுபோகவென்றோதிலையே. [89]

ஓதித்திருக்குமொழிவதல்லாமலுன்னுண்மைநிலை
சாதித்திருக்குமியல்புதந்தாயிலைதன்மையெல்லாம்
போதித்திருக்குமொழிகுன்றைவாணபொருப்புதவுஞ்
சோதித்திருக்குமரிபாகசுந்தரன்றாதவனே. [90]

தாதுகண்டாலுமதியணிவேணியர்துன்னிவந்தென்
காதுகண்டாலுமுடன்மூக்கின்பெய்தகல்காரெனவே
மாதுகண்டாலுமுவக்கப்படுமொழிவந்தனன்கார்ப்
போதுகண்டாலுமயில்வாழ்பொழிற்பழம்பூதரனே. [91]

பூதரான்றசிலைக்கென்றகொள்ளும்புராந்தகனூர்
சீதரனன்றபொழிலெனுங்குன்றைத்திருககரார்
காதரனன்றம்விழிபெறுமாறுடைக்கண்ணுதலார்
மாதரனன்றவருமதிக்கோய்தலைமாற்றிலரே. [92]

மாற்குச்சிவந்தமலர்த்தாண்முதுகிரிவாணன்மறை
நாற்குச்சிவந்தவிராப்பொருளென்பவர்நோக்குனன்வேள்
கோற்குச்சிவந்தவிறலாளனின்னுங்குறுகிலனிம்
மேற்குச்சிவந்ததறியேனிவட்குவிளைவதுவே. [93]

விளையவளையுமணிநெல்வயன்முதுவெற்பிறைவ
னளையவளையுமுறைவுடையானவ்வணங்கசிலை
வளையவளையுமுடைபூர்துறந்தவருந்துறுமிவ்
விளையவளையுமொருபுடைசாரவிருந்திலனே. [94]

இருந்தவிருப்பதிடத்திலல்லாமலிருப்பலெனு
திருந்தவிருப்பமுதுகுன்றவாணனைசேவியுஞ்

செருத்தவிருப்பவுததியையாருணச்சிக்கைதசெய்வார்
திருத்தவிருப்பவலையாவர்மெல்லுவர்தேமொழியே. [95]

தேவியுமானும்விளையாடிடமுடைச்செங்கணுத
லாவியுமானும்வருஞ்சீர்முதுகுன்றணிவிழவைக்
காவியுமானும்விழியாய்க்கண்டெய்தெனக்கன்மறுகி
னேவியுமானும்மகட்கிடர்தீர்செய்திரேழையரே [96]

எடலையாறுகிழித்தெதிரேறவிண்ணேறுபுகழ்க்
கூடலையாறுபுலியூர்மகிழ்முதுகுன்றர்பெற்ற
வேடலையாறுமுயிர்த்தெடுத்தேத்துபுமென்கைகொடுத்
தாடலையாறுவருகவென்பார்நல்லுமைதனையே. [97]

உமையிடப்பாகனலங்கூர்முதுகுன்றுடையனரர்ச்
சுமையிடப்பாகவரிதேடடியுறத்தாமலர்க
டமையிடப்பாகமருவுவரேலவர்தங்களைப்பா
ரமையிடப்பாகனுகானுதைநினைர்தஞ்சவனே. [98]

அஞ்சவணத்தைவரன்றுறையோதவரக்கெறிந்த
பஞ்சவணத்தைமருவுமென்றுளுமைபாகமொடு
செஞ்சவணத்தையனையன்கோலமென்சிர்கைதயுற
விஞ்சவணத்தைமகிழ்குன்றைவாணவிரும்புவனே. (99)

விருத்தாசலாசங்கராமலைமாதுவிழிகளிக்கு
திருத்தாசலசந்திரன்போலுடப்பிடைகின்றவர்தங்
கருத்தாசலாசப்பவமிலர்காண்டறங்காட்டியசொற்
றிருத்தாசலசந்தமியேன்றலைக்குன்றிருவடியே. [100]

பழமலையந்தாதி.

முற்றிற்று.

---

உ

# திருவருட்பிரகாச வள்ளலாரென்னும்

## சிதம்பரம்,

# இராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

குருதரிசனம்

## திருமுதுகுன்றம்

—(*)—

அறுசீரடியாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

திருமால்கமலத்திருக்கண்மலர்திகழுமலர்த்தாட்சிவக்கொழுந்தைக்
கருமாலகற்றுந்தனிமருந்தைக்கனகசபையிற்கலந்தவொன்றை
யருமாமணியையாரமுதையன்பையறிவையருட்பெருக்கைக்
குருமாமலையைப்பழமலையிற்குலவியோங்கக்கண்டேனே. (1)

வானைவேவயங்குகின்றமவுனமதியைமதியமுதைத்
தேனையளிந்தபழச்சுவையைத்தெய்வமணியைச்சிவபதத்தை
பூணமறியாருணத்தொளிருமொளியையொளிக்குமொருபொருளை
ஞானமலையைப்பழமலைமேல்நண்ணிவிளங்கக்கண்டேனே. (2)

தவளநிறத்துத்திருநீறுதாங்குமணித்தோட்டானுவைமங்
குவளைவிழித்தாயொருபுறத்தேகுலவவிளங்குங்குருமணியைக்
கவளமதமாகரியுரிவைக்களித்தமேனிக்கற்பகத்தைப்
பவளமலையைப்பழமலையிற்பாவியேத்திக்கண்டேனே. (3)

இளைத்தவிடத்திலுதவியன்பரிடத்தேயிருந்தவேமவைப்பை
வளைத்தமதின்மூன்றெரித்தருளைவளர்த்தகருணைவாருதியைத்

இளைத்தயோகருளத்தோங்கித்திகழுந்திரியாதீதமட்டுங்
கிளைத்தமலையைப்பழமலையிற்கிளர்ந்துவயங்கக்கண்டேனே. (4)

மடக்கைதமலையாண்மனங்கிழமருவும்மதியைப்பசுபதியை
யடர்ந்தவினையின்றொடக்கையறுத்தருளுமாசையலைகடன்மேற்
கிடந்தபச்சைப்பெருமலைக்குக்கேடிலருள்தந்தகம்புறமுங்
கடந்தமலையைப்பழமலைமேற்கண்கள்களிக்கக்கண்டேனே. (5)

துனியும்பிறவித்தொடுவழக்குஞ்சோர்ந்துவிடவுந்தூரியவெளிக்
இனியும்பருக்குங்கிடையாதவின்பமடைந்தேயிருந்திடவும்
பனியுந்திமயமலைப்பச்சைபடர்ந்தபவளப்பருப்பதத்தைக்
* கனியுஞ்சிலையுங்கலந்தவிடமெங்கேயங்கேகண்டேனே. (6)

கருணைக்கடலையக்கடலிற்கலந்தவமுதையவ்வமுதத்
தருணச்சுவையையச்சுவையிற்சார்ந்தபயனைத்தனிச்சுகத்தைத்
வருணப்பவளப்பெருமலையைமலையிற்பச்சைமருந்தொருபால்
பொருணச்சுறவேபழமலையிற்பொருந்தியோங்கக்கண்டேனே. (7)

என்னுருயிரிற்கலந்துகலந்தினிக்குங்கரும்பின்கட்டிதனைப் [வைக்
பொன்னார்வேணிக்கொழுங்கனியைப்புனிதருளத்திற்புகுங்களிப்
கன்னாரித்துப்பணிகொண்டகருணைப்பெருக்கைக்கலைத்தெளி
பன்னாகப்பூணணிமலையைப்பழமலையிற்கண்டேனே. [வைப்

நல்லமனத்தேதித்திக்குங்கனியைநவம்புரிதென்
னல்லலகற்றும்பெருவாழ்வையன்பாலியன்றவருமருந்தைச்
சொல்லமுடியாத்தனிச்சுகத்தைத்தூரியாடுவேதோன்றுகின்ற
மல்லமலையைப்பழமலையில்வயங்கியோங்கக்கண்டேனே. (9)

* கனியுஞ்சிலை - வளர்ந்தமலை; அதாவது மேரு.



ஆதிநடுவுமுடிவுமிலாவருளானந்தப்பெருங்கடலை
யோதியுணர்தற்கரியசிவயோகத்தெழுந்தவொருசுகத்தைப்
பாதியாகியொன்றாகிப்படர்ந்தவடிவைப்பரம்பரத்தைச்
சோதிமலையைப்பழமலையிற்சூழ்ந்துவணங்கிக்கண்டேனே. (10)

திருச்சிற்றம்பலம்.

## விர்த்தகிரி

### நேரிசைவெண்பா.

ஆருவிளங்கவண்கிளர்தேருர்ந்தவுலாப்
பேறுவிளங்குளம்பெற்றதுமன் - கூறுகின்ற
வொன்றிரண்டொறுபுடையோங்கும்பழமலையார்
மின்றிரண்டொன்றசடைபோல். (1)

### எண்சீரடியாசிரிய விருத்தம்.

ஆதிமலையனாதிமலையன்புமலையெங்கு மானமலைஞானமலையா
னந்தமலைவான், சோதிமலைதுரியமலைதுரியமுடிக்கப்பாற் றோன்
றுமலைதோன்றுதருதானமலைவெண், பூதிமலைசுத்தவநுபூதிமலை
யெல்லாம் பூத்தமலைவல்லியெனப் புகழுமலைதலையோர், பாதிமலை
முத்தரெலாம்பற்றுமலையென்னும் பழமலையைக்கிழமலையாய்ப் பகரு
வதென்னுலகே. (2)

சாக்கியனாறெறிந்தசிலைசகித்தமலைசித்த சாந்தருளஞ்சார்
ந்தோங்கித் தனித்தமலைசபையிற் றாக்கியகரமொடுவிளங்குந்தூய
மலைவேதஞ் சொன்னமலைசொல்லிறந்ததுரியநடுமலைவான், ஆக்கி
யளித்தழிக்குமலைவழியர்தமலைநல் லன்பருக்கின்பந்தருமோரற்புதப்
பொன்மலைநற், பாக்கியங்களெல்லாமும்பழுத்தமலையென்னும் பழ
மலையைக்கிழமலையாய்ப்பகருவதென்னுலகே. (3)

உ

## திருமுதுகுன்றம்

# பெரியநாயகியம்மை

### நெடுங்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

———(*)———

முழுமணி மிடற்றன் கனன்மழு வீரன் முக்கணன் டகைநின தெழில்கூர், முகம்புலர் தலைக்கண் டெவ்வளைத் தடியின் முனைப்பிறைக் கோடுகொண் டெழுத, விழுமணி யரவ நுழைசடா டவியின் விண்ணதித் தண்புனல் விடுப்ப, விரைவொடு குளிர்ந்து முகமலர் தலினன் மென்கொடி யெனநினை யுணர்ந்தேன், செழுமணி நீல மழைமுகி றவழுஞ் சிலம்பெனும் புற்றினின் றார்ந்து, திரைபொரு கடற்பேர்ப் பெரும்படம் விரித்துத் தினமணி யெனப்படுஞ் செங்கேழ், கெழுமணி யுமிழ்ந்து பேரிரு ளோர்ந்து கிடக்குமெய்ம் முடக்குமா சுணமாய்க், கிளர்மணி முத்த நதியுடை விருத்தகிரியமர் பெரியநா யகியே. (1)

விழைவொடு நினக்கு மாதுலன்மாமி வெற்புவேண் டொருதன் மருகன், மேலெலா மெலும்புந் தோலுமாய்க்கிடத்தல் வெறுத்திடா திளமைமா றாது, பழமணு தனக்குச் சாதியாப் பெணவேபார்த்துனைக் கொடுத்ததன் றக்கைப், பனிமலை யென்றோ தன்மனை யாட்டி யயர்திடப் பெறும்க ளென்றோ, கழைவரை முன்ன ருன்றுபு நடந்து கடிநுபள் ளங்களின் வீழ்ந்து, கரைகளின் மெல்ல வேறிவெண் ணுரைவாய்க் கடையுற வளைந்தருந் திரைந்து, கிழவுரு விருத்தநதி யெனப் பட்டுக் கீர்த்திமூ வுலகினும் போர்ப்பக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (2)

காமமென் கின்ற கதவுவெர் நியுங் கடுஞ்சின மெனப்படு புலியுங், களிப்பெனுஞ் சிறகட்புகர்முகப் புழைக்கைக் கறையடிக் களி



றக்யானையுமே, தாமிகு மெனது மனமெனும் வனத்திற் றனிவரல் வெருவினை யாயிற், றழலினின் ருடிப் புலிகரி புரியோர் தடுத்த வாண் டுணையாடும் வருவா, யீமவெள் ளெலும்பணி கடப்படு மெனத்தா னெலும்பணி கடவுண்மா நதியா, யிருந்தால் என்னங் கொண்டு பெய் வெளுப்ப வினைதப கங்கையை யிகழ்ந்து, கீழ்மை சொல் கின்ற தொன்றுமின் றாயிற் கிடைக்குமோ விதன்குண மென்னக், கிளர்மணி முத்தநதியுடை விருத்தகிரியமர் பெரியநாயகியே.

சுட்டுதற் கரிய தன்னைமெய்ஞ் ஞான சொரூபியென் றருமறை யனைத்துஞ், சொல்லுவ துண்மை யென்னநன் குணர்ந்தேன் சுரந்தநின் றிருமுலைச் செழும்பால், வட்டிலிற் கொச்சைப் பிள்ளைமுன் னுண்டு வண்புகழ் ஞானசம்பந்த, வள்ளலென் றிடப்பேர் பெற்றரன் மொழிபோன் மையறீர் செய்யுள்செய் தமையா, லெட்டிநற் றிகிரி பறித்தெறிர் தாற்கா லியானையை யுருட்டிவாக்குதிரையெறிந்துசங் கதிர்த்துக் கொடுமர முறித்திட் டெதிர்ந்திடார் தமைவிடுத் தோடிக், கிட்டினர்ப் புரட்டி முருகவேள் பூதக் கிளைப்பெரு வெள்ளமொத் தெழுந்து, கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (4)

உள்ளமென் மனையில் விருப்பொடு வெறுப்பா முறுகுழி மேடுகளிரவி, யொழிவிலா வாய்மை மெழுக்கினுற் பூசி யுயர்தரு மனமெனப்படுமோர், பள்ளிமென் றவிசி விருத்திநின் பதியைப் பழுதில்யா னெனப்படு மெல்லைப், பழமல மாயைத் தவிடுமி போக்கிப்பாகஞ்செய் தென்றருத் திடுவாய், துள்ளுமொண் மறிமான் முல்லையு ளாயர் குழல்வெண் ணெய்க்குட முருட்டித், துணை முலைக் குவட்டின் மஞ்சண் மேற் படப்போய்த் தோய்ந்துநின் றூடிளங் கயற்கட், கின்னைமென் மொழியார் தகிலெடுத் தொளித்துக் கேடில்சேர்க் கண்ணனு டதல் போற், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (5)

காடினு ருயிர்க ளாமெவற் றினுக்கு மல்கிய தந்தையுந் தாயும், நம்பனு நீயு மல்லிர் நும் மூர்த்தி கவின்றவம் முறையுளீர் நீவிர் பாடியா ரணைஞ்செர் லீண்மொய் வனதாம் பரிந்தநீ ட்டிபி லச்சி கிடத்தப், பழமலை தனது பெயர்வலக் காதிம் கர்த்தருள் செபபெறுஞ் செயலா லோடியோர் காக வேறுபு கவிழ்த்த வொருசிறு காகநீர் தானு, மொருவனோர் செவியால் விடுத்தவப் புனலு மவையொரு பாகர் கட்டோன்றிக், கேடிலா நந்த வருவமா மெலையொக் கின்றன வோவென வதிர்த்துக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே (6)

தன்னெரு மகன்வா கனத்தினை வெறுத்தோர் தனயன்வா கனத்தினை விரும்பும், தண்ணணிப் பணியுமதனையும் வெருவித்தான் வளாமதி யழுங்வாழ், மின்னவிர் சடையான் றனையின்றி மேவுவானவரொஞ் சுன்னல், விரிகதிர் விழுங்கு மணியினை விடுத்து வெறுமணி கொள்ளுமா றன்றே, மன்னவர் மனிதர் சந்திரன்பரிதி மகபதி மலரயன் மறலி, வானவர் வக்கள் சித்தர்கிம் புருடர் மாதவர் விஞ்சைய ரசரர் கின்னரு ருரகர் மூழ்குபே ரவங் கேட்டொருமுராரிபாய் சருட்டக், கிளர்மணி முத்த நதியுடை விருத்தகிரியமர் பெரியநா யகியே. (7)

படைத்திக்க தொழிலோன் மறைச்சடங் கியற்றப் பாவியேன் மனத்தினும் வலிய பன்மணி குயின்ற செம்பொனம் மியினின் பதமலர் வைத்தக லாம விடத்தினி லுலைவைத் தருளுதன் முன்னோ வியற்பகை மனைவியை யிரக்க, ளிளம்பிறை சூடு மிறையவன் பின்ன ரெங்ஙனம் போயிரந் திடுவான், கொடுத்தெனி லிடுபொன் புலவனுக் காரூர்க் குளத்தினிற் பழமலையன்று, கொடுத்தநாரனே கொடுத்தன னென்னிற் குளித்தகல் புவர்குணத் தெல்லாம், கிடைத்திட வொருகண் டருமெனக் கிதுசெய் கின்றநற் புதல்வோ



லோ வென்னக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (8)

பண்டுநின் றொழுமன் றந்தையுந் தாயும் பயந்ததன் னருமருந் தன்ன, பாலனைக் கொன்று சமைத்திடக் கொள்ளும் பாதக மொன்றுளங் கொண்டு, தொண்டர்தம் மனையிற் செல்வனென் றெழுநின் சுதனழப் பொருதுநின் முலைப்பால், சுரந்தமூ தூட்டு மன்னைநீ யாவாய் தொழுதுபோய்த் பிரித்திலை யென்னே, வண்டார்தங் கங்கை யன்னமங் கதன்க ளுடல் தன்னைவர் தடையா, வாடியிங் கிதன்கணமர்வுறப் பெறலா லடைந்துவான் கங்கையை யிகழ்ந்து, கெண்டையொண் வாளை யுடனெழக் குதிப்பக் கிளைவளைக் கமுகின்மேற் றவழக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (9)

புரிசடைக் காட்டு ளாடவிட் டிளவம் புலியினைச் சிறப்புலி யொடுகோட், புலிதொழ விருக்கு மொருபெருந் தெய்வப் புலிபணி மலையின மானைப், பரிவுறத் தொழுது மருவிய வதனாற் பயமறச் சாதிக டனது, பாங்கர்வந் தெய்தப் பெற்றதென் றறிந்து பசுவெலாமருவுறப் பெறுமே, சுரிகுழற் கயற்கட் பிறைநுதற் கனிவாய்த் துடியிடைக் குவி முலைத் தளிர்க்கைத், துணைவிழுங் கங்கை பெயர் சொலக்கடீசஞ் சுடர்மணிக் கட்செவிப் பணியான், கிரிமகட் கடுத்த கறைமிடற் றிறைவன் கிளக்குமேற் புகழெனத் தோன்றிக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. 10

பெரியநாயகியம்மை விருத்தம்

... முற்றிற்று.

## திருமுதுகுன்றப்

# பெரியநாயகியம்மை

### கட்டளைக்கலித்துறை.

—(*)—

இறைவற்குத் தக்க விறமாப் பெறுமொழி யின்றியொரு
மறுவற்ற தன்மனை யாட்கேற்ற தாமிறு மாப்பனெனக்
குறைவற்ற னெற்கொண் டுலகேற் றனைப்பலி கொள்ளுமரன்
பெறவுற் றனையனை யேகுன்றை வாழும் பெரியம்மையே. (1)

பத்தர்க்கு னெஞ்ச மலர்மீ திருத்திப் பயர்துகொடுஞ்
சித்தர்க் ககலுநின் பாதாம் புயமொரு செஞ்சிலைமேல்
வைத்தற்கு மெண்ணி மதியுடை யேனென்பன் வார்சடையான்
பித்தர்க்குத் தங்குண நாலுனுஞ் செம்மை பெரியம்மையே. (2)

இழைபொறுத் தாம்பொறை தாமென்ப ரானல் விசைப்புலவர்
மழைபொறுத் தார்புனன் முக்காற் பொறுக்கும் வழக்கதண்டே
யுழைபொருத் தார்கல் லியற்பகை யார்மனைக் குற்றவொரு
பிழைபொறுத் தாய்நன்று காண்குன்றை வாழும் பெரியம்மையே.

கையன்று தாமரை கண்ணன் றிளமென் கயலெனவே
பொய்யன்று கங்கையை நீரென்று சாதிப்பா போர்விடையார்
மெய்யென்று நீகொண் டிரேலற் லாயினென் மென்கையிடைப்
பெய்யென்று பின்னை யறிவாய்தென் குன்றைப் பெரியம்மையே. 4

பொன்வாங்கு செஞ்சடைப் பாம்புகள் சுற்றும் புதுமதியி
னன்வாங்கு கோடு கிழிக்கு மருவென் டலைபடுங்கன்



முன்வாங்கு மெந்தைநின் பாதாம் புயத்தின் முடிவணங்கிற்
பின்வாங்கி நில்லன்ன மேதன்றை வாழும்பெரியம்மையே. (5)

கடிமறு மென்றரு மீதிருப் டாரெனக் கங்கையென்பாண்
முடிமடு வேறி யிருந்தனன் வேனின் முதிர்விலத
னடியடை வாரெனச் சங்கரன் பாங்க ரமர்ந்தனைநீ
பிடிநடை யேகுயி லேகுன்றை வாழும் பெரியம்மையே. (6)

நின்போ லிலரரு ளாளரென் றேசொல நின்கொழுந
னென்போ னொருவன் மகன்பூங் கழுத்தினை யீர்வலென்றே
யன்போர் சிறிது மிலனாகப் போக வதற்கிசைந்து
பின்போய் விடாதுகண் டாய்குன்றை வாழும் பெரியம்மையே. (7)

செச்சை மலர்புரை வானேறு மேனி திறந்துகொண்டு
கச்சை யரவொன் றசைத்துக் கபாலங் கரத்தெடுத்துப்
பச்சை மயிலனை யார்மனை தோறும் படர்ந்திரக்கும்
பிச்சை யொழிகென் றொருவார்த்தை சொல்லெம் பெரியம்மையே.

சோதிப் பதியன்றி வேறொரு தெய்வந் தொழுதற்கில்லை
யோதிற் பிறரென வச்ச முறும் முயிர்களெல்லாம்
நீதிப் புதல்வர்க ளாயின வாதலி னீகொள்கற்புப்
பேதிப்ப தன்றுகண் டாய்குன்றை வாழும் பெரியம்மையே. (9)

நின்னேய நாயக னென்றிருப் பாய்நினை நீத்தகன்று
தன்னேரில் பூவணத் தேயன்று போய்ச்செய்த தன்மையெலாஞ்
சொன்னே னலேனினிநின்னே டொளிப்பதென் சொல்லுவன்யான்
பின்னே தெனக்குத் தருவாய்தென் குன்றைப்பெரியம்மையே. (10)

நற்றவந் தன்னைப் பெறுமலைக் கென்னமுன் னல்கியுனைப்
பற்றுறக் கொண்ட தெலுப்பே யணியும் பழமலைதான்
சற்றெனக் கையர் தராதுசொன் னும்மலைச் சாதியுன்னே
பெற்றவர்க் கென்ன முலைவிலை குன்றைப் பெரியம்மையே. (11)

கற்று றறிகுவர் மக்கடம் பேறெனக் கட்டுரைத்த
சொற்று ணொருபெண் ணொழித்ததென் பாரொடு தொல்லுலகி
னற்றுண் மகற்பெறு கென்றுசி சொல்பவர் நாணவுனைப்
பெற்றான் மலையரை யக்குன்றை வாழும் பெரியம்மையே. (12)

கரிய மிடறுடைப் பெர்மான் காத்துழைக் கன்றொடுமோ
ரரிய முடியர் புலியோடு மேவினா யாடுகின்றாய்
தெரிய வரியப் பிணு லுலகுமென் சிற்றிலென்பாய்
பெரிய வனென்ப தனக்கேது குன்றைப் பெரியம்மையே (13)

தண்ணா ரிதழி புனைவான் விழியினை தம்மனைகள்
பண்ணு வழிக்குமென் றோதின் றிருமுக பங்கயத்திற்
கண்ணு யினருணக் கவ்வலைமா றுங் கலைமகளுந்
பெண்ணு ஈஞ்தனை யாய்க்குன்றை வாழும் பெரியம்மையே. (14)

உள்ளத் துறுபிணி யேற்கு மருந்தக்கென் றுன்னைவந்து
மெள்ளத் தொழுவுர் திருமுலைப் பான்மெல் விரனுதியாற்
றெள்ளித் துளியனை வாயினூர் தொட்டுத் தெறித்திலையுன்
பிள்ளைக்கு மின்னைக்குப் பால்கொடுத் தாலென் பெரியம்மையே.

ஆறுந் துயர்கொண் டடியேன் சலிப்ப வதுசெவியி
லேறும லேயிருந் தாலென்செய் வேனெங்க ளீசற்கொரு
கூறுகி யண்ட முதலா யினமை குலவுதவப்
பேறுகி வாழ்பவ னேகுன்றை வாழும் பெரியம்மையே.



சனைமாட்சி மென்கொன்றைத் தாரோன் றருமிரு நாழிநெல்லால்
வினைமாட்சி கொண்டயி ரெல்லா மளித்தருண் மேன்மையினுன்
மனைமாட்சி யெய்து முனக்கே பெருங்கற்பு மாட்சியன்றிப்
பினைமாட்சி யார்க்குண் டுலகீன்ற குன்றைப் பெரியம்மையே. (17)

நெடிய விலங்க லொருசிலை யாக்கிய வின்பதிமேற்
கொடிய வகங்கன் சிலைபோ யெடுத்துமுன் கொண்டெதிர்த்த
வொடிவி லருஞ்சிலைச் செங்கரும் போசொல் லுனதுகடைப்
பிடிய வடங்கிய தென்னிது குன்றைப் பெரியம்மையே. (18)

பண்டகு வீணை யொடுபாட வந்தவப் பாமடந்தை
கண்டமு மாறு மதிநிரை போலக் கவின்கனியும்
வெண்டலைமாலை யிடக்தொளிர் தோளிக்கு வீங்குமுலைப்
பெண்டகை மாமணி சீகுன்றை வாழும் பெரியம்மையே. (19)

பெரியநாயகியம்மைகலித்துறை

முற்றிற்று.

உ

திருமுதுகுன்றம்

குமாரதேவசுவாமிகள் அருளிச்செய்த

# பெரியநாயகியம்மைபதிகம்.

[*]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரிவுறுமுருவகாமமதகற்றின் விடயங்கள்விளக்குறு விதனென், மருவுறுபொறிபோம்பொறிபறக்காண மாய்ந்து றுங்காணமாய்தவினும், புருடன்முன்னேனமுஞ்சுத்தமோரைத் தும் போமிதாற்சச்சிதானந்தம், கிரியையற்றிலங்குமென்ற னள்விருத்த கிரியமர்பெரியநாயகியே. (1)

உளப்படுமுருவகாமமதகற்றி னுள்ளசற்சிற்சுகத்தோன் றும், வளப்படுமிதனுலகுகண்ணடி வருநிழலாநிழன்மறிந் தால், விளக்குறுஞானவெளியதாமிதனின் விளையுமின்பென வெனக்கிசைத்தாள், கிளக்குறுதவத்தோர்தரித்துறைவிருத் தகிரியமர் பெரியநாயகியே. (2)

பழுதையென்றுணரிற்றன்முனர்த்தோன்றும் பாம்புமப் பழுதையாமதுபோன், முழுதுணரறிவார்தன்னையேகாணின் முானுறுசராசரமவையு,-மெழுதருமறிவாவிளங்குமென்றி சைத்தா ளெழுபவர்துடைத்தெனையளித்த, செழுமணிமுத்த நதிசெறிவிருத்த கிரியமர் பெரியநாயகியே. (3)



சொருபமேதானென்றுணர்தரிற்பானுந் துகளுறுசீவ னுஞ்சகமு மருவுதன்னினை விலெழுந்தமித்தைகளாம் வந்திடு பந்தம்விடிலவா, மொருவுயிர்தானென்றுணரிலம்மூன்றுமுள பந்தம்வீடுமுண்டென்றாள், கிரிதவப்பயனுய்வருமொருவிரு த்த கிரியமர்பெரியநாயகியே. (4)

அறிபொருளறிவோனறிவினைக்கொடுப்போ னனமுப் பொருளுமோர்விடயம், பொறியுறப்பிடித்தாலுள்விதைவிடுத் தோர் பொருளை நாடுதன்முனரிடையே, பிறிவறத்தோன் றுஞ் சொருபமிந்நிலையிற் பேசும்பொருள்களுமிலவாங், கிறியறவறிதியென்றனள்விருத்த கிரியமர் பெரியநாயகியே.

அரவிலைபழுதையுணர்ந்தவர்க்கதுபோ லகிலமெய்ப்பொ ருளினையுணர்ந்தோர்க்,கொருவுருதிருத்தமிலனையெனிற்கான லுறுசலமிலையெனவுணர்ந்தும், மருவலினுவிகாரமேதென னின் மலிகனவினிலுறுமென்றாள், இருதுசெய்மறையோர்பர வியவிருத்த கிரியமர் பெரியநாயகியே. (6)

தடத்தின்மற்றதனிற்றங்குபல்கடத்திற் சாயையுஞ்சா யையில்லதுமாய்த், திடத்தொடும்விளங்கும்விசும்புபோலீசன் சீவனிங்கிருவர்சாட்சிகளா, மிடத்துறும்பினையிற்றோன்றுஞ் சிவமிங் கிருவர்சாட்சிகளுமொன்றென்றாள், கிடைத்தநன்னி தியாயெனக்குறும்விருத்த கிரியமர் பெரியநாயகியே. (7)

ஆருயிர்தானுமவன்மனத்தைச தகங்கரத்துதித்ததுவா கும், பேருயிர்சாட்சியானவன்மனமோ பின்னையாமாதலால

வற்குக், கூருறுமூலகமபக்கமாமிவற்குக் குறித்ததன் லீலை யாமென்றுள், கீரனையளித்தோற்குவந்ததாய்விருத்த கிரியமர் பெரியநாயகியே. (௮)

ஓதுருநாமமகற்றிடிற்றேன்று முள்ளசற்சிற்சுகமிதுவே நீதறுசிவசாட்சியிங்கிதனைத் தெரிந்திடுஞ்சிவனுமிதுவா, யே தமொன்றில்லாப்பிரமமாமென் றெனிருளறவருள் புரித்தளி த்தாள், கேதமிறவத்தோர்சூழ்தரும்விருத்த கிரியமர் பெரிய நாயகியே (9)

எஞ்சுறுமுளத்தோடென்னையாரென்றேயிரங்கியே திரி ந்துழல்வேனை மஞ்சுறழ்காத்துக்கண்ணனைக்குந்தி மகனென வுணர்த்துதல்கடுப்ப, வஞ்சலென்றழைத்துநீயதுவாகு மைய மின்றென்னவேயளித்தாள், இஞ்சகவாயாலுஞ்சிடவிருத்த கிரியமர் பெரியநாயகியே. (10)

பெரியநாயகியம்மை பதிகம்

முற்றிற்று.

---

சிவமயம்.

# திருமுதுகுன்றம் பழமலைநாதர்

# பிக்ஷாடனநவமணிமாலை.

நங்குற்றந் தீர்க்கும் பழமலை நாதற்கு நற்பலிகொண்
டங்குற்று மென்றுகில் போக்கினள் வெற்றரை யாகியந்தோ
விங்குற் றனையென வெம்பெரு மானிவ் விருநிலத்திற்
றங்குற்றம் பார்க்கு மவருள ரோவெனத் தாழ்ந்தனளே. (1)

குன்று முதுகுன் றுடையா னிலாதவெண் கோவணத்தான்
றன்று மரைக்கை விரன்மூன்று காட்டித் தனங்குறித்து
நன்றாக வித்தனை பிச்சையுண் டோசொன் னறுநுதலா
யென்று னிரண்டத் தனையுள கோடியென் றிட்டனளே. (2)

இப்பாத் திரந்தலை யோப் பிடித்தனை யென்னைமுனந்
தப்பாப் பலிகொண்டறிந்திலை யோவெனத் தாழ்குழலாள்
செப்பார் பணைமுலை யாய்நிலத் தேபலி சிந்தியிட்டா
யெப்பாத் திரத்திலு மிட்டறி யாய்கொள் றென் றனரே (3)

வேட்டன மாதுளை தாழ்த்திட மாமுது வெற்பர்பலி
யோட்டினை நீதொட லாமோ வெனவுமை யுந்தொடலாம்
வீட்டினில் யாமென வேயவர் நாமிது வேண்டுவைகொல்
யாட்டினின் பாலென மூலமு மாமென்ப தென்றனரே. (4)

மாண்ட வெலும்பணி கோலமொ டேபலி வாங்கிடுதற்
கீண்டு வருமுது குன்றுடை யீருமை யான்மிடற்றி
னீண்ட வுகிருந் தாதனை வேனென்று நீர்தலையைத்
தீண்ட வுமது பலிப்பாத் திரமென் சிரிக்கின்றதே. (5)

வானோர் தொழுநின் பலிப்பாத் திரத்தை வனைந்தது நீ
தானோ வெனச் சக்கரந்தான் சுழற்றத் தகுங்குயத்தி
யானோர் குயவன்மெய் யென்றே முதுகுன் றிறையியம்ப
நானோ வொருசிற் றிடைச்சியென் றுளங் கறுநுதலே. (6)

பங்கய மன்ன விழியார் முதுகுன்றர் பாத்திரத்தி
லங்கையி லைய மொடுவெண்டு வீழால் கையவென
வெங்கையில் வந்த தெமதாக வேவழக் கென்றுசெட்டி
மங்கையர் தங்கட் கிருங்கூ டலிலிட வைத்தனரே. (7)

நீருக்குத் தக்க சடையார் முதுகுன்றர் வேடியுங்க
ளூருக்குட் பிச்சையென் றற்றே முண் டாயி னுரைமினென
வாருக்குத் தக்க முலையா ரதற்குளர் மற்றொருவர்
யாருக்குக் கிட்டு மதுசோறு நீர்கொளு மென்றனரே. (8)

முழங்குந் துடியொடு பிச்சையென் றேமுது குன்றர்வரச்
சழங்கு முலைமுதி யாளொன் பலியெனத் தம்மனையில்
வழங்கு மனமென் றனர்புறம் போந்து வளர்முலையாள்
விழுங்கு மனம்பகற் போதுகொள் வாயென்று வேண்டினளே. (9)

சிறப்புப்பாயிரம்,

பிச்சா டனநவ ரத்தின மாலையைப் பீடுபெறத்
தைச்சான் றுறைமங் கலமுறை சிவ தயாபரனும்
பொய்ச்சார் பதனை யொழிக்குஞ் செழும்புலி யூர்ப்புனித
னற்சார்பு சார்ந்த சிவப்பிர காச நவமணியே.

பிக்ஷாடனநவமணிமாலை.

முற்றுப்பெற்றது.

---

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# ஞானக்கூத்தசிவப்பிரகாச தேசிகர்

## வரலாறு.

திருக்கைலாசமலையிலே திருவருள் வடிவாகிய கல்லால மர நிழலிலே தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ கண்ட பரமசிவன்பால் சிவாகமங்களை யெல்லாம் கேட்டுத்தெளிந்த திருநந்திதேவர், அப்பெருமானை நமஸ்கரித்து நின்று, "காமிகமுதலிய சைவாகமங்களின் ஞானபாதப்பொருளின் முரணறுத்து அவற்றின் உண்மைப் பொருளை உணர்த்தியருளவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்ய அவ்விறைவர், 'ரௌரவாகமத்திலே பாசவிமோசனபடலத்தில்" சிவஞானபோதமெனப்பெயர்பெற்றுள்ள பன்னிரண்டு சூத்திரங்களில் அவ்வுண்மைப்பொருள் உணர்த்தப்பட்டிருக்கின்றது, அப்பொருளுணரின் ஆகமப்பொருண்முற்றும்இனிதுவிளங்கும்" என்றுணர்த்தி, அச்சிவஞானபோதத்தை உபதேசித்தருளினார், அதுகேட்ட நந்தியெம்பெருமான் ஐயமகல மெய்ப்பொருள்தெளிந்து, அதனைத் தம்மாணாக்கர் பலருள்ளும் சிறந்த சத்தியஞானதரிசனிகளுக்கு உபதேசிக்க; அவர் தம் மாணாக்கருட்சிறந்த பரஞ்சோதி முனிவருக்கு அருளிச்செய்தனர்.

அந்நாளிலே நடுநாட்டிலே திருப்பெண்ணாகடத்தில் பரம்பரைச் சைவவேளாள குலத்திலவதரித்துச் சிவபக்தி அடியவர் பக்திகளிலும் கல்விச்செல்வங்களிலும் சிறந்துள்ள அச்சுதர்களப்பாளரென்பவர், திருத்துறையூரிலே ஆதிசைவமரபிலவதரித்தவரும் சகலாகமபண்டிதருமாகிய தமதாசிரியர் கற்பித்த நெறியினின்று அரியவிரதாதிகளை நெடுங்காலம் அநுட்டித்தும், புத்திரப்பேறு இன்மையால் வருந்தி, அவ்வாசிரியர்பால் விண்ணப்பித்து, அவரருளியபடியே தமிழ்வேதமாகிய தேவாரத்திருமுறையில் கயிறுசாத்தியவழி, திருஞானசம்பந்தமூர்த்திகளருளிய "கண்காட்டு நுதலானும்" என்னுந் திருவெண்காட்டுத் திருப்பதிகத்திலே

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே லாம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

என்னுந் திருப்பாடல் உதயமாகலும், அதில் "வெண்காட்டுமுக்குளநீர் தோய்வினையார், பிள்ளையினோ டுள்ளநினைவாயினவெலாம் பெறுவர், ஒன்றும் ஐயுறவேண்டா" என்னும் பொருளமைதியை நோக்கிப் பெரிதும் வியந்து, ஆசிரியரைப்பணிந்து விடைபெற்று, மனைவியாரோடு திருவெண்காட்டையடைந்து, ஆலயத்திலே சோமசூரியாக்கினியென்னும் முச்சுடர்களின் திருநாமம்பெற்ற முக்குளதீர்த்தத்திலே, நாடோறும் விதிப்படி ஸ்நானஞ்செய்து, சுவேதாரணியேச்சுரரையும் பிரமவித்தியாநாயகியாரையும் வழிபட்டு வந்தார்.



ஒருதினம் அவர் சொப்பனத்திலே சிவபெருமான்தோன்றி, "உனக்கு இப்பிறப்பிலே புத்திரப்பேறு அரிதாயினும், சர்வாபீஷ்டமுந் தரத்தக்கதாய் நமக்கு மிகவும் பிரீதியுடையதாயுள்ள தேவாரத்தைப் பரமப்பிரமாணமாகக்கொண்டு நீ ஒழுகுகின்றமையால், அத்தேவாரத்தைப் பாடிச் சைவஸ்தாபனஞ்செய்து திருஞானசம்பந்தப்பிள்ளையென்றே கொள்ளும்படி அத்தேவாரங்களின் மெய்ப்பொருளையுட்கொண்ட சைவசித்தாந்த சாத்திரத்தை வெளிப்படுத்திச் சைவஸ்தாபனஞ்செய்யத்தக்கவனாக நமது கிருபையால் உன்னிடத்தில் ஒரு புத்திரன் உதிப்பன்." என்று கட்டளையிட்டு மறைந்தருள; உடனே அச்சுதர்களப்பாளர், விழித்தெழுந்து பெருமகிழ்வெய்தி மனைவியாருக்கறிவித்து, பேரன்புடன்முன்போலவே நியமப்படி வழிபட்டுவந்தார், அந்நாளிலே, அவரது மனைவியாரது அருமைத்திருவயிற்றிலே கருப்பமாகி, ஒரு சற்புத்திரரவதரித்து, உரியபருவத்திலே, தந்தையாரால் சுவேதவனப் பெருமாளென்னும் திருநாமம் தரிக்கப்பெற்று, திருவெண்ணெய்நல்லூரிலே, தம்முடைய நன்மாமனார்வீட்டில் வளர்ச்சியுற்று, இரண்டுபிராயத்திற்றானே மெய்யுணர்வின் முதிர்ச்சியுடையராய்ச் சிறந்திருந்தார்.

இருக்குங்கால், பரஞ்சோதிமுனிவர் திருக்கைலைமலையினின்று நீங்கித் திருவெண்ணெய்நல்லூரையடைந்து, அவ

ருக்குச் சிவஞான போதத்தையளித்து, "இதனை யாவரும் உணர்ந்துய்தற்பொருட்டு மொழிபெயர்த்துப் பொழிப்பும் உரைக்க" என்று அதன்பொருளை விளங்க வுணர்த்தியருளி, அம்மெய்யுணர்வுடைய அவர்க்கு மெய்கண்டதேவரெனத் திருநாமமுஞ் சாத்தியகல; அவர் அத்திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருக்கும் சுயம்புமூர்த்தியாகிய பொல்லாப் பிள்ளையார் சந்நிதியில் சிவஞானபோதத்தைச் சிந்தித்துத்தெளிந்து, நிட்டைகூடிச், சிவானுபவமுடையராய், அவ்வடமொழிச் சிவஞானபோதத்தைத் தமிழில் * வார்த்திகப்பொழிப்பாக மொழிபெயர்த்தருளிச்செய்து, தம்முடைய மாணாக்கர் நாற்பத்தொன்பதின்மருள்ளே சிறந்தவரும் திருத்துறையூரிலே அவதரித்த ஆதிசைவரும் சகலாகம பண்டிதரென்னும் காரணப்பெயருடையவருமாகிய அருணந்திசிவாசாரியருக்கு உபதேசித்தருளினர். அவர் அம்முதனூற்கு வழிநூலாகச் சிவஞானசித்தியாரும் இருபாவிருபதுமாகிய இரு சாத்திரங்களை அருளிச்செய்து, அவற்றையும் சிவஞானபோதத்தையும் திருப்பெண்ணாகடத்திலே, பிராமணகுலத்திலே அவதரித்த மறைஞான சம்பந்தசிவாசாரியருக்கு உபதேசித்தருள; அவர் சிதம்பரத்தைச்சார்ந்த திருக்களாஞ்சேரியில் சிருங்காரவனத்தில் பிரமபுரீசர் சந்நிதியில் வீற்றிருந்துகொண்டு, தில்லைவாழந்தணர்களுள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியருக்கு உபதேசித்தருளினார்.

* வார்த்திகமெனினும் பொழிப்பெனினும் காண்டிகையெனினும் ஒக்கும்.



உமாபதிசிவாசாரியார் சிதம்பரத்தைச்சார்ந்த கொற்றவன்குடியிலிருந்துகொண்டு, வடமொழியிலே பௌஷ்கராகமத்துக்கு வியாக்கியானத்தையும் தமிழிலே புடைநூலாகிய சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், † சங்கற்பநிராகரணம் என்னும் எட்டு சைவசித்தாந்தசாத்திரங்களையும், கோயிற்புராணம், திருத்தொண்டர் புராணசாரம், திருமுறைகண்டபுராணம், சேக்கிழார்நாயனார் புராணம், சிவக்ஷேத்திரசிவநாமக்கலிவெண்பா, திருப்பதிக் கோவை: திருப்பதிகக்கோவை முதலியவற்றையும் செய்தருளினார்.

அன்றியும், முத்திவேண்டி நெடுங்காலம் வழிபட்டுவந்த பெற்றான் சாம்பான்பொருட்டுத் திருவருள் சுரந்த சபாநாயகர்விடுத்தருளிய,

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டு-படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

என்னுந் திருமுகத்தைப்பெற்று, ஆனந்தபரவசராய் மகிழ்ந்து சத்தியோநிருவாண தீக்ஷைபுரிந்து, உடனே அச்சாம்பான் தேகவியோகமெய்தி முத்தியையடைய அநுக்கிர

† சங்கற்ப நிராகரணம் செய்தருளியகாலம் சாலிவாகன சகாப்தம். (1235.)

சித்து, அதுகாரணமாக அவன்மனைவியும் அரசன் முதலாயினோரும் கொண்ட ஐயமொழியும்படி தம்முடைய ஆன்மார்த்தசிவபெருமான் ஆடியருளிய தீர்த்தத்தினால் வளர்ந்து பரிபக்குவம் அடைந்துள்ள முள்ளிச்செடிக்கு முத்திகொடுத்தனர். அதன்றியும், சிதம்பர மான்மியத்தின்படி அருளிச்செய்யப்பட்ட கோயிற்புராணம் அரங்கேற்றப்படாது பேடகத்துள் இருந்தபொழுது, சபாநாயகர் தில்லைவாழந்தணர்கள் சொப்பனத்திலேதோன்றி "நாம் கொற்றவன்குடி உமாபதியுடைய பேடகத்துள் இருக்கின்றோம்" என்றருளும், அதனைத் தில்லைவாழந்தணர்கள் தமக்கு விண்ணப்பஞ்செய்ய, உடனே கோயிற்புராணத்தைச் சபாநாயகர் சந்நிதியில் அரங்கேற்றி, அருணமச்சிவாய தேசிகர்முதலிய மாணாக்கர்களுக்கு உபதேசித்தருளினார்.*

அருணமச்சிவாயதேசிகர் திருவாவடுதுறையிலே சித்தமூர்த்தியாக எழுந்தருளியிருந்த சித்தர்சிவப்பிரகாசதேசிக

* திருவியலூர் ஆளவந்ததேவநாயனாரருளிய திருவுந்தியாரும், திருக்கடவூரிலவதரித்துச் சிதம்பரத்திலெழுந்தருளியிருந்த அவர்மாணாக்கராகிய உய்யவந்ததேவநாயனாரருளிய திருக்களிற்றுப்படியாரும், மெய்கண்டதேவாருளிய சிவஞானபோதமும், அருணந்திசிவாசாரியாருளிய சிவஞானசித்தியார் இருபாவிருபதும், மெய்கண்டதேவர் மாணாக்கருள்ளே திருவதிகை மனவாசகங்கடந்தாராருளிய உண்மைவிளக்கமும், உமாபதிசிவாசாரியாராருளிய சிவப்பிரகாசம் முதல் சங்கற்பநிராகரணம் இறுதியாகிய எட்டும், ஆகப்பதினான்கு சாத்திரங்களும் மெய்கண்ட சாத்திரமென வழங்கப்படுகின்றன.



ருக்கு உபதேசித்தருள, அவர் திருமுவலூரிலே பரம்பரைச்சைவ வேளாளர் குலத்திலே அவதரித்துப் பிரமசரியநிலையிலே துறவறத்தினராய்ச் சத்திநிபாதத்துத்தமராய் எழுந்தருளியிருந்த நமசிவாயமூர்த்திகளுக்கு உபதேசித்தருளினார். அவர் கும்பகோணத்திலே வேளாண் செட்டிகள் மரபிலவதரித்து ஏழுவயதிற்றானே கலைஞானங்களில் வல்லவராய்த் தலயாத்திரைசெய்துகொண்டு திருவாவடுதுறைக்குவந்த சிவப்பிரகாசதேசிகருக்குத் தீக்ஷைசெய்து அவரது அநுபவமுதிர்ச்சியைநோக்கி ஆலிங்கனஞ்செய்துகொண்டு, "இக்குருபரம்பரையை விளக்கிவருவீராக" என்று கட்டளையிட்டு ஆன்மார்த்த பூசைமுதலியவற்றைத் தாம் ஒப்புவித்துவிட்டு, தியானநிலையில் வீற்றிருந்தனர். சிவப்பிரகாசதேசிகர் தெய்விகசித்தியுடையவராய், சிதம்பரத்தை யடைந்து, சபாநாயகரைத் தரிசிக்குங்கால், கரத்திலே ஒரு சிவலிங்கமிருக்கக் கண்டு திருவருளை வியந்து, அச்சிவலிங்கப்பெருமானை வழிபடுதலோடு சபாநாயகரையும் தினமும் தரிசித்துக்கொண்டு உமாபதிசிவாசாரியர்* திருமடத்தில் சிலநாள் வசித்து, திருவாவடுதுறையை யடைந்து, சுவாமிதரிசனஞ்செய்து, திருக்கரஞ்சிவக்கத் தாளமொற்றிக்கொண்டு தேவாரமோதுங்கால், கையிலே ஓர் திருத்தாளமிருக்கக்கண்டு திருவருளைப்புகழ்ந்து மடத்துக்கெழுந்தருளினார்;

அந்நாளிலே இராயவேலூரில் அரசுபுரிந்திருந்த விருபாக்ஷிராயரின் கட்டளையால் நடுநாட்டை யாண்டிருந்த ஓர் வடுகன், ஒருநாள் சிதம்பரத்திற் சென்று, அங்கே சபாநாயக

ருக்கு நடக்கும்வைபவங்களை நோக்கிப் பொறாமைகொண்டு, நடேசப்பெருமான் சந்நிதியிலிருந்த துஜஸ்தம்பத்தைப்பிடுங்கித் தில்லைக் கோவிந்தராஜப்பெருமாள் சந்நிதியிலே நட்டு, நடேசப்பெருமானுக்குரிய வருமானங்களையெல்லாம் பெருமாளுக்கு ஏற்படுத்தி, திருவாராதனம் திருவிழாமுதலியவை சிறக்கப்புரிவித்து, சபாநாயகருக்கு நித்தியபூசையையும்நிறுத்திவிட்டனன். அவன் அதிகாரியாக இருத்தலால் தீக்ஷிதர்களும் அந்நாட்டிலுள்ளவர்களும் பலவாறு நியாயங்களையுரைத்தும், அவன் செவிகொடாமையால் வருந்தி, சிவப்பிரகாசசுவாமிகளிடம் விண்ணப்பிக்க, சுவாமிகள் சபாநாயகருக்கு நித்தியபூசையும் நடவாமையாற் கவலையுற்று, அதனை ஆசிரியர் சந்நிதியில் விண்ணப்பித்து, அவரருளியவாறே சிதம்பரத்தையடைந்து, அவ்வைணவனுக்கு வேண்டியமட்டும் சன்மார்க்கங்களைப் போதித்தனர், அதற்கு அவனுடன்படாமையால் தீக்ஷிதர்முதலியவர்கட்கும் வைணவர்களுக்கும் பெரும்போர்நேரிட, அதனால் சிலர்க்குச் சேதம் நேர்ந்தமையை நோக்கி, இராயவேலூருக்குச்சென்று இராயர்பாலறிவித்து இவ்வைணவனை உத்தியோகத்தினின்றும் நீக்கினாலல்லது இக்கலகந்தீராதென சுவாமிகளே சொல்லத்துணிந்தனர்.

அன்றிரவிலே சபாநாயகர்கட்டளையிட்டருளியபடி விடிந்தவுடன் தீக்ஷிதர் முதலியவர்கள் ஆலயத்தினின்றுங் கொண்டுவந்து உபசரித்த சிவிகை முதலியவற்றை அங்கீகரிப்பதற்கு உடன்பாடில்லையேனும் சிவாக்கினையை மறுத்



தற்கு அஞ்சியும் அவர்பிரார்த்தனைக்கு உடன்பட்டும் அங்கீகரித்து விருதுகளுடன்புறப்பட்டு இடையிலுள்ள தலங்களைத் தரிசித்துக்கொண்டு வேலூரையடைந்தனர். அங்கே, எதிர்கொண்டுவணங்கிய அன்பர்முதலியோருள் [illegible]க்கிலுள்ள இலிங்கண்ணபத்தரென்னும் மந்திரியார் வீரசைவ சமயாசாரியராகிய சித்தராமதேவசுவாமிகள் ஆதீனத்துச் சிஷ்யராய் சிவலிங்கதாரணமுடையராயிருத்தலின் இலிங்காங்கசம்பந்தமுடையவர்களையே வழிபடுவதையுணர்ந்து, சிவத்தோடுசம்பந்தமாதலேசைவமெனச் சிவாகமங்கூறலின் இடைவிடாதிருக்கும்படி அப்பெருமானை அணிந்து செல்வதே தகுதியென ஆலோசிக்குங்கால், சபாநாயகர் "அங்ஙனமே செய்க" என அசரீரிமொழியால் அருளலும், சிவலிங்கப்பெருமானைச் சிறுபேடகத்து எழுந்தருளுவித்துத்தரித்துக்கொண்டு, ஜங்கமர்களுக்கும் அவ்வாறே தரிப்பித்து, வீரசைவாசாரியராய் விருதுகளுடன் மந்திரியாரது அரண்மனையை அடைந்தனர்.

அம்மந்திரியார் எதிர்கொண்டு வணங்கி உபசரித்து, சுவாமிகள் உத்தேசித்துச்சென்ற காரியத்தைவினவி, உடனே மிக்கசிவத்துரோகியாகிய அவ்வடுகனை சிரச்சேதஞ்செய்வித்து, சபாநாயகருக்கு யாவும் முன்னினும் சிறக்க நடக்கும்படி ஏற்படுத்திக், கும்பாபிஷேகமும் நடாத்துவித்து, விபூதிப்பிரசாதங் கொண்டுவரும்படி, செய்வித்தற்குத் தக்கவர்களைவிடுக்க; அவர்கள்சென்று அங்ஙனமே நடத்துவித்தலும், தீக்ஷிதர்களால்கொண்டுவரப்பட்ட விபூ

இப்பிரசாதத்தைச் சுவாமிகளேற்று, தாமணிந்துகொண்டு மந்திரியாருக்குங் கொடுப்பித்து, மேற்படி சித்தராமதேவரை வரவழைத்துவீரசைவ தீக்ஷாசாரத்தைப் பெற்று, [illegible] சமதருவயாக இருந்து இலிங்கநிவேதனஞ் செய்தபின்பு, அம்மந்திரியாருக்குச் சன்மார்க்கங்களைப் போதித்துக் கொண்டு வீற்றிருந்தனர். அப்பொழுது, அரசர் சுவாமிகள் மகிமையைக் கேள்வியுற்றுவந்து தரிசித்து, "சுவாமி, இத்தேசத்தில் சிலநாளாய் மழையின்றிப் பயிர்களும் பலவுயிர்களும் மிகவாட்டமுற்று வருந்துகின்றன. கிருபாமூர்த்தியாகிய தேவரீர் இங்கெழுந்தருளியும் எங்கள்மனக்கவலை தீரவில்லையே," என்று விண்ணப்பஞ்செய்துகொண்டனர்.

சுவாமிகள் திருவுளமிரங்கிச் சிவபூசைமுதலியநியமம் முடித்துக் கொண்டு, வீணையைத்தாங்கிநின்று, அடியவர்கள் திருத்தாளமொற்ற, மேகராகக்குறிஞ்சியென்னும் பண்ணினால் தேவாரமோதிக்கொண்டு, நிருத்தஞ்செய்தருளியமாத்திரத்தே, பெரிதும் மழைபொழிய; அதுகண்ட அரசர் இவ்வளவிற்போதுமென்று பிரார்த்தித்தலும், அங்ஙனமேசெய்தருளி, அவர் பிரார்த்தனைப்படியே திருவண்ணமலையையடைந்து, அவரால் ஏழுகிராமம் சர்வமானியமாகச் சிலாசாசனம் வரைந்து விடுத்த அவராற் கட்டுவிக்கப்பட்டதிருமடத்தில் எழுந்தருளிவீற்றிருந்துகொண்டு, சிவாத்துவிதவெண்பா, கணபாஷிதரத்தினமாலை முக்காண்டம் சதகத்திரயம் அநுபவசடஸ்தலம் மந்திரகோப்பியம் தீக்ஷாபோதை, பிரசாரப்



பணம், நூற்றொரு தலம், சர்வாசார சட்ஸ்தலம் திருவாலங்துறைச்சிந்து கப்பறை முக்கியம் தீக்ஷாவிதி, வெண்பாமுக்காண்டம் என்னும் பிரபந்தங்களைச்செய்தருளி, வீரசிங்காதனகர்த்தராய் அன்பர்களுக்கு அநுக்கிரகித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தனர்.

சிலநாள்கழிந்தபின் சிவஸ்தலயாத்திரைசெய்யத் திருவுளங்கொண்டு, திருக்கூட்டத்தோடு திருக்கழுக்குன்றத்தையடைந்து, திருக்கழுக்குன்றமாலை, திருவிருத்தங்களால் துதித்து, அங்குள்ள சில அந்தணர்கள் கூறியசங்கைக்கு உத்தரம் அருளி, அவரால் உபசரிக்கப்பெற்று, திருக்காளத்தியை யடைந்து, பொன்முகரியிற் சிவபூசை முடித்து, ஆலயத்திற் கெழுந்தருளுங்கால் வடதேசத்திருந்து வந்தவராய எதிரிட்டுவாதித்த மத்துவாசாரியாரை வென்று, அடிமைகொண்டு, சிவலிங்கதாரணம் புரிந்து, தூளிதங்காளத்திமூர்த்தியெனத் தீக்ஷாநாமம் தரித்துத் திருக்கூட்டத்தொருவராக்கிக்கொண்டு, கலியாணபுரிக்கெழுந்தருளி, அங்குள்ள அன்பர்களுக்கு இலிங்கநிஷ்டானுபவத்தை அநுக்கிரகித்து, உடும்பை சுப்பிரமணியமென்னும் தலத்துக்குச் சமீபத்தில் திவ்வியதடாகத்தோடுகூடிய ஒரு உத்தியானவனத்தைக்கண்டு அவ்விடத்தே மூன்றுதினம் ஆகாராதிகளொழிந்து விதேககைவல்லியநிஷ்டானுபூதியிலிருந்தனர். அப்பொழுது சிவபெருமான் சொப்பனஞ்சாதித்தபடியே அந்நகரிலுள்ளார் வந்து நிஷ்டை தெளியுமாறியற்றித் திருவமுதுகொண்டரு

ளும்படி பிரார்த்திக்க; திருக்கூட்டத்தோடு திருவமுது கொண்டருளிச் சிலநாள் வசித்திருந்தனர்.

பின்பு திருச்செங்கோட்டையடையுங்கால், அங்கே கேதாரி ஐயரென்னும் ஓர் பிராமணருடைய மாணாக்கர்களிற்சிலர் "இப்பிராமணவீதியில் நீர் சிவிகையேறிச் செல்லுதல்கூடாது, உம்மிடத்துத் தெய்வீகம் உளதென்பீரேல் சந்நிதியிலுள்ள கல்லிடபம் இக்கடலையை அருந்தச் செய்யும், அங்ஙனம் செய்வீரேல் யாங்களெல்லாம் அடிமையாவோம்" என்றுரைக்க: தாம் சந்நிதியை அடைந்து, அவர் கொண்டு வந்தகடலையை இடபதேவர்முன் வைப்பித்து,

வில்லார் மணிச்சபையின் வித்தகா கூடலின்முன்
கல்லானைக் கிக்கருத்திக் காட்டியவுன்—வல்லாண்மை
கட்டுரையே யாகிலிந்தக் கல்லே றெழீஇக்கடலை
யிட்டவிவர் முன்றினச்செய் யே.

எனத் திருவாய்மலர்ந்தருளித் தமது திருக்கரத்தால் திருவெண்ணீ றெடுத்திட்டனர். இடுதலும், அவ்விடபம் ஆரவாரித்தெழுந்து, அக்கடலை முழுமையும் புசித்துநிற்க; அது கண்டு அச்சமுற்றோடி முறையிட்ட அந்தணர்களால் அதைக் கேள்வியுற்றகேதாரி ஐயர் வந்து வணங்கிப் பிரார்த்தித்தபடிச் சிவிகைமீ தெழுந்தருளிச்சென்று, அர்த்தநாரீசுரரைத் தரிசனஞ்செய்துகொண்டு, அக்கேதாரிஐயர் திருமடத்திலிறங்கி, அவர்களுக்குச் சிவலிங்கதாரணதீக்ஷை முதலியவை செய்து, அடிமை கொண்டு, திருவண்ணாமலையை அடைந்து, குமாரசாமிதேசிகர் முதலியோர்க்குத் தாரணதீக்ஷை புரிந்து வீற்றிருந்தார்.



இருக்குநாளில், துறையூரில் அரசு செய்திருந்த இலிங்க துரை யென்பவர் தந்தமையனுக்கும் நேரிட்ட மனவருத்தத்தினால் காசியாத்திரையின் பொருட்டுப் புறப்பட்டு, சேனைகளோடு திருவண்ணாமலையை அடைந்து, சுவாமிகளின் மகிமையைக் கேள்வியுற்று வந்து வணங்கிநிற்றலும், சுவாமிகள் "உமதுமனோபீஷ்டம் நிறைவேறுக" என்று ஆசீர்வதித்து விபூதியளித்தனுப்ப; அவர் விடைபெற்று இடையிலுள்ள தலங்களைத் தரிசித்துக் காசியை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, சின்னாள்வசித்து மீண்டு, சுவாமிகளையடைந்து பணிந்து, தங்கியிருந்தனர். அப்பொழுது, அவர் தமையனார் தேகவியோகம் எய்தினமையால் அரசுக்கு ஒருவரும் இன்மை நோக்கிவருந்தி, மந்திரி முதலியோர் தமக்கு இளவரசாகிய இலிங்க துரை சுவாமிகள் சந்நிதியில் வந்திருப்பதையறிந்துசென்று, நிகழ்ந்ததை அறிவிக்க; தமையன் இறந்தமையைக்குறித்துக் கவலையுற்று ஒருவாறுதேறி, "இது நிகழ்ந்தது சுவாமிகள் சந்நிதிப் பெருமை" என்று துணிந்து பணிந்து, தம்மை அடிமைகொண்டருளும்படி பிரார்த்திக்க; அங்ஙனமே கொண்டருளி, உடன் எழுந்தருளுங்கால், பெண்ணைநதி பெருகிவருதலைக்கண்டு, விபூதியால் அப்பெருக்கைத் தணிவித்துத் துறையூரை அடைந்தனர், உடன்வந்த இலிங்கதுரை யென்பவர் தமதரண்மனைக்கெதிரில் ஒரு திருமடம் சிறக்க அமைத்துப், பூசைநைவேத்தியத்தின் பொருட்டுச் சர்வமானியமாகச் சிலகிராமங்களைச் சாசனமெழுதிக்கொடுத்ததுமன்றித் தினமும் நைவேத்தியத்

O23.38-2114.V
N22

திற்கு வேண்டும் உபகரணங்களும் பத்துப்பொன்னும்
அனுப்பிலர்; சுவாமிகள் அன்பர்களுக்குத்தீக்ஷைமுதலியவை
புரிந்து அருள்பாலித்திருந்தனர்.

ஒருநாள் குருதரிசனஞ் செய்ய வேண்டுமென்னும் ஆவ
லதிகரித்துப் பிரயாணமுற்று, இடையே திரிசிரபுரத்தி லுள்
ளவர் பலருப் எதிர்கொண் டுபசரித்துவணங்க நகர்வலமாகச்
செல்லுங்கால், அகால மாயினமையால் தீவர்த்திகளுக்கு
எண்ணெய்கிட்டாமையின் யாவரும் மனவருத்தமுறுதலை
நோக்கி, தமது திருக்கூட்டத்திலுள்ள ஒருதம்பிரானைக்
கொண்டு காவிரிநீரை நிரப்பித்து, அதனை எண்ணெயாகவிடுத்து
தீவர்த்திகளை எரிக்கும்படிச்செய்து, சகலவிபவத்தோடும்சார
மாமுனிவராச்சிரமத்திற் சென்றிறங்கி, மாதூர் பூதேசுரரைத்
தெரிசித்துத் தங்கினர். மறுதினம், திருச்சோற்றுத்துறை
என்னுந் தலத்துக்குச் சமீபமாகச்செல்லுங்கால், ஒரு ஆல
விருக்ஷ நிழலிலிருந்த ஒரு குஷ்டரோகி கண்டுவணங்கிக்
கைகூப்பிநின்றுவருந்துவதை நோக்கி யிரங்கித் தமது உச்
சிட்டத்தை உமிழ்தலும், அவன், இதுதான் நமது நோய்ப்
பிணிக்கும் பவப்பிணிக்கும் பரமௌஷதமென்று உட்
கொண்ட அளவில் திவ்யதேகம்பெற, அவனைத் திருக்கூட்
டத்து ஒருவனாக்கினர். அப்பால், அந்நாட்டையாளும் சோழ
வமிசத்தரசன் பிரமகத்தி தோஷத்தால் குணபேதமுற்று
ஊர்தோறும் திரிபவன் எதிர்ப்பட்டுச் சுவாமிகள் சிவிகை
யைப் பற்றி மறிக்க; அவன் நிலைமையையுணர்ந்து திருவுள்
ளிரங்கி, விபூதியை அவன்மீதுதெறித்து பிரமகத்தி தோஷ



முதலியவற்றை நிவர்த்தித்து, அவன்பணிந்து பிரார்த்திக்க
அவனை அரசுக்கு உரியனாக்கியருளினார்.

பின்பு திருக்கலயநல்லூருக்கு எழுந்தருளும் பொழுது,
அச்சிவ ஸ்தலத்து அருச்சகராகிய ஆதிசைவப்பிராமணரு
டையபுதல்வரை அரவுதீண்ட இறந்தமையால் தகனஞ்செய்
தற்குக் கொண்டு போதல் கண்டு, உரியவரை, நோக்கி,
"உமக்கு உதவியற்ற இப்புதல்வனை எமக்கு ஈக" என்னலும்,
அவர் அப்புதல்வர் உயிர்பெற்றெழுதலில் அவாவுடையராய்
மாதவர்மகிமை எங்ஙனமிருக்குமோ என்றுஉடன் பட; சுவா
மிகள் விபூதியை மந்திரித்துத் தெறித்து, "ஞானக்கூத்தா
வருக" என்றழைத்து, உடனே உயிர்பெற்றெழுந்த அப்பு
தல்வரை மார்புடணைத்து முத்தமிட்டுச், சிவிகைமீது வைத்
துக்கொண்டு, திருவாவடுதுறையை எய்தி, ஞானசாரியராகிய
நமசிவாயமூர்த்திகளை அன்புமேலீட்டாற் பலமுறைபணிந்து
நின்றனர். அவ்வாசிரியர் சுவாமிகள்பால் நிகழ்ந்துள்ள தெய்
வீகங்களையுணர்ந்து வியந்து, ஆதீனத்தைச்சார்ந்த சகல அதி
காரங்களையும் ஒப்புவித்துவிட்டுத், தாம் சின்னாள் நிஷ்டை
கூடியிருந்து ஒருநாள் விதேகமுத்தியை யடைந்தருள; சுவா
மிகள் அருகிருந்து செய்யவேண்டிய கிரியைமுற்றும் முடித்
துத், தரிசனார்த்தமாக அக்குருமூர்த்தத் திருவுருவமைப்
பித்து அவ்விடத்திற் பிரதிஷ்டைசெய்து, கும்பாபிஷேகம்
மகாகுருபூசை மகேசுர பூசைமுதலியவும் நடாத்தி, மாணாக்
கர்க்கு அனுக்கிரகஞ் செய்து கொண்டு வீற்றிருக்குங்கால்
திருவாவடுதுறையிலே திருவவதாரஞ் செய்த தீவிரதாபக்த

வராய்த் திருக்கூட்டத்தமர்ந்திருந்த ஒருவருக்கு ஆசாரியாபி
ஷேகம்புரிந்து, மறைஞானதேசிகரென்னும் தீக்ஷாநாமஞ்
சூட்டி ஆன்மார்த்த பூசையும் எழுந்தருளப்பண்ணிக்
கொடுத்து, இச் சைவபரம்பரை தழைத்தோங்க அடியவர்
கட்கு அநுக்கிரகஞ்செய்து கொண்டு இவ்வாதீனத்தைப்
பரிபாலித்துவரக்கடவீர்', என்று ஆசிர் வதித்துநின்றுவிட்டு
அதிகாரவுடையவரைத் தமக்கு ஆன்மார்த்த மாகக்கொண்டு
திருவண்ணாமலைக் கெழுந்தருளி, அங்கே இதற்கு முன்
பேரையூரிலே வீரசைவாசாரியபரம்பரையி லவதரித்துச்சகல
சாஸ்திரங்களினும்வல்லவராய்ச் சிவாநுபவசாதனையிற் பயின்
றுகொண்டு அவ்வநுபவம்விளங்க வுணர்த்தவல்லநல்லாசிரிய
ரையே நாடியுள்ள சாந்தலிங்கசுவாமிகளெய்திப்பணிய அவர்
முதலிய நன்மாணாக்கருக்கு ஞானோபதேசம்புரிந்து, அவர்
தாளிதங்காளத்திதேசிகர் பால் அகலாதுபழகிச்சிவாநுபூதி
யெய்துப்படி அநுக்கிரகித்து வீற்றிருந்தார்.

அப்பொழுது, மறைஞானதேசிகர் பரிபூரணமான
செய்தியறிந்து, திருவாவடுதுறைக்கெழுந்தருளி, அம்பல
வாணதேசிகருக்கு அபிஷேகஞ்செய்து நிறுத்திவிட்டுத், திரு
வண்ணாமலைக்கெழுந்தருளப் பிரயாணமுற்று வருகையில்,
தமக்கு விதேகமுத்தியெய்துங்காலம் அணித்தாதலையறிந்து,
திருப்பட்டீச்சரம் வள்ளலார்கோயில் முழையூர் திருச்சத்தி
முற்றம் திருக்குடந்தையென்னும் இப்பஞ்சஸ்தல மத்தியி
லுள்ள நவலிங்கதீர்த்தக்கரையிலே இறங்கியருளித், திருவா
வடுதுறையினின்றும் அம்பலவாணதேசிகரைப் அழைப்பித்



துப் பணிந்து நின்ற அவரை நோக்கி, "சிவசங்கற்பத்தால்
நமதாதீனம் சைவாதீனம் வீரசைவாதீனம் என்று இரண்டா
யினமையால் இவ்விரண்டும் உலகில் சிறந்திருத்தல்வேண்டு
மன்றோ? சைவாதீனத்திற்கு உம்மைநியமித்ததுபோல வீர
சைவாதீனத்துக்கு ஞானக்கூத்தரை நியமிக்கின்றோம்"
என்று அங்கே மண்டபமுதலிய அமைத்து, வீராகமவிதிப்
படி அவருக்குத்தீக்ஷையும் ஆசாரியாபிஷேகமும் புரிந்து
"திருவண்ணாமலையிலுள்ள வீரசைவாதீனத்தைப் பரிபால
னஞ்செய்துவரக்கடவை" என்று ஆசீர்வதித்து, திருவாவடு
துறைக்காகத் திவ்யதேசங்களில் ஏற்பட்டிருக்கின்ற மடங்
களில் அறுபத்துநான்குமடங்களையும் அவற்றின் வருமானங்
களையும் ஞானக்கூத்ததேசிகருக்குச் சுவாதீனஞ் செய்து
கொடுத்துவிட்டு, அந்த நவலிங்கதீர்த்தக்கரையிலேயே சிவ
பூசை மகேசுரபூசை முதலியவைகளை நடாத்திக்கொண்டு
ஐந்துதினம் வசித்து ஆறுவதுதினம் நியமமுடிந்தவுடன் சிர
சிற்குவித்த அஞ்சலியஸ்தராய் மேற்கூறிய பஞ்சாக்ஷரசொரூ
பமாகிய ஐந்துதலங்களையுந் தரிசித்து நிற்கையில், யாவரும்
ஆச்சரியமும் அச்சமும் அடையப் பூமிவெடிக்க அதிற்
றோன்றிய ஒளிப்பிழம்பில் திருமேனிகரைய இஷ்டலிங்க
பரசிவத்திற் கலந்தனர்.

அதைக்கண்ட அம்பலவாணதேசிகரும் ஞானக்கூத்த
தேசிகரும் திருக்கூட்டத்தவரும் பிரமித்து, ஆனந்த
பரவசராய்த்துதித்திறைஞ்சச், சோழமகாராஜாவும் அதைக்
கேள்வியுற்றடைந்து, தேசிகமூர்த்திகளைத்தரிசித்து, ஆங்கு
நிகழ்ந்த தெய்வீகம் அனைத்தும் நன்குணர்ந்து, விம்மிதத்த

னைத் தன்னுடைய தமையனை விஜயசோழமகாராஜாவின் குமாரனுக்குநேர்ந்த பிரமகத்திதோஷத்தையும் குணபேதத்தையும் முன் நிவர்த்தித்த அக்குருமூர்த்திக்குச் சிறக்க ஆலயம் அமைத்து; அதிற் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்வித்து, ஞானக்கூத்த சிவப்பிரகாசசுவாமிகளால் கும்பாபிஷேகம் இயற்றுவித்து, நித்தியநைமித்தியங்கள் குறைவற நடக்கும்படி சிலகிராமங்களைச் சர்வமானியமாகச் சிலாசாசனத்தோடு விடுத்துவணங்கி விடைபெற்றுச் சென்றனன். அப்பால் அம்பலவாணதேசிகசுவாமிகள் சின்னாள்வசித்துக் குருதரிசனஞ் செய்துகொண்டு திருவாவடுதுறைக்கெழுந்தருள; ஞானக்கூத்த சிவப்பிரகாசசுவாமிகளும் குருபணிகளியற்றுதற்குத் தக்கதம்பிரான்களைநியமித்துவிட்டுத் துறையூர்க்குச்சென்று சிலதினம் அமர்ந்திருந்து, திருவண்ணாமலைக்கெழுந்தருளி, அன்பர்களுக்குச் சிவலிங்கதாரண தீக்ஷையும் தீவிரதரசத்திநிபாதர்களுக்கு ஞானோபதேசமும் பாலித்திருந்துகொண்டு, விருத்தாசலபுராணம் * திருவிடைமருதூர்ப்புராணமுதலிய அரிய நூல்களைச்செய்தருளி, அக்காலத்து அதிதீவிரதரபக்குவராயிருந்த ஒருவர்க்கு ஆசாரியாபிஷேகம்புரிந்து, ஆதீனத்திற்கு உரியராக்கி, தாம் சிவன்பாக்கமென்னும் நகரிலே மாசிமக நக்ஷத்திரத்திலே சிவலிங்கைக்கியமாய்ச் சமாதியாயினர்.

வரலாறுமுற்றிற்று.

* திருவிடைமருதூர்க்கு இவ்வாசிரியரருளிய, புராணமேயன்றி சிவக்கொழுந்துதேசிகரியற்றிய புராணமும் ஒன்றுண்டு.

உ

# அறிவிப்பு.

இத்தகைய தெய்வீகம்பெற்ற இவ்வாசிரியர் சொன்னயம் பொருணயமுதலியவைசிறக்க அருளிய இவ்விருத்தாசலபுராணம் பாரிப்பாக்கம் முனியப்பமுதலியாரியற்றிய புதியவுரை எனப்படும் ஒருரையுடன் அச்சிடப்பட்டு வழங்குகின்றது. அவ்வுரையை ஆராய்ந்து பார்க்கின் பழமையாக எட்டுப்பிரதிகளில் வழங்கும் உரையில் சில இடத்துப் பெரிதும் பிழைபட்டுப் பாட்டுக்கிணங்காமல் பொருணயமின்றிக் கிடக்கும் சில வாக்கியங்களைச் சிறிது நயம்படத்திருத்தியும், அவற்றில் அவ்வுரையும் வெளிப்படாதுள்ள சில இடத்துப் பிறிதுபொருள்கொண்டு அதற்கிணங்கப் பாடல்களைத்திருத்தியும், அச்சிடப்பட்டிருப்பதாகப் புலப்பட்டமையால், அவ்வழுக்களைப் பலபிரதிரூபங்களைக் கொண்டு ஒருவாறுகளைந்து, பாடல்களைச் சுத்தப்படுத்தி, அதற்கியைய உரைகளைத் திருத்திப் புதுக்கிச் செவ்விதாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதுபற்றி விசேடித்து எழுதவேண்டுவதில்லை. முன் அச்சிடப்பட்டுள்ள பிரதியோடு இதனையும் ஒப்பிட்டுநோக்கின் உண்மை விளங்கும்.

ஞானக்கூத்ததேசிகர் திருவடிவாழ்க.


திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

## திருக்கைலாச பரம்பரை.

| ஆசாரியர்கள் | பரிபூரணஸ்தலம் | மாதம் | திருநக்ஷத்திரம். |
|---|---|---|---|
| மெய்கண்டதேவர் | திருவெண்ணெய்நல்லூர் | ஐப்பசி | சுவாதி. |
| அருணந்திசிவாசாரியர் | திருத்துறையூர் | புரட்டாசி | பூரம். |
| மறைஞானசம்பந்தசிவாசாரியர் | திருக்களாஞ்சேரி | ஆவணி | உத்திரம். |
| உமாபதிசிவாசாரியர் | கொற்றவன்குடி | சித்திரை | அஸ்தம். |
| அருணமச்சிவாயதேசிகர் | ௸ | மார்கழி | திருவாதிரை. |
| சிவப்பிரகாசசித்தர் | பொதிகை | ஆடி | அச்சுவினி. |
| நமச்சிவாயதேசிகர் | திருவாவடுதுறை | தை | அச்சுவினி. |
| சிவப்பிரகாசதேசிகர் | பட்டீச்சரத்துக்கடுத்தவடதளி | ஆனி | பரணி. |
| ஞானக்கூத்ததேசிகர் | சிவன்பாக்கம். | மாசி | மகம். |



உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# விருத்தாசலபுராணம்

## பாயிரம்.

### ஆழத்துப் பிள்ளையார்

காப்பு.

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

(இதன்பொருள்.) திருவும்-சகல செல்வமும், கல்வியும்-வித்தையும், சீரும்-சிறப்பும், தழைக்கவும்-தழைத்தோங்கவும், கருணை பூக்கவும்-ஜீவகாருண்ய முண்டாகவும், தீமையை காய்க்கவும்-தீமை களை வாட்டவும், பருவமாய்-பக்குவமாகி, நமது உள்ளம் பழுக்க

வும்-நம்முடைய மனம் பழுக்கவும், பெருகும் ஆழத்து பிள்ளையை-(எக்கடவுளினும்) மேம்பட்ட ஆழத்துப்பிள்ளையாரை, பேணுவாம்-வணங்குவாம். (என்றவாறு.)

இம்மையில் பொருளல்லவரையும் பொருளாகச்செய்வதுபொருளே யாகலின் அவ்வுயர்வுதோன்றமுற்படுத்து 'திருவும்' என்றும், அஃதெய்தினும் கல்வியில்லையேல் ஆன்மலாபம் அடையாமை தோன்றக் 'கல்வியும்' என்றும், இவற்றால் சகலசிறப்புகளும் தழைப்பது தோன்றச் 'சீரும்' என்றும், இவையெல்லாமெய்தினும் சிவகருணையும் தீமைகளைவாட்டலும் இருவினையொப்பு மலபரிபாகம் வாய்க்க உள்ளத்தே ஞானமுதிர்தலும் எய்தாவழிப் பயனில்லையென்பது தோன்றக் 'கருணைபூக்கவும் தீமையைக்காய்க்கவும் பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்' என்றும் கூறினர். கூறவே விக்கினங்களையகற்றி எவற்றையும் பாலிக்கவல்லவர் விநாயகக்கடவுளே என்பது கருத்து.

காய்த்தல்-காயச்செய்தல். இது தழைத்தல்முதலிய
உருவகம்பற்றி வந்தது.

விருத்தாசலேசுரர்.

வேறு.

திருமாலுநான்முகனுந் தேவர்கோவுந்
தேவர்களுமியாவர்களுஞ் சிந்தையாலு
மருவாயமறையாலு மளவையாலு
மளப்பரிதாயகண்டிதமாய் நின்றமூர்த்தி
யுருவாயகிரிவடிவா யனந்தகோடி
யொளியுடையகொடுமுடிக ளாகிநின்ற
பெருவாழ்வைத்திருமுதுகுன் றுடையான்றன்னைப்
பெருங்கருணையாளனையாம் வணங்குவாற்றும்.



(இ - ள்.) விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் தேவேந்திரனும் தேவர்களும் மற்றையர்களும் மனத்தினாலும், அரூபமாகிச் சத்தவடிவமாய் விளங்குகின்ற வேதங்களினாலும், ஆகமமுதலிய பிரமாணங்களினாலும், அளவிடுதற்கரிதாகி, அகண்டாகாரசொரூபமாகி நிலைபெற்ற நிஷ்களப்பொருளாகிய பரமசிவமும், சகளமாகிய மலைவடிவமாகி அனந்தகோடி சூரியப்பிரகாசம்பொருந்தியகொடுமுடிகளோடுநின்ற ஸ்தூலரூபியும், அப்பழமலையில் திருவுருக்கொண்டு விளங்குகின்றவருமாகிய மிக்க கிருபா சொரூபியாகும் விருத்தாசலேஸ்வரரை நமஸ்கரிப்பாம். (எ - று.)

பெரியநாயகியம்மை.

வேறு.

பச்சைமலைபவளமலை தனிற்றோற்றம்போலப்
பரிவுடையதிருவடிவு மம்மலைமேலுற்ற
மெச்சுமதித்திருமுகமும் பொய்ச்சதிருவிடையும்
விழிமூன்றுங்கரநான்கும் பெரியநாயகியார்
கச்சிருந்தமுலைத்தடமு மமுதவாக்குங்
கருங்குழலும்வெண்ணகையுஞ் செய்யவாயு
நச்சமடியவர்பிறவி யறுக்குந்தாளு
நைந்துருகிப்புந்தியினிற் சிந்தைசெய்வாம்.

(இ - ள்) பச்சைமலையானது பவளமலையின்கண் கப்புவிட்டெழுந்ததையொப்ப, அன்புருவமாய் விளங்குகின்ற பெரியநாயகியம்மையாருடைய திருமேனியையும், அம்மலையின்மேற் றோன்றிய மெச்சுகின்ற பூரணசந்திரனையொத்த திருமுகத்தையும், இல்லையென்று சொல்லத்தக்க அழகிய இடையையும், திரிநேத்திரங்களையும், நான்கு கைகளையும், கச்சையணிந்த ஸ்தனபாரங்களையும் அமிர்த மயமாகிய வாக்கையும், காரியநிறமான அளகபாரத்தையும்

வெண்மைபொருந்திய தந்தபந்தியையும், சிவந்தவாயையும், விரும்புகின்ற அடியார்களுடைய பிறவித்துன்பத்தை நீக்கியருளுகின்ற திருவடிகளையும் அன்பினால் மனங்கரைந்துருகிச் சித்தத்திற் சிந்திப்பாம். (எ-று.)

விநாயகக் கடவுள்.

வேறு.

ஒருமலையாற்புரமலையு மொருமைந்தன் றிருமைந்த
னிருமலையுந்தும்மலையு மெதிர்மலையும்வினைமலையும்
பொருமலையும்விம்மலையும் பொம்மலையும்புடைத்தருளிக்
கருமலையும்பெருமலையிற் கைம்மலையைக்கைதொழுவாம்.

(இ-ள்.) ஒப்பற்ற மகாமேருவாகியவில்லினால் திரிபுரசங்காரஞ் செய்த வலிமைபொருந்திய பரமசிவனுடைய அழகிய மூத்தகுமாரரும் அடியார்களுடைய இருமலையும், தும்மலையும், எதிர்த்துப் பொருதுகின்ற வினையாகியமலையையும், பொருமலையும், விம்மலையும், சரீரப்புடைப்பையும் போக்கியருளிப் பிறவியையும் ஒழித்தருளுகின்ற விருத்தகிரியின் கண்ணெழுந்தருளிய யானைமுகத்தையுடையவருமாகிய விநாயகமூர்த்தியை இரண்டுகைகளாலும் வணங்குவாம், (எ-று.) (௩)

இருமல், தும்மல், பொருமல், விம்மல், பொம்மலென்பன சரீரத்தைப்பற்றிய நோய்களின் கூறுபாடு.

சுப்பிரமணியக் கடவுள்.

திருக்குமரம்போல்வாருந் திருப்பாதங்கண்டாரை
யுருக்குமரன் றிருக்குமர னூற்றாரைச்செற்றாரை
முருக்குமரன்சூரனுக்கு முழுவயிரனம்முளத்தைத்
தருக்குமரப்பைக்கனிபோற் றந்தானைச்சிந்தைசெய்வாம்.



(இ-ள்.) முருடுள்ள மரம்போன்ற மனத்தை யுடையவரும் திருவடிதரிசனஞ்செய்வாரேல், அவர்களுள்ளத்தையும் உருக்குகின்ற பரமசிவனுடைய செல்வக்குமாரரும், தம்முடைய அடியார்களுக்குப் பகைவரானவரைச் சங்கரிக்கின்ற அரம்போல்பவரும், சூரபத்மனுக்கு மிக்க விரோதியானவரும், நம்முடைய இருதயத்தைக் களிக்கும்படியான வாழைப்பழம்போலக் கனிவித்தவருமாகிய சிவசுப்பிரமணியக் கடவுளைச் சிந்தித்து வணங்குவாம். (எ-று.) (௪)

திருஞானசம்பந்தசுவாமிகள்.

மருளோடப்புத்தரெலா மருண்டோடவருகரிடத்
தருளோடவாறோட வாற்றெதிரேயேடோட
வெருளோடப்பாண்டியனார் வினையோடச்செய்தடியா
ரிருளோடவருளோட மேற்றினன்பதம்போற்றி.

(இ-ள்.) மயக்கத்தோடு அந்தப்புத்தர்களெல்லாம் பயந்தோடவும், அருகரிடத்தில் அருளில்லாமல் வையைநதி பெருகியோடவும் அந்நதிப்பெருக்கிலே தாம்விட்டருளியதிருப்பாசுரத் திருப்பதிக ஏடு எதிரேறிச்செல்லவும், அதைக்கண்ட நெடுமாறரென்னும் பாண்டியராஜாவினுடைய வினைகள் அச்சத்தோடு அகலவும்செய்து, அடியார்களுடைய அஞ்ஞானநீங்க மெய்ஞ்ஞானமாகிய மரக்கலத்தில் அவர்களை ஏற்றுவித்த திருஞானசம்பந்தசுவாமிகளுடைய திருவடிகள் வணங்கப்படுவன. (எ-று)

புத்தரையும் அருகரையும் வாதில்வென்று ஆற்றில் பதிக மெதிரேறச்செய்ததுமன்றி, காவிரிப்பெருக்கில் ஓடத்தின்வழி அடியவரைத் திருப்பதிகத்தால் கரையேற்றுவித்துத் திருக்கொள்ளம்பூதூர்ப் பெருமானைத் தரிசிப்பித்தருளினாராகலின், இங்ஙனம் துதித்தார். அருளைப்பெறுதற்கு ஏதுவாதலின் ஓடத்தை அருளாக உபசரித்தார். (௫)

### திருநாவுக்கரசுசுவாமிகள்முதலிய மூவர்கள்.

மருங்குகடற்கன்மிதப்பில் வந்தார்தம்பதம்போற்றி
பெருங்கரிமேற்கயிலையினிற் போனார்தம்பதம்போற்றி
நெருங்குநரிபரியாக்கி நிறுத்தினர்தம்பதம்போற்றி
யிரும்பொருள்கேட்டரன்பக்கத் திருந்தார்தம்பதம்போற்றி.

(இ - ள்.) அருகர்கள் கடலின்கண் தம்மைக்கட்டியிட்ட கல்லே தெப்பமாக அதன்மீது கரையையடைந்த திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவடிகள் வணங்கப்படுவன. பொருதுகின்ற வெள்ளையானையின்மேலேறித் திருக்கயிலைக் கெழுந்தருளிய சுந்தர மூர்த்தி சுவாமிகளுடைய திருவடிகள்வணங்கப்படுவன. நெருங்கிய நரிகளைக் குதிரைகளாக்கிப் பாண்டியராஜனுக்கு முன்னிறுத்தின பரமசிவனுடைய திருவடிகளைவணங்கிப் பெருமைதங்கிய ஞானார்த்தத்தைக் கேட்டு அப்பரமசிவனைவிட்டு நீங்காது அவரது அணுக்கத் தொண்டராயமர்ந்த மாணிக்கவாசக சுவாமிகளுடைய திருவடிகள் வணங்கப்படுவன. (எ-று.) (௬)

### வாழ்த்து.

வானவர்களாளினங்கண் மறையவர்கண்மறைவேள்வி
யானசிவசமயவே தாகமங்கடழைத்தோங்க
ஞானமுளாசபதியு நற்குடியுந்தழைத்தோங்க
தானதன்மந்தழைத்தோங்க தரணிபெருமழைதூங்க.

(இ - ள்.) தேவர்களும் பசுக்களும், பிராமணர்களும், வேதங்களின் வழியாகச் செய்கின்ற பலயாகங்களும், உரிய சிவசமய சம்பந்தமான வேதாகமங்களும் தழைத்தோங்குக; விவேகமுடையவரசனும், நல்லகுடிகளும்தழைத்தோங்குக; தானதருமங்களுந் தழைத்



தோங்குக; பூமியெல்லாம் குறைவில்லையாக மழைபெய்து வருக (எ-று.) (௭)

தெய்விகமாமுதுகுன்றர் திருமேனிதனைத்தீண்டுஞ்
சைவமறையோர்குலமுந் தானிகருந்தழைத்தோங்க
மெய்விரவுஞ்சிவனடியார் மேன்மேலுந்தழைத்தோங்க
பொய்விரவாமுனிவர்களும் புண்ணியருந்தழைத்தோங்க.

(இ - ள்.) தெய்வீகமாக முளைத்தெழுந்த விருத்தாசலேஸ்வரருடைய திருமேனியைப்பரிசித்துப் பூசிக்கின்ற ஆதிசைவப் பிராமணர்களுடைய மரபும், ஸ்தானிகரும்தழைத்தோங்குக; மெய்த்தொண்டராகிய சிவனடியார்கள் மேன்மேலுந் தழைத்தோங்குக; பொய்ம்மை யில்லாத முனிவர்களும் புண்ணியர்களும் தழைத்தோங்குக. (எ-று.) (௮)

### தீர்த்தவிசேடம், கிரிவிசேடம்.

வேயுதிருமுத்தாறு விரவியணைமுத்தாறு
போயுதகம்படியாரே புலையரகம்படியாரே
மாயமலமுதுகுன்றர் வயற்கமலமுதுகுன்றர்
தூயவரைப்பணியாரே சூழ்ந்தவரைப்பணியாரே.

(இ-ள்.) மூங்கிலில் உதிருகின்ற முத்துக்கள் இருகரையிலுங் கலந்துவருகின்ற திருமணிமுத்தாநதியையடைந்து அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்யாதவர்களே சண்டாளர்கள்; மனவொடுக்கமும் அடையார்கள்; அன்றியும் வஞ்சிக்குந்தொழிலையுடைய ஆணவமலமானது குன்றுதலையும் பெறார்கள்; தாமரைகள்செறிந்த வயல்கள் சூழ்ந்த திருமுதுகுன்றத்தையுடைய பெருமானது பரிசுத்தமாகிய எல்லையினது அண்மையுடையவர்களே அரையிற்சுற்றப்பட்ட அரைக்கச்சை யுடையாராவர்கள். (எ-று.)

வஞ்சித்தலாவது ஆன்மாக்கள் சிவத்தையடையாதபடி அவற்றி னறிவை மறைத்துநிற்றல். உதுவென்பது சுட்டுப்பொருளது அர வக்கச்சை யுடையராதல் சிவசாரூபம் பெறுதல். (௯)

தலவிசேடம்.

பழமலையிலிருந்தவரே பலிப்புண்டாயிருந்தவரே
யழகுபணிவருந்தினரே யருணிறையவருந்தினரே
குழகனடிக்கண்டாரே கூற்றனடிக்கண்டாரே
யெழிலையுறவளைந்தவரே யின்பமுறவளைந்தவரே.

(இ - ள்.) விருத்தாசலத்திற் குடியிருந்தவர்களே சகலமுஞ் சித்தியாகும், பெருமைபெற்ற தவத்தையுடையவர்கள்; விருத்தாசலேஸ்வருடைய திருப்பணியினால் சரீரம் வருந்தினவர்களே திருவருளமிர்தத்தைப் பூரணமாகப்புசித்தவர்களே; அங்கே பரமசிவனுடைய திருவடிகளைத் தரிசனஞ் செய்தவர்களே யமதண்டனைக் கணுகாதவர்கள், அழகைப்பொருந்த அவரை வணங்கினவர்களே இன்பத்தின் கண்ணே உறவுபூண்டவராவர்கள். (எ-று.) (௧௦)

திருமுன்னேமெய்வன்னி சிரகிரியார்மெய்வன்னி
யிருவன்னிதருங்குவளை யிறைகாதிலிலங்குவளை
பெருமலையாள்கற்பகமே பெருவன்னிகற்பகமே
வருவதுவுமார்ச்சனமே மருவியறமார்ச்சனமே.

(இ - ள்) பழமலைநாதருடைய சந்நிதானத்தின் முன்னிருப்பது உண்மையாகிய வன்னிவிருட்சம்; அவருடையதிருமேனி அக்கினி சொரூபம்; அப்பெருமைபொருந்திய வன்னிவிருட்சத்திற்புஷ்பிப்பது குவளைமலர்; அவருடைய திருச்செவிகளிற் பிரகாசிப்பது சங்கக்குழைகள்; கற்புநிலையே பெரியநாயகியார்; கற்பகவிருக்ஷமே



பெரியவன்னிவிருக்ஷம்; (அத்தலத்தில் வசிப்பவர்க்கு) வரும்பிரயோசனமும் சிவார்ச்சனையையே மேற்கொண்டு அறத்தை யீட்டுதலே. (எ-று.)

இருவன்னி தருங்குவளையென்பது அதுபலவிம்மிதங்களையுடையதென்பதுதோன்றநின்றது. மூர்த்தியார்ச்சனம்விருந்தோம்பலுமாம்.

தோற்றுவித்தநான்முகனார் துஞ்சியநாட்கடலேழும்
வீற்றொன்றாய்க்கீழ்தாழ மேலுயர்ந்துநின்றபதி
நாற்றிசையெண்ணம்பிக்கு நம்பிக்கைக்கனகமளித்
தாற்றிலிட்டுத்திருவாரூர்க் குளத்தளிக்குமரியபதி.

(இ - ள்) விருத்தாசலமானது சகலத்தையுஞ் சிருஷ்டித்த பிரமதேவரும் அழிந்துபோகின்ற பிரளயகாலத்தில் சப்தசமுத்திரங்களும் ஒன்றாகிக் கீழ்ப்பட மேற்பட்டுயர்ந்து நின்றஸ்தலமாம்; அன்றியும், நான்குதிசைகளிலுள்ளவர்களும் பரவப்பெற்ற புகழையுடைய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு யாவரும் ஒத்துக்கொள்ளத்தக்க மாற்றுயர்ந்த சுவர்ணத்தைக் கொடுத்துத் திருமணிமுத்தாநதியில் விடுவித்துத் திருவாரூர்க் கமலாலயதடாகத் தீர்த்தத்தில் பரவைநாச்சியாருக்காகக் கொடுத்தருளிய அருமையாகிய ஸ்தலமாகும். (எ - று.) (௧௨)

அவையடக்கம்.

கிளிகளும்புன்பூவைகளுங் கிளக்குமொழிகேட்டார்க
டெளிவுவரத்தவறினசொற் றெருட்டுவரோமருட்டுவரோ
வொளியுடையபேரறிவா லுயர்ந்தபெரியோரெல்லா
மெளியதமியேன்கவியை யெள்ளுவரோகொள்ளுவரோ.

(இ - ள்.) கிளிப்பிள்ளைகளும், புல்லிய நாகணவாய்ப் பட்சிகளும் பேசுகின்ற சொற்களைக் கேட்டபேர்கள், தவறுகின்ற சொற்

களைத் தெளிவுவரும்படி தெளிவிப்பார்களா அன்றி அவைகளை மயக்கச் செய்வார்களா? (மயங்கச்செய்யார்கள் அதுபோலப்) பிரகாசத்தையுடைய மெய்ஞ்ஞானத்தினாலுயர்ந்த பெரியோர்களனைவருஞ் சிற்றறிவையுடைய எனது கவிதையை இகழ்ச்சிசெய்வார்களா கொள்ளுவார்களா? (கொள்ளுவார்கள்.) (எ-று.) (௧௮)

### ஆக்கியோன் பெயர்.

அருளாலேதிருமுடிக ளனந்தமாய்நின்றபிரான்
றிருவாயா லுமைகேட்கச் செப்பியவிப்புராணத்தை
யொருவாயா லுரைக்கின்றே னுயர்ஞானக்கூத்தனவன்
றிருநாமமடியேன்றன் சிரமீதுதரித்தமையால்.

(இ - ள்.) திருவருளினால் அளவிறந்ததிருமுடிகளாகி நின்றருளிய பரமசிவன் தமது திருவாக்கினால் உமையவள்கேட்க உணர்த்தியருளிய இந்தவிருத்தாசலபுராணத்தை உயர்ந்தஞானக்கூத்தனாகிய அப்பரமசிவனது திருநாமத்தை அடியேனுடைய சிரசின்மேற் றரித்திருக்கின்றதன்மையினால் எனது ஒருவாக்கினாற் சொல்லத்துணிந்தேன். (எ-று.) (௧௯)

### புராணவிசேடம்.

தவமேதுஞ்செயவேண்டாந் தருமங்கள்செயவேண்டாம்
புவனேசன்விருத்தகிரி புராணத்தைப்புலப்பாட்டாற்
கவலாதேகற்றோருங் கேட்போருங்கதியடைவர்
சிவனாணைசிவனாணை சிவனாணைசத்தியமே.

(இ - ள்) எந்தத்தவங்களுஞ் செய்யவேண்டுவதில்லை; எந்தத் தருமங்களுஞ் செய்யவேண்டுவதில்லை; சகலபுவனகர்த்தாவாகிய பரமசிவனுடைய விருத்தாசலபுராணத்தை உறுதிப்பாட்டினால் கவ



லைப்படாமல்கற்றுணர்ந்தவர்களுங்கேட்டவர்களுஞ்சாயுச்சியத்தைப் பெறுவார்கள். முக்காலும் சிவாக்கினைப்படிக்கு ஈதுண்மையாம். ()

### புராணவரலாறு.

கயிலாயத்திருந்தருளிக் கண்ணுதலோ னுமைக்கருள
மயிலூர்திகேட்டருளி வியாசர்க்குமகிழ்ந்துரைப்பச்
செயலாருஞ்சமந்தமுனி தெய்வவன்மர்க்குரைசெய்யப்
பயிலாலேசூதர்சொலும் பதினெட்டுப்புராணத்தில்.

(இ - ள்) நெற்றிக்கண்ணையுடைய பரமசிவன் கயிலாசபர்வதத்தி லெழுந்தருளியிருந்து உமையவளுக்கருளிச்செய்ய, அதைக் கேட்டிருந்த மயில்வாகனக்கடவுளான சுப்பிரமணியர் சந்தோஷமாக வேதவியாசருக்குச்சொல்ல, அவர் சுமந்தமுனிவருக்குச் சொல்ல, அவர் தெய்வவன்மருக்குச்சொல்ல, இங்ஙனம் நன்குபழகுதலால் சூதமுனிவர் நைமிசாரண்ணிய முனிவர்களுக்குச் சொல்லப்பட்ட பதினெண்புராணங்களில். (எ-று.) (௧௧)

'உரைசெய்ய' வென்பது அடுத்தசெய்யுளில் 'பொருந்து' மென்பதனோடு முடிந்தது.

இரும்பிரமகைவர்த்த மெனும்பத்தாம்புராணத்திற்
பொருந்துசிவன்விருத்தகிரி புராணத்தைத்தமிழ்செய்வே
னரும்பரனுநாதசன்மா வனவர்த்திக்குரைத்தபடி [னும்.
திருந்துமைகேளெனச்சொன்னாற்சிறுநாயேன்றுணிவென்

(இ - ள்.) பெருமைபொருந்திய பிரமகைவர்த்தமென்னும் பத்தாவது புராணத்திற்சொல்லப்பட்ட பரமசிவனுடையவிருத்தாசலபுராணத்தைத் தமிழினாற் சொல்லத்துணிந்தேன். பூர்வத்தில் நாதசன்மாவானவர் அனவர்த்திக்குச் சொன்ன பிரகாரம் திருந்தாகிய மனத்தையுடைய உமையவளே கேளென்று பரமசிவனும்

அருளிச் செய்வாரானால் சிற்றறிவையுடைய அடியேன் சொல்லப் புகுந்த துணிவு எதுபோலாகும். (எ-று.) (௭)

சருக்கவகை.

விருத்தகிரி தலந்தீர்த்தம் விதர்க்கணனே விபசித்து
நிருத்தமகத் தியன்கலிங்க னீங்குகலிசுவேதமுனி
திருத்தன்பர்சிவபூசை திருவடையாளங்கீர்த்தி
சருக்கங்கோவரைபிருடி சசிவன்னர்பதினெட்டாம்.


(இ-ள்.) கிரிச்சருக்கம், ஸ்தலச்சருக்கம், தீர்த்தச்சருக்கம், விதர்க்கணச்சருக்கம், விபசித்துச்சருக்கம், நிருத்தச்சருக்கம், அகத்தியச்சருக்கம், கலிங்கச்சருக்கம், கலியகல்சருக்கம், சுவேதச்சருக்கம், யாவரையும் திருத்தவல்ல அன்பர்பூசைச்சருக்கம்' சிவபூஜாவிதிச்சருக்கம், விபூதிச்சருக்கம், உருத்திராக்கச்சருக்கம், சிவகீர்த்திச்சருக்கம், கோபருவதச்சருக்கம், பிருடிச்சருக்கம், சசிவன்னச்சருக்கம், என்கின்ற பதினெட்டுச் சருக்கங்களாகும் இத்தலபுராணம். (எ-று.)

சருக்கமென்பதை அங்கங்கும் கூட்டிக்கொள்க. (௧௮)

பாயிரம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௧.

திருச்சிற்றம்பலம்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது,

# கிரிச்சருக்கம்.

வேறு.

திலகவாணுதற் றேவிகேள்சிரகிரிப் பெருமை
யிலகுமாலய னிந்திரனியாவரு மறியார்
குலவுவாலையென் றுனக்கியாங்கூறிலே மில்லை
யுலகிலாரறி வாரெனவும்பர்கோ னுரைத்தான்.

(இ-ள்.) சிந்தூரப்பொட்டையணிந்த ஒளிபொருந்திய நெற்றியையுடைய உமையவளே! நீ கேட்பாயாக, விருத்தாசலத்தின் மகத்துவத்தை விஷ்ணு, பிர்மா, தேவேந்திரன்முதலியயாவர்களு மறியார்கள்; வாலைப்பருவத்தையுடையவளென்று இதுவரையில் உனக்கும் நாம்சொல்லவில்லை; அப்படியானால் உலகத்திலுள்ளவர்களில் எவர்களறிவார்களென்று தேவதேவனாகிய பரமசிவன் அருளிச்செய்தார். (எ-று.) (௧)

ஆதலான்முது குன்றநிற்கதிகமென் றிறைஞ்சி
யாதிநாயகி யுரைத்தலுமண்ணலு நகைத்துப்
பாதிமேனிய ளாதலாற்பழங்கிரி யுனக்குச்
சாதியாதலாற் சாற்றலாமெனவுரைத் தருள்வான்.

(இ - ள்.) ஆதலால் விருத்தகிரி தேவரீருக்கு மிக உரிமையதாகுமென்று சகலகாரணியாகிய உமையவள்வணங்கி விண்ணப்பஞ்செய்த பொழுது, பரமசிவனும் புன்னகைகொண்டு, நீ நமக்குப் பாதிசரீரத்தையுடையவளாகையினாலும், பழமலையானது உனக்குக்குலமாகையினாலும், சொல்லத்தகுமென்று அருளிச்செய்கின்றார். (எ - று.) (௨)

புண்ணியம்பொதி சரக்கறைபொற்கிரி முதலா
மெண்ணிலாவரைக் கிந்திரனியாவரு மிறந்து
முண்ணிலாவிய நித்தியமுநாந்தநாட் கடல்போற்
றிண்ணமாமறை முழக்கறாத்திருமுது குன்றம்.

(இ - ள்.) பிரளயகால சமுத்திரம்போல உண்மையாகிய வேதமுழக்கம் நீங்காத அழகிய விருத்தகிரியானது, புண்ணியங்களாகிய சரக்குகளைச் சேமித்துவைக்கும் தானமாகவும் பொன்மலை முதலிய எண்ணிறந்த மலைகளுக்கெல்லாம் கடவுளாகவும்; யாவர்களும் இறந்தகாலத்திலும் தம்மிடத்தே விளங்கப்பெற்ற நித்தியத்துவமுடையதாகவும்விளங்கும். (எ - று.) (௩)

பூவில்வண்டினம் போற்சுளையீக்கணம் போல
மூவர்தேவர்கண் முனிவர்கள்யோகிகள் சித்தர்
மேவுமெய்ப்பதி யாமெனவதுவென வேறோ
தேவியுன்னினும் விருப்பநந்திருமுது குன்றம்.

(இ-ள்.) உமையவளே! அழகிய நமது விருத்தகிரியானது புஷ்பத்தில் மொய்க்கின்ற வண்டுகள்போலவும், பலாச்சுளையில்மொய்க்



கின்ற ஈக்கூட்டங்கள்போலவும், மும்மூர்த்திகளும், தேவர்களும், முனீஸ்வரர்களும், யோகீஸ்வரர்களும், சித்தகணங்களும், நிறைந்து வசிக்கின்ற உண்மையானஸ்தலமாகும்; நாமென்றும் அதுவென்றும் பேதமோ! நமக்கு உன்னிடத்திலிருக்கும் விருப்பத்தைப் பார்க்கிலும் அதனிடத்தில் அதிகவிருப்பமாகும். (எ-று.) (௪)

இச்சையாற்கொளும் வடிவினம்மிருதயத் தான
மச்சமில்லது நந்தமைப்போலுவ தனாதி
நிச்சயஞ்சிவ லிங்கநம்மிருவர்க்கு நிகழ்ச்சி
மெச்சுநான்மறை யுச்சிநம்வியன்முது குன்றம்.

(இ - ள்) மேன்மைபெற்ற நமது விருத்தகிரியானது. நாம் இச்சையாற்கொள்ளப்பட்ட வடிவத்திற்கு இருதயஸ்தானமாகவும், ஒரு சலனமுமில்லாததாகவும், நம்மை ஒத்திருப்பதாகவும், அநாதியாயுள்ளதாகவும், நிலைபேறுடையதாகவும், சிவலிங்கசொரூபமாகவும், நம்மிருவருக்கும் விளக்கமுண்டாயதானமாகவும், மெச்சுகின்ற நான்கு வேதங்களின் முடிவாகவும் விளங்கும். (எ-று.) (௫)

நினைக்கில்வேதனை நீக்கிடுநினைத்தவர்க் கின்ப
மனைத்தையுந்தரு மனந்தமாயிரமுடி யுடைத்து
வினைக்கண்டண்டமுங் கடந்ததுமேவிலர்ச் சிக்கிற்
சினத்ததீவினை களைவதுதிருமுது குன்றம்.

(இ - ள்) அழகிய விருத்தகிரியானது, நினைத்தபொழுதே எல்லா வேதனைகளையும் நீக்கும், இடைவிடாமல் நினைந்தவர்களுக்குச் சகலவின்பங்களையும் கொடுக்கும், அனந்தமாயிரங் கொடுமுடிகளையுடையது, இருவினைப்பயனையும் அனுபவித்தற்குரிய சகலவண்டங்களையும் கடந்தது, அதனிடத்திலே - பொருந்தினாலும்

அருச்சனைசெய்தாலும் குரூரமாகியதீவினைகளை யொழித்தருளுவ தாகும். (எ-று.) (௬)

புறந்தனிற்றவம் புரிந்தவர்தம்மினிக் கிரியிற்
பிறந்தமூடரே பெரியரிச்சராசர மெல்லா
மிறந்தமாதவஞ் செய்தபினித்தலத் துதிக்குஞ்
சிறந்தபேதையுந் தேவனாந்திருமுது குன்றம்.

(இ — ள்.) புறத்திலுள்ள ஸ்தலங்களிலிருந்து தவத்தைச் செய்தவர்களினும் இந்த விருத்தகிரியிற்பிறந்துள்ள மூடர்களே பெரியோர்கள்; இப்பூமியிலுள்ள சராசரவுயிர்களெல்லாம் அளவற்ற தவத்தைச்செய்தபின்பு, இத்தலத்திற்பிறக்கும்; இதில் வசிக்கின்ற மிகுந்த அறிவீனனும் தேவனேயாவான். (எ-று.) (௭)

அஞ்சுகாவதங் குரோசநம்மருவரை வெற்புத்
தஞ்சவெல்லையிற் றங்கினரியாவருந் தேவர்
விஞ்சுகோபுரக் காட்சியரெவரினு மிக்கோர்
மஞ்சுசூழ்வரை சூழ்ந்தவர்மாலயற் கொப்பார்.

(இ — ள்.) நமது அரிய விருத்தகிரியினெல்லை ஐந்து காததூரமாகும்; அதற்குட்பட்ட எல்லையிற் குடியிருப்பவர்களெல்லாருந் தேவர்கள்; மிகவுயர்ந்த கோபுரதரிசனங்கிடைக்கத்தக்க இடங்களிலிருந்தவர்கள் எவர்களிலும் அதிகமானவர்கள்; மேகந்தவழுகின்ற மலையைச்சூழக் குடியிருப்பவர்கள் பிர்ம்ம விஷ்ணுக்களுக் கொப்பானவர்களாவார்கள். (எ-று.) (௮)

நாலுமூன்றிரண் டொன்றதாநாலுக தன்ம
மேலுமிவ்வரைக் கீண்டுகபேதமு மில்லை
சிலநோய்பசி தீவினைகிரகநோ யில்லை
சாலுமின்மையுந் தானவர்வாதையு மில்லை.



(இ - ள்.) கிரேதாவில் முழுமையும் தருமமும்) திரேதாவில் முக்கூறுதருமம் ஒருகூறுபாவமும். துவாபரத்தில் இருகூறுதருமம் இருகூறுபாவமும், கலியில் ஒருகூறுதருமம் முக்கூறுபாவமும் நடக்குமென்பது நூற்றுணிபாயினும் இந்தவிருத்தகிரியில் எப்பொழுதும் நாற்கூறும் தருமமோடத்தலால் இதிலே அந்தயுகபேதங்களில்லை; இதில் வசிப்பவர்கட்குத் திரிகுணபேதமும், வியாதிகளும், பசியும், தீவினையும், நவக்கிரகபீடையும் கிறைந்ததரித்திரமும். இராக்ஷதவாதையுமில்லை. (எ-று.) (௯)

சீதரன்றொழுந் திருமுதுகுன்றொரு தருவாய்
வேதமாகம மிருகமும்பறவையு மாகிக்
காதன்மானுடர் கண்ணினிற்றோன்றிடு மவைதா
மோதுநம்புக ழின்னதென்றியாவரு முணரார்.

(இ - ள்.) விஷ்ணுமூர்த்தி வணங்குகின்ற அழகிய விருத்தகிரியே ஒப்பற்ற விருட்சமாகவும், வேதாகமங்கள் மிருகபக்ஷிகளாகவும், பேதித்துக் காமியபுத்தியையுடைய மனிதர்களின் கட்புலனுக்குத்தோன்றும்; அங்ஙனந்தோன்றுவது சொல்லுகின்ற நமதுவல்லபமாதலால் அதனை இவ்வகைத்தென்று எவர்களுமறியமாட்டார்கள். (எ-று.) (௧௰)

மன்றிலாடுவோம் வளர்முதுகுன்றினி லிருப்போ
மென்றுகண்டவன் யாவனேயாயினுந் தேவ
னன்றவன்கையி லகப்படுஞ்சித்திக ளனைத்து
நன்றுசத்தியஞ் சத்தியஞ்சத்திய நவிலின்.

(இ - ள்.) சிதம்பரத்தில் நடனஞ்செய்வோம் வளருகின்ற விருத்தாசலத்தில் இருப்போமென்று நமது சொரூபத்தைத் தரிசித்தவன் எவ்வகைப் பட்டவனானாலும் அவனேதேவனாவான்; அப்பொழுதே சகலசித்திகளும் அவனுக்கு கைவசமாகும்;

கூறுங்கால் இது முக்காலுஞ் சத்தியமென்று பரமசிவன்றிருவாய் மலர்ந்தருளினார். (எ-று.) (கக)

பூருவந்தனி னான்முகன்புனலையும் படைத்து
வீரவிந்துவை விட்டனன்முட்டையாய் விதப்ப
சூரிமுட்டையைத் தகர்த்தனன்முக்குணந் தோன்றச்
சோர்விலர்தவைம் பூதமுந்தோன்றின குணத்தில்.

(இ - ள்.) பிரமதேவர் முற்காலத்தில் ஜலத்தைச் சிருஷ்டித்து, அதில் தனதுவீரியமாகிய விந்துவைவிட்டார்; அவ்விந்துவானது முட்டையாகவிதந்தது; அந்த வலியமுட்டையையுடைத்தபொழுது அதில் சத்துவகுணம், இராசோகுணம் தமோகுணமென்னுமூன்று குணங்களுண்டாக அக்குணங்களில்கெடாத பஞ்சபூதங்களு முண்டாயின. (எ-று.) (கஉ)

காதிரண்டினிற் குறும்பியிற்கண்ணர்பா லிரண்டு
பேதமாகிய மதுவுங்கைடவனுமே பிறந்து
சீதரன்றனைப் பொருதனர்சீதரன் றேற்று
யாதுசெய்குவோ மெங்ஙனம்வெல்லுவோ மென்று.

(இ - ள்.) விஷ்ணுமூர்த்தியினுடைய இரண்டுகாதிலுமுள்ள குறும்பியினிடத்தில் இரண்டுபேதமாகிய மதுகைடவர்களென்னும் பெயரையுடைய இராக்ஷதர்கள் பிறந்து (உலகத்திலுள்ளவர்களை இம்சைசெய்து) விஷ்ணுமூர்த்தியினிடத்தில் வந்தெதிர்த்து யுத்தஞ்செய்தார்கள்: அப்பொழுது அவர் அபஜயமடைந்து காம் என்ன செய்வோம் இவர்களை எவ்விதத்திற் செயிப்போமென்று ஆலோசித்து. (எ-று.) (கஉ)

தேற்றமாய்வரங் கேண்மினென்றுரைத்தனன் றிருமால்
தோற்றநீவா மென்கொலோதருகுவை சொல்லா
யேற்றமாகிய வெங்களைக்கேள்வா மென்றார்
மாற்றமென்கையான் மாயுமினென்றனன் மாயன்.

(இ - ள்.) விஷ்ணுமூர்த்தி அங்ஙனம் ஆலோசித்துத் தெளிந்து அவ்விருவர்களையும்பார்த்து உங்களுக்குவேண்டிய வரத்தைக் கேளுங்களென்று சொன்னார்; அந்தவார்த்தையை அவ்விருவர்களுங் கேட்டு ஆ—ஆ—தோற்றுப்போனநீ என்னவரங்கொடுப்பாய் (அந்தவல்லபத்தைச் சற்றேதெரியச்) சொல்லென்று சொல்லிப் பின்புஜெயம்பெற்ற எங்களை வரங்கேளும் தருகிறோமென்றசொன்னார்கள்; அப்பொழுது அவர் என்கையில் நீங்களிறக்கும்படியானவரத்தைக் கொடுங்களென்றுகேட்டார்; அங்ஙனமேகொடுத்தார்கள். ()

மாயன்கையினான் மதுவுங்கடவனுமே மடிந்தார்
தோயமீதினின் மேதையைத்தூர்த்தனர் புவிக்கு
மேயநாமமு மேதினியாயது விரிஞ்ச
னேயமேதினி யிறுகிடச்சிவன்பத நினைந்தான்.

(இ - ள்.) அப்பொழுது விஷ்ணுமூர்த்தியினுடைய கையினால் மதுகைடவர்களிருவரும் இறந்தார்கள்; அவ்விருவர்களின் மாமிசத்தையும் பிரமதேவராற் சிருட்டிக்கப்பட்டுள்ள சலத்திற் செறித்தார்கள்; அங்ஙனமவர்களுடைய மேதையைச் செறித்தபடியால் இந்தப்பூமிக்கு மேதினியென்று பெயராயிற்று; அந்தச்சலமும் மாமிசமும் ஒன்றாய்க் கலந்து இறுகும்படியாகப் பரமசிவனுடையதிருவடிகளைத் தியானஞ்செய்தார் பிரமதேவர். (எ-று.) (கரு)

பங்கயன்புவி யிறுகிடப்பரமனை நினைக்கத்
தங்குபாதல மனைத்திலுக்கப்புறந் தாளா
யங்கணண்டமீ தளவிலாக்கொடுமுடி யாகி
யெங்கணும்பழு குன்றமாய்நின்றன னெங்கோன்.

(இ-ள்.) அங்ஙனம் பிரமதேவர் பூமியிறகும்படி பரமசிவனைத் தியானித்தபொழுது, எமது பிதாவாகிய அக்கடவுள் நிலைபெற்ற பாதாளங்களுக் கப்புறத்திற்றிருவடிகளும் அழகியஇடமகன்றமேலண்டங்களுக் கப்புறத்தில் அளவில்லாத கொடுமுடிகளுமாகி எங்கும் வியாபகமாகிய விருத்தகிரிவடிவமாய்ப் பிரகாசித்தருளினார். எ-று.

மிடியன்வாயிலிற் பொன்மழைமீக்கொள லொக்கத்
துடியவூற்றினிற் பிரளயத்தோன்றிய தொக்கக்
கடிகமழ்ந்தசெங் கமலனெண்ணமுங் கடந்து
படியுமண்டாண் டங்களும்பழமலை பரம்ப.

(இ-ள்.) அங்ஙனம் பிரகாசித்தருளியகிரியானது தரித்திரனுடைய வாசலில் சுவர்ணமாரி பொழிதற்குச் சமானமாகவும் சிறியவூற்றுக்குழியிற் சலப்பிரவாகமுண்டானதற்குச் சமானமாகவும் பரிமளம்வீசுகின்ற செந்தாமரையில்வசிக்கும் பிரமதேவருடைய கருத்தையும் அதிக்கிரமித்துப் பூலோகத்திலும் தேவர்களுடைய அண்டங்களிலும் பாவிநிற்க. (எ-று.) (௧எ)

மத்தில்வெண்ணெய்போல் வரையுமிமேதையுஞ் சிவணி
யொத்தபூதரம் புவிக்குரஞ்செய்தலா லுகந்து
சித்தநான்முகன் சிவன்செயலென்பதை மறந்து
பத்தியின்மையாற் பற்பலபூதரம் படைத்தான்.

(இ-ள்.) மத்தினிடத்தில் வெண்ணெயானது கூடியிருப்பதுபோல விருத்தகிரியினிடத்தில் மாமிசமெல்லாந்திரண்டு ஒன்றுகின்றன; அப்பழமலையானது, பூமிக்குப் பலஞ்செய்து நிற்றலால் பிரமதேவர் மனமகிழ்ந்து இது சிவன்செயலென்றென்னுவதை மறந்து பத்தியில்லாமையால் மனச்செருக்கடைந்து பலபல மலைகளைச் சிருட்டித்தார். (எ-று.) (௧அ)



படைத்தபூதர மெங்கணும்பரம்புவா னெனவக்
கிடைத்ததில்லையோ ரிடமுமக் கிரியரசன்றி
மிடைத்தபூதர மீண்டுவந்தயனுடன் விளம்ப
வுடைத்தவெஞ்சினத் துடனகங்காரமேற் கொண்டான்.

(இ-ள்) சிருஷ்டித்தமலைகளை எந்தவிடத்திலும் பரவும்படிக் கனுப்பவும், அவைகள்போய் எவ்விடத்திலும் மலைக்கரசாகிய அப்பழமலையேயன்றித் தமக்கிருப்பிடமாக ஓரிடமுங் கிடைக்காமையால் திரும்பிவந்து அந்தநெருங்கியமலைகள் பிரமதேவருக்குச் சொல்ல; அதைக்கேட்ட பிரமதேவர் மிகுந்த குரூரமான கோபத்தோடு அகங்கரித்துநின்றார். (எ-று.) மிடைத்த வலித்தல்விகாரம்.

சிற்றந்தன்னுட னகந்தைசென்றடைந்திடி னெருப்புங்
காற்றுங்கூடுத னிகராகுகடிமனை சுட்டுச்
சாற்றும்பக்கமுஞ் சுடுமிதுதன்னுயிர் சுட்டுத்
தோற்றுந்தன்குலஞ் சுட்டடுத்தவரையுஞ் சுடுமால்.

(இ-ள்.) ஒருவனிடத்திற் கோபமும் யானென்னு மகங்காரமும் ஒருமித்துக்கூடின் நெருப்புங்காற்றும் ஒருமிக்கக்கூடுவதை ஒக்கும்; ஆனால் அந்தநெருப்பானது தன்வீட்டையுமெரித்துச் செல்லுகின்ற சாற்புறத்திலுமுள்ள வீடுகளையுமெரிக்கும்; இந்தக் கோபாக்கினியோவெனில் தன்பிராணனையுமழித்துத் தோன்றுகின்ற தன்னுடையவமிசத்தையுமழித்துத் தன்னையனுசரித்தவர்களையும் அழிக்கும்; (ஆகையால் அந்தநெருப்பினும் இதுகொடிது.) (எ-று.) (௨௦)

அன்னமேலய னமரர்களாயிரம் வருட
முன்னிகாடின னடிமுடியொன்றையு முணரா

னென்னமாயமீ தார்செய்தவித்தையோ வென்றான்
பின்னரேபரப் பிரமமாஞ்சிவமெனப் பேணி.

(இ - ள்.) அப்படி கோபங்கொண்ட அன்னவாகனத்தை யுடைய பிரமதேவர் ஆயிரந்தேவவருஷபரியந்தம் மனத்தில் நினைந்து நினைந்துதேடி அடிமுடியொன்றையுங் கண்டறியாதவராகி இது வென்ன மாயையோ இது யாவராற்செய்யப்பட்ட வித்தையோ வென்று வருத்தமடைந்தவராய்ப் பின்பு பரப்பிரமமாகிய சிவன் செயலென்று மனத்திற்குறித்து. (எ - று.) (உக)

அஞ்செழுத்துமே யருமறையாகம புராண
மஞ்செழுத்துமே மந்திரமான்றனக் குருவ
மஞ்செழுத்துமே யகண்டபூரணமென வறிந்தா
னஞ்செழுத்தையு மந்தமாதியினுறத் துதித்தான்.

(இ - ள்.) பஞ்சாட்சரமுமே அரிதாகிய வேதாகமபுராணங்களாகும்; பஞ்சாட்சரமுமே நினைப்பவனைக்காத்தலின் மந்திரமெனப் பெயர்பெற்று வாச்சியப்பொருளாகிய பரமசிவனுக்கு உருவமாகும்; பஞ்சாட்சரமுமே எவற்றினும் கலந்துநிறைந்துள்ள பொருளாகும்; என்றுதுணிந்தவராய் அப்பஞ்சாக்ஷரங்களுள்ளே இறுதியிலுள்ள மூன்று அக்ஷரங்களும் ஆதியிலே பொருந்தச்செய்து அச்சூக்கும பஞ்சாக்ஷரத்தை உச்சரித்தார். (எ-று.)

மந்-நினைப்பவன். திர-காப்பது; எனக்கொள்க. அஞ்செழுத்தே எவற்றிற்கும் மூலமாதல் "அஞ்செழுத்தே யாகமமு மண்ணலரு மறையு, மஞ்செழுத்தே யாதிபுரா ணமனைத்து-மஞ்செழுத்தே, யானந்தத் தாண்டவமு மாறுறுக் கப்பாலா, மோனந் தவாமுத்தியும்." என்னும் உண்மைவிளக்கத்தானும், சூக்குமபஞ்சாக்கர வியல்பு "எளியவாது செய்வா ரெங்க ளீசனை, யொளியை யுன்னியுருகு மனத்தராய்த், தெளியவோதிச் சிவாயநமவெனுங், குளிகை யிட்டபொன்னாக்குவன் கூட்டையே." என்னும் திருமந்திரத்தானும் அறிக. (உஉ)



துதித்தகாலையிற் சூரியர்கோடியோ ரிடத்தி
லுதித்ததென்னநம் முருத்திரனுமையுடன் விடைமேற்
கதித்தபேரொளி யாகிமுற்றோன்றலாற் கண்ட
விதித்தன்மெய்நடுக் குற்றிடவீழ்ந்தெழுந் துரைப்பான்.

(இ - ள்.) அங்ஙனந் துதித்தபொழுது கோடி சூரியர்கள் ஓரிடத்தில் உதயஞ்செய்ததுபோலநமது பரமசிவன் உமையவளோடும் இடபவாகனத்தின்மேல் இருந்த சுயம்பிரகாசமாகிக் கண்முன்னே தரிசனங்கொடுத்து நின்றபடியால் அதைக் கண்டபிரமதேவர் தன் சரீரம் நடுக்கங்கொள்ளப் பூமியில்விழுந்து பணிந்தெழுந்து அஞ்சலியஸ்தராய் நின்று துதிப்பாராயினர். (எ-று.) (உக)

பாயநால்வகைப் பாலுளபசுக்களைப் படைத்து
மேயபாசமோ ரைந்தினால்விழைவுறத் தளைத்துத்
தூயபூமியுஞ் சுவர்க்கமுநரகமு மேய்த்துச்
சாயங்காலையிற் கட்டியபசுபதி சரணம்.

(இ - ள்.) அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசமெனப் பரவிய நால்வகைப் பகுப்பினையுடைய ஆன்மாக்களைச்சிருட்டித்து, அநாதியேதொடர்ந்த ஆணவம் கன்மம் மாயை மாயேயம் திரோதை யென்னும் ஐவகைப்பாசங்களால் இச்சைபொருந்தப்பந்தித்துப் பரிசுத்தமாகிய பூமி சுவர்க்கம் நரகமென்னும் மூவிடங்களினுள்ள வினைப்போகங்களை நுகர்வித்து முடிவில் திருவடியிற்பிணித்தருளும் பசுபதியாகியபரமசிவனே (யான் உய்தற்கு) அடைக்கலம். எ-று.

சாயங்காலை—அந்திப்பொழுது. (உச)

என்றிறைஞ்சியென் கரத்தினால்வாய்களைப் புதைத்துச்
சென்றுநான்முகன் சில்மலைபடைத்தன னடியே
னின்றதங்ஙனே நின்வரைநிறைந்ததென் றுரைத்தான்
குன்றமன்றுநம் வடிவெனவுரைத்தனன் கோமான்.

(இ - ள்.) என்று தோத்திரஞ்செய்து தனது எட்டுக்கைகளா லும் நான்குவாய்களையும் பொத்திக்கொண்டு பிரமதேவர்சமீபித்து சுவாமீ! அடியேன் சிலமலைகளைச் சிருட்டித்தேன்; இருப்பிட மில்லாமையால் அவைகள் அவ்விடத்திற்றானே நின்றன; உமது திருவருளினாலுண்டான விருத்தகிரியே பூரணமாக நிறைந்திருக்கிறது என்று விண்ணப்பஞ் செய்தார்; அதைக்கேட்டபரமசிவன் தோற்றியவியாபகரூபம் மலையன்று; நமது சொரூபமாகுமென்று திருவாய்மலர்ந்தருளினார். (எ—று.) (உ௬)

புன்மைமேயன்செய்த பொருப்புகளிற்கவே றிடங்க
ளின்மையென்செய்கே னென்றனனிரும்புள விறுக
நன்மைசெய்தன நாஞ்செய்தநன்றியைக் கொன்றாய்
கன்மியாயினை யெனச்சிவன்றிருவுளங் கனன்று.

(இ - ள்.) அற்பவறிவையுடைய அடியேன் சிருஷ்டித்த மலைகளிருப்பதற்கு வேறேயிடங்களில்லை ஆதலால் நானென்செய்கடவேனென்றுபிரமதேவர் விண்ணப்பஞ்செய்தார். அப்பொழுது பரமசிவன் முன்பு சவமிறுகும்படி நன்மையைச்செய்தோம் நாமுனக்குச்செய்த நன்றியைமறந்து நம்மைநினையாமற் கர்மியானாயென்று கட்டளையிட்டுத் திருவுளத்திற்கோபங்கொண்டு. எ-று.

ஒருகணத்தினிற் கோடிநான்முகரையுண்டாக்கி
யொருகணத்தினின் மாற்றுவோமும்பள லன்றே
வருகணத்தினின் மான்முதலுலகெலாம் படைப்போம்
வருகணத்தினின் மாற்றுவோமடிக்தவ ரனேகர்.



(இ - ள்.) ஒருகணநேரத்தில்கோடிபிரமர்களைச்சிருஷ்டித்து மறுகணத்தில் மாற்றுவோம்; இங்ஙனம்புரிதல் பிரமர்களாகிய நம்மனவேயல்ல; அடுத்தகணத்தில் விஷ்ணுமுதலிய சகலவுலகங்களையும் சிருட்டிப்போம்; அதற்கடுத்தகணத்தில் அவற்றையு மாற்றுவோம்; இவ்வாறு இறந்தவர் அளவில்லாதவர்கள். எ—று.

எனவே, பிரமவிஷ்ணுவாதிதேவர்களைப்படைத்து அவர்க்குரிய பதவியளித்தவழி அவர்தமக்குரியநெறியில் தவறுவரேல் அவரைத் தண்டித்து நிலைநிறுத்தும் தம்முடைய ஈறிலா வாற்றல் விளங்க அவர்க்கு இசைத்தருளியபடி, (உ௭)

அவமதித்தனை யாகினுமுன்னையு மழிப்போஞ்,
சிவமொழித்தொரு தெய்வமின்றென்னநீ கண்டாற்
புவனமாளுவை யல்லதுபோகுவை யென்றார்
கவனவேதனு மியாளிமுன்னானைபோற் கலங்கி.

(இ - ள்.) நீநம்மை அவமதித்தாயானால் நாம் உன்னையுமழித்துவிடுவோம்; நீசிவத்தைத்தவிர வேறு ஒரு தெய்வமில்லையென்று காண்பாயாகில் சகலலோகநாயகனா யிருப்பாய்; அவ்வாறு காணாயேல் அழிந்துபோவாயென்று பரமசிவன்திருவாய் மலர்ந்தருளினார். அது கேட்டுச்சிந்தனைகொண்டிருந்த பிரமதேவரும் யாளியினெதிர்ப்பட்ட யானையைப்போல் கலக்கமடைந்து. எ-று. (உ௮)

நச்சுமாமர மாயினுந்தன்கையா னயர்த்து
வைச்சமாமரம் வைத்தவர்கொல்வரோ மன்னா
பொச்சனேன்பிழை பொறுத்தருள்செய்கெனப்புகன்றான்
பிச்சனஞ்சலென் றருள்செய்துபிதாமகற் குரைப்பான்.

(இ - ள்.) எட்டி மரமானாலும் அன்பாகத் தங்கள்கையினால் வைத்தமரத்தை வைத்தவர்களழிப்பார்களோ அதுபோல எனது கர்த்தாவாகியநீர் தவறுதலையுடைய அடியேன் செய்த குற்றங்களைப்

பொறுத்துக்காத்தருளவேண்டு மென்றுபிரார்த்தித்தார். அதுகேட்டுப் பரமசிவனும் பிரமதேவருக்குப் பயப்படாதேயென்று அபயாஸ்தங்கொடுத்து அருளுகின்றார். (எ-று.) (௨௯)

அறுதிநம்முரு முதுகிரியென்றறி கையினாற்
சிறுவனாதலான் மாண்மகனாதலாற்சிருட்டி
பெறுதலாலுனைப் பிழையெலாம்பொறுத்தனம் பிரம
வுறுதியாகநா முரைத்திடுமுண்மையைக் கேட்டி.

(இ - ள்.) ஓ பிரமனே! முடிவாகிய நம்முடையவடிவம் விருத்தகிரியென்று நீ நிச்சயமாகத் தெரிந்தபடியினாலும் சிறியவனாதலாலும் விஷ்ணுவினுடைய குமாரனாதலாலும் சிருட்டித்தொழிலைப் பெற்றிருப்பதனாலும் உன்னுடைய பிழைகளெல்லாம் க்ஷமித்தருளினோம், இப்போது நாம் சொல்லுகின்ற உண்மைவசனத்தை உறுதியாகக் கேட்பாய். (எ-று.) (௩0)

எந்தநாளினு மீறிலாக்கொடுமுடி யஞ்சாத்தி
னைந்திலிங்கமோர் காலமுமாறிலா வைந்தின்
முந்திலிங்கநம் முதுகிரிநாவலந் தீவி
னைந்துநாற்றிசைத் தீவினுமற்றைய நந்தும்.

(இ - ள்.) எந்தக்காலத்திலும் அழிவில்லாத எல்லாக்கொடுமுடிகளிலும் பஞ்சலிங்கங்கள் ஒருகாலமுமாறாமலிருக்கும்; அந்த பஞ்சலிங்கங்களில் நமதுவிருத்தகிரி பிரதமலிங்கமாக நாவலந்தீவிற் பிரகாசிக்கும்; இதைச்சூழ்ந்த நாற்றிசைகளிலுமுள்ள நான்குதீவுகளிலும் மற்றை நான்குலிங்கங்களும் பிரகாசிக்கும். (எ-று.) (௩௧)

துற்றவானவர் தொழுமுடிமானுடர்க் கெளிதாய்
நிற்றலாகுவ நிலத்தினிற்கேற்பது வாக



மற்றெம்மால்வரை மறைந்துநின்கண்ணினுக் கருவாய்ப்
பெற்றுநிற்கநின் படைப்பிடம்பெறுகவென் றுரைத்தாய்

(இ - ள்.) நெருங்கியதேவர்கள் வணங்கும்படி ஓங்கியசிகரங்கள் மனிதர்கள் வணங்குதற் கெளியனவாய்ப் பூமிக்கு ஒத்தனவாய் நிற்கக்கடவன ; மற்றும் எமது விருத்தகிரி மறைந்து உன்னுடைய கட்புலனுக்கு அருவமாக விளங்கக்கடவது; உன்னாற் சிருட்டிக்கப்பட்டமலைகளுக்கு இடமுண்டாகக்கடவதென்று பரமசிவன் அருளினார். (எ-று.) (௩௨)

பண்டுநம்மையும் படைப்பையுமறந்துநீ படைத்து
மிண்டுசெய்தலால் வெற்பினுக்கிடமறச் செய்தோந்
திண்டிறற்கடம் படமெலாஞ் செய்தவர் காட்டுங்
கண்டயாவையு நஞ்செயலென்றுநீ காண்பாய்.

(இ - ள்.) ஓ பிரமனே! முன்னம்நம்மையும் நமதுசிருட்டியையும் மறந்துவிட்டு நீ சிருட்டித்து அகங்கரித்தபடியால் உன்னுடைய மலைகளுக்கு இடங்கிடையாதபடி செய்வித்தோம்; வலிமைபொருந்திய மிருத்துவினாலுண்டானகடமும் தந்துவினாலுண்டானபடமும் அவற்றிற்குக் காரணமாயிருந்து செய்தகுயவனையும் நாருகனையும் பற்றி நிற்கும் அதுபோலத் தோன்றுகின்ற சகலமும் நம்முடைய செயலென்று நீ காண்பாயாக. (எ-று.) (௩௩)

இந்திரன்முதற் கடவுளரியாவரு நீயுந்
தந்தையுஞ்சுடர் தம்மூடன்சகலயோ னிகளு
மைந்தும்பூதமு மப்புறத்துள்ளன வனைத்து
நந்தமேவலா னடக்குமென்றறிந்துகொள் பிரம.

(இ - ள்.) ஓ பிரமனே! தேவேந்திரன்முதலான சகலதேவர்களும் நீயும் உன்பிதாவாகிய விஷ்ணுவும் சூரியசந்திரர்களும் சகல

உயிர்களும் பஞ்சபூதங்களும் மற்றுமுள்ளனவுமாகிய எல்லாப்பொருள்களும் நம்முடையு ஏவலினால் இயங்குவனவென்றறிவாயாக. (எ-று.) (௧௪)

நினைத்துமேதினிக் குறுதிபாநின்கிரி நிறுத்திக்
கனத்தவேலைகள் காடுகணாடுதிக் கயங்க
ளனைத்துநாகமே தீவுகளமரர்தம் பதங்க
ளனைத்துமாக்கநந் தியானமேயெளிதிலுண் டாக்கும்.

(இ-ள்.) உன்னால் சிருட்டிக்கப்பட்ட மலைகளையெல்லாம்பூமிக்குறுதியாகத் தக்கபடி ஆலோசித்து நிறுத்தி விசாலமாகிய சப்தசமுத்திரங்கள்காடுகள் நாடுகள் அட்டகஜங்கள் அட்டநாகங்கள்சப்ததீவுகள்தேவர்களுடைய பதங்கள் இவைகளையெல்லாஞ் சிருட்டிக்க நமது தியானமே உனக்கு எளிதிலுண்டாக்கும். (எ-று.) (௧௫)

வேண்டுநல்வரங் கேளெனவிரிஞ்சனுங் கேட்பா
னாண்டநாயக வன்னையுநீயுமிப் படியே
யீண்டுநின்றநா ளன்பருக்கெளியையாய் நல்கும்
பூண்டகீர்த்தியும் புராணமும்பொலிவுற வென்றான்

(இ-ள்.) இப்பொழுது உனக்குவேண்டிய நன்மைபொருந்திய வரங்களைக்கேட்பாயாகவென்று பரமசிவன், திருவாய்மலர்ந்தருளப் பிரமதேவர் விண்ணப்பஞ்செய்வார்; என்னை அடிமைகொண்ட கடவுளே! என்மாதாவாகிய பெரியநாயகியாரும் தேவரீரும் இந்தத் திருவுருவமாகவே இந்தத் தலத்தில் சதாகாலமும் வீற்றிருந்தருள வேண்டும்; அன்றியும், இங்கேயே அடியவர்க்கெளியராகி அநுக்கிரகிக்கும் நிலைபெற்ற கீர்த்தியும் இத்தலபுராணமும் விளக்கமாக அருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார். (எ-று.) (௧௬)

இத்தகைத்தநீ கேட்டவையாவையுந் தந்தோம்
பத்தராகிநம் முதுகிரிபணிந்தவர் யார்க்கு



மத்தமெண்குண மட்டமாசித்திக ளியோகம்
வித்தைமுத்திக ணித்தியம்வேண்டின வளிப்போம்.

(இ-ள்.) இத்தன்மையவாகிய நீ கேட்ட வரங்களையெல்லாம் கொடுத்தோம்; அல்லாமலும் அடியார்களாகி நமது விருத்தகிரியை வணங்கினவர்கள் யாவருக்கும் பொருள்கள்நமது அஷ்டகுணங்கள் அஷ்டமாசித்திகள் அஷ்டாங்கயோகங்கள் பரம் அபரமென்னும் இருவகைஞானங்கள் பதமுத்தி பரமுத்தி என்னும் இருவகை மோக்ஷங்கள் நித்திய தத்துவமுதலான வேண்டியவரங்களைக் கொடுத்துப் புரப்போம். (எ-று.)

அஷ்டகுணங்களாவன:— தன் வயத்தனாதல் தூயவுடம்பினனாதல் இயற்கையுணர்வினனாதல் முற்றுமுணர்தல் இயல்பாகவே பாசங்களினீங்குதல் பேரருளுடைமை முடிவிலாற்றலுடைமை வரம்பிலின்ப முடைமை யென்பன. அஷ்டசித்திகளாவன:— அணிமா மகிமா கரிமா லகிமா பிராப்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்துவமென்பன. அஷ்டயோகங்களாவன:—இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதியென்பன.

பக்கவின்னவர் மன்னவர்பன்னவர் பதங்க
டிக்குநாயகர்தெய்வநாயகங்களுந் தருவோ
மக்கண்மண்ணகண் மற்றவையால்வரு நோய்க
டொக்கமுன்வினை பின்வினைவல்வினை தொலைப்போம்.

(இ-ள்.) உரியதேவபதமும் பூமியில்வாழ்கின்ற அரசர்பதமும்முனிவர் பதமும் அஷ்டதிக்குகட்குத் தலைவராதலும் தேவர்கட்குத் தலைவராதலுமாகிய பதங்களும் கொடுத்தருள்வோம்; அல்லாமலும், மனிதர்களாலும் பசாசங்களாலும், மிருகபக்ஷி முதலானவைகளாலும், வருகின்றவியாதிகளும், முற்சனனங்களி லீட்டப்

பட்டுக் கட்டுப்பட்டிருக்கும் சஞ்சிதமும் ஆகாமியமும் வலியபிரா ரத்தமுமாகிய மூவகை வினைகளும் ஒழித்துக் காத்தருள்வோம். (எ-று.) பக்கம் தருதி. (௨௮)

தீதிலாதநம் முதுகிரிசேர்ந்தவர்க் கின்ப
மேதுதானிலை யென்றிறைமறைந்தன னிறைஞ்சி
யோதிமற்றதை யோதிமன்றன்பதி யுறைந்தான்
சோதிதன்வரம் பலித்தலாற்படைக்கவுந் தொடுத்தான்

(இ - ள்.) குற்றமில்லாத நமது விருத்தகிரியை யடைந்தவர்களுக்குச் சகலவின்பங்களுமுண்டு அவர்களுக்குக் கிட்டாதது ஒன்றுமில்லையென்று கட்டளையிட்டுப் பரமசிவன்மறைந்தருளினார்; அதுகண்டு அன்னவாகனத்தையுடைய பிரமதேவர் பரமசிவனெழுந்தருளிய திசையைக்குறித்து வணங்கிக்கொண்டு, தனது சத்திய லோகத்திற்குப் போய்ச்சேர்ந்து, அவ்விருத்தகிரிநாதர் பெருமையையே அனைவர்க்கும் உபதேசித்துக்கொண்டு, அக்கடவுளருளிய வரம் சித்தித்தலால் சிருஷ்டிக்கவுந் தொடங்கினார். (எ-று.) (௨௧)

கிரிச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-ருஅ.



௳

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது,

# தலச்சருக்கம்.

வேறு.

முத்தார்முறுவ லனவரத்திபைகேள் முதுகுன்றின்மகத்
துவமுக்கண்ணார், வித்தார்விதியார்க் குரைசெய்தகதைவிழை
யார் நுழையார் மொழிவார்நினைவார், செத்தாரெனினுஞ்
செத்தாரலவே சிவனாகுவரென் றுரைசெய்துபினுஞ், சத்தா
கியவித் தலமாக்கதையைச் சதுர்மாமறைநா தசன்மாமொழி
வான்.

(இ - ள்.) முத்தைப்போற் பிரகாசிக்கின்ற பல்வரிசையையுடைய அனவரத்தியையே! விருத்தாசலத்தின்மகத்துவத்தை நீ கேட்பாயாக: மூன்றுகண்களையுடைய பரமசிவன் சிருஷ்டிக்குக் காரணகர்த்தாவாகிய பிரமதேவருக்கு அனுக்கிரகஞ்செய்த இந்தச்

சரித்திரத்தைக் கேட்டுச் சந்தோஷித்தவரும் உறுதியாகக்கேட்டவரும் மற்றையர்க்குச் சொன்னவரும் திரிகாலங்களிலுஞ் சிந்திக்கின்றவரும் இறந்தாராயினும் இறந்தவர்களல்லர்: சிவசொரூபமாவார்களென்று சொல்லி மறுபடியும், அழிவில்லாத இத்தலத்தினது பெருமைபொருந்திய சரித்திரத்தை நான்கு வேதங்களையுமுணர்ந்த நாதசன்மாவானவர் சொல்லுகின்றார். (எ-று) (க)

பாதிக்கணமொரு கணமொருநாழிகை பரவொருசாம
மொருநாள்பக்க, மாதத்துடனொரு வருடம்மொருமூ வரு
டம்முதுகிரி யகலாதுறைவார், பேதப்பிறவிக் கடலிற்றிளையா
ரிதுவேபதியா யுறைவாரிறுவார், சாதப்படுவா ரவரேசிவனுர்
தாமூவகையுறில் யாமேமொழிவோம்.

(இ-ள்.) அரைக்கணம் ஒருகணம் ஒருநாழிகை பரவுகின்ற ஒருசாமம் ஒருநாள் ஒருபட்சம் ஒருமாதம் ஒருவருஷம் மூன்றுவருஷம் விருத்தாசலத்தை விட்டுநீங்காமலிருப்பவர்கள் துன்பமாகிய பவக்கடலில் அழுந்த மாட்டார்கள்; இந்தஸ்தலமே இடமாகவசிப்பவர்களும் இதன்பெருமை கேள்வியுற்றுவந்து இறப்பவர்களும் பிறப்பவர்களுமே சிவசொரூபமாவாராகலால் வசித்தல் இறத்தல் பிறத்தலென்னும் மூவகையும் ஒருவர்க்கு வாய்க்குமாயின் அவர்பேறு எம்மால் அளவிட்டுச் சொல்ல முடியுமோ. (எ-று.) சாதம்-பிறப்பு. ()

நன்றிகள்கொன்றவர் பொன்களவெய்தினர் நறவமருந்
தினர் மறையவர்காபிகள், கொன்றவர்குருதா ரம்பரதாரங்
கூடினர்முத்தா நதியினின்மூழ்கா, வென்றியதிருமுது குன்
றரைமேவா வீதிவிழாவணி காணுவெண்ணி, நின்றியபா
யலின் மேவாவருட மொருமூன்றுறைவா ரிறையாகுவரே.



(இ-ள்.) ஒருவர்செய்தநன்றியை மறந்தவர்கள், பொன்னைத் திருடினவர்கள், மதுபானஞ்செய்தவர்கள், பிராமணரையும் பசுக்களையுங் கொன்றவர்கள், ஆசிரியருடைய மனைவியையும் அன்னியனுடைய மனைவியையுங் கூடினவர்கள் ஆகிய இவர்கள் திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து பழமலைநாதரைத்தரிசித்து வீதிகளில் அப்பெருமான் கொண்டருளும் மஹோற்சவ திருக்கோலத்தைக்கண்டு வணங்கி விபூதியாப்பிய படுக்கையிற்சயனித்து இங்ஙனமே மூன்றுவருடபரியந்தம் இந்தஸ்தலத்தில் வசிப்பார்களேயாயின் சிவசொரூபமாவார்கள். (எ-று.)

தத்தகிருச்சாம் பத்தினொடுஞ்சந் தானம தொன்பதுஞ்
சாந்தபனத்தி, னத்தொகையேழொடு சாந்திராயன மஃ
தொரு நான்குமெனுங் காயிலுமாற்றிற், சுத்தனுமாய்க்கதியெய்
துவனீங்கத் தொகைகளிலொன்றையு முயல்கிலனேனு, முத்
தனுமாகுவன் முற்செயலுடனே மூப்பிரதக்கண நித்தலு
முயல்வான்.

(இ-ள்.) தத்தகிருச்சாம் பத்தும், சந்தான விரதம் ஒன்பதும், சந்தாபனவிரதம் எழும், சாந்திராயணம் நான்கும் எத்தலத்திருந்தேனு மியற்றின் அவன் முற்கூறிய எவ்வகைப்பாதகங்களையுடையனாயினும் அவற்றினீங்கிச்சுத்தனுமாகி மோக்ஷத்தையுமடைவன்; இத்தலத்திலே அவற்றில் ஒன்றையும் முயலாதவனேயாயினும் முற்செய்யுளிற் கூறியபடி திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்தல் முதலிய நியமங்களோடுபழமலைநாதரைத்தினமும் மூன்றுபிரதக்ஷணஞ்செய்து வருவானாயின் அவன் அப்பாதகங்களினீங்குதலுமன்றிப் பாசங்களில் நீங்கினவனுமாவான். (எ-று.)

தத்தகிருச்சரமாவது மூன்றுதினம் மிகச்சுடும்வெந்நீரும் மூன்றுதினம் சுடும்பாலும் மூன்றுதினம் சுடும்நெய்யும்உண்டு மூன்று

தினம் எவ்வகையுணவுமின்றி இருப்பது; சந்தானமாவது ஓர் வகை விரதம் சாந்தபனமாவது ஒருதினம் தயிர்முதலிய வுணவுகள்சிறிது புசித்து மறுதினம் உணவின்றியனுட்டிக்கும் ஒருவிரதம். சாந்திராயணமாவது பூர்வபக்கப் பிரதமைமுதல் பதினைந்துநாளும் ஒவ்வொரு சிறங்கை சலம் ஏற்றிப்புசித்து அபரபக்கத்துப் பிரதமைமுதல் நாடோறும் ஒவ்வொரு சிறங்கைசலம்குறைத்துப் புசிப்பது. இவ்வாறே அன்னங் கொள்வதும்உண்டு.

நாய்நரிமுதலா மிருகந்தாவர நரர்சுரரூர்வன நீரூர்வன
வே,ஈமுதலாகிய பறவையிறந்தா விருமுதுகுன்றர்தம் மடியி
னில்வைத்துத், தாயவள்போலுப தேசமுரல்குவர் தாயுமை
தடவித் துகிலால்வீசுவள், போயதில்வலிதிற் சிவனிழப்பார்
புண்ணியராகார் நண்ணுவர்சூலம்.

(இ - ள்.) விருத்தாசலத்தில் நாய்நரிமுதலான மிருகங்கள் மரங்கள் மனிதர்கள் தேவர்கள் நிலத்திலூர்வன ஜலத்திலூர்வன ஈ முதலியபக்ஷிகள் பிராரத்தவினைமுடிந்து இறந்தால் அவைகளைப் பெருமைதங்கிய பழமலைநாதர் தமதுமடிமேல் வைத்துக்கொண்டு தாயைப்போலன்புகூர்ந்து வலச்செவியில் உபதேசஞ்செய்தருளுவார்; மாதாவாகிய பெரியநாயகியம்மையாரும் தனதுகையினாற் றடவி முன்றானையால்வீசிப் பிறவிக்களையைமாற்றுவார்; இத்தலம் இவ்வாறான மகிமையுடையதென்று துணிந்து அந்தஸ்தலத்திற் போய் வலிதிற் பிராணனை விட்டவர்கள் புண்ணியர்களாகமாட்டார்கள்; வைரவக்கடவுளுடைய சூலத்தினால் குத்துண்டுகிடப்பார்கள்; (எ-று.) (௬)

பாலர்கள்செய்பிழை பழையவிருத்தன் பாரானதுபோல்
பழமலைநாதனும், வாலைகிழத்தியு மித்தலுமாயிரம் வன்பிழை
களைவர்களாயினுமனதா, லேலவரும்பிழை செய்தாலோரணு
வேருளமேருவி னளவாமறையோர், மூலதபோதனர் பாவ
முயன்றான் மூடருமாகுவர் நீடுவர்சூலம்.



(இ - ள்.) சிறுவர்கள்செய்தகுற்றத்தைப் புராதனவிருத்தனானவன் மனத்திற்குரியாமற் பொறுத்துக்கொள்வன் அதுபோன்று பழமலைநாதரும் வாலையாகிய பெரியநாயகியம்மையாரும் இந்தஸ்தலத்தில் ஒருவன் தினந்தோறும் மனமறியாமல் ஆயிரம் கொடியபாவங்களைச்செய்தாலும் பொறுத்து இரக்ஷிப்பார்கள், ஆனாலும் மனமறிந்து ஓரணுமாத்திரம் அரிய குற்றஞ்செய்தாலும் அது மேருவாகவளரும்; அல்லாமலும், பிராமணர்கள் தலைமைபெற்றதவசிகள் ஒருபாதகத்தைச்செய்தால் அவர்கள் மூடராகப்பிறந்து தேககாந்தத்தில் வயிரவருடைய சூலத்திற்குத்துண்டுகிடப்பார்கள். (எ-று.)

கோடையிலாரணி யத்தியல்லாரைக் குளிர்புனலல்லது
களை தணியாதான், மூடியபாதக மன்னியதேச முற்றிடின்மு
துகிரி யல்லது தணியா, நீடியவிதனிற் றேடியபாதக நீலப்பயி
ரவர் சூலத்தல்லது, விடிலநாகினுமிகுநோய்சூலம் விடுநாணர
கெனு மரணுகுவரே.

(இ - ள்.) கோடைக்காலத்திற் வனத்திற் றிரிகின்றவர்களுடைய சோகமானது குளிர்ந்தஜலத்தினாலல்லாமல் மற்றொன்றினாலும் தணியமாட்டாது அதுபோல வேறுதலங்களிற்செய்த மகாபாதகங்கள் விருத்தாசலத்தில் நீங்கவேண்டுமேயல்லால் மற்றொருஸ்தலத்தில் நீங்கமாட்டாது; பெருமைமிகுந்த இந்தஸ்தலத்திற்செய்த பாதகங்கள் கருமைநிறம்பொருந்திய வயிரவருடைய சூலத்தினாலல்லாமல் மற்றொன்றினாலும் நீங்கமாட்டாது; நரகவருத்தத்திலும் அதிக வருத்தத்தைச்செய்கின்ற அந்தச்சூலம் விடுதலையாகுங்காலத்தில் நரகக்குழியாகிய காவலிற்கிடந்து உழல்வார்கள். (எ-று.) (௭)

சற்குருவா லுப தேசம்பெற் றுச் சம்புவின்மந்திர மஞ்சு
பதத்தையு, மற்றையிலேந் நூற் றையாயிரமே யறையினுமக்கர
லக்கங்கூறி னு, முற்றியபாதக மற்றிறையாகுவர் யொய்ம்பு
மீனவியு மம்பிகைவடிவாம், பற்பலகாலமு மெய்துவர்வேதம்
பகரினுமுற்படி யப்படிபலனே.

(இ - ள்.) விருத்தாசலத்தில் பரமாசாரியரால் பரமசிவனு
டைய மந்திரமாகிய பஞ்சாக்ஷரத்தை உபதேசம் பெற்றுக்கொண்டு
தினந்தோறும் ஐயாயிரத் தைந்நூறு தரம் ஜெபஞ்செய்தாலும்
அக்ஷரலக்ஷ ஜெபஞ்செய்தாலும் முதிர்ந்தன்னபாதகங்கள் நீங்கிச்
சிவசொரூபமாவார்கள்; அவர்கள்தோளைச்சேருகின்ற மனையவ
ளும் சத்திசொரூபமாவாள்; எக்காலமும் அந்த சொரூபத்தையே
பெற்றிருப்பார்கள்; அல்லாமலும் முற்கூறியபடி சற்குருவாலுப
தேசம்பெற்று வேதாத்தியயனஞ்செய்தாலும் அப்பதவியையடை
வார்கள். (எ-று.) (அ)

சத்துருநாசந் தருமுதுகுன் றிற் றங்கிவணங்கித் தவமு
யல்வார்களை, வித்தகமாதவர் புத்தேள்பணிகுவர் வெருவு
வருமையுஞ் சிறுதாய்பெறுதா, யத்தையர்மைத்துனி யொக்க
வுதித்தவ ரப்படிமருவுவ ளாதலினம்பா, இத்தலம்விட்டுக்
காசியிலேகினு மில்லைதவப்பலன் முத்தியுமில்லையே.

(இ - ள்.) சத்துருவாகிய் மகாபாதகங்களை நாசஞ்செய்கின்ற
பழமலையிற்பொருந்திப் பழமலைநாதரை வணங்கித் தவஞ்செய்பவர்
களை ஞானசொரூபராகிய பெரியோர்களும் தேவர்களும் தெண்ட
னிட்டுப் பயந்து நிற்பார்கள்; உமையவளுஞ் சிறியதாயார் பெற்ற
தாயார் அத்தையார் மைத்துனி சகோதரிகளைப்போலவந்துமருவி
யிருப்பாள்; ஆகையால் வசித்தற்குரிமைபெற்ற இத்தலத்தில் நம்
பிக்கையில்லாமல் இதைவிடுத்துக் காசித்தலத்திற்குச் சென்றாலும்
தபோபலமுமில்லை, மோக்ஷமுமில்லை. (எ-று.) (க)



கூனர்களூமர்கள் செவிடர்கண்முடவோர் குருடர்கள்
பற்பலபிணியினரங்கத், தூனர்கள்முத்தா நதியினின்மூழ்கி
யுமையுடனிறைவனை வந்தித்தழகார், மேனியரானவ ரளவி
லர்நதிகளின் வெண்மணல்புவிமண ரூரகைமழையிற், ரூன
மர்தாரையை யளவிடின்முதுகிரி தன்னில்வரம்பெற் ரூரை
யளக்கும்.

(இ - ள். கூனர்கள் ஊமர்கள் செவிடர்கள் முடவர்கள் குரு
டர்கள் பலவியாதிகளையுடையவர்கள் அவயவக்குறைவு வுள்ளவர்க
ளாயிருந்து திருமணிமுத்தனதியில் ஸ்நானஞ்செய்து பெரியநாயகி
யாரையும் பழமலைநாதரையும்வழிபட்டுநின்று இவ்வசரீரத்தைப்
பெற்றவர்களளவில்லாதவர்கள்; ஆறுகளிலுள்ள வெள்ளிய மணல்
களையும் பூமியிலுள்ளமணல்களையும் ஆகாயத்திலுள்ளநக்ஷத்திரங்
களையும் மழைத்தாரைகளையும் இவ்வளவென் றளவிட்டுச்சொன்
னால் அவன் விருத்தாசலத்தில் வந்து வரம்பெற்றவர்களையும் அள
விட்டுச்சொல்ல வல்லவனாவான். (எ-று.) (க0)

அத்திரிவசிட்டன்மெய் வித்தகபோதா யனன்சமதக்
கினி கும்பன்காசிபன், வைத்தசதக்கின னு ரோமசன்கண் ணு
வன் வர்ச்சனுமிச்சைவ ரம்பலபெற்றூர், சத்தருருத்திரர் நற்
கிரகம்பிர சாபதிமாறிசைப் பாலர்வசுக்கண், மெத்துசுடர்த்
திரு வாணிபுலோமசை மெய்த்தவமுற்றனர் தற்பதமுற்றூர்.

(இ - ள்.) அத்திரிமுனிவர், வசிஷ்டமுனிவர், மெய்ஞ்ஞான
சொரூபராகிய போதாயனமுனிவர், ஜமதக்கினிமுனிவர், கும்ப
முனிவர், காசிபமுனிவர், சூரியசதக்கினமுனிவர், உரோமசமுனி
வர், கண்ணுவமுனிவர், வர்ச்சமுனிவர்முதலிய முனிவர்களும் இந்த

10

ஸ்தலத்திற் றவஞ்செய்து அவரவர்கள்விரும்பிய பலவரங்களையும் பெற்றார்கள்; அல்லாமலும், பலசத்திகளையுடையராகிய உருத்திரர், நவக்கிரகம், பிரமதேவர், விஷ்ணுமூர்த்தி, அஷ்டதிக்குப்பாலகர்கள், அஷ்டவசுக்கள், மிக்கஅழகையுடையஇலக்குமி, சரஸ்வதி, இந்திராணி இவர்களெல்லாரும் இந்தஸ்தலத்தில் உண்மையான தவத்தைச்செய்து தங்கள் தங்கட்குரிய பதவிகளைப் பெற்றார்கள். (எ-று.) (கக)

தானந்தருமந் தவமேயாகந் தத்துவமறியார் முத்தியை
விழைவி, வினைகளையுந் திருமுதுகுன்றே யிடமாயுறைவா ர
டைவார்கதியில்; ஞானந்தவமுள ஞானிகள்சிலநா ளண்ணி
னுமடைவர்க ளெண்ணினபதமே, யானந்தம்பெறு முன்னர்
விமானந் தமருளசெங்கணு முலவுவரவரே.

(இ-ள்.) தானம், தருமம், தவம், யாகம், தத்துவம் என்கின்ற இவைகளிலொன்றுந் தெரியாதவர்களானாலும் மோக்ஷமடையவிருப்பங்கொண்டவர் சகலபாவங்களையும்பரிகரிக்கின்ற அழகிய விருத்தாசலமே ஸ்தானமாக வசித்திருப்பார்களாகில் மோக்ஷத்தையடைவார்கள்; ஞானமுந் தவமும்நிறைந்த ஞானிகள் சிறிதுகாலம் வசித்திருந்தாலும் அவர்கள்விரும்பிய நித்தியானந்தபதத்தைப் பெறுவார்கள்; அன்றியும், அதனையடைதற்கு முன்னம் தெய்வவிமானத்திலேறித் தெய்வலோகமுழுதுஞ் சஞ்சரிப்பவராவார்கள். (எ-று.) (கஉ)

ஓரொருகான்முது குன்றையுரைத்தவ ருயர்மதில்சிகரா
திகள்புரிவித்தவர், பேர்செவியுற்றவர் போதகர்தீவினை பிரகா
சத்திருள் போலவகன்றிடு, மூரிதுதன்னிலி ருந்துவிமானத்
துயர்பதமேறினர் தங்களைவழியிற், சூரியர்பாலர் சுவர்க்க
ரெதிர்ந்தே தொழுதரனர்ச்சனை போன்முயல்வாரே.



(இ-ள்.) ஒருதரம் வாக்கினால் விருத்தகிரியென்று துதிசெய்தவர்களும் உயர்ந்தமதில் கோபுர முதலானவைகளைக் கட்டுவித்தவர்களும், அத்தலத்திற்குரிய திருநாமங்களைக் கேட்டவர்களும், அவற்றைப் போதித்தவர்களுமாகிய இவர்களுடையபாவங்கள் சூரியனைக்கண்ட இருணீங்குவதுபோல நீங்கிப்போம்; அல்லாமலும், இந்தஸ்தலத்திலிருந்து மரித்து விமானத்திலேறி உயர்ந்த சிவபதவிக்குச் செல்பவர்களை வழியிற்கண்ட பன்னிரண்டுசூரியர்களும், அஷ்டதிக்குப்பாலகர்களும், தேவர்களும் எதிர்கொண்டு வணங்கிப் பரமசிவனை அருச்சனை செய்வதுபோல அருச்சித்து வழிபடுவார்கள். (எ-று.) (கங)

மூன்றுலகத்துங் கடவுளர்தம்மினு முதுகிரிநா தர்க்கிணை
யிலையதுபோ, லென்றுமிருக்க கிரித்தொகு தலமு மிணையிலை
யின்றல வெக்காலத்து, மூன்றிய வன்னியி னோரிலைநிறையு
முண்டியையாவர்க் குதவினு மவரே, தோன்றுவர்சிவபுரி சிவ
னுக்கேறுவ துடியனவிபவர் சிவனுருவமே.

(இ-ள்.) திரிலோகங்களிலுள்ள தெய்வங்களிலும் பழமலைநாதருக்குச்சமானமான தெய்வமில்லை, அதுபோல, இப்போதுமாத்திரமல்ல எப்போதினும் உயர்ந்தவிருத்தாசலத்திற்குச்சமானமான ஒரு ஸ்தலமுமில்லை; இந்தஸ்தலத்தில் திரமான வன்னிமரத்தின் ஓரிலையிலடங்கின வுண்டியை எவர்களுக்குக்கொடுத்தாலும் கொடுத்தவர்கள் சிவலோகத்தில் விளங்குவார்கள், அல்லாமலும், பரமசிவனுக்கேற்ற திரவியங்களை ஒருபலமாயினுங் கொடுத்தவர்கள் சிவசொருபமாவார்கள். (எ-று) (கச)

வன்னியின் ஓரிலைநிறையும் உண்டியென்பதும் துடியனவென்பதும் "தினைத்துணை நன்றிசெயினும்" என்பதுபோலச் சிறிதாயினும் அத்தலத்தில் உபகாரம் செய்யவேண்டுமென்னும் பொருள்படுகின்றது.


திருமுதுகுன்றின் மடமுமியற்றிச் சிவனடியாருக் குதவு
வராயிற், கருதருமெல்லையி லோர்பொழுதிற்கோர் கற்பஞ்சிவ
லோ கத்தினில்வாழ்வார், தெருவுகளுஞ்செய் தந்தணர்கட்
குச் செழுமனைகட்டிப் புவியுமளித்தால், வருபலன்முற்படி
யப்படியாகு மணிமுத்தாநதி வண்மையுரைப்பாம்.

(இ - ள்.) அழகியவிருத்தாசலத்தில் மடாலயங்கட்டிச் சிவனடியார்கள் வசிக்கும்படி கொடுப்பார்களேயானால் அவர்கள் வசிக்கின்ற காலவளவையில் ஒவ்வொருபொழுதிற்கு ஒவ்வொரு கற்பகாலபரியந்தம் கயிலாயத்தில் வாழ்வார்கள்; தெருக்களும் வகுத்து பிராமணர்களுக்கு வளம்பொருந்திய வீடுகட்டியளித்துப் பூமியுங் கொடுத்தால் கொடுத்தவர்கள் முற்கூறிய பலனெதுவோ அதனையடைவார்கள்; இப்பால் திருமணிமுத்த நதியினுடைய வளப்பத்தைச் சொல்லுவாம். (எ-று.) (கசு)

மணிமுத்தநதியென்பது மணிமுத்தாநதியென வழங்குகின்றது.

தலச்சருக்கமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - எஅ.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது,

# தீர்த்தச் சருக்கம்.

வேறு.

குருமாமணிபோல்விளங்குமுது குன்றர்கோயிற்குணபாலிற்
றிருமால்பிரமன்முனிவர்குழாஞ் சித்தர்யோகர்முன்னுளி
லருமாதவத்தின்மிகமுடுகி யாறுதாரவழிதிறந்து
பெருமா னுண்மைதியானிக்கப் போனந்தம்பெருகியதால்.

(இ - ள்.) நிறம்பொருந்திய மாணிக்கம்போலவிளங்குகின்ற பழமலைநாதருடைய சந்நிதிக்குக் கீழ்ப்புறத்தில் விஷ்ணுமூர்த்தி, பிரமதேவர், முனிவர்கூட்டங்கள், சித்தர்கள், யோகிகள் இவர்களனைவரும் கூடியிருந்து, முற்காலத்தில் அரிதாகிய மகாதவத்தில் மிகவும் அதிகரித்து மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி ஆக்கினையென்னும் ஆறாதாரங்களின் வழிக

ளைத்திறந்து, பரமசிவனுடைய உண்மையானஞானசொரூபத்தைத் தியானஞ்செய்தபோது, அந்தச்சொரூபதியானத்தில், பிரமானந்தப் பெருக்குண்டாயிற்று. (எ-று.) (௬)

பேரானந்தப்பெருங்கடலைப் பெருமான்கரத்தானதியாக்கிச்
சீரார்முத்தநதியென்று திகழ்ந்தநாமஞ்சிவனருள
வேரார்சத்தித்திருவுருவா யிறைவர்க்கிதமாயெல்லார்க்கு
நீராய்விளங்கித்தீவினைக்கு நெருப்பாய்நமக்குக்குளிராமால்.

(இ - ள்.) பிரமானந்தமாகிய பெரியசமுத்திரத்தைப் பரமசிவன் தம்முடைய திருக்கரத்தாலமைத்து நதியாகச்செய்து சிறப்புள்ள திருமணிமுத்த நதியென்று பிரகாசம்பொருந்திய திருப்பெயரும் கொடுத்தருள; அந்தநதியானது அழகுபெற்ற சிற்சத்தியினது சொரூபமாகிப் பரமசிவனுக்கு இனிமையுடையதாகி மற்றெல்லாருக்கும் ஜலரூபமாகத்தோன்றிப் பாதகங்களுக்கு நெருப்பாகி நம்போல்வார்க்கு அதிசீதளமாகி விளங்கும். (எ-று.) (௭)

மணிமுத்தாற்றிற்காற்றணைந்த மனிதர்பறவைமிருகங்க
டணிவில்கிருமிகீடங்க டருப்புற்கொடிகள்சராசரங்க
ளணியதேவருலகாளு மாற்றிற்படிந்தோர்தமக்கன்புந் [ல்.
துணிவுந்தவமும்பேரறிவுந் தொண்டுந்தொழும்புமுளவாமா

(இ - ள்.) திருமணிமுத்தாநதியிற் படிந்துவருகின்ற காற்றால் தீண்டப்பெற்ற மனிதர்கள், பறவைகள், மிருகங்கள், அளவிறந்த புழுக்கள், வண்டுகள், மரங்கள், புல்லுகள், கொடிகள்முதலிய சராசரவுயிர்களனைத்தும் அழகியதேவருலகத்தில் அரசசெய்யும்; அந்த நதியினிடத்தில்சென்று ஸ்நானஞ்செய்தவர்களுக்கு அன்பும், தெளிவும், தவமும், பரஞானமும், சிவபெருமானுக்குரிய அடிமைத்திறமும், அவரேவல்வழிநிற்கும் அடிமைகளும் உண்டாகும். (எ-று.)



அருளும்பொருளுங்கைகூடு மலமகளுங்கலையு
மிருளுமடியுமிடியும்போ மீறில்செல்வந்தழைத்தோங்குந்
தெருளுந்திருவுங்குடிகொள்ளுஞ் சித்திமுத்தியுண்டாகு
மருளும்பேயுநோயும்போ மணிமுத்தாற்றின் மூழ்கினர்க்கே.

(இ - ள்.) திருமணிமுத்தாநதியினில் ஸ்நானஞ்செய்தவர்களுக்குச் சிவகடாட்சமும் சிவஞானச்செல்வமும் கைப்பலனுகிவரும்; சகலவருத்தமுநீங்கும்; சஞ்சலமொழிந்துபோம்; அஞ்ஞானமும் சோம்பலும் தரித்திரமும் விட்டுப்போம்; அளவில்லாத ஐசுவரியங்கள் மென்மேலும் அதிகரிக்கும்; தெளிவும் இலக்குமிவாசமும் எப்போதும் நீங்காமலிருக்கும்; அஷ்டசித்தியும்மோட்சமும் உண்டாகும்; மயக்கமும் பசாசம் வியாதியும் ஒழிந்துவிடும். (எ-று.) (௮)

சூதருரைத்தாரெங்கிருந்துஞ் சுத்தவிருத்தகிரிக்கேகல்
காதலிருக்குமுத்தநதி கடவுள்கரத்தாலமைத்துளதாற்
சீதநதியின்மூழ்குங்காற் செல்வமுண்டாமகவுண்டா
மீதும்பிணிபோம்புவியிழந்தோர்மீண்டுபுவியாள்வாரென்றே.

(இ - ள்.) சூதமுனிவரானவர் எாமெங்கிருந்தாலும் நமது அபேக்ஷைபரிசுத்தமுள்ள விருத்தாசலத்தினிடத்தில் நீங்காதிருக்கும்; அப்படிப்பட்ட விருத்தாசலத்தின் கண்ணுள்ள திருமணிமுத்தநதியானது பரமசிவன் தமது திருக்கரங்களால் அமைக்கப்பட்டிருக்கின்றது; ஆதலால்குளிர்ச்சிபொருந்திய அந்தநதியில்ஸ்நானஞ் செய்பவர்களுக்குச் செல்வமுண்டாகும்; சந்தான முண்டாகும்; மேலிடுகின்ற வியாதிகணீங்கும், பூமியையிழந்தவர்கள் மறுபடியும் பூமியைப்பெற்று அரசாக்ஷி செய்வார்கள் என்று அருளிச்செய்திருக்கின்றார். (எ-று.) (௯)

ஒருக்கான்முத்தாநதிமூழ்கி லோராயிரங்கோதானபல [வர்
னருக்காதுண்டாமவர்பிறரை நினைக்கிலவர்போய்க்கதிசேர்

தருக்காய்மூழ்கியோரிரவு தரிக்கிற்சிவலோகஞ்சார்வர் [டோ.
செருக்காற்பன்னாண்மூழ்கிடுவார் சேருங்கதிக்கோரளவுண்

(இ - ள்.) திருமணிமுத்தாநதியில் ஒருதரம் ஸ்நானம் பண்ணினால் அவர்களுக்கு ஆயிரங்கோதானஞ் செய்தபலன் குறையாமலுண்டாகும்; அவர்கள் முழுகும்போது தங்களுக் கிஷ்டமானவர்களை நினைத்தால் அவர்களும் மோட்சத்தையடைவார்கள்; மனங்களித்து ஸ்நானஞ்செய்து அந்தத்தலத்தில் ஓரிரவு தங்கியிருந்தால் அவர்கள் சிவலோகத்தைப் பெறுவார்களானால் சந்தோஷமாகப் பலகாலமும் ஸ்நானஞ்செய்து அவ்விடத்தில் வசிக்கின்றவர்கள் பெறுகின்ற பேறுக்கு ஓரளவுண்டோ இல்லை (எ-று.) (சு)

முத்தாநதியைத்தரிசிக்க முயன்றுநிற்கப்பரிசிக்கப்
பத்தால்வசிக்கநீராடப் பானுமுன்னிருட்போலக் [நால்
கொத்தார்பாவக்குழுக்களெலாங் குறைந்து குறைந்துபற்றறு
வித்தாய்மூழ்கிச்சிவபூசை விளைப்பார்பெருமையளப்பாரார்.

(இ - ள்.) திருமணிமுத்தாநதியைத் தரிசனஞ் செய்தாலும், தீர்த்தப்பிரவாகத்தைப் பார்ப்போம் அல்லது ஸ்நானஞ்செய்வோம் வாருங்களென்று ஒருவருடன்சொல்லி முயன்றுநின்றாலும், கையினாற்றீண்டிப் புரோக்ஷித்துக்கொண்டாலும், பக்தியினால் அந்தநதிதீரத்தில் வாசஞ்செய்தாலும், ஸ்நானஞ்செய்தாலும், அதற்குமுன் அவர்கள்செய்த கொத்தாய்நிறைந்த பாவத்திரளெல்லாம் சூரியனைக்கண்ட இருள்கெடுவதுபோல் குறைந்து குறைந்து வேரோடுக்கெட்டுப்போகும்; (தரிசித்தலாதியவற்றால் இவ்வளவு பிரயோசனம் விளையுமாயின் அந்நதியை எவற்றிற்கும்) மூலமெனக்கொண்டு அதில் ஸ்நானம்பண்ணிச் சிவபூசைசெய்பவர்களுடைய பெருமையை இவ்வளவென்று மட்டிட்டுச்சொல்லவல்லவர் யாவர்? ஒருவராலும் முடியாது (எ-று. (எ)



கதிரின்மதியங்கலந்திடுநாள் கதிர்ப்பூரணையாடிப்பிறப்பு
மதிசேர்தைமாதப்பிறப்பு மற்றைமாதப்பிறப்புகளில்
விதியாமுடுக்கள்விதிபாதம் விறல்வைகாசிப்பூரணையி
லதிகமாசிமாதத்தி லந்தமகத்தினிந்நாளில்.

(இ - ள்.) சூரியனோடு சந்திரன்கலக்கின்ற அமாவாசை பிரகாசம் பொருந்திய பௌர்ணிமை ஆடிமாதப்பிறப்பாகிய தக்ஷிணாயனம் யாவராலும் மதிக்கப்படுதலையுடைய தைமாதப்பிறப்பாகிய உத்தராயணம் சங்கிராந்திமுதலிய மற்றைமாதப்பிறப்புகள்விசேஷமாக விதிக்கப்பட்ட திருவாதிரைமுதலிய நக்ஷத்திரங்கள் மகாவியதிபாதம் பெருமைபொருந்திய வைசாகபௌர்ணிமை சிறப்புப் பொருந்திய மாசிமாதம் மாசிமகம் ஆகிய இப்படிப்பட்ட புண்ணிய காலங்களில். (எ-று.) (அ)

முயன்றுமணிமுத்தாநதியின் மூழ்கித்தானமேதேனு
மியன்றதளித்துச்சிவன்பாத மிறைஞ்சிமூன்றுவலம்வந்து
பயின்றுபூசைசெய்வார்தம் பலத்தைநூறுவருடத்தில்
வியந்துமுடியாதவரிருந்து விளங்குந்தேசஞ்சிவலோகம்.

(இ - ள்) திருமணிமுத்தாநதியில் முயற்சித்துஸ்நானஞ்செய்து ஏதாகிலுமியன்றமாத்திரம் தானங்கொடுத்துப் பரமசிவனுடைய திருவடிகளைவணங்கி அவரது ஆலயத்தை மூன்றுபிரதக்ஷிணஞ் செய்து அவரை விதிப்படிபூசைசெய்பவர்களுடைய பலனை நூறுவருஷபரியந்தம் சொன்னாலும் சொல்லிமுடியாது; அப்படிப்பட்ட பெரியோர்கள் வசிக்கின்ற ஸ்தலமே சிவலோகமாகும். (எ-று.) ( )

கங்கையமுனைபிரயாகை கலைகாவிரிசந்திரபாகை
தங்குகோதாவரிநருமதையேசரயுகோமதியே
நங்கண்டகிமந்தாகினியே நவுலஞ்சனைமந்தகைசோணை
பொங்குரேவைசிந்துசங்கம் பொலியுங்கயைகௌசிகைகுமரி.

(இ - ள்) கங்கை, யமுனை, பிரயாகை, சரஸ்வதி, காவிரி, சந்திரபாகை, கோதாவரி, நருமதை, சரயு, கோமதி, கமதகண்டகி, மந்தாகினி, புகழ்பெற்ற அஞ்சனை, மந்தகை, சோணை, பெருகின்ற ரேவை, சிந்து, சங்கம், விளங்குங்கயை கௌசிகை, கன்னியாகுமரி என்றுசொல்லப்பட்ட பலாதிதீர்த்தங்களிலும். (எ - று.) (௧௦)

பூமிசுவர்க்கம்பாதலத்திற் புகலுமற்றைத்தீர்த்தங்கள்
காமர்நதியுங்கருங்கடலுங் கலத்தன்முதலாந்தீர்த்தங்க
டாமங்கேபோய்மூழ்குபலன் றன்னிற்கோடி பலனதிகம்
வாமமணிமுத்தாநதியை வணங்கியொருநாண்மூழ்கினர்க்கே.

(இ - ள்.) பூமி சுவர்க்கம் பாதாளமென்றுசொல்லப்பட்டமூவுலகிலும் உள்ளனவாகக்கூறும் மற்றைத்தீர்த்தங்களிலும், அழகிய நதியும் கரியகடலும் சங்கமமாகுகின்ற தீர்த்தமுதலியவைகளிலும், தாமடைந்து அவற்றில் மூழ்குகின்ற பலனைப்பார்க்கிலும் அழகு பொருந்திய திருமணிமுத்தாநதியைப்பணிந்து அதில் ஒருநாள் ஸ்நானஞ்செய்தவர்களுக்குக் கோடிபங்கு அதிகமானபலனுண்டாகும். (எ - று.) (௧௧)

எடுத்தமுத்தாநதிக்கரையில் யாகம்பண்ணிற்சதாசிவனு
மடுத்தமாசிமகந்தன்னி லந்தநீரைக்குடத்தெடுத்து
நடக்கிலடிக்கோர்பரிமேத கல்லயாகபலனுண்டாம் [மே
தொடுத்ததலங்களெங்கிருந்துந் துதிக்கினினைக்கிற்பிறப்பறு

(இ - ள்.) உயர்த்திக்கூறிய திருமணிமுத்தாநதிக்கரையிலிருந்து யாகஞ்செய்தால் அவர்கள் சதாசிவ சொரூபமாவார்கள்; மாசிமாதத்தில்வருகின்ற மகநக்ஷத்திரத்தில் அந்தநதியிற்சென்று ஸ்நானஞ்செய்துசுவாமிக்கு அபிஷேகஞ்செய்தற்கு அந்தஜலத்தைக்கும்பத்திலேந்திக்கொண்டு நடந்தால் அடி ஒன்றுக்கு நன்மைபொருந்திய அசுவமேதயாகபலன் உண்டாகும்; அல்லாமலும் எந்தத்தலங்களில் வசித்திருந்தபோதிலும், அத்தீர்த்தத்தை வாக்கினால்தோத்திரஞ்செய்தாலும் மனத்தினால்நினைத்தாலும்பிறவிநீங்கும். (எ - று.)



கும்பமுனிவனருள்பெற்றுக் குலவுஞ்சுவேதமுனிபொன்பா
னம்புபருவமாசிமக ஞாயிறட்டமியாதிரைநாட்
டம்பமுத்தாநதிமூழ்கித் தம்பிரானுக்காட்டியநீர்
விம்பதலத்திற்சுவேதநதி வெள்ளாறெனப்பேர்பெற்றதுவே.

(இ - ள்.) அகத்திய முனிவரிடத்தில் உபதேசம்பெற்று விளங்குஞ்சுவேதமுனிவர் எவரும் விரும்பத்தக்க பருவம் மாசிமகம் ஆதித்தவாரம் அஷ்டமிதிதி திருவாதிரைநக்ஷத்திரம் இப்படிப்பட்டதினங்களில் நிலைபெற்ற திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து, பின்பு பரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்த திருமஞ்சனமானது வட்டமாகிய இப்பூமியிற்பெருகி அதுதேவபாஷையில் சுவேதநதியென்றும் தமிழ்ப்பாஷையில் வெள்ளாறென்றும் பெயர்பெற்றது. (எ - று.)

அத்தன்முதுகுன்றமர்ந்தபிரா னரியதலத்தில்வந்தெய்தி
முத்தன்கும்பமுனிவன்றன் முன்னேநின்றுகயரோகன், சொ
த்தைபெயிற்றன் குறைந்தகையன் குட்ட நோயன் முடை
யுடம்பன், மத்தமுயலகன்னடுத்தோன் வருந்தியறுவர்மொழி
கின்றார்.

(இ - ள்.) எமதுபிதாவாகிய பழமலைநாதருடைய அரிதாகிய விருத்தாசலத்தில்வந்து மோக்ஷதிபராகிய அகத்தியமுனிவரது முன்னே நின்று க்ஷயரோகத்தையுடையவன் சொத்தைப்பற்களையுடையவன்குறைந்த கைகளையுடையவன் குஷ்டவியாதியையுடையவன் நாற்றம்பொருந்திய சரீரத்தையுடையவன் உன்மத்தமாகியவன் முயலகனென்னும் வலியையுடையவன் ஆகிய இவர்கள் அறுவரும் வருத்தத்தையடைந்து அவரைப்பார்த்து விண்ணப்பஞ்செய்கின்றார்கள். (எ - று.) (௧௨)

பிணியானின் றுதவிக்கின்றோம் பெரியகும்பக்குறுமுனியே
பணியாவடியோமுன்னென்ன பாவஞ்செய்தோமெனப்பகர்ந்
தணியாப்பாவமுன்செய்து நரகினெடுங்காலங்கிடந்தீ [தார்
ரணியானரகசேடங்க ளயில்வான்வந்தீரெனவுரைத்து.

(இ - ள்.) பெரிதாகிய கலசத்தினிடமாகவந்த அகத்திய முனிவரே! நாங்களறுவரும் வியாதியினால் இப்பொழுது தாபமடைந்திருக்கின்றோம் அடியேங்கள் முற்செனனத்தில் என்னபாதகஞ் செய்தோமென்று வணங்கி விண்ணப்பஞ்செய்தார்கள்; (அப்பொழுது அகத்தியமுனிவர்கிருபாகடாக்ஷம்வைத்துநீங்கள்) முற்செனனத்தில் நீண்டபாதகங்களைச்செய்து அதனால் நரகத்தில் நெடுங்காலமிருந்து வருந்தினீர்கள்; இப்போது அந்நாரகசேடங்களை வரிசையாக அநுபவிக்கும்படி பிறவியெடுத்தீர்களென்றுசொல்லி. ()

பணியாப் பகர்ந்தாரெனக்கூட்டுக; அணியாப்பாவம்,—அண்மையாகாப்பாவம்; எனவே நீண்டபாவம் என்பது பெற்றாம். அணி-வரிசை. (கரு)

மருவுங்கயநோய்மறைநோயானை வதைத்துக்குருதேவியைத்தீண்டி, வெருவுங்குட்டமுடைபிறனில் விழைவாற்றோளாற்சொத்தைப்பற், பருகுசுரையாற்குறைந்தகரம் பயிலுமுபலகன்பொன்னைத், திருடியுமக்குவந்ததெனத் தீருவழியுமுனியுரைப்பான்.

(இ - ள்.) பிராமணனைக்கொன்றபடியால் துன்பம்பொருந்தியக்ஷயரோகமும் குருபத்தினியைத்தீண்டினபடியால் யாவருமஞ்சுகின்றகுஷ்டவியாதியும் பரதாரத்தையிச்சித்தபடியால் நாற்றம்பொருந்திய சரீரமும் கோட்சொன்னபடியால் சொத்தைப்பற்களும் மதுபானஞ்செய்தபடியால் அழுகியவிரலையுடைய கைகளும்



பொன்னைக்களவு செய்தபடியால் முயலகனென்னும் வியாதியும் உங்களுக்குவந்ததென்றுசொல்லி அந்த வியாதிகள் நிவர்த்தியாகுமார்க்கமும் சொல்லுகிறார் அகத்தியமுனிவர். (எ - று.) (கசு)

மாசிமாதநாண்முப்பான் மணிமுத்தாறுதனின்மூழ்கி
யீசன்முதுகுன்றெம்மானை யிறைஞ்சிற்பிணிகளிறுமென்று
ஞசினவருமுத்தாற்றி லையாறளவுநீராடிப்
பாசமறுக்குஞ்சிவன்பாதம்பணிந்துமுனியைப்பணிந்தார்கள்

(இ - ள்.) நீங்களறுவரும்போய்த் திருமணிமுத்தாநதியில் மாசிமாதம் முப்பதுநாளும் ஸ்நானப்பண்ணிப் பரமசிவனாகிய எமது பழமலைநாயகரை வணங்கினால் உங்கள்வியாதிகள் நீங்குமென்று கட்டளையிட்டார்; அதைக்கேட்ட குற்றமுடைய அவ்வறுவர்களும் போய்த் திருமணிமுத்தாநதியில் மாசிமாதம் முப்பதுநாள்வரைக்கும் ஸ்நாநம்பண்ணி பாவவிமோசனஞ்செய்கின்ற பழமலைநாதருடைய திருவடிகளை வணங்கிப் பின்பு அகத்திய முனிவரிடத்திற்குவந்து வணங்கினின்றார்கள். (எ-று.) (கஎ)

மேகமகன்றவிளங்கதிர்போன் மெய்பெற்றவரைமுனிநோக்கி
மோகநோய்முன்வந்ததுவு முத்தாநதியாற்போனதுவு
நாகமிருந்தார்நயந்ததுவு நாட்டிற்காட்டிப்போமென்று
ஞாகம்விளங்கின்றவரு மவனிமுழுதுங்காட்டினரால்.

(இ - ள்) மேகத்தில் மறைபட்டிருந்து அதினின்று நீங்கிய இளஞ்சூரியனைப்போலப் பிரகாசிக்கின்ற சரீரம்பெற்ற அவ்வறுவர்களையும் அகத்தியமுனிவர்பார்த்து நீங்கள்முற்செனனத்திற்செய்த பாதகங்களாலடைந்திருந்த வியாதிகளும் திருமணிமுத்தாநதியில் ஸ்நானம் பண்ணியதால் அந்தவியாதிகளெல்லாம் நிவர்த்தியானதும் பழமலைநாதர் உங்களுக்குக் கிருபைசெய்ததும் நாட்டிலுள்ளவர்களெல்லாம் அறிந்துய்யும்படி காண்பித்துச் சொல்லிச் செல்லுங்க

னென்று அகத்தியமுனிவர் சொல்லியருளினார்; முனிவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சரீர வியாதிநீங்கி ஒளியைப் பெற்ற அந்த அறுவர்களும் தேசங்களிலெல்லாம் அறிவித்துக்கொண்டு போனார்கள். (எ-று.) (கஅ)

பயனால்விளங்குஞ்சிலோச்சயமாம்பகர்பட்டணத்திலொ
ருவணிக, னயமாஞ்சுகேசனவன்றனக்கு நல்லமைந்தராறுவரு
ளார், வியனாங்கல்விகேள்வியினால் விற்கக்கொள்ளகிறுத்துரை
க்க, வயமாயுள்ளாரேழைக்கும்வலியோர்தமக்குநிறைகோலார்

(இ - ள்.) சர்வசித்தியினாலும் விளங்குகின்றசிலோச்சயமென்று சொல்லப்பட்ட பட்டணத்தில் நீதியையுடைய சுகேசனென்னும் ஒருசெட்டியிருந்தான்; அவனுக்கு நன்மைமிகுந்த ஆறுபிள்ளைகளிருந்தார்கள்; அவர்கள்பெருமைபொருந்திய கல்விகேள்விகளினால் பொன் முதலியவற்றை விற்கவும் கொள்ளவும் நிறுக்கவும் உரைக்கவும் வல்லபத்தையுடையவர்கள்; எளியவர்க்கும் வலியவர்களுக்கும் துலாக்கோலை யொத்திருப்பார்கள். (எ-று.) (கக)

ஆறுபேருநீதியினா லருத்தர்தேடியளகேசன், வீறுஞ்
செல்வம்போற்பொலிந்து மேவுநாளின்முதுகுன்றிற், பேறு
பெற்றார்தமைக்கேட்டுப் பெருமான்றலத்தில் வந்தெய்தித்,
தேறுமணிமுத்தாநதியிற் றீர்த்தமாடிநீறணிந்து.

(இ - ள்.) அந்தவர்த்தகர்களாறுபேரும், நீதிமார்க்கத்தினால் பொருள்சம்பாதித்துக் குபேரனது மகத்தான சம்பத்தைப்போற் பொலிவடைந்து வாழுகின்றகாலத்தில், பழமலையிற்சென்றுபேறு பெற்றவர்களைக் கேள்விப்பட்டுப் பரமசிவனுடையஸ்தலமாகிய அவ் விருத்தாசலத்திற்குவந்து தெளிவுபொருந்திய நீரையுடைய திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து விபூதியையணிந்துகொண்டு (எ-று.) (உ0)



வணிகர்நியமமுடித்தேறி மணியும்பொன்னும்வகைத்து
கிலும், பணியுமனையும்விளைநிலமும் பசுவுமறைசோர் தமக்கு
தவி, யணியுவுறவாமுதுகுன்றி லருமைப்பெருமான்பதம்பணி
ந்து, நணியமுத்தாநதிக்கரையி னல்லமரத்தின்கீழிருந்தார்.

(இ - ள்.) செட்டிப்பிள்ளைகள் ஆறுபேரும் தங்களுடைய நித்தியநியமங்களைமுடித்துக்கொண்டு கரைமேல்வந்து, பிராமணர்களுக்குச் சுவர்ணமும் வகைவகையாகிய வஸ்திரங்களும் ஆபரணங்களும் வீடுகளும் விளைநிலங்களும் பசுக்களுந்தானங்கொடுத்து, நெருங்கிய உறவாகிவிளங்குகின்ற பழமலையின்கண் ணெழுந்தருளிய அருமையாகிய பரமசிவனுடைய திருவடிகளைவணங்கித் திரும்பவந்து, அந்தத் திருமணிமுத்தாநதிக்கரையிற் பொருந்திய நன்மையுள்ள விருக்ஷத்தினிழலிலிருந்தார்கள். (எ-று.) (உக)

அந்நேரத்தி லொருபிறவிக் குருடனனேகதூரத்தான்,
முன்னே யொருவன்கோல்காட்ட வந்தான்முத்தாநதிக்கரை
யின், மன்னேருமையாள்கோயிலுக்கு வடபாலாம் புண்ணிய
மடுவிற், றொன்னேமூழ்கக்கண்டெரிந்து குவளைமலர்போல்
விளங்கினதால்.

(இ - ள்.) அப்பொழுது ஒரு பிறவிக்குருடன் வெகுதூரத்திலிருந்து முன்னே ஒருவன் கோல்பிடித்து வழிகாட்டிவரவந்தான்; அவன், முத்தாநதிதீரத்தில் நிலைபெற்று அழகுபொருந்திய பெரியநாயகியாருடையசந்நிதிக்கு வடபுறத்திலுள்ள புண்ணியமடுவிலே, இதில் ஸ்நானஞ்செய்வதினால் இன்னபயன்பெறலாமென்று கருதாமல் முழுகினவுடனே, அவனுடையகண்கள் நன்றாகதெரிந்து குவளைமலரைப் போலப் பிரகாசித்ததினால். (எ-று.) (உஉ)

சிரித்துநின்றுகூத்தாடித்திசைகளெட்டும் பார்த்தவனை, விரித்தகரமாய் வணிகரெலாம் வினவிப்புதுமை யென்னென்றார், தரித்தவிழிபெற்றவன்சொல்வான் றூகத்துடனேயான் மூழ்கப், பருத்தவொருவரொருசத்தம் பகர்ந்தார்செவியிலஃதறியேன்.

(இ - ள்.) அவன் நகைத்துநின்று சந்தோஷத்தினால் கூத்தாடி எட்டுத்திசைகளையும் பார்த்தான்; பார்த்தபுண்ணியபுருஷனை மரத்தினிழலிலிருந்த செட்டிப்பிள்ளைகளனைவரும் கையைவிரித்துக்கொண்டு என்ன ஆச்சரியம்நடந்ததென்று கேட்டார்கள்; பிறவிக்குருடாயிருந்து கண்களைப்பெற்ற அவன்சொல்லுகின்றான், நான் இந்தமடுவினில் அதிகதாகத்துடன் முழுகினபொழுது விஸ்வரூபத்தையுடைய ஒருமகாபுருஷர்வந்து என்காதினிடத்தில் ஒருசத்தத்தைச்சொன்னார் அதை இன்னதென்று தெரிந்து கொள்ளாதவனாகி. (எ-று.) (௨௨)

ஆகாவென்று நானலற வவர்தாம் பிடித்துவளைத்தென்னைப், போகாதேயென்றிருவிழியிற் பொருந்துமருந்துதனையிட்டார், சேகார்குருட்டுவிழிதெரிந்து சிந்தைதானுந்தெளிதலினா, லேகாதீ ரென்றவரழகையானும்பார்த்தேனென்சொல்கேன்.

(இ-- ள்.) ஆ-ஆ-வென்று நானலறினபொழுது போய்விடாதே யென்றுசொல்லி அந்தமகாபுருஷர் என்னைப்பிடித்துக் கழுத்தை வளைத்து எனது இரண்டுகண்களிலும் தகுதிபெற்ற மருந்தைத் தடவினார்; அப்பொழுதுதழும்பேறிய குருட்டுத்தன்மைநீங்கிக் கண்கள் தெரிந்து மனமும் தெளிந்தபடியினால் நானும் அந்த மகாபுருஷரைப்போய் விடாதீரென்றுசொல்லி அவருடைய அழகைப்பார்த்தேன்; ஒப்பு என்னசொல்லக்கடவேன். (எ-று.) (௨௩)

உண்டாற்பசிதானீங்குமென வுலகநீதியவரழகைக், கண்டாலுடனே பசிநீங்குங் கமலமுகமுங்கண்மூன்றும், விண்



டார்நிறைந்த பொற்சடையும் வெள்ளைமதியுங் கருமிடறும், வண்டார்குழலியிடப்பாலு மானுமழுவுமாய்நின்றார்.

(இ-ள்.) புசித்தாற்பசிநீங்குமென்றுசொல்லுவது உலகநியாயம் அப்படியிருக்க, அந்த மகாபுருஷருடைய அழகைப் பார்த்தவுடனே பசிநீங்கிப்போம்; தாமரையொத்தமுகமும்மூன்றுகண்களும் ஆகாச நிறைந்த பொற்பிரகாசம்பொருந்திய சடைகளும் வெண்மை தங்கிய மூன்றாம்பிறையும் நீலகண்டமும் வண்டுகள்மொய்க்கும் பரிமளமிக்க அளகத்தையுடைய தேவிவசிக்கின்ற இடப்பாகமும் மானும் மழுவும் விளங்கும்படியாகத் தோன்றினின்றார். (எ-று.) (௨௪)

மின்விட்டிலங்குந்திருவுருவீர் விளங்குநகையீர்விழியிரண்டு, மென்மட்டளித்தீரிருவிரு மீடேறுங்கோளெனச்சொன்னே, னுன்மட்டல்லவிந்தநதி யொருங்கேநெருங்குமலமறுக்கும், பொன்மட்டளிக்கும் புவியளிக்கும் புத்தேளரசும்புரிந்தளிக்கும்.

(இ - ள்.) மின்னலைப்போல் ஒளிவிட்டு மிகவிளங்கும் திருமேனியையுடையவரே! பிரகாசிக்கின்ற புன்முறுவலையுடையவரே! நீங்களிருவரும் அடியேனளவில் இரண்டுகண்களையுங் கொடுத்தீர்கள் ஆகையால் நீங்கள் எப்போதும் வாழக்கடவீர்களென்று சொன்னேன்; அதற்கவர்களிருவரும்உனக்குமாத்திரமல்லஇந்தநதியானது தன்னிடத்தில்வந்து ஸ்நானம் பண்ணினபேர்களுக்கு நெருங்கிய மும்மலங்களையும் வேரோடுநீக்கும்; வேண்டியமட்டும் பொன்னைக் கொடுக்கும்; பூமியைக்கொடுக்கும்; தேவேந்திரபதத்தையும் விருப்போடுகொடுக்கும். (எ-று.) (௨௫)

செட்டிமக்களிருக்கின்றார் செப்பிப்போவென்றுரைசெய்தார், நிட்டையுடையீர்நீரும்போமென்றேனேசமுடன்வணி

கர், கிட்டிமூழ்கியெழுந்திருப்பக் கிழவன்கிழவியாய்த்தோன்
றி, யிட்டவரங்கள்கொடுத்தளித்தா ரெந்தையெந்தாயிருவர்
களும்.

(இ - ள்.) ஆகையால்நீ அந்தமரத்தினிழலில் செட்டிப்பிள்ளைகளிருக்கின்றார்கள் அவர்களுக்கு இதனைச்சொல்லிப்போவென்று அருளினார்; ஆதலால் உறுதியையுடையவர்களே! நீங்களும்போய் ஸ்நானம் பண்ணுங்களென்று சொன்னான்; அதைக்கேட்ட செட்டிப்பிள்ளைகள் ஆசையுடனே புண்ணியமடுவிற்போய் ஸ்நானஞ்செய்து எழுந்தபொழுது எமதுபிதாவாகிய பழமலைநாதரும் மாதாவாகிய பெரியநாயகியாரும் பிராமணக்கிழவனும்கிழவியுமாகவெழுந்தருளி அவர்கள்விரும்பிய வரங்களைக்கொடுத்து இரக்ஷித்தருளினார். (எ-று.) (உஎ)

வாலவணிகர்மனங்களித்து மறையின் கிழவன்மறைக்கி
ழவி, கோலங்கண்டுபணிந்தேத்திக் கும்பிட்டெழுந்து கூத்
தாடிக், காலகாலன் கோயிலிற்போய்க் களித்துப்பணிந்து
விடைகொண்டா, ரேனுமுத்தாநதிப்புதுமை யின்றேவென்
றுமுளதாமால்.

(இ - ள்.) அப்பொழுது இளமைப் பருவத்தையுடைய செட்டிப்பிள்ளைகள் மனமகிழ்வுகொண்டு பிராமணக்கிழவனும் பிராமணக்கிழவியுமாகிய அவ்விருவர்களுடைய திருவுருவைக்கண்டு வணங்கித் தோத்திரஞ்செய்து இரண்டுகைகளையும் தலைமேல்வைத்துக் கும்பிட்டுநின்று ஆனந்தக்கூத்தாடி மார்க்கண்டேயருக்காக யமனையுதைத்தருளிய பழமலைநாதது சந்நிதானத்திற்குப்போய் ஆனந்தித்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு தங்கள் நகரத்திற்குப்போனார்கள்; ஆனபடியினால் வேண்டியவரங்களைக் கொடுத்தற்கிசைந்த திருமணிமுத்தாநதியின் இத்தகையமகத்துவம் இப்பொழுது மாத்திரமோ எப்பொழுதும் உண்டாயிருக்கும். (எ-று.) (உஅ)



வேறு.

நித்தியானந்த கூபமென்றொன்று திகழும் வன்னித்தரு
மேல்பாற், பத்தியிற்பிரமன்வகுத்ததிற்பரனைப் பலதினம்பூ
சனையாற்றிச், சித்தியுமுலகைச்சிருட்டிக்குமியல்புஞ் செவ்வி
திற்பெற்றுவர்தனாற், சத்தியினுருவாமப்புனல்கொள்வோர்
தகுமுத்திபெறுகுவர்மாதோ.

(இ - ள்.) அத்தலத்திலுள்ள வன்னிவிருக்ஷத்தின் மேற்றிசையில் நித்தியானந்தகூபமென்று ஒருதீர்த்தம் விளங்கும்; அதனைப் பிரமதேவர் அன்பினாலுண்டாக்கி அத்தீர்த்தங்கொண்டு பழமலைநாதரை நெடுங்காலம்பூசித்து பலசித்திகளையும் உலகங்களைச் சிருஷ்டிக்கும் வகையையும் நன்குபெற்றுமகிழ்ந்தார்; சிவசத்தியுருவாய்விளங்கும் அத்தீர்த்தத்தை உட்கொள்ளப்பெற்றவர் மேன்மைவாய்ந்த முத்தியையடைவார். (எ-று.) (உக)

தனதுநற்கரும முடித்திடவேண்டித் தாமரைக் கிழவ
னன்னதன்முன், னனவதன்றிசையிலரியதோர்தீர்த்த மகழ்ந்
ததினியமங்கண்முடித்தா, னனையதுபாவ மயல்களைத்தகிக்கு
மனலதாய்த்திகழ்ந்திடுமதனில், வினையெலாமகல விரும்பியே
படிவோர் விமலநற்கதிபினையடைவார்.


(இ - ள்.) தாமரையாசனத்தையுடைய பிரமதேவர் தமதுசித்திய கருமத்தை முடித்தற்பொருட்டு மேற்கூறியதீர்த்தம் உண்டாகுதற்கு முன்னமே அக்கினிதிசையில் அரிதாகிய ஒருதீர்த்தமுண்டாக்கி அதில் நியமங்களைமுடித்தார்; அத்தீர்த்தமானது பாவமென்னுஞ் செத்தைகளைத்தகித்தற்கு அக்கினிபோன்று பிரகாசிக்கும்; அதில்விரும்பி ஸ்நானஞ் செய்பவர்கள் தம்முடையவினைகளெல்லாம் ஒழிய மலரகிதமாயுள்ள செவ்வியமோக்ஷத்தை அடைவார்கள். (எ-று.) (௩௦)

கார்நிறவண்ணக் கண்ணனுந்தில்லைக் கனகவம்பலநடம் பரவி, நோகலிந்தத்தலத்தினிலெய்தி நிருதிதிக்கினிலொருதீர்த்தஞ், சீர்பெறவகுத்துத்தேவியோடதனிற் படிந்துதேவாதிபனருளாற், பாரெலாம்புரந்தானதிற்படிபவர்க்கெண் ணியவெலாம்பலிக்குமென் றுரைத்தான்.

(இ-ள்) இதுவன்றியும், மேகநிறம்போலும் நிறத்தையுடைய விஷ்ணுமூர்த்தியும் சிதம்பரத்திலே கனகசபையிலே பரமசிவன் பாலித்தருளிய ஆனந்தநிருத்தத்தைத்தரிசித்துக்கொண்டு நிகரற்ற இத்தலத்தையடைந்து நிருதிதிசையிலே ஒருதீர்த்தம் சிறக்கவுண்டாக்கி அதிலே இலக்குமியோடு தானும் ஸ்நானஞ்செய்து பழமலைநாதரைவழிபட்டு அக்கடவுளருளால் உலகங்களையெல்லாம் காத்தார்; ஆகையால் அத்தீர்த்தத்திலே மூழ்குவோர்க்கு சித்திகளையெல்லாம் சித்தியாகுமென்று பரமசிவன் பார்வதிதேவியாருக்கு உரைத்தருளினார். (எ-று.) (௰௧)

தீர்த்தசருக்கம் - முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௧௦௪.



உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது,

# விதர்க்கணச்சருக்கம்.

வேறு.

ஈசனைவந்தித் திறைவியுரைப்பா ளெழின்முது கிரிசேர்வார், தேசவிமானத் துலவுவரென்னத் தெருள்பெறவருள் செய்தீர், ரேசில்விமானத் தெவரெவர்சென்று ரெத்தேசத் தார்தர, மாசறுமவர்செய் தவவலியேதென வங்கணனருள் செய்வான்.

(இ-ள்.) எவற்றிற்கும் முதல்வியாகிய உமாதேவியார் பரமசிவனைவணங்கி விண்ணப்பஞ்செய்கின்றார்; அழகியவிருத்தகிரியில் வந்துசேர்கின்றவர்கள் பிரகாசம்பொருந்திய தெய்வவிமானத்திலேறிக்கொண்டு எங்குஞ் சஞ்சரிப்பார்களென்று எனக்குத் தெளிவாகத் திருவாய்மலர்ந்தருளினீர்; அவ்வாறு குற்றமில்லாத விமா

னத்திலேறிச்சென்றவர்கள் எவரெவர்கள்? அவர்கள் எந்தத்தேசத்திலிருந்தவர்கள்? அஞ்ஞானநீங்கிய அவர்கள்செய்தவலியதவம் எவ்வகைப்பட்டது? அவைகளை எனக்குத் தெரிவித்தருளவேண்டுமென வினவ அருளுகின்றார். (எ-று.) (௪)

திசைமுகனுக்குறு மைம்பதுவயதிற் றிரேதாயுகமாதே, வசிகரகோசல தேசமதன்கண்மணிபிங்கலையூரான், மிசைதரு மந்தணன் விபசித்தென்றொரு பெயருளன்பெருள்ளான், பசிகொரந்திட மிடிகள்வளர்ந்தொரு பற்றொன்றற்றதனால்.

(இ - ள்.) உமையவளே கேட்பாயாக; பிரமாவுக்கு ஐம்பது வயதானகாலத்திலே திரேதாயுகத்தில், சகலவளங்களையு முடைமையால் எவரையும் வசப்படுத்தத்தக்க கோசலதேசத்திலுள்ள மணிபிங்கலையென்னும் பட்டணத்தையுடையவன்; மேன்மைபொருந்திய பிராமண வம்சத்திற்பிறந்தவன்; ஒப்பற்ற மேன்மைபொருந்திய விபசித்தென்னும் பெயரையுடையவன்; அவன் தரித்திரமதிகரித்தமையால் பசி தன்னைத்தூரத்த உதவிபுரிவாரொருவரும் இல்லாமையினால், (எ-று.) (௫)

நாடுகள்செல்லு நரபதிபின்செலு நல்லோர்முன் செல்லுங், காடுகள்செல்லுங் காய்கனிகாணுன் கண்டோர்பின் செல்லும், வீடுகள்செல்லு மேவலர்பின்செலும் விபசித்தொன்றிற்கு, மீடுகளில்லாதென்செயலென் றீதென் றுதிரிந்தனனே

(இ - ள்.) விபசித்து மிகுந்தபசிவருத்தத்தினால் நாடுகடோறுந் திரிவான்; அரசன் போகுமிடங்களில் அவன்பின்னே போவான்; பெரியோர்களுக்கு முன்னேபோவான்; காடுகள்தோறும்போவான்; அவ்விடத்திலும் காய்கள் கனிகள் காணுதவனாகி மனம்வருந்தி எதிரே சேரிட்டவர்கள் பின்னேபோவான்; வீடுகள்தோறும் போவான்; சத்துருக்களின்பின்னேயும்போவான்; இப்படியலைந்தும்



ஒருவனையாலும் (பிறரால்) ஒருபகாரமும்பெறுமையால் இதுவென்னுடைய செயலல்லவென்றுநினைத்துத் திரிந்துகொண்டிருந்தான்.

வயிறுதளர்ந்தவன் மலையில்வனந்தனில் வருநாளொருநாளிற், பயிறருமிரவியை யரவுடணைந்தது பாங்கிருஞ்சுனைகண், டெயிறுவிளக்கினன்மூழ்கினனங்க ணிலிங்கமுமர்ச்சித்தான், கயிறறுகண்டதுபோலவிழுந்தவன்கடிதினடந்தனனே.

(இ - ள்.) விபசித்து பசியினாற்றளர்ச்சியடைந்துமலைகளிலுங் காடுகளிலுந்திரிந்து வருகின்றதினங்களில்ஒருதினத்தில் எங்குமுலவும் சூரியனைச் சர்ப்பந்தீண்டிற்று; அது சூரியகிரகண புண்ணியகாலமாகையால் அவ்விடத்திலுள்ளபெருமைபெற்ற ஒருசுனையைக்கண்டு அதிலிறங்கித்தந்தசுத்திபண்ணிக்கொண்டு ஸ்னானஞ்செய்து நியமங்களை முடித்துக்கொண்டு அவ்விடத்திலிருந்த சிவலிங்கத்துக்கு அருச்சனைசெய்து பின்பு கயிறற்ற தடிபோல் சரீரத்தளர்வினால் அங்கே தன்னாடி விழுந்தெழுந்து அதிவேகமாக நடந்தான். (எ-று.) (௭)

கல்லினிலிடறிக் காலிலிரத்தங் கறகறவெனவீழச், செல்லுழிமுள்ளுகள் கல்லுகடைக்கச்செடிமுட்கொடிவீச, நல்லபலங்கனி தண்புனலுண்பவை நண்ணுக்கண்முன்னே? பல்லுகளொடு பசைவாய் கொள்ளப் பதியவுநிழல்காணன்

(இ - ள்.) கல்லுகளில் இடறி விழுந்து இரண்டுகால்களிலும், இரத்த வெள்ளங் கறகறவென்று பீறிட்டொழுகும்படியாக நடக்கும்பொழுது. முள்ளுகள் கல்லுகள் தைக்கவும், செடிகளிற்படர்ந்துள்ளமுட் கொடிகள் வீசவும், நல்ல காய்கனிகள் தண்ணீர்முதலிய புசிக்கின்ற வஸ்துக்களொன்றுங் கண்ணுக்கெதிரே அகப்படாமலும் பல்லுகளும் நாவும்பசைபிடித்து ஒட்டிக்கொள்ளவும், (உழலுங்கால்) நிற்க நிழலுங்காணமல் வருந்தினன். (எ-று.) (௮)

பூதபசாசம் புலிகரிகாடிகள் புடைமிடை யுங்கானில்,
வேதனையாகவொ ராறுதினம்பசிவிரவித்திரிகின்றான், யாதோ
ருமேனிகொ ளுங்கருவான தெரிக்காய்கின்றதுபோன்; மா
தவஞான நிறைந்திடவோவிவன் வயிறுடல்காய்வதுவே.

(இ - ள்.) பூதங்களும் பேய்களும்புலிகளும் யானைகளும் காடிகளும் எங்கும் திரிகின்ற காட்டினிடத்தில் ஆறுநாள்பரியந்தம் பசிமிகுந்து துன்பமதிகரிக்கத் திரிந்தான் யாதேனும் ஒரு விக்கிரகத் திருவுருக் கொள்ளத்தக்க கருவானது அக்கினியி லுருகக் காய்வது போல இந்த விபசித்துவினுடைய வயிறும் சரீரமும் உதராக்கினியிற் காவது மகாதபமும் பிரமஞானமும் பூரணமாக நிறையும் பொருட்டோ. (எ-று.)

(௬)

நல்லகுலத்தி லுதித்துமதிப்புடனற்கலைபலகற்றுஞ், செ
ல்வமுதித்திலர் கூனர்களூமர்க டிருவுளவும்மிலதா, யல்லலு
ழைத்தன ளுபிரமோதினு மாயிரமாயினுமே, வில்லதுவாரா
துள்ளதுபோகா தென்பேபாலிகனோவார்.

(இ - ள்.) நற்குலத்திற் பிறந்தும் யாவருமதிக்கும்படியாகஎண்மை பொருந்திய அநேகசாத்திரங்களைக்கற்றறிந்தும் செல்வம் உதியாதவர் (அவ்வுயர்குடிப்பிறப்பு கல்விமுதலியவற்றால்) பயனெய்தாமையாலும், கூனர்கள் தமக்கு முதுகிருந்தும் நிமிரக்கூடாமையாலும், ஊமர்கள் தமக்குவாயிருந்தும் வசனிக்கமுடியாமையாலும் வருந்துதல்போன்று, (தானும் உயர்குடிப்பிறப்பு கல்விமுதலிய எய்தியிருந்தும் செல்வ மெய்தாமையின் வறுமையுறல்) துக்கமடைந்திருந்தான்; அநேகம் சாத்திரங்களைப் படிப்பினும் அநேகமாக அவற்றின்பொருள்களை ஆராய்ந்தெளியினும் ஒருவருக்கும் பிராரத்துவத்திலில்லாதது வரமாட்டாது; உள்ளது விட்டுநீங்கமாட்டாது; ஆகையினால் இதைக்குறித்து என்போலுமறிவீனர்கள் வருந்துவார்களேயல்லாமல் தெரிந்த பெரியோர்கள் வருந்தமாட்டார்கள். (எ-று.)

(௭)



திருவுளவும் மிலதாயென்பதனை உள்ளதிருவும் இலதாயெனமாற்றுக. திருவென்பது இங்கேஉயர்குடிப்பிறப்புகல்வி முதலுவர்ம் இவற்றைச் சுட்டிநின்றது. ஆயென்பது உவமவுருபிடைச்சொல்.

அப்படிதிரிபவன் முற்படமுற்சிவ னர்ச்சனை செய்ததனால், வைப்புகள்கைக்குள கப்படலெரப்பென வாழ்வுளதேவிழாநா, ளொப்பறுகற்சனை கற்கரையின்கணி லோதமுழக்கெனவே, மெய்ப்படுமொப்பில்வி மானமணைந்தது வேதியனுற்றனனே.

(இ - ள்.) அப்படி ஆறுநாள்பரியந்தம் திரிந்துழல்கின்ற விபசித்துவுக்கெதிரே முன்செய்துள்ள சிவபூஜாபலத்தினால் தரித்திரனுக்குப்புதையல் அகப்பட்டதுபோலும் என்றுசொல்லும்படி தான் வாழ்வெய்தற்குரிய ஏழாவதுநாளில் உவமையில்லாத ஒரு கற்சனையினதுகரையினிடத்தில் சமுத்திரகோஷம்போல் ஒலியுண்டாக உண்மையான ஒப்பற்ற தெய்வவிமானமொன்று வந்தது; பிராமணனாகிய விபசித்து கண்டு சமீபித்தான். (எ-று.)

(௮)

பாமலிமங்கையர் பாடப்பண்ணுட னுடக்கொடியாடச்,
சாமரைவீசத் தூசணிவீசத் தருவெயிலணிவீசத், தேமலர்
வீசப்பூமணம்வீசத் திகழ்தருபுகழ்வீசக், காமர்குடைக்க ணி
மூற்றத்துன்னிய கன்னிபர்புடைசூழ.

(இ - ள்.) பல பாவினங்களையுங்கற்றறிந்த தேவஸ்திரீகளிற் சிலர் இனிதாகிய இசையோடும் பாடவும், சிலர் அப்பாடலுக்கேற்க நாட்டியஞ்செய்யவும், கொடிகளாடவும், இருபுறத்திலும் வெண்சாமரைகள் வீசவும், பாவாடை வீசிவரவும், தருதியாகியவாபரணங்கள்ஒளிவீசவும், தேனொழுகுகின்ற புஷ்பமாரிபொழியவும், அப்புஷ்பங்கள் பரிமளம்வீசவும், விளங்குகின்றகீர்த்தி எங்கும் பிர

காசிக்கவும், அழகிய சந்திரவட்டக்குடைகள் நிழலைச் செய்யவும், நெருங்கிய தேவஸ்திரீகள் பக்கத்தில் சூழ்ந்து நிற்கவும். எ-று. (௯)

மந்தாகினிமுடி யங்கணனருளான் மகுடத்திருமுடியுஞ், சந்தார்பிறையுந் திரிலோசனமுந் தகுநூலணிதோளுங், கொந்தாரிதழியு மாலைக்களமுங் கோலச்சுடர்வடிவுஞ், செந்தாமரைமுக னங்கணநாதர் திருவுங்கண்டனனே.

(இ - ள்.) கங்கையைத்தரித்த சடைமுடியையுடைய பரமசிவனது கிருபையினால் கிரீடந்தரித்த அழகியமுடியும், அழகுபெற்ற மூன்றாம்பிறையும், மூன்றுகண்களும், தகுந்த முப்புரிநூல் தரித்த புயங்களும், கொத்தார்ந்த கொன்றைமாலையும், விடம்பொருந்திய கண்டமும், அழகிய அக்கினிசொரூபமும், செந்தாமரைப்புஷ்பத்தை யொத்த முகமுமாகிய இவற்றாற்பிரகாசிக்கின்ற கணநாதருடைய சிறப்பையுங்கண்டு தரிசித்தான். (எ-று.) (௧௦)

வேதியனைக்கண நாதனுமுற்று விமானமிழிந்திடலு, மாதவவேதியன் வந்துவணங்கியிணங்கியுரைக்கின்று, னேது தவத்தை யியற்றின னும்மை யிறைஞ்சிவணங்குறவே, யாதி யுருத்திரர் போலவிருந்தீ ரறிகிலன்யானென்றான்.

(இ - ள்.) கணநாதரானவர் விபசித்துவைக்கண்டு விமானத்தை விட்டுப் பூமியி லிறங்ினபொழுது மிக்கதவத்தையுடைய விபசித்துவும் வந்து கணநாதரைச் சாஷ்டாங்கமாகவணங்கி வணக்கமாகச்சொல்லத்தொடங்கி, சுவாமீ! அடியேன் உம்மைத்தரிசித்து வணங்குதற்கு முற்பிறப்பில் என்னதவத்தைச்செய்தேனோ! நீர்முதல்வனாகிய பரமசிவனைப்போலுமிருக்கின்றீர்; உம்மை இன்னாரென்று அறிந்திலேன்; யான் அறியும்படி அருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து நின்றான். (எ-று.) (௧௧)



குணமாமறையோய் கேண்மோநீமுன் குலவுதவஞ்செய்தாய், பணமாரரவன் கணநாதனைநீ பணிகைக்கெளிதன்றே, மணமாரிதழிச் சடையார்விடையார் வளர்பழமலையார்தங், கணநாதனியான் முனமேசெய்திடு கதையைக்கேளென்றான்.

(இ - ள்.) நற்குணத்தையுடைய விபசித்துவே, கேட்பாயாக; நீ முற்சனனத்தில் பிரகாசம்பொருந்திய தவத்தைச்செய்தாய்; (அந்த தபோபலனால் எமது தரிசனம் உனக்குக்கிடைத்தது;) படத்தையுடைய சர்ப்பாபரணத்தைத்தரித்த பரமசிவனுடைய கணங்களை நீ வணங்குவதற்கு அவர்தரிசனம் எளிதல்ல; வாசனையுள்ள கொன்றைமாலையை யணிந்தசடையையும் இடபவாகனத்தையும் வளருகின்ற பழமலையையுமுடையவராகிய பரமசிவனுடைய கணநாதன் யான்; முற்சென்மத்தில் யானியற்றியசெய்கையை நீ கேளென்று சொல்லுகின்றார் கணநாதர். (எ-று) (௧௨)

பாஞ்சாலத்தே சந்தனில்விதையப் பட்டணசெட்டிமக, னீஞ்சாமரபினில் வந்தவிதர்க்கணனிறைமிடியதனாலே, தாஞ்சாசைக்கோர் மருந்துண்பாரிலர் தாமெனவுமுரைகொண்டே, மாஞ்சேகூலிச் சுமைகள்சுமந்து வயிறுவளர்த்தனனே.

(இ - ள்.) முற்பிறப்பில் நான் பாஞ்சாலதேசத்தில் விதையமென்னும் பட்டணத்திலிருந்த செட்டிமகன்; நிலைகுலையாத தனவைசியகுலத்திற்பிறந்த விதர்க்கணசெட்டியென்று வழங்குகின்ற பெயரையுடையவன்; நிறைந்ததரித்திரத்தினால் நான்சாகிறதற்கு ஒரு மருந்தைத்தின்பவர்கள் உலகத்திலொருவருமில்லையென்று சொல்லைக்கொண்டு கூலிச்சுமைகள் சுமந்து வருத்தப்பட்டு வயிறுவளர்த்துக்கொண்டிருந்தேன். (எ-று.) (௧௩)

கொன்னேசிலநாள் சென்றவொர் வணிகன்கூலிச்சுமை கொண்டு, முன்னேசென்றே னன்றுமதகுன்றினின் முதுமார்

கழிதன்னி, னன்னாளிரைகாடான்வந்ததுல்லோர்பலர்வந்
தா,ரந்நாண்முனிவர்கள்யோகிகள்வந்தாரவரைத்தரிசித்தேன்

(இ-ள்.) அப்படி வியர்த்தமாகச் சிறிதுகாலங் கழிந்தன; ஒருநாள் ஒருவர்த்தகனுக்குக் கூலிக்குச்சுமை எடுத்துக்கொண்டு விருத்தாசலத்திற்குப் போனேன்; அன்றைக்கு மார்கழிமாதத் திருவாதிரையாகிய புண்ணியகாலம் சேர்ந்தது; அதனால் அத்தலத்திற்குப் பல அன்புடையவர்களும் முனீஸ்வரர்களும் யோகீஸ்வரர்களும் வந்தார்கள்; அவர்களைக்கண்டு தரிசனஞ்செய்தேன். (எ-று.) (கச)

செட்டிசரக்கும் விற்றெனக்குச் செப்பியபொருடந்தா
ன், மட்டறவந்தவ ரெல்லாரும்போய் மணிமுத்தாநதியிற், க
ட்டறமூழ்கினர் கண்டவர்மூழ்கினர் யானும்போய் மூழ்கி,
யிட்டனனீறு முருத்திராக்கமு மெய்திகழாலயமே.

(இ-ள்.) வர்த்தகனுடைய சரக்கும் விற்பனையாகி விட்டது; அவன் எனக்குப்பேசிய கூலிப்பொருளையும் கொடுத்துவிட்டான்; அன்றைக்கு அளவிறந்தவர்களாக வந்திருந்த எல்லாரும் திருமணிமுத்தாநதியிற் போய் தங்கள்தங்கள் மலபரிகரிக்கும்படி ஸ்நானஞ்செய்தார்கள்; அதைக்கண்ட மற்றையரும் இதில் பலபெரியோர்களும்வந்து மூழ்குதலால் இது விசேடமுடையதுபோலும் எனத்துணிந்து மூழ்கினார்; அதைக்கண்டு நானும் ஸ்நானஞ்செய்து விபூதியுமணிந்து உருத்திராக்ஷமும் தரித்துக்கொண்டு சிவாலயத்திற்குப் போனேன். (எ-று.) (கரு)

பழமலைநாயகர் தம்மைவலஞ்செய்து பாதமலர்த்துணை
யைத், தொழுதுவணங்கித் துதிபுரைத்துக் கூலிச்சிலபொ
ருளு, முழுதுமளித்தேதியுணவையொழித்தனன்முட்டியநித்தி
ரையுந், தழுவறவிட்டுப்பரமொழிவிட்டுத்தங்கினனங்கிரவில்.



(இ-ள்.) பழமலைநாதரைப் பிரதக்ஷிணஞ்செய்து இரண்டு பாதாரவிந்தங்களையும் தொழுதுவணங்கித் தோத்திரமுஞ்செய்து என்னிடத்திருந்த அற்பமாகிய கூலிப்பொருள்முழுதும் தானஞ்செய்து ஆகாரமில்லாமல் மேலிடுகின்ற நித்திரையும் சற்றும்பொருந்தாமல் ஒழித்து அன்னியப்பிரசங்கமும்விட்டு அன்றிராத்திரியில் அவ்விடத்திலிருந்தேன். (எ-று.) (கசு)

இரவினின்முழுதுஞ் சிவனொடுசத்தியெழுந்தருளுந்திருநாள்
பரவிமதித்துப் பத்தர்களர்ச்சனை பரவப்புலர்காலை
விரவுநதிக்கணின் மூழ்கிச்சிவனடி மீளவும்வந்துதொழா
வுரமுளபிச்சையி னிச்சயபாரண மூண்டுமகிழ்ந்தனனே.

(இ-ள்.) இராத்திரிமுழுமையும் பழமலைநாதரும் பெரியநாயகியம்மையாரும் எழுந்தருளிவருகின்ற மகோற்சவவிபவத்தைக் கண்டு வணங்கித் தோத்திரஞ்செய்து, அடியார்களெல்லாரும் விடியற்காலத்தில் திருமணி முத்தாற்றில் ஸ்நானஞ்செய்து அர்ச்சனை செய்யக்கண்டு நானும் ஸ்நானஞ்செய்து, மறுபடியும் பழமலைநாதருடைய திருவடிகளில்வணங்கி, உயர்ந்த பிச்சைவாங்கி உண்மையாகிய பாரணஞ்செய்து மனமகிழ்ச்சியடைந்தேன். (எ-று.) (கஎ)

மீண்டும்பாஞ்சாலத்தேசந்தனில் விதையப்பதிப்புக்கே
ணாண்டுஞ்சிலநாட் சென்றனவயதி னவத்தைமிகுத்திடவுந்
திண்டகமன்படர் வந்தனர்வருமுன் சிவகணம்வந்தனபின்
றுண்டவனிடுமை மைந்தர்கணாந்தித் தலைவரும்வந்தனரே.

(இ-ள்.) மறுபடியும் பாஞ்சாலதேசத்தில் விதையமென்கிற பட்டணத்தில் வந்திருந்தேன்; அவ்விடத்திற் பின்னுஞ் சிலகாலஞ் சென்றன; அப்பொழுதுமரணாவஸ்தை அதிகரித்ததும் என்னைப் பாசத்திற் கட்டுகிறதற்கு யமதூதர்கள்வந்தார்கள்; அவர்கள் வரு

முன்னமே சிவகணங்கள் வந்துநின்றன; பின்பு விருத்தாகிய பழமலைநாதரும் பெரியநாயகியம்மையாரும் விநாயகமூர்த்தியும் சுப்பிரமணியக்கடவுளும் நந்திகேசரும் எழுந்தருளினார்கள். (எ-று.)

கண்டனன் பண்டைக் களகண்டனிந்துகவுரி திருத்தோ
ண்மேல், வண்டார்களண்டன் கைத்தலம்வைத்து நகைத்தருள்
செய்கின்றான், பண்டைவிதர்க்க பயத்தையொழித்திடு பற்
றுளசுற்றமியார், தண்டமுனக்கிலையென்றனதனைத் தரிசன
மாயினனே.

(இ-ள்.) வந்தவர்களைத் தூரத்தே தரிசனஞ்செய்தபொழுதே எனக்கு அனுதியாயுள்ள ஜநநமரணங்களையெல்லாந் தெளிந்துவிட்டன; தேவதேவனாகிய பரமசிவன் உமாதேவியுடைய அழகிய திருத்தோளின்மேல் தம்முடைய திருக்கைகளைவைத்துப் புன்முறுவல்செய்து கிருபைகூர்ந்து, ஓ விதர்க்கனே! நீ முன்னுள்ள பயங்களையெல்லாம் விட்டுவிடு; உன்னிடத்தில் அன்புவைத்திருக்கின்றவுறவினர் நாமே: ஆதலால் உனக்கு யமதண்டனையொன்றுமில்லையென்று அருளிச்செய்தார்; உடனேபிரத்தியக்ஷமாகத் தரிசிக்கப்பெற்றேன். (எ-று.) (கக)

உத்தரிகத்துகிலத்தால்வீசின ளுமைபவண்முதுகுன்றன்
சத்தியவுபதேசத்தையுரைத்தன னத்துணைசத்தியமாம்
வித்தகமெய்யி னுருக்கிளனுவி விமானமுமுன்வரலந்
சத்தனிருந்த திரிக்கின்றதாள்கா டுதித்துவணங்கினனே.

(இ-ள்.) பெரியநாயகியார் தம்முடைய உத்தரிகவஸ்திரத்தினால் என்னுடைய சனனவிடாய்நீங்கும்படி வீசினார்; பழமலைநாதர் உண்மைஞான உபதேசத்தை வலச்செவியினிடமாக உபதேசித்தருளினார்; அப்பொழுது உண்மைஞான சொருபத்தையுடைய சிவசொருபமுடையனாகித் தெய்வவிமானமும் எதிரேவரப்பெற்றமாகிய அக்கடவுளுடையதிருவடிகளைத்தோத்திரஞ்செய்துவணங்கினேன்.



வணங்கியெழுந்துதிக்குமுன் மங்கை மணாளன்மறைந்திட்டு
மிணங்கிவணங்கி விமானமுமேறினனெவ்வுலகுந்திரிவே
னணங்குகள்சூழ விமானமதேறி யணைந்திடுவார்களெலாங்
குணங்களினின்று பணிந்தவர்மாமுது குன்றைமிதித்தவரே.

(இ-ள்.) தெண்டனிட்டெழுந்து தோத்திரஞ் செய்கின்றபொழுது உமாதேவி மணாளனாகிய பரமசிவன் மறைந்தருளினார்; அப்பொழுது நான் தாழ்ந்துவணங்கி தெய்வவிமானத்திலேறி அன்றுமுதல் எந்தவுலகத்திலுஞ் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறேன்; தெய்வகன்னிகைகள் சூழ்ந்துவர விமானத்திலேறி வருகின்றவர்களெல்லாரும் சத்துவகுணத்தினின்று பழமலைநாதரைவணங்கினவர்களும் பெருமை தங்கிய அத்தலத்தை மிதித்தவர்களுமேயாவர்.

குன்றைமிதித்தவ ரிப்படியானுற் குலவியமனதொன்றாய்ச்
சென்றவரெப்படி யர்கார்தினகர தெரிசனபக்கமெலா
மன்றவிமானத் துடன்வருவார்முது மலையைமிதித்தவர்கா
ணன்றுடனீயுஞ் சென்றிடின்முதுகிரி நாதனையக்கிடுமே.

(இ-ள்.) பழமலையைமிதித்தவர்கள் இவ்வகைப்பட்ட பலனைப் பெற்றால் நானுவிதமாகத்திரிகின்ற மனதொருமித்து அந்தத்தலத்திற் சென்று வணங்கினபேர்கள் எவ்வகைப்பட்ட பலனையடையமாட்டார்கள்! பழமலையைமிதித்தபேர்கள் சூரியகிரணந் தோன்றுகின்ற இடங்களிலெல்லாம் சிறந்தவிமானத்திலேறித் திரிவார்கள்; ஆதலால் நீயும் அந்தத்தலத்திற்கு நன்மையோடு போவாயாகில் உன்னையும் பழமலைநாதர் இரக்ஷித்தருளுவார். (எ-று.) ()

மறைகளுமுதுமலை வந்துவரம்பெற் றுலகையளக்கிலவா,
விறைவனுமிறைவியுமெவர்வருவாரென் றெதிரேநிற்கின்றார்,

முறைமையினீயும் வழிபடின்முதுகிரி நாதன்றிருவாணை, நி
றையருள்புரிகுவ னென்றுமறைந்தன னின்றவன்கதை
சொல்வாம்.

(இ-ள்.) நான்குவேதங்களும் பழமலையில்வந்து வரம் பெற்றவர்களை யளவிட்டுச்சொல்லமாட்டா; அன்றியும் எவர்கள் வருவார்களென்று பரமசிவனும் உமாதேவியாரும் எதிர்நோக்கி நிற்கின்றார்கள்; ஆகையால் நீயும் அத்தலத்திற்குச்சென்று முறையாகவழிபடின், அக்கடவுளைச்சுட்டி உண்மையாகவுரைக்கின்றேன் அக்கடவுள் பூரணகடாக்ஷம் வைத்தருளுவாரென்றுசொல்லிக் கனகநாதர் மறைந்துவிட்டார்; இப்பால் அதைக்கேட்டுநின்ற விபசித்துமுனிவருடைய சரித்திரத்தைச் சொல்லுகின்றோம். (எ-று.) (உக)

விதர்க்கணைச்சருக்கம் - முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - கஉஎ.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது,

## விபசித்துச்சருக்கம்.

வேறு.

தவசித்தன்கனகநாதன் றான்மறைந்ததிசைநோக்கி
விவசித்துப்பணிந்தேத்தி மெய்ம்மறந்துபொய்ம்மறந்து
சிவசித்தம்பெற்றேனென் செல்வமேசெல்வமென
நவசித்தமுளனாகி நைந்துபலசிந்திப்பான்.

(இ-ள்.) தவநிறைந்த சித்தத்தன்மையுடையாராகிய கனகநாதர் மறைந்தருளிய திசையைக்குறித்து விபசித்துமுனிவர் தண்டனிட்டுத் தோத்திரஞ்செய்து, சரீரவாசனையையும் மித்தையாகிய பிரபஞ்ச வாசனையையுமறந்து சிவசிந்தனையைப் பெற்றேனாதலால்

எனக்குக்கிடைத்த இச்செல்வமே செல்வமென்றுகருதி மனமுருகிப் புதிதான ஞானசிந்தையை யுடையராய்ப் பலவாகநினைக்கத் தொடங்கினர். (எ-று.)

தாயிழந்து தமரிழந்து தாரமிழந்தருப் பசியாற்
பேயனைத்தவமுயலாப் பித்தனைத்திரிவேற்கு
மேயசிவன்வெளிப்படுதல் வித்தையோசத்தியமோ
மாயமோகனவோவென் மனத்தானுநினைக்கரிதால்.

(இ-ள்.) தாயுமில்லாமல் சுற்றமுமில்லாமல் மனையாளுமில்லாமல் பொறுத்தற்கரியபசியினால் பேய்போலலைபவனாய் யாதொருதவத்தையுஞ் செய்யாது வெறிகொண்டவனாய்த் திரிகின்ற எனக்குச் சர்வ வியாபியா பரமசிவன் வெளிப்படுவதென்றது இந்திரஜால வித்தையோ உண்மையோ மாயைதானோ சொற்பனமோ அது இத்தகையதென்றுஎனது மனதினாலும்நினைத்தற்கரியதாயிருக்கின்றது.

அரியதவமுன்செய்தா லரும்பலன்கள்வருங்காலந்
தெரிவரிதென்றறிவுடையோர் செப்புவரப்படிதானே
பரிமுழக்கமுகின்முழக்கம் பாவையர்கண்மனஞ்செல்வ
முரியமழைமழைமறுத்த லொருவருக்குந்தெரிவரிதால்.

(இ-ள்.) இன்னவேளையில் குதிரை அநுமானிக்கும், இன்னவேளையில் மேகங்குமுறும், மாதர்மனம் இத்தன்மைத்து, ஒருவனுக்குச்செல்வம் இன்னகாலத்திற்கிடைக்கும், அது இன்னகாலத்தில் அவனைவிட்டு நீங்கும், எவற்றிற்கும் உரியமழை இன்னகாலத்திற் பெய்யும், இன்னகாலத்திற் பெய்யாதொழியுமென்பது யாவர்க்கும் அறியக்கூடாது; அவைபோல முற்செனனத்தில் அரியதவத்தை செய்திருந்தால் அந்தஅரியதவத்தின்பலன்கள் அநுபவிக்கவருவது இன்னகாலமென்று ஒருவராலும் அறியக்கூடாதென்றுசான்றோர் சொல்லுவர்; அப்படிதான்எனக்கு இந்தன்மைகிடைத்ததே.எ-று



இப்படிமுற்றவப்பலனு லிவனைக்கண்டோமெனவே
செப்பியபின்விப்பிரனுந் தெய்வசரசின்மூழ்கித்
தப்பிலாத்தொழில்முடித்துத் தளர்ந்திருந்தானச்சுனையி
லப்பொழுதுதேவிமானத்தி லமரமடவாரணைந்தார்.

(இ-ள்.) நாம் முற்பிறப்பிற்செய்த தபோபலத்தினால் இந்தக்கணாதருடையதரிசனம் நமக்குக்கிடைத்ததென்று இப்படி பலவிதமாக நினைத்தபின்பு பிராமணராகிய விபசித்துவும் அவ்விடத்துள்ள தெய்வீக சுனையினிடத்தில் ஸ்நானஞ்செய்து குற்றமற்ற அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு மனத்தளர்ச்சியடைந்திருந்தார்; அப்பொழுதே அந்தச்சுனையிடத்தில் ஸ்நானஞ்செய்வதற்குச் சிலதெய்வப்பெண்கள் விமானத்தில் வந்தார்கள். (எ-று.) (௪)

செந்துவர்வாய்வெண்டாளச் சிறுமுறுவர்பெருமதியந்
தந்தமுகந்தனஞ்சுமந்து தளருமிடைவளரல்குல்
வந்தளிர்மெய்நீலவிழி யன்னநடைக்கன்னன்மொழி
யிந்தவியன்மடவார்க ளெழின்மின்னுக்கொடிபோல்வார்.

(இ-ள்.) சிவந்தபவளம்போன்றவாயும் வெள்ளியமுத்துக்கள் போன்ற சிறியதந்தபந்தியும் பூரணச்சந்திரனைப்போன்ற முகமும் ஸ்தனபாரத்தைச்சுமந்து தளர்கின்ற இடையும் வளர்கின்ற நிதம்பமும் அழகிய மாந்தளிர்போன்றமேனியும் நீலோற்பலமலர்போன்ற கண்களும் அன்னநடைபோன்றநடையும் கரும்பினிரதம்போன்ற வசனமு முடைய இவ்வகைப்பட்ட மேன்மைபெற்ற அத்தெய்வப் பெண்கள் அழகிய மின்னற்கொடியை ஒப்பார். (எ-று.) (௫)

தோன்றினர்பணிசழற்றிச் சுனையாடிக்கரையேறி
யான்றதுகிலுடுத்தணிக ளணிந்தார்களவ்வளவின்
மூன்றுவிழியார்தோழன் றங்கையவண்முக்கினனி
யென்றணியக்கண்டிலதா லியாவர்களுந்துயருழந்தார்.

(இ - ள்.) இங்ஙனம்வந்த அப்பெண்கள் ஆபரணங்களைக்கழற்றி வைத்துச் சுனையில்ஸ்நானஞ்செய்து கரைமேல்வந்து மேன்மைபெற்ற வேறுவஸ்திரத்தையுடுத்தி ஆபரணங்களைத்தரித்துக்கொண்டார்கள்; அப்பொழுது திரிநேத்திரத்தையுடைய பரமசிவனுடைய சிநேகனாகிய குபேரனுடையதங்கையினது மூக்கணியொன்று எடுத்துத்தரிக்கப்பார்க்கையில் அது காணாமற்போனபடியினால் அந்தப்பெண்களெல்லாரும் துயரமடைந்தார்கள். (எ-று.) (௬)

அலைவிலாவமரரெலா மளகேசன்றனக்களித்த
விலையிலாமாணிக்கம் வேய்ந்தமூக்கணியென்னச்
சிலைநுதலாடிகைத்திருப்பச் சிச்சிலிவந்ததனையெடுத்
துலைவிலாமரத்திலிருந் துணவென்னக்கொத்துதலும்.

(இ - ள்.) தன் தமையனாகிய குபேரனுக்கு என்றுமாக்கிரமாயிருக்கும் சகலதேவர்களுங் கூடிக்கொடுத்த விலையில்லாத மாணிக்கம் பதித்துள்ள மூக்காபரணத்தை இழந்துவிட்டோமேயென்று வில்லையொத்த புருவத்தையுடைய அப்பெண் வருத்தப்பட்டு திகைத்திருக்கையில் ஒருசிச்சிலிக்குருவிவந்து அந்த அணியை மூக்கிற்கவ்வி யெடுத்துச்சென்று உயர்ந்த மரத்தின்மேல்வைத்துக்கொண்டு தான்புசிக்கும் உணவென்று நினைந்து அதனை மூக்கினாற்கொத்தலும். (எ-று.) (௭)

மீனெரிந்துவிழுவதுபோல் விபசித்தின்மடிமீத
யீனபணிதவறிவிழ வவனடுங்கியெழுந்திருந்து
தானதனைக்கைக்கொண்டான் றந்தையர்களிதறியார்
தேனமருமொழியாலே சிலசபதஞ்செய்கின்றார்.

(இ - ள்.) அது தவறி நக்ஷத்திர மெரிந்து விழுவதுபோல்விபசித்து முனிவருடைய மடிமேல் வந்து விழுந்தது; அதுகண்டு விபசித்துமுனிவர் நடுக்கங்கொண்டெழுந்து அதைக் கையில் வைத்



துக்கொண்டிருந்தார்; கிளிமொழிபோல வசனிக்கின்ற தெய்வப்பெண்கள் அந்தச் செய்தியைத் தெரியாதவர்களாகித் தேன்போலும் மதுரம்பொருந்தியவசனத்தினாற்குபேரனுடைய தங்கையைப்பார்த்து சிலசபதவார்த்தைகளைச் சொல்லுகின்றார்கள். (எ-று) (௮)

மின்கிளரும்பணிகாக்கில் விரதமிழந்தான்பதிதன்
பொன்கள்வன்மறையிழந்தான் பூசுரருக்குரைவழங்கிப்
பின்புதவான்சிவதலத்திற் பெரும்பாவிபூசிக்கு
முன்புண்பான்குருநிந்தை மொழிவான்றன்னரகுறுவோம்.

(இ - ள்.) மின்னலைப்போற்பிரகாசிக்கின்ற உன்னுடைய ஆபரணத்தை நாங்களபகரித்திருந்தால் விரதந்தவறியவன் ஒழுக்கந்தவறியவன் பொன்னைத்திருடினவன் வேதத்தைக் கைவிட்டவன் பிராமணர்களுக்கு ஒன்றைக்கொடுக்கின்றேனென்று முன்வாக்குத்தத்தம்பண்ணிப் பின்கொடாதவன் சிவஸ்தலத்தில் பெரிய பாதகங்களைச்செய்தவன் சிவபூஜைசெய்வதற்கு முன்புசிக்கின்றவன் சற்குருவை தூஷிக்கின்றவன் ஆகிய இவர்கள் எந்நரகத்தையனுபவிப்பார்களோ அதனை யாங்களு மனுபவிக்கக்கடவோம். (எ-று.) (௯)

மணவாளன்பசிக்குதவாள் வஞ்சித்தாண்முன்புண்பாள்
குணமாகாளெதிர்சொல்வாள் குலம்பழித்தாள்வேறொருவற்
புணர்வாடன்கணவனைத்தன் புத்திரரைக்கொலைசெய்தா
டணவாநோய்செய்தாடன் றனிநரகம்புகக்கடவோம்.

(இ - ள்.) புருஷனுடையபசியறிந்து புசிப்புதவாதவள் புருஷனுக்கு முன்னேபுசிப்பவள் புருஷன்குணத்திற்கிசைந்த குணமில்லாதவள் புருஷன்சொல்லுக்கு எதிர்மொழி சொல்லுகின்றவள் வேறொருபுருஷனைக் கூடுகின்றவள் புருஷனையும் பிள்ளைகளையும்

கொன்றவன் புருஷனுக்கு சாபிமுதலானவைகளையூட்டி எப்போது நீங்காத வியாதியைச் செய்தவன் ஆகிய இவர்கள் எந்நரகத்தையனுபவிப்பார்களோ அதனை யாங்களும் அனுபவிக்கக்கடவோம். (எ-று.) (௧௦)

என்னுமுறையுடன்பின்னு மிசைத்தார்களதுதந்தாற்
றன்னுடையபணிகளெலாஞ் சிவனுணைதருகுவனென்
றன்னவருமுறைசெய்தா ளத்துணையிலந்தணன்போ
யென்னதுதான் றுயர்கின்றீ ரிதுவோவென் றுகொடுத்தான்.

(இ-ள்.) என்று சொல்லப்பட்ட சபதத்தோடு இன்னும் மேலான சத்தியவசனங்களையும் தெய்வப்பெண்கள் சொன்னார்கள்; அதுகேட்டுக் குபேரனது தங்கை அதனைக் கொடுத்தவர்களுக்கு எனது ஆபரணமுழுவதும் சிவாக்கினைப்படிக்குக் கொடுப்பேனென்றுசொன்னான்; அந்தச்சமயத்தில் அவர்கள் பேசிக்கொன்வதைக் கேட்டிருந்த விபசித்து முனிவர் அவர்களிடத்திற்போய் நீங்கள் என்கவலைப்படுகின்றீர்கள்? உங்களாபரணமிதுதானோவென்று அந்தமூக்கணியைக்கொடுத்தார். (எ-று.) தான்-அசை. (௧௧)

மட்டாருங்குழலாளு மனங்களித்துவாங்கியே
கிட்டாதகிட்டுதல்போற் கெண்டையங்கண்டனிலொற்றி
யெட்டாதவெண்ணமெலா மெண்ணினைமிருந்துயரான்
முட்டாமற்றந்தவனீ முன்னவனுதவையென்றாள்.

(இ-ள்.) பரிமளமிக்க அளகத்தையுடையவளாகிய குபேரன் தங்கையும் மனமகிழ்ந்து அதனைவாங்கிக் கிடையாப்பொருள் கிடைத்ததுபோலக் கெண்டையையொத்த இரண்டுகண்களிலும் ஒற்றிக்கொண்டு எமது மிகுந்த விசனத்தினால் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி வருந்தினோம்; அவ்வளம்வருந்தாதபடி இதனைக்கொடுத்த நீரே எனக்குத் தமையனாகுவீரென்றுசொல்லி. (எ-று.)



அந்தணநீயெந்தநக ரணையப்போம்பதியாதோ
விந்தவனத்தேன்வந்தா யிளைத்துமுகங்குறுவோர்வாய்
சொந்திருந்ததென்னுனக்குநுண்பணிதான்வந்தெவன்[று நீ.
றந்ததுவென்மொழியென்றாள் சதுர்மறையோன் மொழிகின்

(இ-ள்.) முனிவரோ! எந்ததேசத்திலிருப்பது? இப்போது எந்தத்தலத்தை நாடிப்போகின்றீர்? இந்தவனத்தில் ஏன்வந்தீர்? யாதுநிமித்தம் சரீரமிளைத்து முகத்திற் குறுவேர்வைகொண்டு மனம்வருந்தியிருக்கின்றீர்? உம்மிடத்தில் விலைமதிக்கக்கூடாதஇந்த ஆபரணம் எப்படிவந்தது? இதை என்னிடத்திற் கொண்டுவந்து கொடுத்த விதமென்னை? விவரமாகச் சொல்லுமென்றுவினாவினாள் அதுகேட்டு விபசித்துமுனிவர் சொல்லுகின்றார். (எ-று.) (௧௨)

பிறைநுதலாய்கோசலதேசத்தின்மணிபிங்கலையூர்க்
குறைவிலேனென்னுடைய குலத்தாதைதன்னுடனே
முறைமையுளதாயிறந்தாண் மூத்தவர்களறுவருளார்
நிறையுடனேயிறந்தார்க ளோரிழையாருடனிறந்தார்.

(இ-ள்.) மூன்றாம் பிறையையொத்த நெற்றியையுடைய அம்மையே! நான் கோசலதேசத்தில் மணிபிங்கலையென்னும் பட்டணத்தில் குறைவில்லாத செல்வத்தோடிருந்தேன்; அப்படியிருக்கும்போது என்னுடைய உயர்வுற்ற பிதாவினோடு நல்லொழுக்கமுள்ள தாயும் இறந்தனள்; எனக்கு மூத்தவர்கள் ஆறுபேரிருந்தார்கள்; அவர்களும் செல்வத்துடனிருந்து இறந்துவிட்டார்கள்; அவர்கள் மனைவியரும் கூடவேயிறந்துபோனார்கள். (எ-று.) (௧௩)

மனையவருநாளுமாய் மனையிலிருந்தோஞ்சிலநாள்
புனையிழையும்பிச்சைக்குப் புகன்றுமன்றுகிடையாம
லினையவகையாலிறந்தா ளியாலொருவனிறவாம
னினைவரியபேய்போல நிற்கின்றேனிலைகுலைந்து.

(இ-ள்.) பின்பு சிறிதுகாலம் என்மனையாளும் நானும் இல்வாழ்க்கையிலிருந்தோம்; அப்படியிருந்தகாலத்தில் தரித்திரமேவிட்டு அதனால் என்பெண்சாதியும் வீடுகள்தோறும் பிச்சைக்கும்போயலைந்துபிச்சைகிடையாமல் இவ்வகைத்துன்பத்தினால் இறந்துபோயினள்; பின்பு நானொருவனுஞ்சாகாமல் நிலைகெட்டு நினைத்தற்கரிய பேய்போலலையாநிற்கின்றேன். (எ-று.) (கரு)

குணத்தினாலழகாலென் குணங்களறிந்தினிதூட்டும்
வணக்கினாலறிவாலென் மனையாளுக்கிணைகாணேன்
பிணத்தைநேராயிருந்தேன் பேய்கண்மிருகங்களுக்கு
மிணக்கமொருபெண் ணுளதாலென்போலும்பாவிகளார்.

(இ-ள்.) குணத்தினாலும் அழகினாலும் என்குணங்களைத்தெரிந்து இனிமையாகவுண்பிக்கின்ற வணக்கத்தினாலும் அறிவினாலும் என்மனையாளுக்குச்சமானம் இந்தவுலகத்தில் ஒருவரையுங்கண்டறியேன்; நான் இப்போது நடைப்பிணத்துக்கொப்பாயினேன்; பேய்களுக்கும் மிருகங்களுக்குங்கூட கூட்டுறவிற்கு ஒவ்வொருபெண் இருக்கின்றது; அதுதானுமில்லாத என்னையொத்தபாவிகள் இந்தவுலகத்தில் எவர்களிருக்கின்றார்கள். (எ-று,) (கசு)

சம்பத்திற்கருத்துமிலேன் றனிமுத்தியடைவானே
சம்பத்திலொன்றுமிலேன் றனிமுதுகுன்றுண்டதிலே
சம்பத்திற்சென்றக்காற் சகலமுமுண்டாமென்றான்
சம்பத்திற்கணநாதன் றனிமுதுகுன்றறிகிலனே.

(இ-ள்.) இனி எவ்வகைப்பட்ட சம்பத்திலும்இச்சையில்லை; தனித்த முத்தியையடையவிரும்பின் (அடைபவர்க்குரிய புறத்திலக்கணமெனப்படும்) அன்பின் செயல்பத்தினுள்ளே 'ஒன்றும்' பெற்றேனில்லை; (இப்படிப்பட்ட என்னை நோக்கி) ஞானச்செல்



வத்தையுடைய ஓர்கணத்தலைவர் நிகாற்ற விருத்தகிரியென்று ஒருதலமுண்டு அதிலே கிரமப்படி செல்வையேல் சகலமேன்மையும் உனக்குண்டாமென்று கட்டளையிட்டார்; அத்தலம் இத்திசையிலிருக்கிறதென்று யானறிகிலேன், (எ-று.)

புறத்திலக்கணம்பத்தாவன:— விபூதிருத்திராக்ஷ மென்னும் சிவசின்னங்களைத்தரித்தல், குருவைவழிபடல், சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபெருமானைப்பூசைசெய்தல், சிவதருமங்களைச்செய்தல், சிவபுராணங்களைக் கேட்டல், சிவாலயதரிசனஞ்செய்தால், சிவனடியாரிடத்தன்றிப் பிறரிடத்துப் போசனம் பண்ணாமை, சிவனடியார்களுக்கு வேண்டியவை கொடுத்தல் என்பவைகளாம்.

சம்பத்திற் சென்றக்காலென்பதற்குக் கிரமப்படிசெல்லையேல் என்பதனைத் தாற்பரியப்பொருளாகக் கொள்க. (கஎ)

படுத்திருந்தேன்மரத்தின்கீழ்ப் பணிவிழுந்ததென்மடியி
லெடுத்துமக்குத்தந்தேன்மற் றிவ்வளவேயெனச்சொன்
னடுத்துநின்றமெங்கையரு மளகேசன்றங்கையருந்
தடுத்துரையாமொழியினையுந் தளர்வினையுங்கண்டிரங்கி.

(இ-ள்.) ஒரு விருக்ஷத்தினிழலின்கீழ்ப் படுத்துக்கொண்டிருந்தேன், அப்பொழுது இந்தமூக்கணி என்மடிமேல்வந்து விழுந்தது; அதைஎடுத்துவந்து உங்களிடத்திற்கொடுத்தேன்; நடந்ததுவை இவ்வளவேயன்றி வேறொன்றுமில்லையென்று விபசித்துமுனிவர் சொன்னார், அதுகேட்டு சமீபத்திலிருந்த தெய்வப்பெண்களும் குபேரனுடையதங்கையாரும் அவரதுமறுத்துச்சொல்லாதவசனத்தையும் சீரத்தளர்வையும்பார்த்துமனதிலிரக்கங்கொண்டு.(எ-று.)

தெய்வமுனியிவனளவிற் சிவன்விளையாட்டெனத்தெளிந்து
பொய்கைவாயிலனுண்ணப் போதிசோறுபரிந்தளித்துத்

தையலாளாபரணந் தன்னையவன்கையிலளித்
தையன்முதுகுன்றனுக்கே யாக்குவாயெனவறைந்து.

(இ-ள்.) தெய்வத்தன்மைபொருந்திய இந்தவிபசித்துமுனிவாளவிலே உண்டானவைகளெல்லாம் பரமசிவனது திருவிளையாட்டென்று ஆலோசித்துத் தெளிந்து அவர்பொய்மையிற்புசிக்கும்படி அன்புடன் கட்டுமுதுகொடுத்து குபேரனது தங்கையார் தானணிந்திருந்த எல்லாவாபரணங்களையும் விபசித்துமுனிவர் கையிற்கொடுத்து இவைகளை சமதுகர்த்தாவாகிய பழமலைநாதரது திருப்பணிக்கே உபயோகமாகும்படி செய்விப்பீரென்றுசொல்லி. (எ-று.)

அருமறையோன்றன்னையும்வைத் தாகாசவிமானத்திற்
றிருமுதுகுன்றத்தளவுந் தெய்வமடவாரணைந்து
கருணையனைத்தொழுதேத்திக் காதலுடன்முதுகிரியின் [கள்.
பெருமையவன்றனக்குரைத்துப் பெயர்ந்துடங்கொண்டார்

(இ-ள்.) அந்தத் தெய்வப்பெண்கள் விபசித்துமுனிவரையும் அந்தரத்திற் செல்லுகின்ற விமானத்தில்வைத்துக்கொண்டு அழகியவிருத்தகிரிபரியர்தம்போய், கிருபாமூர்த்தியாகிய பழமலைநாதரை வணங்கித்துதித்து, பழமலையின்மகத்துவத்தை விபசித்துமுனிவருக்கு ஆசையோடு வற்புறுத்திச்சொல்லி. அவ்விடம்விட்டுத் தெய்வலோகத்தின் வழிபற்றிப் போனார்கள். (எ-று.) (௨௦)

தேவரவரிவன்மனிதன் செல்வரவரிவன்கட்டக்
கோவணமிலான்வந்து கூடியவாகணநாதன்
காவன்மொழிதானன்றோ கற்பகமுங்குருமொழியு
மேவுபெரியோர்மொழியும் விதிதவறினுந்தவறா.

(இ-ள்.) அவர்கள் தேவமாதர்கள்; இவர்மனிதர்; அவர்கள் செல்வத்தையுடையவர்கள்; இவர்கட்டுதற்குக் கோவணமுமில்லாத



வர் இங்ஙனமிருக்கக், கணநாதருக்கிரகஞ்செய்த உண்மைவாக்கியத்தினலல்லவோ அவர்கள் இவரிடத்தில்வந்து சந்தித்தது; பிரமாவினது நியமிப்புதவறிப் போய்விட்டாலும் கற்பகவிருக்ஷமும் குருவாக்கியமும் விரும்பத்தக்கபெரியோர்வாக்கியமும் ஒருக்காலுந் தவறமாட்டா.

(வேறு.)

தணிவுற்றகருத் துளதாபதனு
மணிமுத்தநதிப் புனலாடியபோ
பணிவைக்குமிடம் பலசிந்தைசெயூ
மணிமுத்தநதிக்கரை மன்னினனே.

(இ-ள்.) சாந்திபெற்ற உள்ளத்தையுடைய விபசித்துமுனிவரும்திருமணிமுத்தாநதியில்ஸ்நானஞ்செய்துதம்மிடத்திலிருக்கும் ஆபரணங்களைவைத்தற்குப் பல இடங்களைச் சிந்தித்துக்கொண்டு மணிமுத்தாநதிக்கரையிற் சேர்ந்திருக்கின்றார். (௨௧)

அப்போதநள்வா னிபறைந்ததுவான்
மெய்ப்பால்விபசித் திவண்வந்தனையே
வைப்பாய்பணிவன் னியில்வன்னியையு
மிப்போதுயர்கற் பகமென்றறிவாய்.

(இ-ள்.) அப்பொழுது பரமசிவனது திருவருட்சொருபமாகிய அசரீரிகூறியது; உண்மைத்தன்மையுடைய விபசித்துவே! நீ இந்தஸ்தலத்திற்குவந்தாயே; இப்போது உன்கையிலிருக்கும் ஆபரணங்களை இந்த வன்னிவிருக்ஷத்தில்வை, இந்தவன்னிவிருக்ஷத்தையும் உயர்ந்த கற்பகவிருக்ஷமென்றறிந்துகொள், (எ-று.) (௨௨)

சிறையிற்பிறவிக் கனைதீர்ந்தனையே
யிறையிற்பரமுத் தியையெய்தினையே
முறையுற்றவுமோ ரசன்முன்னமரீஇ
யுறையுற்றுபதே சமுணர்ந்திடுவாய்.

(இ - ள்) அநாதியாகப் பிறவியாகியசிறைச்சாலையில் அகப்பட்டிருந்த உனது துன்பமெல்லாம் நீங்கினாய்; ஒருகணப்பொழுதில் மேலானமித்திலையடைந்தாய்; வேதசாஸ்திர முறைமையினொழுகும் உரோமசமுனிவர்பால் மருவியிருந்து பிரமோபதேசத்தைப் பெற்றுக்கொள். (எ-று.) (உச)

நிறையாததவத் தைநிறைத்திடுவா
யிறையோனும்வெளிப் படுமென்றிடலான்
மறையோனதுகேட் டுமனங்குளிரா
வுறையார்தருவிற் பணியுய்த்தனனே.

(இ - ள்) அங்ஙனம் பெறுவையேல் முற்பிறப்பிற்செய்துமுடியாத தவக்குறைவைப் பூரணமாக முடித்துக்கொள்வாய்; அத்தவமுடிவில் பரமசிவமும்வெளியாகுவரென்று அவ்வசரீரிகூறுதலால் அதுகேட்டு விபசித்துமுனிவர் மனங்குளிர்ந்து உயர்ச்சிபெற்ற வன்னிவிருக்ஷத்தில் அவ்வாபரணங்களை வைத்துவிட்டு. (எ-று.) (உடு)

அன்புற்றவுரோ மசரைப்பணியா
முன்புற்றருள்வா னின்மொழிப்புகல
வின்புற்றிவனுக் கிவையென்கொலெனுப்
பின்புற்றபெருந் தவமென்றனரே.

(இ - ள்.) யாவரிடத்தும் இரக்கமிக்க உரோமசமுனிவரை வணங்கிப் பரமசிவன் அருளினாலுண்டான அசரீரிவாக்கியத்தைச் சொல்ல, அதை அவர்கேட்டு ஆனந்தித்து இந்தவிபசித்துவுக்குஇவ்வகைப்பட்ட தெய்வானுகூலம் எதனாலுண்டாயிற்றென்று ஆலோசித்துப் பின்பு முற்சனனங்களிற் செய்துள்ள தபோபலனென்றுணர்ந்தருளி. (எ-று.) (உசா)



உண்மைச்சிவநல் லுபதேசமெலாந்
திண்மைத்தவரோ மசர்செப்புதலால்
வண்மைத்தவர்கேட் டுமனங்குளிரா
வண்மைத்தவமே வவிணைந்தனனே.

(இ - ள்.) இடம்பெற்ற தவமுதிர்வையுடைய உரோமசமுனிவர் உண்மையாகிய நன்மைமிகுந்த சிவஞானோபதேச முழுமையும் அனுக்கிரகஞ்செய்தலால்; வளம்பொருந்திய தவத்தையுடைய விபசித்துமுனிவர் கேட்டு மனங்குளிர்ந்து, அந்தஉரோமசமுனிவரது சமீபத்திற்றானேயிருந்து நிஷ்டைசெய்யத்தொடங்கி. (எ-று.) (உஎ)

வேறு.

நலங்கொண்டநதிமூழ்கி நல்லமுதுகுன்றர்தமை
வலங்கொண்டுபணிந்தேத்தி வனசமலராற்பூசித்
திலங்கமுதுசெயப்பண்ணி யெட்யிலத்தானெய்யா
லலங்கவிளக்கேற்றியெழுத் தைந்தையுமேசெபஞ்செய்து.

(இ - ள்.) விபசித்துமுனிவர் நன்மைபொருந்திய திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து நலமிகுந்தவிருத்தாசலேசரைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கித்துதித்து தாமரைப்புஷ்பங்களாலர்ச்சனை செய்து பிரகாசிக்கின்ற திருவமுது நிவேதித்து எள்ளினெய்யினாலும் பசுவினெய்யினாலும் திருவிளக்குகள் எங்கள் பிரகாசிக்க வேற்றிப்பஞ்சாக்ஷரசெபஞ்செய்து. (எ-று.) (உஅ)

துறவுநிலைகைகூடிக் குருசேவைதொலையாமன்
மறமிலாச்சருகுசலம் வாயுவேயுணவாகி
யிறமுனபஞ்சாக்கினியி னிலத்திலொருவிரலூன்றி
யறவுடைய்தவமுடுகி யோரைந்துமுள்ளடக்கி.

(இ - ள்.) துறவுநிலையைப்பெற்று ஆசாரியருடைய தரிசன நீங்காமலிருந்து குற்றமற்றசருகு நீர் காற்று இவைகளே பக்ஷணமாகக் கொண்டு ஒளிபொருந்திய பஞ்சாக்கினிமத்தியில் பூமியிற் பெருவிரலை ஆதாரமாகவூன்றிக்கொண்டு ஆத்மலாபமாகிய மகாதவத்தி லதிகரித்துப் பஞ்சேந்திரியங்களையும் அகமுகத்தில் ஆமைபோலொடுக்கி,

ஆகமதன்கணைநான்கு மழிவிலாக்குணமூன்றும்
போகபுலனைந்தும் பொறியைந்துநாற்கரண
வேகவிகாரம்பூத விகாரங்களிவைமாறி
யேகமாய்ச்சிவனுடனே யிரேசகவாயுவைவிட்டு.

(இ - ள்.) இருதயஸ்தானத்திலிருந்து மன்மதனால்விடப்படுகின்ற நீலமல்லாத நான்குபாணமும் கெடாதமுக்குணங்களும் போகத்திற்குக் காரணமாகிய சத்தாதி பஞ்சவிஷயங்களும் பஞ்சேந்திரியங்களும் வேகமாகிய அந்தக்கரணவிகாரமும் பஞ்சபூதவிகாரமுமாகிய இவைகள்நீங்கிச் சிவத்தோடுகலந்து இடைகலைவழியாக அகத்துள்ள அசுத்தவாயுவைப் புறத்தில்விடுத்து. (எ-று.) ()

பிங்கலையால்வாயுவினைப் பெறவாங்கிச்சுழுமுனையா
லங்கமலநேர்நிறுத்தி யாதாரவழிதிறந்து
தங்குகபாலத்தினடு வெளியாக்கத்தவாக்கினிபோய்ப்
பொங்குமலம்வற்றறுத்துப் புறத்தலத்திற்புறப்பட்டு.

(இ - ள்.) பிங்கலைவழியாகப் புறத்திலுள்ள சுத்தவாயுவை உள்ளுறவாங்கிச் சுழுமுனை வழியால் வாயுவைச் சகஸ்திரதளகமலத்திற்கு நேராகநிறுத்தி ஆறாதாரவழிகளைத்திறந்து பொருந்திய கபாலமத்தியை வெறுவெளியாகச்செய்ய? அப்பொழுது அதிலுண்



டான தவாக்கினியானது சென்று அகமுகத்தில் அநாதியாய்நிறைந்துள்ள மலபந்தங்களை வேறச்சுட்டெரித்துப் பூர்ணவியாபகமாகப் பகிர்முகத்திற் புறப்பட்டு. (எ-று.) (௬௧)

புவனங்களொருமூன்றும் புகைபரம்பக்கனல்பரப்பத்
தவனங்கொண்டுயிர்சலிப்பச் சாகரத்திற்சராசரங்கள்
கவனங்கொண்டலங்கல்செயக் கடவுளருநடுநடுங்கப்
பவனன்றனுடல்வேகப் பனிமதியம்பரிதவிப்ப.

(இ - ள்.) அந்தத் தவாக்கினியானது மூன்றுலோகத்திலும் புகை பரவும்படி அக்கினிசுவாலையை வீசினமாத்திரத்தில், சகலவுயிர்களும் தாபமேலிட்டு மனஞ்சலிக்கவும் சமுத்திரத்திலுள்ள சரவுயிர்களும் அசரவுயிர்களும் கலக்கமடைந்து பதைக்கவும் தேவர்களும் மிகுந்த நடுக்கங்கொள்ளவும் வாயுவின்சரீரம் வெந்தெரியவும் குளிர்ச்சிபொருந்திய சந்திரன் பரிதவிப்படையும். (எ-று.) (௬௨)

உலகிலுள்ளோர்படுந்துயர முமையம்மைகண்டருளி
யலர்கொண்டுபதம்போற்றி யண்ணலேவிபசித்தி
னிலவுதவக்கனன்மூடுகி நெடிதுயிர்கட்விக்கின்ற
விலகவெழுந்தருளியவ னெதிர்நிற்கவேண்டுமென.

(இ - ள்.) இப்படி உலகத்திலுள்ளவர்கள் படுகின்ற துன்பத்தைப் பெரியநாயகியார்கண்டு திருவுளமிரங்கிப் பழமலைநாதருடைய பாதத்திற் புஷ்பங்களைக்கொண்டு பூசித்துவணங்கி நின்று சுவாமீ! விபசித்துமுனிவன் செய்கின்ற பிரகாசம்பொருந்திய தவாக்கினியானது எங்குஞ்செறிந்ததனால்சகலவுயிர்களும் மிகுந்ததாபத்தைப் பொருந்தி வருந்துகின்றன; ஆதலால் தேவரீர் அந்தவிபசித்துவுக்கெதிரே சுயம் பிரகாசமாக எழுந்தருளித் தரிசனங் கொடுத்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தருளினார். (எ-று.) (௬௩)

தக்கதிருமலைக்கிழத்தி தருமொழியைக்கேட்டருளி
முக்கண்ணுநாற்றோளு முகிலஞ்சங்குழலாறும்
பக்கமதிச்செஞ்சடையும் பான்மொழியாளிடப்பாலுஞ்
செக்கர்வடிவுந்தோன்றச் சிவபெருமான்முன்னின்றான்.

(இ - ள்.) தகுதியாகிய விருத்தகிரிக்குரிய பெரியநாயகியார் விண்ணப்பஞ் செய்தருளிய திருவாக்கைக்கேட்டவளவில் மூன்று கண்களும் நான்குபுயங்களும் மேகமஞ்சுகின்ற அளகத்தையுடைய கங்கையும் அர்த்தசந்திரனைத் தரித்திருக்கின்ற சிவந்த ஜடாமகுடமும் பால்போலும் வசனத்தையுடைய உமையம்மை வசிக்கின்ற இடப்பாகமும்செவ்வானம்போன்ற திருமேனியும் பிரகாசிக்கும்படி பரமசிவன் விபசித்துமுனிவரெதிரே எழுந்தருளிநின்றார். (எ-று.)

தம்பிரான்றோன்றுதலாற் சகலவுயிருந்தோன்ற
வெம்பிரானுளங்குளிர வெவ்வுயிருமுடல்குளிர
வும்பர்முழவிடிமுழங்க வொளிர்மலர்மாரியும்பொழிய
விம்பர்விபசித்துவெழுந் தெதிர்பணிந்துமுறையிடுவான்.

(இ - ள்.) பரமசிவன்விளங்கினபடியால் சகலவுயிர்களும்விளக்கமுற, எமது பிதாவாகிய பழமலைநாதர் திருவுளமகிழ்வு கொண்டபடியினால் எல்லாவுயிர்களும் முன்னையதாபநீங்கிச் சரீரங்குளிர்ந்து மனமகிழ்வடைய, அப்பொழுது அந்தரதுந்துபிகள் இடிபோல முழங்க, தேவர்களெல்லாரும் பிரகாசம்பொருந்திய புஷ்பவருஷம் வருஷிக்க, இவ்விடத்திற்றவஞ்செய்துவந்த அழகியவிபசித்து முனிவர்கண்டு எழுந்து பரமசிவனுக்கெதிரே அஷ்டாங்கமுறப்பணிந்து குறையிரந்து துதிக்கின்றனர். (எ-று.) (௧௫)

மருளுறுத்தும்பெரும்பாச வலைவளைத்தைம்பொறியாய்
வெருளுறுத்துநாயேவிப் புலவேட்டைவிளையாடி



யிருளுறுத்தும்வெறுவெளியி னின்றேனையெடுத்தாட்கொண்
டருளுறுத்துமுதுமலையி லருட்கட னின்பதம்போற்றி.

(இ - ள்.) மயக்கத்தைவிளைக்கும் ஈஷணாத்திரய மென்னும் பெரியபாசமாகிய வலையைவளைத்துச் சுரோத்திராதி பஞ்சேந்திரியங்களாகிய அச்சத்தை விளைக்கும் நாய்களையேவிச் சத்தாதி விஷயங்களாகியவேட்டை விளையாடிக்கொண்டு அஞ்ஞானமாகிய வெறுவெளியிலிருந்த அடியேனை எடுத்து அடிமைகொண்டு திருவருள் பதிவிக்கும் பழமலையிலெழுந்தருளிய கிருபாசமுத்திரமே உம்முடைய திருவடிகள் எங்களை எப்பொழுதும் காக்க. (எ-று.)

வாழியவென்னும் வியங்கோள் வாழியென நின்றாற்போல, போற்றிய வென்பது ஈறுகுறைந்து போற்றியெனநின்றது. (௧௬)

காவலிலாப்பெரும்பாசக் காட்டுவழிதிசைதப்பிப்
பாவமெனும்புலியலைப்ப விடயத்திப்பரந்துசுடத்
தாவிவருமாசைப்பேய் தழீஇக்கொள்ளத்தடமாறிக்
கூவலின்வாய்வீழ்வேற்குன் குளிர்ந்தமலர்ப்பதஞ்சரணம்.

(இ - ள்.) காவலில்லாத பெரியபாசமாகிய காட்டு வழியிற்சென்று திசைதடுமாறிப் பாவங்களாகியபுலிகள் பயமுறுத்திவருத்தவும் சத்தாதி விஷயாக்கினியானது பரவிச்சுடவும் அலைவருகின்ற ஆசையாகிய பசாசங்கள் பிடித்துக்கொள்ளவும் இவற்றால் வழிதப்பிப் பிறவியாகிய பாழ்ங்கிணற்றில்விழுகின்ற அடியேனுக்கு உம்முடைய குளிர்ச்சிபொருந்திய பாதாரவிந்தங்களே புகலிடம். (எ-று.) (௧௭)

வேறு.

அஞ்சவிதந்தா லாறுமதந்தா
னெஞ்சமுற்று மினைவால்வினையா

மெஞ்சகடிப்பா லெய்த்தேனத்தா
தஞ்சமிறுத்தா சரணஞ்சரணம்.

(இ-ள்.) சுரோத்திராதி பஞ்சேந்திரியங்களாலும் காமம் குரோதம் உலோபம் மோகம்மதம் மார்ச்சரியமென்னும் அறுவகைவெறிக்குணங்களாலும் மனத்தைச்சுழற்றுகின்ற பலவினைவினாலும் இருவினைகளாலும் ஈனமுள்ள பொய்க்கூத்தினாலும் இளைத்துப் போயினேன்; என்னத்தனே! சகலலோகாதாரமாகிய நடனவினோதனே! உம்முடைய திருவடிகளே எனக்குப்புகலிடம். (எ-று.)

அந்தகர்தொடையா லடுமதர்படையா
னிந்தனைவிழைவா னிரயக்குழியா
லுந்தியினிரையா லுறுபிணிவலையா
லைந்தனன்முதுகிரி நாதாசரணம்.

(இ-ள்.) இயமதூதர்கள் கட்டுகின்ற பாசக் கயிற்றினாலும் மன்மத பாணத்தினாலும் பெரியோர்களை யறியாமையால் நிந்திக்க விரும்பியதினாலும் நரகக்குழிகளிற்கிடந்து வாதை படுதலினாலும் வயிற்றுக்கிரை தேடுதலினாலும் மிகுந்த வியாதிகளாகிய வலையினாலும் வருந்தினேன்; பழமலைநாதரே! தேவரீருடைய திருவடிகளே அடியேனுக்குப் புகலிடம். (எ-று.) (௩௯)

எய்யாநான்முக னென்றுளனன்றே
யுய்யாவுடல மெடுத்தேனுன்றன்
மெய்யாக்கண்டில னெய்யிதுசரியே
யையாமுதுகிரி யப்பாசரணம்.

(இ-ள்.) சிருட்டித்தொழிலில் இளைப்படையாதபிரமதேவர் என்று உண்டாயினரோ அன்றுமுதல் இளைப்பில்லாத பலசரீரங்களை எடுத்தெடுத்துழன்றேன்; இதுவரையிலும் தேவரீருடைய பாததரி



சனத்தை உண்மையாகக் கண்டறிகிலேன்; அப்படி காணாமைக்கு இந்தச் சரீரமிருப்பதே சாக்ஷியாம்; ஆதலால் ஐயனே! பழமலையி லெழுந்தருளிய என்னப்பனே! உம்முடைய திருவடிகளுக்கு அடியேனுக்குப் புகலிடம். (எ-று.) (௪௦)

இதமாமுறையோ வெனும்வேதியனை
நதிசேர்சடையான் மகிழ்வாய்நக்க
முதுமாமலையிற் பணியேமுறைப்பா
லிதமாமறையோய் விழைவாயென்றான்.

(இ-ள்.) இங்ஙனம்துதியாக முறையிடுகின்ற விபசித்து முனிவரைப்பார்த்து கங்கையணிந்த சடையையுடைய பரமசிவன் திருவுளமகிழ்ந்து கூறுபட்ட பெருமைவாய்ந்த வேதநெறியொழுகும் விபசித்துமுனிவனே நீமது விருத்தாசலத்திற் றிருப்பணியையே முறைப்படி விரும்பியற்றுவாயாக என்றருளினர். (எ-று.)

வேறு.

விப்பிரனும்பழமலையின் மெய்ப்பொருடான்விளம்பக்கேட்
டப்படியேசெய்கின்றே னடியேற்குமுன்னின்று
செப்பியதுநினைந்தபடி செய்தருளியுமையுடனே
யிப்படியேயில்லென்று னெம்பெருமானேயென்றான்.

(இ-ள்.) பழமலையின்கண் ணெழுந்தருளிய உண்மைப்பொருளாகிய பரமசிவன் திருவாய்மலர்ந்தருளியதை விபசித்துமுனிவர் கேட்டு சுவாமீ! அப்படியேசெய்துவருகின்றேன்; அடியேனுக்குப் பிரசன்னமாகியருளிய திருப்பணித்தொழிலைத் தேவரீருடையதிருவுள்ளத்திற்குறித்தபடி நிறைவேறச்செய்வித்து எப்போதும் இத்திருவுருவமாகவே நீர் உமையவளோடும்விளங்கித் தரிசனங்கொடுத்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தார்; அதுகேட்டு ஜகதபிதாவாகிய பழமலைநாதரும் அங்ஙனமே நல்லதென்று திருவாய்மலர்ந்தருளினர். (எ-று.) (௪௨

அருள்செய்யக்கேட்டிறைஞ்சி யர்தண்ணுவன்னியின்மேற்
பொருளெடுப்பானேறுதலும் பூசாவனைகற்பகநான்
றெருளுலாஞ்சிவபூசை செயவந்தேன்றிருப்பணிக்கு
வெருளிலாப்பொருடருவே னெனவன்னிவிளம்புதலும்.

(இ - ள்.) பரமசிவன் அருளியதைக்கேட்ட விபசித்துமுனிவரும் அவரைவணங்கி வன்னிவிருக்ஷத்தில் வைத்துள்ள ஆபரணங்களை எடுப்பதற்கு அந்தவிருக்ஷத்தின்மேல் ஏறினபொழுது, ஓ விபசித்துமுனிவரே! நான் கற்பகவிருக்ஷம்; இந்தஸ்தலத்தில் தெளிவுபொருந்திய சிவபூசைசெய்யவிரும்பிவந்தேன்; பழமலைநாதருடைய திருப்பணியைக்குறித்து வேண்டியமட்டும் உத்தமமானபொருளைக் கொடுப்பேன்; என்று அவ்வன்னிமரம்சொன்னமாத்திரத்தில். எ-று.

எழில்வன்னிப்பொருடன்னை யெடுக்கெடுக்கவளர்ந்தேறப்
பழமலைபார்திருக்கோயிற் பணியெல்லாநிறைவேறச்
செழுமையுள்விடையேறி தேரேறத்தெருவேறக்
கொருமையுடன்சிவனடியார் குடியேறச்செய்தமைத்தார்.

(இ - ள்.) அழகிய வன்னிவிருக்ஷத்திலுள்ள திரவியங்களை எடுக்க எடுக்க வளர்ந்து விர்த்தியாகிக்கொண்டிருப்பதால் பழமலைநாதருடைய ஆலயத் திருப்பணிமுழுமையும் முடிதலும், வளம்பொருந்திய இடபவாகனத்தையுடைய பரமசிவனெழுந்தருளும்படிதேரும், அத்தேரோடுகின்றவீதியும்செய்வித்து அவ்வீதிமுழுமையும் சிவனடியார்கள் செல்வத்தோடும் குடிபுகவும் ஏற்படுத்தினர். (எ-று)

தேரும் தெருவும் செய்துகுடியேற வமைத்தாரென்பது கருத்து. தெருவேறவென்பதற்குத் தெருமுழுமையு மெனக்கொள்க.

நித்தவிழாமாதவிழா நிறைசோலைநந்தவன
மந்திரொலிவாச்சியங்க ளரம்பையர்களானிரைகள்




பத்தர்மடம்பயில்வித்துப் பரமசிவன்பதத்தடைந்தான்
முத்தனவன்பதம்போற்றி முதல்வனடம்புகல்கின்றும்.

(இ - ள்.) நித்தியவிழாக்கள் மாதவிழாக்கள் தழைந்தசோலைகள் நந்தனவனங்கள் ஆனைகள் சத்திக்கின்றபலவாத்தியங்கள் தேவதாசிகள் பசுக்கூட்டங்கள் அடியார்கள் வசிக்கின்ற மடாலயங்கள் முதலியவும் ஆலயத்திற்கு அங்கங்களாக ஏற்படுத்திப் பரமசிவனுடைய திருவடியில் இரண்டறக்கலந்தனர். இங்ஙனம் பாசத்தினின்று நீங்கிய அவ்விபசித்து முனிவருடைய திருவடிகளை வணங்கிக்கொண்டு பரமசிவன்செய்தருளிய திருநடனத்தைச் சொல்லுகின்றேம். (எ - று.) (௬௫)

விபசித்துச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௧௱௨.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆறாவது,

# நிருத்தச்சருக்கம்.

வேறு.

தேவதேவனைத்திருமுதுகுன்றிற் சென்றுசென்று சிறிதுந்தவமில்லாப், பாவகாரிகளாயினரெல்லாம்பரமர்பாதமடைகின்றனரென்னக், காவலாளர்களெண்வகையோருங் கடவுளாகியதேவர்கள்யாரும், பூவின்மேலயனைவணங்கப் பூமகன்றிருமாலைவணங்க.

(இ - ள்.) அணுவளவுந் தவம்புரியாமல் அவமே புரிகின்ற பாவ சொரூபரானவர்களெல்லாரும் தேவாதிபராகிய பரமசிவனது நல்ல அழகிய விருத்தகிரியிற்போய் அப்பரமசிவனது திருவடியை எளிதிற் பெறுகின்றார்களென்று அஷ்டதிக்குப்பாலகருந் தலைமைபெற்றதேவர்களுஞ் செந்தாமரை மலரில்வசிக்கின்ற பிரமதேவனை வணங்கிச் சொல்ல அவர் விஷ்ணுமூர்த்தியை வணங்கிச் சொல்லலும். (எ-று.) (க)



நாரணன்பிரமன்முதற்றேவர்க ணங்கணல்லமுதுகுன்றினைநண்ணி, யாரணந்திசைதோறு முழங்க வண்டர்தொண்டர்களோசைமுழங்கப், பேரணங்கொடுவாழ்முதுகுன்றர் பெரியகோயிலின் முன்னர்வணங்கிச், சீரணங்குதிருநாமமறைபோற்றித் திகழுமஞ்சலிசெய்து முன்னின்றார்.

(இ - ள்.) அவ்விஷ்ணுமூர்த்தி பிரமதேவர்முதலிய சகலதேவர்களும் நன்மைபொருந்தியாமதவிருத்தகிரிக்குப்போய்ச்சேர்ந்து, திசைகடோறும் வேதங்கள் கோஷிக்கவும் தேவர்களுடைய வாழ்த்தொலியும், அடியார்களோதுகின்ற திருப்பதிகத்தொலியும் முழங்கவும் பெரிய நாயகியாரோடுவாழுகின்ற பழமலைநாதருடைய ஆலயத்தில்பெரிய சந்நிதியின்முன்வந்து நமஸ்காரஞ்செய்து சிறப்புமிகுந்த அழகிய வேதவாக்கியங்களையெடுத்தோதி அஞ்சலியஸ்தராய் நின்றார்கள். (எ-று.) (உ)

வந்ததேவர்கடங்கள்கருத்தை மாதுபாகர்திருவுள்ளமறிந்தே, சிந்தைசெய்துதிருவாய்மலராத செயலறிந்துவிபசித்துவணங்கி, நந்திதேவர்தமக்குரைசெய்ய நந்திபெம்பெருமாற்குரைசெய்ய, வந்தணாளன்விபசித்தினிடத்தி னருளினாலமலன்வெளியானான்.

(இ-ள்.) இங்ஙனம்வந்திருக்கின்ற தேவர்கள்கருத்தைப் பெரியநாயகியையிடப்பாகத்திலுடையபரமசிவன் திருவுளத்திற்றெரிந்து சிந்தித்து அவர்கள்வரும்படி திருவாய்மலர்ந்தருளாத செய்கையை விபசித்துமுனிவரறிந்து நந்திதேவரைப்பணிந்து விண்ணப்பஞ்செய்ய, அவரெமதுகர்த்தாவாகிய பழமலைநாதருக்கு விண்ணப்பஞ்செய்தலும், அதுகேட்டு நிருமலராகியபரமசிவனும் அந்தணராகியவிபசித்துமுனிவரிடத்திலவைத்தகிருபையினாலே வெளிப்பட்டருளி நா

அண்டகோளகைவிண்டுபிளக்க வமரர்துந்துபியாவுமுழங்கத்,தொண்டரார்ப்பொலிமேலைதூக்கத் தொக்கபூதகணதுந்துபியோங்க, வெண்டிசைக்கணிலங்கணாத செள்விழும்படியின்றிநெருங்க, மண்டுசோதிசொளிமேவடிவாகி வானநாயகன் வந்துமுன்னின்றான்.

(இ - ள்.) அண்டகடாகம் அநேகவிடங்களில் வெடிபட்டுப் பிளக்கும்படி தேவதுந்துபிகளெல்லாஞ் சத்திக்கவும், அடியார்களுடைய வாழ்த்தொலி சமுத்திரகோஷத்தை ஓட்டிவிடவும், நிரந்த பூதகணங்கள்முழக்குகின்ற வாத்தியங்கள் மிகுந்துசத்திக்கவும், அஷ்டதிக்குகளினிடங்களில் அழகியகணநாதர்கள் எவ்விழுதற்கிடமில்லாமல் நெருங்கவும், பரிபூரணஞானப்பிரகாசமேசொரூபமாகிப் பரமசிவன்தேவர்கள்முன்னே வந்துநின்றருளினார். (எ-று.)

விண்ணவர்க்குவெளியாகியவண்ணன் மேயபேரொளிகண்டுநடுங்கிக், கண்ணைமூடிமுறையோமுறையோவெங் கண்கள்கண்டிடநின்றருளென்றார், பெண்ணணங்கருட் கண்ணருள்செய்தாள் பேதைபாகனுங்காட்சிகொடுத்து, நண்ணுதேவரைக்கண்டுநகைத்து நன்மைதானபெரிதோவுமக்கென்றான்.

(இ - ள்.) தேவர்களுக்குமுன் வெளிப்பட்டுகின்ற பரமசிவன் கொண்டுள்ள சுயம்பிரகாசசொரூபத்தைக்கண்டு சகலதேவர்களும் நடுக்கமடைந்து கண்களைமூடி இவ்வாறு சோதிசொரூபமாக விளங்குதல் முறைமையோ! முறைமையோ! எங்கள்கண்கள் காணும்படிநின்று தரிசனங்கொடுத்தருளவேண்டுமென விண்ணப்பஞ் செய்தார்கள்; அதுகேட்டுத் தெய்வத்திருவுருவால் விளங்கும் உமாதேவியார் கிருபாதிருஷ்டியினாலே நோக்கியருளலும்; அத்தேவியாரை இடப்பாகத்திலுடைய பரமசிவனும் தரிசனங்கொடுத்துநின்று,



அவ்விடத்திலிருந்த தேவர்களைப்பார்த்து நகைத்து, ஓ தேவர்களே! உங்களுக்கு சுகம் மிகுந்துள்ளதோவென்று கேட்டருளினார். (எ-று.) (௭)

சிறந்ததேவர்கள் செப்புகின்றார்கள் தேவதேவசிவசங்கரவெங்கட், கறங்களாமதிகாரமளித்தா யப்பதத்தில் வந்தேறுநரில்லைப், பிறந்தயோனிகள்பாலையுமிந்தப் பெரியதாருமுத்தாநதிமூழ்கிக்,கறங்கியிலாதுநின்பாதம்வணங்கிக் கதிகள்சேர்ந்து களித்திடலாலே.

(இ - ள்) சிவபெருமா னருளியதைக்கேட்ட மேன்மைபெற்ற தேவர்கள் சொல்லுகின்றார்கள்; தேவர்களுக்கெல்லாந் தேவனே! சிவசங்கரமூர்த்தியே! எங்களுக்கு அறங்கள் விர்த்திப்பதற்கேதுவாகிய பதவிகளையளித்தீர்; அப்படியிருக்க, நால்வகையோனிகளிலும் பிறந்த சகலவுயிர்களும் பெரிதாகிய இந்தத்திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து ஒருவருத்தமுமில்லாமல் உமதுதிருவடிகளை வணங்கி மோக்ஷத்தைப்பெற்று நித்தியானந்தத்தை யடைதலினால் எங்கட்குரிய அப்பதவிகளில் வந்தடைகின்றவர்க ளொருவருமில்லை. (எ-று.) (௮)

பிரமர்மாயர்பதமேறினரில்லைப் பெண்கடானமும் பூசையுமில்லைச், சுரர்களுண்டியும் வேள்வியுமில்லைத் தாரகயாகமும்போகமுமில்லை, விரவுமாதவர்க்கன்னமுமில்லை வீரசொர்க்கமும் போர்களுமில்லை, யிரவியாதியோர்ப் போற்றலுமில்லை யியமனுணையுந்தானமுமில்லை.

(இ - ள்.) பிரமபதத்திலும் விஷ்ணுபதத்திலும் வந்தேறினவர்களுமில்லை; கன்னிகாதானங்களும் சிவபூசைகளுமில்லை; யாகங்களும் அவற்றால் தேவர்களுக்குக் கொடுக்கும் அவிர்ப்பாகங்களுமில்லை; அசுவமேதயாகமும் அதனாலனுபவிக்கும் சொர்க்காதி

போகங்களுமில்லை; பசித்துவருகின்ற பெரியோர்களுக்கு அன்னங் கொடுப்பதுமில்லை; யுத்தங்களும் அவற்றாலனுபவிக்கும் வீரசொர்க்கங்களுமில்லை; சூரிய நமஸ்கார முதலியவுமில்லை; இயமனுடைய ஆக்கினையுந் தானங்களுமில்லை. (எ-று.) (எ)

மற்றுமற்றுள தேவர்பதத்தில் வந்தபேறு மிலைபத்தவதான, மற்றிறந்தனபாதகரின்றி யாழ்நரகும்பிக நேர்ந்தவெமக்கு, மிற்றைநாள்வரையின்றதிகார மெங்களுக் கதிகாரம் வழங்கச், சற்றுநீகடைக் கண்ணருளென்றார் சந்தமுத்தநதி வாணனுரைப்பான்.

(இ-ள்.) அல்லாமலும் வேறுவேறுயுள்ள தேவர்கள் பதத்திலும் வந்தேறினவர்களுமில்லை; ஆதலால் அத்தவத்தாற்பெறத்தக்க ஸ்தானங்களெல்லாம் அற்றுப்போய்விட்டன; ஆழ்நரகமெல்லாம் பாதகர்களில்லாமல் தூர்ந்துவிட்டன; எங்களுக் கிதுவரையிலும் அதிகாரமில்லை; இனியாகிலும் எங்களுக்கதிகார முண்டாகும்படி நீர் சற்றே கிருபாகடாக்ஷம் வைத்தருளவேண்டுமென்று தேவர்களெல்லாரும் விண்ணப்பஞ்செய்தார்கள்; அதுகேட்டு அழகிய மணிமுத்தாநதியின் கண்வாழுகின்ற பரமசிவன் திருவாய்மலர்ந்தருளுகின்றார். (எ-று.) (அ)

வருகதேவர்முதுகுன்றநமக்கு வடிவமுத்த நதிசத்தியின்மேனி, யொருமையாகவதின் மூழ்கிவணங்கி யுபாசனைக் குமன்தயாவர்தடுப்பார், தருவசேதன மீவதுகண்டீர் சத்தளிப்பதுதன்னியல்பன்றோ, பெருகநீர்தவஞ்செய்தவினன்றோ பெரியதேவர்களாயினிர்முன்னே.

(இ-ள்.) வாரும்தேவர்களே! விருத்தகிரியானது நமதுசொரூபம்; திருமணிமுத்தாநதியானது சத்திசொரூபம்; ஆதலால்மனோவாக்குக்காயமொன்றுபட்டு அந்நதியில் ஸ்நானஞ்செய்து நம்மை



வணங்கினால் உயர்ந்த மோக்ஷபதத்தில்வைக்கும்; அந்நனம்வைப்பதை எவர்கள் தடுப்பார்கள்; அவ்விடத்திலிருக்கும் விருக்ஷமுதலிய அசேதனங்களும் தம்மையடைந்தவர்க்கு உயர்ந்தபேறளிப்பதை நேரே அறிந்துள்ளீர்; ஆயின் அந்த ஸ்தலஞ் சத்தாண்பதத்தைக் கொடுப்பது சுபாவகுணமல்லவோ; அதுவுமல்லாமல் முற்சனனத்தில் நீங்கள் இந்தஸ்தலத்தில்வசித்து மிகுந்ததவத்தைச்செய்ததனாலல்லவோ பெரியதேவர்களாயினீர்கள். (எ-று.) (கூ)

உங்களைத்தவஞ்செய்யவிலக்கி லொழிக்கைநீதிதவநீரு முயன்றாற், பொங்குமுத்திபதமெய்துவிரென்று பூதநாதனும் வானின்மறைந்தான், றுங்கவானவர்கண்முத்தநதிக்கட் டுன்னிமூழ்கியநதிக்கரைதன்மேற், றிங்களூருடைபயுட் பங்கபமீது தியானஞ்செய்குபுசிறந்திருந்தார்கள்.

(இ-ள்.) இப்பொழுது உங்களைத் தவஞ்செய்யவேண்டாமென்றுவிலக்கினால் மற்றவர்களையும் விலக்கிவிடுவது நீதியாகும்; ஆதலால் நீங்களும் இந்த ஸ்தலத்திற்பொருந்தித் தவஞ்செய்தால் உயர்ந்த மோக்ஷபதத்தைப் பெறுவீர்களென்று திருவாய்மலர்ந்து பரமசிவனும் சிதாகாசத்தில் மறைந்தருளினார்; அதுகேட்டுப் பரிசுத்தராகியதேவர்கள் திருமணி முத்தாநதியில்வந்து ஸ்நானஞ்செய்து அந்தநதிதீரத்தில் சந்திரனைச்சடையிற்றரித்த பரமசிவனை இருதயகமலத்தில் தியானஞ் செய்துகொண்டு சிறப்புற்றிருந்தார்கள். (எ-று.) (௧0)

வேறு.

திருமுதுகுன்றிறை சிறிதுநினைக்கத் திசைதோறு
மருமறைவந்தன வாகமம்வந்தன வரியாதிப்
பெருகியவிமையவர் குழுவிற்சிவனும் பிரகாசித்
தொருமையுமுண்மையு மமரர்க்கருள்வா னுட்கொண்டு.

(இ - ள்.) அங்ஙனம் சகலதேவர்களும் தியானித்திருந்தபொழுது அழகிய பழமலையின்கண்ணெழுந்தருளிய பரமசிவன் சற்றே திருவுளத்தில் நினைத்தமாத்திரத்தில் திக்குகடோறும் அரியவேதங்களும் ஆகமங்களும் வந்துநிறைந்தன; உடனே விஷ்ணுமூர்த்தி முதலிய தேவர்கூட்டத்தினடுவில் பரமசிவனும்பிரகாசித்துநின்று அந்தத்தேவர்களுக்கு ஐக்கியநிலைமையையும் அதற்குரிய உண்மைநெறியினையும் அனுக்கிரகஞ்செய்யும்படி திருவுளங்கொண்டு. எ-று.

வித்தகமாகிய சித்தர்கண்மெத்திய மெய்யென்னைச்
சித்திரமான திருப்பதமெண்டிசை யுந்தோன்றச்
சத்திமுகத்தும் பத்தர்முகத்துந் தன்கண்ணு
முத்தநதிக்க ணிருத்தமளித்தான் முதுகுன்றன்.

(இ - ள்.) ஞானசொரூபமாகிய சித்தத்தையுடைய பெரியோர்களிடத்தில் விளங்குகின்ற உண்மைஞானப் பிரகாசம்போல அழகியதிருவடிகள் எட்டுத்திக்குகளிலும் பிரகாசிக்கும்படி பராசத்தியின் முகத்திலும் அடியார்கள்முகத்திலும் தமது கிருபாதிருஷ்டி பொருந்தத் திருமணிமுத்தாநதிக்கரையில் பழமலைநாதர் திருநடனஞ்செய்தருளினார். (எ-று.) (௧௨)

ஞானந்தங்கிய வடிவினடஞ்செய நந்தேவன்
வானந்தங்கிய தேவர்கள்காணு மனதொன்று
மானந்தந்தனை யமுதாவுண்டன ரசைவற்று
ஞானந்தங்கிய வுடலைமறந்தா ரொன்றானார்.

(இ-ள்.) நமதுதலைவராகிய பரமசிவன் ஞானானந்தமே சொரூபமாகக்கொண்டு நிருத்தஞ்செய்தருளுதலும் விண்ணுலகவாசிகளாகிய சகல தேவர்களுங்கண்டு மனமொருமைப்பெற்றுப் பரமானந்தத்தை அமிர்தமாகப்புசித்து அசைவற்ற தீபம்போலசைவற்று நாசப்படுகின்ற சரீரஸ்மரணையொழித்து ஒற்றுமையுற்றார்கள். (எ-று.)



அமைவுபிறக்கு மமரர்கள்சித்த மதுநாணு
வுமைமைபநகைத்திங் கிமையவருக்கன் புளதாகச்
சமையுநிருத்தம்பினையுநடித்துத் தனிநின்றான்
கமைவுதரித்தங் கிமையவர்சித்தங் கனிவானார்.

(இ - ள்.) பரமசிவன் ஒடுக்கம் பெறுகின்ற தேவர்களிருதயத்தைத்தெரிந்து உமாதேவியாரை நோக்கிநகைத்துத் தேவர்களுக்கு அன்புண்டாகும்படி முன்புநடனத்தை மேன்மேலும் நடித்துத் தனிமையாகநின்றருளினார்; அதுகண்டு தேவர்களுபசாந்தமடைந்து மனமுருகிநின்றார்கள். (எ-று.) (௧௪)

அஞ்ஞானக்க ணமரர்க்கதும் படியெண்ணி
யுய்ஞ்ஞானப்பத மைந்தையுமுபதேசஞ்செய்தான்
மெய்ஞ்ஞானக்கண் டன்னைவிழித்திருள் வெளியில்லாக்
கைஞ்ஞானக்கிரை யற்றகடற்போ னிலையென்றான்.

(இ - ள்.) பரமசிவனானவர் தேவர்களுக்கு அஞ்ஞானதிருஷ்டி நீங்கும்படி நினைந்து, உய்தற்குரிய ஞானசொரூபமாகிய ஐந்தெழுத்தையும் முறையே சிகாரஞ்சிவமென்றும் வகாரம் அருளென்றும் யகாரம் ஆன்மாவென்றும் நகாரம் திரோதமென்றும் மகாரம் மலமென்றும் உபதேசஞ்செய்து, உண்மையாகிய ஞானதிருஷ்டியைத்திறந்து இருளும் வெளியுமில்லாத ஞானபூமியில் அலைகளில்லாத சமுத்திரம்போல நிற்பதுவே சமாதிநிலையென்று அனுக்கிரகஞ் செய்தருளினார். (எ-று.) செய்தானென்பது முற்றெச்சம். (௧௫)

கை-இடம்.

பூதாகாச மற்றுளநாலிற் புணர்வாகிப்
பேதாகாச மாகிப்பிரியா நிறைபோலப்
போதாகாச மாகிப்பொருளாய் நிறைவாகி
நாதாதீதப் பரசிவமாவது நாமென்றான்.

(இ-ள்.) பூதாகாசமானது மற்றைப் பிருதிவி அப்பு தேயு வாயுவென்னும் நான்குபூதங்களிற்கலந்தும் கலவாமல் பேதாகாசமாகியும் அபேதமாகியுமிருக்கின்ற தன்மையைப்போல் சிதாகாசமாகியும் எல்லாம்பொருளூர்தானேயாகியும் பரிபூரணசொரூபமாகியும் நாதத்துக்கதீதமாகியும் விளங்குகின்ற பரமசிவமாவது நாமேயென்று அருளினார். (எ-று.) (கக)

சடசித்தெங்கணு நாமேநாமே சகலமுமொன்
றுடலிற்கண்டவ னவனேசிவனு மொருவர்க்குந்
தொடரத்தெரியா வாகமமுடிவுஞ் சொல்லுங்கா
ணடரப்பிரமனு மரியும்விபுதரு மறிவீரால்.

(இ-ள்.) உடலும் உயிருமாகிய எப்பொருளினும் உட்பொருளாய்விளங்குவதும் யாமே; மற்றை அப்புறப்பொருளாய் விளங்குவதும் யாமேயென்று தனதுடலின்கண்ணே தரிசிக்கப்பெற்றவனே சிவசொரூபமாவான்; ஒருவராலும் தொடர்ந்தறியப் படாத ஆகமத்தின்முடிவும்இவ்வாறேசொல்லும்; இதனைப்பிரமனே! விஷ்ணுவே! தேவர்களே! அறிந்துகொள்ளக்கடவீர்கள். (எ-று.) காண்-அசை.

ஞானசாரிய ரிடமாயல்லது நம்முண்மை
தானுவறியார் தற்பொருளுடலா விகண்மூன்றுங்
கோனார்தங்கை கொடுத்தருளுபதே சங்கொள்வா
ராணுநிழலுஞ் சாகையுமெனவவர் வழிநிற்பார்.

(இ-ள்.) நம்முடைய உண்மைவடிவை ஞானசாரியரிடமாயிருந்து தெரிவார்களேயன்றி ஒருவரும் தாமே தெரிந்துகொள்ளார்கள்; ஆகையால் தங்கள் உடல்பொருளாவிமூன்றையும் ஆசாரியரிடத்தில் தத்தஞ்செய்து அருளுடைய ஞானோபதேசத்தைப் பெறுகின்ற நன்மாணாக்கர்கள் நீங்காதநிழலும் விருக்ஷமும்போல அவரதுவழிப்பட்டு நிற்பார்கள். (எ-று.) (கஅ)



சாதிகுணங்க ளுரைத்தவர்குரவர் றனைநம்மிற்
பேதகமாக நினைத்தவர்பெருமை குறைசொன்னோர்
வாதினினியா தினின் மாறுகள்கொண்டவர் வளையாதார்
சூதுகள்செய்தவ ரவரோநகரந் தொலைபாதார்.

(இ-ள்.) ஆசிரியருடையகுலத்தையும் குணங்களையும்இழிவாகச்சொன்னவர்கள், அவரை நம்மில்வேறாக நினைத்தவர்கள், அவரது பெருமையைக் குறைவாகச்சொன்னவர்கள், அவரைத் தருக்கங்களிலாகிலும் மற்றோர்தவிதத்திலாகிலும் விரோதஞ் செய்தவர்கள், அவரை வணங்காதவர்கள், அவருக்குவஞ்சனைகளைச்செய்தவர்கள், எவர்களோ அவர்களே எந்தக்காலத்திலும் நரகக்குழியைவிட்டு நீங்காதவர்கள். (எ-று.) (கக)

குரவர்தமக்கர்ச் சனைகள்கொடுப்ப தெமக்காகும்
விரவுநமக்குப் புரிபிழையாசான் விடுவிப்பான்
கரவிலவர்க்குப் புரிபிழையெம்மாற் களைவாகா
பரமபதத்தைத் தருவதொருத்தன் பணியன்றே.

(இ-ள்.) ஆசாரியர்களுக்கு அர்ச்சனைகள்செய்வது நமக்குச் செய்வதாகும்; எல்லாச்சீவர்களிடத்திலும்பொருந்திய நமக்குச் செய்தகுற்றத்தை ஆசாரியர்நீக்கி இரக்ஷிப்பார்; அவருக்கு வஞ்சகத்தினாற்செய்த குற்றங்கள் நம்மால் நீக்கப்படா; எதனாலெனில் மோக்ஷத்தைக்கொடுப்பது அவரதுதொழிலேயல்லால்வேறொருவருடைய தொழிலல்ல; ஆகையால். (எ-று.) (உ0)

ஆசாரியர்பே ரின்பமளிக்க வளித்தார்கண்
மாசாலுடல்பொரு ளாவிகணாகம் வதிந்தாழ்வா
ரேசார்பிறவி யறுப்பவராசா ரியர்தாமே
தேசார்நந்தம வுண்மைகள்பெற்றனிர் தேர்வீரே.

(இ - ள்.) ஆசாரியானவர், பேரின்பத்தைக்கொடுத்தருள அதற்குக்கைம்மாருகத் தங்களுடல்பொருளாவியைத் திரிகரணமும் ஒவ்வாமல் மலினசித்தராய், தத்தஞ்செய்தசிஷர்கள் நரகங்களிலெல்லாம் அழுந்துவார்கள்; (அங்ஙனமழுந்திநிற்பவர்களுக்குத் தெய்வகதியால் விடுதலைக்காலம் நேரிடுமாயின் அப்பொழுது) குற்றமுள்ளபிறவியைக்களைந்து காக்கவல்லவர் அவ்வாசாரியரே: (இதனை நீரும்) ஒளிமயமாயுள்ள எமது உண்மையை அடைந்துள்ளீராகலின் தெளிவீர்கள். (எ-று.) (௨௧)

உத்தமசத்திய மித்தனைமெய்யென் றுணராதா
ரத்தலைவெட்டுண் டாயிரசின்னப் பொடியாகப்
பொய்த்தலையெரிவாய் நரகிற்புகுதுவர் நம்மாணை
சத்தியமிதுவே சத்தியம்வானோ ரானீரே.

(இ - ள்.) தேவர்களே! உத்தமமாகிய இந்தச் சத்தியவசனத்தை உண்மையென்று அறியாதவர்களெவர்களோ அவர்கள் தங்கள் சிரங்கள் வெட்டுண்டு ஆயிரம் சிறுபிளவாகப்பிளவுபடத் தாம் பொய்யாகியலைக்கின்ற எரிவாய்நரகத்தில் நமதாணைப்படிக்குச்சேருவார்கள்; இதுவே சத்தியம் சத்தியம். (எ-று.) (௨௨)

நிருத்தனருந்த மறைந்துமறைந்தா னீள்வானோர்
திருத்தபதத்தை வணங்கினர்செல்வார் சொல்வார்கள்
குருத்தலைபெற்ற தவத்தினரேமுது குன்றாடே
தரித்தலிருப்ப வசத்தரீராது சபித்தார்கள்.

(இ - ள்.) நிருத்ததரிசனமளித்தபெருமான் உண்மைநிலையையும் உபதேசஞ்செய்து மறைந்தருளினர்; அப்பொழுது பரமசிவனது நிருத்தமாகிய திருவடிகளைவணங்கிச், செல்லுகின்ற சகலதேவர்களும் சொல்லுவார்களாகி, ஆசிரியரிடமாகப்பெற்ற தவத்தை



யுடைய பெரியோர்களே பழமலையில் நிலைபெருகவசிக்கவும் அப்படிப்பெருதவர் நிலைபெருகவசியாதொழியவுஞ் சபித்தார்கள். (எ-று)

சொல்வார் முற்றெச்சம், தலை ஏழாம்வேற்றுமையுருபு.

முத்தாநதிக்க ணிருத்தனருத்த முயன்றேனும்
பத்தர்பரிக்கிரு திற்பலகோடி பலன்மேவிச்
சத்துருவற்றிருள் பொய்ப்பிறவிப்பிணி தானீவிச்
சித்தியுமுத்தியு மெய்துவரென்றனர் திகழ்நாதர்.

(இ - ள்.) திருமணிமுத்தா நதியின்கண் திருநடனமருளிய பெருமான் அநுக்கிரகித்த இவ்வுண்மைப்பொருளை ஆவல்கொண்டு படிக்கின்ற அடியார்கள் அஸ்வமேதயாகபலனிலும் அனேகங்கோடி மடங்கு அதிகமான பலனைப்பெற்றுச் சத்துருக்களில்லாமல் அஞ்ஞானத்தைப்பற்றிவருகின்ற பொய்யாகிய ஜனனவியாதியும் ஒழிந்து சகல சித்திகளையும் மோக்ஷத்தையும் பெறுவார்களென்று அனவர்த்திலயை யென்னுந்தேவிக்கு ஞானப்பிரகாசமிகுந்த நாதசன்மா அருளினர். (எ-று.) (௨௩)

நிருத்தச்சருக்கம் - முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௬௫.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது,

# அகத்தியச்சருக்கம்.

வேறு.

ஐயன்முதுகுன்றமர்ந்தபிரா னளித்தகடத்தையுரைசெய்தோ, முய்யும்படிகங்குறுமுனிவ னுகந்துவருமாறுரைக்கின்றோம், பையவிந்தப்பருப்பதந்தான் பானுபதத்தைக்கடந்தோங்கிச், செய்யவெய்யோன் சந்திரனுஞ் செல்லும்வழியைத்தடைசெய்ய.

(இ-ள்.) எமது பிதாவாகிய பழமலைநாதர் அநுக்கிரகித்த திருநடன சரித்திரத்தைக் கூறினோம்; இப்பால் உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளும் பிழைக்கும்படியாக எமது அகத்தியமாமுனிவர் விருத்தாசலத்திற்கு அதிகவிருப்பமாய்வருகின்ற சரித்திரத்



தைச் சொல்லுகின்றோம்; விந்தமலையானது மெல்லவளர்ந்து சூரிய மண்டலத்தையும் அதிக்கிரமித்துயர்ந்து சிவந்தகிரணங்களையுடைய சூரியசந்திரர்செல்லுகின்றவழியையும் தடைசெய்ததினால். எ-று.

இவ்விந்தமலைச்சரித்திர விரிவைக்கந்தபுராணத்துட்காண்க. ()

இரவுபகலற்றனுண்டான மின்றிமறைபோரவியின்றிச்
சுரர்கள்பசியால்வாடுதலாற் சுரந்துமேகம்பொழியாதே
திரணமுதலதீந்தபடி தேவர்முனிவர்விதிக்குரைப்பப்
பிரமன்றானுந்தன்சிறுவன் பெரியகும்பமுனிக்குரைப்பான்.

(இ-ள்.) இராப்பகலில்லாதொழிய, பிராமணர்கள் அனுஷ்டான மில்லாமலும், தேவர்கள் அவிர்ப்பாகமில்லாமலும் பசியினால் வாடுகின்றமையால் மேகமானது நீர்சுரந்து. பூமியில் மழைபெய்யாமல் துரும்புமுதலானவையுங் கரிந்துபோனதன்மையைத் தேவர்களும் முனிவர்களும் பிரமதேவருக்கு விண்ணப்பிக்க; அவரும் தமதுகுமாரராகிய தவத்தான்மிக்க அகத்தியமாமுனிவருக்குச் சொல்லுகின்றார். (எ-று.) (௨)

விந்தவரையைமதமடக்கி மிகுவில்வலனைவாதாவி
யந்தவிருவர்தமைமாற்றி யணைவாயென்றேயயன்மறைந்தான்
முந்தவிடைகொண்டகத்தியனு மூன்றுசுடருமுதித்தவெனத்
சந்தக்கரத்தினங்குட்டன் தனைப்பேர்ந்தடைந்தவருகின்றான்.

(இ-ள்.) விந்தமலையினுடைய அகங்காரத்தை யொடுக்கி மிகுந்த வல்லமையுடைய வில்வலன் வாதாவியென்னும்அவ்விரண்டு அசுரர்களையுமழித்துவிட்டு வருவாயென்று சொல்லிப் பிரமதேவர் மறைந்துவிட்டார்; அப்பொழுது அகத்தியமாமுனிவரும் எதிர் விடைபெற்றுக்கொண்டு மூன்றுசுடர்களும் ஏககாலத்தில் உதயமானதுபோலத் திருமேனிபிரகாசிக்க அழகிய கையினிடத்துள்ள பெருவிரல் போன்ற சிறியவுருவமாய்ப் பூமியில் நடந்துவருகின்றார். (எ-று.)

அமரகணங்கள்சித்தகண மமரமுனிவர்நரமுனிவர்
தமரமறைகணவக்கிரகஞ் சகலகணமும்புகழ்ந்தேத்தத்
திமிலவேலைகுலமலைகள் செம்பொன்மேருபுடைசூழ
வியலர்மலர்மாரிகள்பொழிய மின்னுக்கொடிகணின்றாட.

(இ-ள்.) தேவகூட்டங்கள் சித்தகூட்டங்கள் தேவமுனிவர்கள் நரமுனிவர்கள் சத்திக்கின்றவேதங்கள் நவக்கிரகங்கள் முதலான சகலகணங்களும் புகழ்ந்து தோத்திரஞ் செய்யவும், திமிலமச்சங்கணிறைந்துள்ள எழுகடல்களும் அஷ்டகுலபர்வதங்களும் செம்பொன்மயமாகிய மகாமேருகிரியும் பக்கங்களிற் சூழ்ந்து வரவும் தேவர்கள் புஷ்பவருஷங்கள் பொழியவும் மின்னற்கொடிபோலும் தெய்வமகளிர் நடிக்கவும். (எ-று.) (௪)

பஞ்சமுழவம்விண்ணதிரப் பாடும்புலவரிசைபாடத்
தஞ்சவுதயனெழுங்காலைத் திருக்கூகைக்குலநெருக்கம்போ
லஞ்சியசுரர்நடுநடுங்க வரியதீர்த்தம்பலமூழ்கி
விஞ்சுபரமன்றலம்பலவு மேவிவிந்தமலைசார்ந்தான்.

(இ-ள்.) தோற்கருவி துளைக்கருவி கஞ்சக்கருவி நரம்புக்கருவி மிடற்றுக்கருவியென்னும் பஞ்சவாத்தியங்களும் ஆகாயத்தில் முழங்கவும், இசைபாடுகின்ற வித்வஜனங்கள் சங்கீதம்பாடவும், பெருமை பொருந்திய சூரியோதயகாலத்தில் விருக்ஷங்களிலுள்ள கோட்டான்கள் எப்படி பயந்து நடுங்குமோ அப்படி அசுரர்களெல்லாம் பயந்து நடுநடுங்கவும், அகத்தியமுனிவரானவர் அரிதாகிய பல தீர்த்தங்களிலும்போய் ஸ்நானஞ்செய்து கொண்டும் பெருமை மிகுந்த பல சிவஸ்தலங்களிலும்போய்த் தரிசனஞ்செய்துகொண்டும் விந்தபர்வதத்தினருகே வந்துசேர்ந்தார். (எ-று.) (௫)

அளவினூறாயிரமுயர்ந்த வந்தவிந்தமகத்தியனுக்
கெளிதிலெதிரேசென்றுபணிந் தினியபூசைபலவியற்றி



யுளமுநடுங்கமெய்நடுங்க வொடுங்கிநிற்குநிலைகண்டு [ன்
வள்ளைமுனிவன்றிருவுள்ளம் வாழ்ந்துவிந்தமலைக்குரைப்பா

(இ-ள்.) அப்போது அநேகநூறாயிரயோசனைதூரம் உயர்கின்ற அந்த விந்தமலையானது அகத்திய முனிவரைக்கண்டு மனமுருகி எதிர்கொண்டுபோய்வணங்கி இனியவாகிய பலபூசைகளைச்செய்து மனநடுங்கவும் சரீரநடுங்கவும் அடங்கிநிற்கின்ற நிலைமையைக்கண்டு தவசிரேஷ்டராகிய அகத்தியமுனிவர் திருவுளமகிழ்ந்து விந்தமலைக்குச் சொல்லுகின்றார். (எ-று.) (௬)

தென்பூமிக்கட்டவம்புரியச் செல்கின்றேம்யாஞ்செல்லுங்கா
னின்பாலேறியிறங்கியிட வொண்ணாநிலத்திற்கொத்திடுக
வன்பாவிதனைச்செய்யாயே லழித்துச்சாம்பராக்கிடுவோ
மின்பாலென்றான்விந்தமலை நிலத்திலொடுங்கிப்புக்கதுவே.

(இ-ள்.) தெற்குத்திசைக்கண் தவஞ்செய்யவேண்டி நாம் போகின்றோம்; போகின்றபோது உன்மேலேறி யிறங்கிப்போக வொண்ணாது; அதுவொருதடையாகின்றது; ஆகையால் நீ பூமிக்குச்சமமாய் அடங்குவாயாக; இப்படிநீ அன்பாகச்செய்யாவிட்டால் உன்னுடைய கூறுயுள்ளவற்றையெல்லாம் அழித்துச் சாம்பலாக்குவோமென்று அகத்தியமுனிவர் சொல்லியருளினார்; அதுகேட்டு விந்தமலையானது பூமியிலடங்கிப்போயது. (எ-று) (௭)

ஆடுமரவமந்திரங்கேட் டளைசென்றாங்குமலையொடுங்க
நீடுஞ்சுடர்கள்வழிநடப்ப நிறைந்தமலர்மாரியும்பொழிய [தார்
வாடுமுனிவர்தேவரெலா மழைசேர்பயிர்போன்முகங்குளிர்ந்
சாடுமசுரிருவருழித் தனித்துச்சென்றான்குறுமுனிவன்.

(இ-ள்.) படமெடுத்தாடுகின்ற பாம்பானது பிடாரனுடைய மந்திரத்தைக் கேட்டவுடன் படத்தையொடுக்கித் தன்னுடைய

அலையிற்புகுந்ததுபோல விந்தபர்வதமானது பூமிக்குள் ஒடுங்கின பொழுது பிரகாசமிகுந்த சந்திரசூரியரிருவரும் தமக்குரிய மார்க்கத்திலே சஞ்சரிக்க எவரும் நிறைந்த புஷ்பவிருக்ஷம் பொழியக் கண்டு வாடிநின்றமுனிவர்களும் சகலதேவர்களும் மழையைக்கண்ட பயிரைப்போல முகமலர்ச்சியடைந்தார்கள்; இப்பால் அகத்திய முனிவர் முனிவராதியரைக் கொல்லுந்தொழில்பூண்ட வில்வலன் வாதாவியென்னும் அசுரரிருவரும் இருக்குமிடத்திற்குத் தனிமை யாகச்சென்றார். (எ-று.) (அ)

சதுராமுனிவன்செல்லுங்காற் றனிவில்வலனைவாதாவி
யெதிரேசென்றுபூசையுஞ்செய் தினியவிருந்துபகர்தலினு
லதிமாண்முனிவன்பொருந்தியபின் பாட்டுவடிவார்தம்பிதனை
முதியோனறுத்துச்சமைத்திட்டான் முனிவனமுதுசெய்திரு
[ந்தான்.

(இ-ள்.) மிகுந்தவல்லபமுடைய அகத்தியமுனிவர் போகும்போது ஒப்பற்ற வில்வலன் வாதாவியென்னுமிருவரும் எதிரேவந்துபூசைசெய்து இனிதாகிய விருந்துசொன்னதினால் அதிகமேன்மைபொருந்திய அகத்தியமுனிவர் சம்மதித்திருந்தபின்பு ஆட்டுவடிவமாகியதம்பியைத் தமையனாகியவில்வலன் அறுத்துச்சமைத்துப் பாகஞ்செய்து படைத்தான்; அகத்தியமுனிவரும் அதை அமுதுசெய்திருந்தார். (எ-று.) (௯)

வம்பன்றமையன்வாதாவி வருகசுவாகாவெனவொடித்தான்
கும்பமுனிவனஃதறிந்து குலவுஞ்சிவனைத்தியானித்துத்
தம்பிதனையுந்தமையனையுஞ் சாம்பராகப்பொடிசெய்தா
னும்பர்குழுவுமுனிவர்களு மோதங்கிளர்ந்ததெனவார்த்தார்.

(இ-ள்.) அங்ஙனமிருந்தகாலையில் வம்பனாகிய மூத்தவில்வலனென்பவன் வாதாவிவருக சுவாகாவென்றுசொல்லி அழைத்தான்;



அதை யறிந்து அகத்தியமுனிவர் பிரகாசிக்கின்ற பரமசிவனைத் தியானஞ்செய்து தம்பியையும் தமையனையும் சாம்பலாகும்படி அழித்துவிட்டார்; அப்பொழுது தேவர்கூட்டமும் முனிவர்கூட்டமும் சமுத்திரங்கோஷித்ததுபோலக் கோஷித்தன. (எ-று.) (௧௦)

நெருப்புக்குழியிற்புழுவிருந்தா னீந்தாதென்னநினைந்திலரே
யருப்புவிநாசகாலத்தி லவலவறிவுமேலிடுமே
விருப்புவிந்தவரைகுறைத்து வேலையதனைவிழுங்கினரை
வருக்கப்புழுவிற்சதுராலே வெல்லவெண்ணிமடிந்தனரே.

(இ-ள்.) நாசகாலமுண்டாகும்போது துர்ப்புத்தி மேலிடுமாதலால் அந்தவில்வலன் வாதாவியென்னு மிருவரும் நெருப்புக் குழியில் புழுவானதுவிழுந்தால் நீந்திக்கரைசேராதென்று நினையாதவர்களாகி அப்புழுவர்க்கமானது நெருப்புக்குழியை நீந்தநினைத்து விழுந்திறந்ததுபோலத் தாங்களும், மதங்கொண்ட விந்தமலையை யடக்கிச் சமுத்திரஜலத்தை ஆபோசனமாகக்கொண்டருளிய அகத்தியமுனிவரைத் தங்கள்திறமையினால் வெல்லும்படி நினைத்து இறந்தார்கள். (எ-று.)

அருப்பு வலித்தல் விகாரம். (௧௧)

காலமறிதலிடமறிதல் கண்டான்றிருவும்பெரியோர்கள்
சீலமறிந்துவழிபடுவான் றிருவும்பெருகும்வகைசான்று
மாலினொருவன்றனைக்கெடுத்து வாழ்வான்றனக்குவருங்கேடு
மேலும்பெரியோர்க்கிடர்செய்வான் கேடுமிருவர்கரியன்றே.

(இ-ள்.) காலமும் இடமுந்தெரிந்து நடக்கின்றவனுக் குண்டாகின்ற செல்வத்திற்கும் பெரியோர்களுடைய தன்மையை யறிந்து வழிபடுகின்றவனுக்கு உண்டாகின்றசெல்வத்திற்கும் பெரு

கிய விந்தமலையே சாக்ஷி; ஒருவரைக்கெடுத்து வாழுகின்றவனுக் குண்டாகின்ற நாசத்திற்கும் யாவரும் எற்கப்பட்ட பெரியோர் களுக்கிடர் செய்கின்றவனுக்கு உண்டாகின்றநாசத்திற்கும் வில் வலன் வாதாவியென்னுமிருவர்களே சாக்ஷி. (எ-று.)

“பொருள் கருவி காலம் வினை யிடனொ டைந்தும், இருடீர வெண்ணிச் செயல்” என்றபடி காலமும் இடமும்நோக்கி அகத் திய முனிவரை வழிபட்டு அழியாநிலைமையை எய்தியதாகலின் திருவெய்தற்கு விந்தமலையையும், மற்றையவரை அழித்ததுபோல இம்முனிவரையும் அழித்துத் தாம்வாழவெண்ணி அவர்க்கிடர்செய் யத்துணிந்து அழிந்தாராகலின் கேடெய்துதற்கு அசுரரிருவரையும் சாக்ஷியாகக்கூறினார். திருவும் திருவும் சேமம் கேடும என்னும் நான்கிலும் நான்கனுருபுதொக்கது. (எ-று.) (௧௨)

கொடியவிந்தங்கண்டபவங்கொடியோன்றசையுண்டபவந்
தடியவேண்டிக்கூட்டமுடன் சார்ந்துமுத்தாநதிமூழ்கி
யடியார்க்கெளியன்முதுகுன்ற னடிகளன்பினருச்சித்தான்
வடிவங்கொண்டுமுதுகுன்றன் வந்துமுனிக்குநடஞ்செய்தான்

(இ-ள்.) அகத்தியமுனிவர் கொடியதாகிய விந்தமலையைக் கண்ட பாவத்தையும் கொடியனாகிய வாதாவியின்மாமிசத்தைப் புசித்த பாவத்தையும் நீக்கவேண்டி மேற்சொல்லிய சனகூட்டங் களோடும் விருத்தாசலத்திற்குவந்து திருமணிமுத்தாநதியில் ஸ்நா னஞ்செய்து அடியவர்க்கெளியவராகிய பழமலை நாயகருடைய திருவடிகளை அன்பினால் அருச்சனைசெய்து வணங்கினார்; அப் பொழுது பழமலைநாதர் திருமேனி கொண்டெழுந்தருளிவந்து அகத்தியமுனிவருக்கு நிருத்ததரிசனம் கொடுத்தருளினார். எ-று.

தேவர்முனிவராதியரும் சஞ்சரியாதபடி தடைசெய்துநின்று உலகிற்கு அனேகஇடையூற்றை விளைத்ததாகலின் கொடியவிந்த மென்றார்.




நடங்கண்டுருகுமுனிவ னயர்ந்துபணிந்துதிருவடியை
விட்டுநீங்காக்கைம்மாறே கைம்மாறென்றுமிகவுருகி
யட்டதிசையுமுனிவர்களை யுணவித்திறையையருச்சித்தான்
கட்டுவிடுத்தபதம்போற்றிக் கலிங்கன்பெற்றகதையுரைப்பாம்

(இ-ள்.) அகத்தியமுனிவர் நடனதரிசனங்கிடைத்துப் பேரி ன்பமுற்று வணங்கிநின்று சுவாமீ! அடியேன் உமது திருவடியை விட்டு நீங்காதிருக்கும் பதிலுபகாரமே தேவரீர் அடியேனுக்குப் பாலிக்கும் பதிலுபகாரமாகுமென்று மிகவும்பிரார்த்தித்து, அஷ்ட திக்குகளிலுமிருந்துவந்த முனிவர்களெல்லாரையும் தத்தமிடங்க ளிற்செல்ல விடைகொடுத்தனுப்பிவிட்டு பரமசிவனைச் சதாகால மும் அர்ச்சித்துக்கொண்டிருந்தார்; அவரது பந்தநீங்கிய திருவடி களைப் போற்றிசெய்து, கலிங்கராஜன் பேறுபெற்ற சரித்திரத் ததைச் சொல்லுகின்றோம். (எ-று.) (௧௩)

அகத்தியச்சருக்கம் - முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-உ௧௦.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாவது,

# கலிங்கச்சருக்கம்.

வேறு.

நல்லகுன்றநாதர்தம்மை நண்ணிமாதவஞ்செயுஞ்
செல்வர்தம்மைநிந்தைசிந்தை செய்யினுமுரைக்கினு
மல்லலாயவலகையாகி யாளுறாதகானகத்
தெல்லையொல்லைசெல்லுவா ரியாவரென்னிலோதுவாம்.

(இ - ள்.) நன்மைபொருந்திய பழமலைநாதரையடைந்து பெருமைபொருந்திய தவத்தைச்செய்கின்ற பாக்கியரை நிந்தனைசெய்தற்கு மனத்தில் நினைத்தாலும் வாக்கினால்தூஷித்தாலும் அப்படிச்செய்கின்றவர்கள் துன்பரூபமான பிசாசவடிவமாகி மனிதசஞ்சார



மில்லாத காடுகளில் அதிகவிரைவிற்சென்று திரிவார்கள்; அப்படியானவர் எவரென்றால் அவருள் ஒருவரைச் சொல்லுகின்றோம். (எ-று.) (க)

சரோருகக்கரங்கள்கொண்டு சமிதைபுற்கள்பூவிலை
யுரோமசப்பிரானெடுத் துலாவுகானகத்திலே
விரோதமார்பசாசமொன்று மெய்ந்நடுங்கவாய்புதைத்
தரோவிறைஞ்சிநின்றதங்க ணையர்கண்டியம்புவார்.

(இ - ள்.) உரோமசமுனிவர் தாமரைமலரையொத்த கைகளினால் ஓமவிறகு தருப்பைப்புல் புஷ்பம் மாவிலை முதலியவை கொண்டுதிரிகின்றவனத்தில் பெரியோர்களைநிந்தித்ததனாற் பிசாசரூபம்பெற்ற ஒருவன் சரீரநடுங்க வாய்பொத்திக்கொண்டு அவ்விடத்திலேவணங்கி நின்றான்; அவனைக்கண்டு உரோமசமுனிவர் சொல்லுகின்றார். (எ-று.) அரோ அசை. (உ)

எங்கணேகுலாயுனக் கிந்தமேனிவந்ததே
னுங்கணென்றுகூறலு முரோமசற்குரைத்திடுந்
துங்கமானசூத்திரன் சொலிற்கலிங்கனென்பெய
ரங்கநாடனிங்ஙன்மேனி யானவாறுகூறுகேன்.

(இ - ள்.) நீ எங்கேபோகின்றாய் உனக்கு இந்தச்சரீரம் யாதினால் வந்தது என்று கேட்டவளவில் அந்தப்பிசாசரூபமானவன் உரோமசமுனிவர்க்குச் சொல்லுகிறான்; என்னிலைமையைக்கூறுங்கால் யான் உயர்ச்சிபெற்ற சூத்திரக்குலத்தன்; என்பெயர் கலிங்கன்; அங்கதேசத்திலுள்ளவன்; எனக்கு இப்படிப்பட்ட சரீரம் வந்தவகையையும் சொல்லுவேன் (எ-று.) (ங)

துன்றுநாடுவீடுமாடு சுற்றமைந்தர்மாதரா
ரொன்றிலொன் றுகுறைவுமில்லை யுற்றவர்க்குமுதவ்வேன்

மன்றவேபசித்துசோர்ந்து வந்தவர்க்குமிட்டியான்
சென்றுதன்றசேனையோடு திண்ணமாகநண்ணுநாள்.

(இ-ள்.) சகலவஸ்துக்களும் நிறைந்தநாடு வீடு மாடுகள் சுற்றத்தார் பிள்ளைகள் மாதர்கள் முதலான சம்பத்துகளில் ஒன்றிலொன்று குறைவுமில்லை; அல்லாமலும், என்னை யடுத்தவர்களுக்கும் கொடுத்து வுதவுவேன்மிகப் பசித்து வருமிவர்த பேர்களுக்கும் போஜனாதிகள் கொடுத்து இந்த வாழ்வையே சத்தியமென்று நினைத்து என்னிடத்து வந்து நிறைந்துள்ள சேனைகளோடும் நான் வாழ்ந்திருக்கின்ற காலத்தில். (எ-று.) (௪)

வாழ்வுபெற்றவாயிலென்று வலியயோகிவந்தன
னாழெனக்கிருந்துகால்கை யொன்றையும்முடக்கிலேன்
றாழ்கிலேனிருந்தல்கண்டு சந்தயோகிசிந்தியா
யாழமுற்றகுழியமுழ்கி யச்சமற்றிருந்தனை.

(இ-ள்.) ஐசுவரியமுன்ன வாசவென்று நினைந்து சாயாறுக்கிரகசாமர்த்தியமுள்ள ஒரு யோகீசுரர்வந்தார்; அவரைக்கண்டவுடன் நான்முற்செய்த கர்ம்மவசமிருந்தபடியால்கைகாலொன்றையு முடக்காமலும் அவரை வணங்காமலும் கெர்வித்திருந்தல்கண்டு அழகிய அந்தயோகீசுரர் நீ நம்மையவமதித்துச் செல்வமாகிய ஆழ்ந்தகுழியில் விழுந்து பயமில்லாம லிருந்தனையென்று நினைந்து.எ-று

என்னவாழ்வுவாழ்வையென் றிரண்டுகையையும்மெடுத்
தன்னவன்சிரித்துநின்னை யறிஞர்காணிலிரவிதன்
வன்னமேனிகாணவேண்டு மக்களுக்குன்வாழ்வளித்
துன்னுமாதவத்தினோர்பின் னேலசெல்லுமென்றனன்.



(இ-ள்.) நீ என்னவாழ்வு வாழ்கின்றாயென்று இரண்டு கையையும் உயரவெடுத்து அந்தயோகீசர் நகைத்து உன்னைப் பெரியோர்கள் கண்டால் சூரியனுடையதிருமேனியை உடனேகாண வேண்டும்; அப்படிப்பட்டபாவியாயினை; ஆதலால் உன்னுடைய வாழ்வை உன் பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டுச் சிவத்தியானஞ் செய்கின்ற மகாதவத்தையுடைய பெரியோர்கள் பின்னே சீக்கிரத்தில் தவஞ்செய்யும் படிபோவாயென்று சொன்னார். (எ-று.) (௬)

யானுமந்தயோகிதன்னை யிங்குமங்குமெங்கனுந்
தானலைந்துபணியணிந்து துணியணிந்துசாம்பரு
மேனிரம்பவேயணிந்து மிடியனாகிவீடெலா
நீறலைந்துதிரிதீயு நிந்தகர்க்குநிந்தகன்.

(இ-ள்.) அதைக்கேட்ட அடியேனும் அந்தயோகீசரைப் பார்த்து நீ இவ்விடத்திலும் அவ்விடத்திலும் எவ்விடத்திலும் இருப்பிடங்கிடையாமல் அலைந்து நல்ல ஆபரணத்துக்குக் கதியில்லாமல் உருத்திராக்ஷமணிகளைத்தரித்து நல்ல வஸ்திரத்துக்குக் கதியில்லாமல் கிழிபட்டசீலையைச் சுற்றிக்கொண்டு நல்லசுகந்தாதிகளுக்குக் கதியில்லாமல் சரீரமுழுதும் சாம்பலைப்பூசிக்கொண்டு நல்லபோஜனாதிகளுக்குக் கதியில்லாமல் தரித்திரனாகி வீடுகள்தோறுமலைந்து பிக்ஷைவாங்கித்திரிவாய்; நீயும் நிந்தகர்க்கு நிந்தகனே. (எ-று.) (௭)

ஆயவின்னையானகைப்ப லென்றுருத்தறைந்தனன்
றாயயோகிவேதியாவோர் ருத்திரப்பிசாசுநின்
னேயமாகநன்மைசொல்ல நிந்தைசொன்னநீயடா
பேயதாகுவாயெனப் பிணுப்புறச்சபித்தனன்.

(இ-ள்.) அப்படியாகிய உன்னைபார்த்து நானுஞ்சிரிப்பே னென்று கோபித்துச்சொன்னேன்; அதுகேட்ட பரிசுத்தராகிய-

யோகீசர் அதிககோபங்கொண்டு அடா ஒப்பற்ற ஆத்திரப்பிசாசே நாம் உன்னிடத்திலன்பாக உனக்கு நன்மையானவார்த்தையைச் சொல்ல அதுதெரியாமல் நம்மைத்தூஷித்த நீ பிசாசரூபமாகக் கடவாயென்று துன்பமுண்டாகச் சாபங்கொடுத்தார். (எ-று.) ()

ஈண்டவன்சபித்தல்கண் டியானுமந்தயோகிதாள்
பூண்டுகொண்டுதீமையைப் பொறுக்கவேண்டுமென்றனன்
மீண்டவன்சிரித்துநீ விருத்தவெற்பிலேகினு
லாண்டுரோமசன்னிருப்ப னவனகற்றுமென்றனன்.

(இ-ள்.) இப்படியாக அந்தயோகீசர் சாபமிட்டதுகண்டு அவருடைய திருவடிகளைப்பிடித்துக்கொண்டு எனது குற்றத்தைப் பொறுத்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தேன்; அதற்குத் திரும்பவும் அவர்நகைசெய்து நீவிருத்தாசலத்திற்குப்போனால் அவ்விடத்தில் உரோமசமுனிவரிருக்கின்றார்அவர் இந்தச்சாபத்தை நீக்கி இரக்ஷிப்பாரென்று அருளினார். (எ-று.) (௧)

முட்டினாற்குனிந்தவொப்ப முயலிற்பின்புயோகிதாள்
கிட்டுமோமுனிட்டவாழ்வு கெட்டபோதிலெய்துமோ
சிட்டயோகியிட்டசாபத் திட்டினாற்பிசாசமாய்
விட்டனன்றொருத்தரென்னை மீண்டுதீண்டினாரிலர்.

(இ-ள்.) முட்டியபின்பு தலைகுனிந்ததுபோல யோகீசருடைய சாபம் வந்தபின்பு அவரைவணங்க முயன்றதினால் அவருடைய பாதம் கிடைக்குமோ! தரித்திரம் வந்தபொழுது முன்னனுபவித்த செல்வங்களை விரும்பினால் அச்செல்வம்வருமோ! அந்த மேன்மைபொருந்திய யோகீசர்கொடுத்த சாபத்தினால் பேயுருவமானேன்; அதுமுதல் மறுபடியும் என்னைத்தீண்டினவர் ஒருவருமில்லை (எ-று.)



மாறிலாதவயிரவேசர் வடுகநாதர்கிங்கரர்
சோறுபாணிமற்றொருண்டி தொட்டபோதில்வெட்டுவார்
வேறிருக்கநிற்கொணாது வெயின்மழைக்கண்வாயுவி
லூறுபட்டலைந்துலைந் துறக்கமற்றுநின்றனன்.

(இ-ள்.) மாறுபடுதலில்லாத வைரவக்கடவுளும் அவருடைய சேனாதிபதிகளும் அவருடைய ஏவலர்களும் நான் உணவுசல முதலானவேறொரு பதார்த்தங்களைக் கையினாற் றொட்டபொழுதே கையயறும்படி வெட்டுவார்கள்; அல்லாமலும், இருக்கவும் நிற்கவும் ஓரிடங்கிடையாமல் வெய்யிலிலும் மழையிலும் காற்றிலும் வருந்தி அலைந்தழிந்து நித்திரையுமில்லாமற் றிரிந்துநின்றேன். ()

எலும்பொழிந்துடம்பிலின் றிறைச்சியில்லையென்செய்கேன்
மலங்கினேனலங்குதாக மட்டமில்லையிந்தநோய்
விலங்கவேதுலங்குநின்னை மேவினேனெனச்சொலுங்
கலிங்கனுக்குரோமசன் கடைக்கணோக்களித்தனன்.

(இ-ள்.) என்னுடையசரீரத்தில் அஸ்தியல்லாமல் அணுவளவாகிலும் மாமிசமில்லை என்னசெய்யப்போகிறேன் மிகவும் வருந்தினேன் அதனால் என்சரீரமுழுதும் உளைகின்றது அந்தத் துன்பத்திற்கு ஓரளவுமில்லை, இந்தவருத்தமெல்லாம் நீங்கும்படிப் பிரகாசிக்கின்ற தேவரீருடைய திருவடியில்வந்து சரணகதியடைந்தேனென்று சொல்லுகின்ற கலிங்கன்மேல் உரோமசமுனிவர் கிருபாகடாக்ஷம்வைத்தருளினார். (எ-று.) (௧௨)

அளித்துரோமசன்னுரைப்ப னங்கலிங்கநின்வயிற்
கிளைத்தயோகிசாபம்வந்து கிட்டல்பாசமோசன
முளைத்ததீயகன்மமுண்ணு முன்னிலைக்கியோகிதான்
விளைத்ததஞ்சலஞ்சலென்று மெய்க்கரத்தமைத்தனன்.

(இ - ள்.) அப்படிகடாக்ஷம்வைத்த உரோமசமுனிவர் அழகிய கலிங்கனே! உன்னிடத்திற் பூரணமாக யோகிசருடையசாபம்வந்து பொருந்தியது உனக்கு மலபரிபாககாலம்வந்து தோன்றினதாகும்; முற்சனனத்திற் செய்தன்ன் உனது பாவகன்மங்களனைத்தும் அநுபவித்தற்கிரு முன்னிலைக்கே அந்த யோகிசர் சாபந்தந்தது; அதுபற்றி நீ அஞ்சாதே அஞ்சாதே யென்று உண்மையாகிய சின்முத்திரை பிடித்தகையினால் அபயங்கொடுத்தருளினார். (எ-று) (கசு)

அதிகமான துறவர்யோக ரையர்துய்பவேதியர்
மதிநிலாவுகுரவர்தன் மனைக்கண்வந்தபோதரோ
விதிகளில்லையேயவுடம்பை விற்றுமொன்றைநல்கியே
துதிமொழிந்துதனையிழந்து தொல்மைநன்மைகூறுவான்.

(இ - ள்.) பெருமைபொருந்திய துறவிகள் யோகிகள் முனிவர்கள் பரிசுத்தமாகிய பிராமணர்கள் ஞானப்பிரகாசமிகுந்த ஆசிரியர்கள் ஆகிய இவர்களில் எவர்களாலும் தன்மனையினிடத்தில் வந்தபொழுது விவேகியானவன் தன்னிடத்தில் ஒருபொருளுமில்லாமற் போனாலும் தன்சரீரத்தை ஒருவனுக்கடிமையாகவிற்றாகிலும் ஏதேனும் ஒருபொருளைத் திரிகரணசுத்தியாகக்கொடுத்துத் தோத்திரஞ்செய்து தற்போதமிழந்துநின்று பூர்வபுண்ணியத்தால் தேவரீர்வரவு கிடைத்ததென்று புகழ்ந்து கூறுவான். (எ-று.) (கஎ)

கருணைநாயன்மார்பதங்கள் காண்டல்பாசமோசனந்
தருமவாசகந்தரிப்ப தேதவங்கள்கேள்விக
ளொருமையாயுரைத்தல்கேட் டிருத்தல்சீவன்முத்தியா
மருமையானபரமமுத்தி யந்தயோகர்மகிழ்வதே.

(இ-ள்) கிருபாவடிவமாகிய சிவபத்தர்களுடைய திருவடிகளைத் தரிசனஞ் செய்வதுவே அஞ்ஞானநாசமாகும்; அவர்சொல்லுகின்ற



தருமவாக்கியத்தை மனத்திற்கொள்வதுவே பலதவங்களும் பல கேள்விகளுமாகும்; அவர் ஒருமையாகச் சொல்லுகின்ற வேதார்த்தங்களைக்கேட்டிருப்பதுவே ஜீவன்முத்தியாகும்; அவர் மனமகிழ்ச்சியடைவதுவே அருமையாகிய மேலான மோக்ஷமாகும். (எ-று.)

வாழவைப்பதுங்கெடுக்க வல்லதுந்தவத்தினோர்
பாழறுத்தபார்வையென்று பற்றிநற்றவத்தினோர்
தாழ்வறுத்தபாததாம ரைக்கணர்ச்சனைச்செயா
தாழுமுற்றகுழியழுந்த வவரைநிந்தைபண்ணுவான்.

(இ - ள்.) நம்மைவாழ்விப்பதும் அழிக்கவல்லதும் தவத்தையுடைய பெரியோர்களது குற்றமில்லாத ஞானதிருஷ்டியே என்றறிந்து நல்ல தவமுதிர்ச்சியையுடையவர்களின் மேன்மைபொருந்தியதிருவடித்தாமரைகளில் அர்ச்சனைசெய்ய தவன் ஆழ்ந்த நரகக்குழியில்விழவேண்டி அவர்களை நிந்தைசெய்தவனையாவான். எ-று.

கேட்டியோகலிங்கவிளங்கபார்வைமுற்பிறப்
போட்டிமானுடப்பிறப் புனக்களித்ததாதலா
னாட்டமானநல்லமுத்த நதியுள்மூழ்கிமுதுகிரிச்
சேட்டமானசிவனையின்று தெரிசியென்றுசெப்பினான்.

(இ - ள்.) ஓ கலிங்கனே! நீ கேட்பாயாக; நமதுகிருபாதிருஷ்டியானது உனக்கு முன்னுள்ள பேய்ப்பிறவியைக்கெடுத்து மனிதப்பிறவியைக்கொடுத்தது; ஆதலால் யாவரும் விரும்பத்தக்க நன்மைபொருந்திய திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து பழமலையின்கணெழுந்தருளிய சிறந்த பரமசிவனை இப்பொழுது தரிசனஞ்செய்வாயென்று உரோமசமுனிவர் சொல்லியருளினார். (எ-று.)

இனிதுரோமசப்பிரா னிலிங்கனுங்கலிங்கனே
மனிதனாகவிடைகொடுக்க வந்துமுத்தநதியினிற்

புனிதமாகமூழ்கியெங்கள் புண்ணியன்பதத்தையும்
பணியவேரிமிகுகுழற் பதத்தையும்பணிந்தனன்.

(இ - ள்.) இனிதாகிய உரோமசமுனிவர் பேயுருவமாகவந்த கலிங்கராஜனென்பவனை மனிதவுருவமாகவிடைகொடுத்தனுப்பின வனவில் அந்தக்கலிங்கனும் திருமணிமுத்தாநதியில் வந்து பரிசுத்தமாக ஸ்நானஞ்செய்து எங்கள் பழமலைநாயகருடைய திருவடிகளையும் குளிர்ந்தமணமிக்க கூந்தலையுடைய பெரியநாயகியம்மையாரது திருவடிகளையும் வணங்கினின்றான். (எ-று.) (௧௮)

கலிங்கனீர்குதித்தல்போன்று கண்கடாரைசிந்திடக்
கலிங்கனுக்குலங்குமேனி கண்டுகொண்டுகவுரிபா
கலிங்கனைமலங்கள்செற்ற காலகாலதோலுத
கலிங்கனெனத்துதித் கருத்தியாற்களித்தனன்.

(இ - ள்.) கலிங்கினிருந்து ஜலமானது தத்திவிழுகிறதுபோலக் கண்களிலிருந்து ஜலமானது தாரைதாரையாய்ச் சிதறிவிழும்படி கலிங்கனும் பிரகாசியாநின்ற பரமசிவனுடையதிருமேனியைத் தரிசித்துஉமையவளை இடதுபாகத்திலுடையவனே இலிங்கசொருபனே! மும்மலங்களையுங்கெடுத்து இரக்ஷித்த காலாந்தகமூர்த்தியே! யானைத்தோலை ஆடையாகத்தரித்தவனே! என்று அன்பினுற்றோத்திரஞ்செய்து மனக்களிப்படைந்தான். (எ-று.)

பொருந்திராசபோகமும் புரந்தராதிபோகமு
மருந்திறற்கலிங்கனந்தர் சுத்தமுத்திபெற்றனன்
திருந்துமாதவத்தினோர்கள் சேவைமேயோர்க்குநிந்தைதான்
காந்துரைத்தவர்க்குமக் கலிங்கன்சான்றுகாணிலே.



(இ - ள்.) இகத்திற்பொருந்திய இராஜபோகங்களும் பரத்திலடையத்தக்க தேவேந்திராதிபோகங்களும் அனுபவித்தொழித்து அக்கலிங்கனும் பரமசிவனிடத்திற்கலக்கும் சுத்தமோக்ஷத்தைப் பெற்றான், ஆதலால் திருத்தமாகிய மகாதவசிரேஷ்டர்களைத் தரிசனஞ்செய்தவர்களுக்கும் அவர்களைத்தூஷித்தவர்களுக்கும் வரும் பலன்களையுணர்த்துதற்கு அந்தக்கலிங்கனே சாக்ஷியாகும். (எ-று.)

தீயவாய்விளம்பிநின்ற சிதடரும்பராக்கினின்
மாயகூவல்வாய்வரம்பின் மைந்தருந்நிகர்ப்பரால்
சேய்கள்பின்னரும்பிறந்து செல்வராவர்தீயவாய்
காய்களோர்மொழிபக்கொவ்வோர் நரகமுற்றுழலுமால்.

(இ - ள்.) பெரியோர்களைத் தூஷணையாக நிந்தித்தமூடர்களும் பாராக்கோடும் இடிந்தகரையையுடைய கிணற்றருகினின்ற சிறுவர்களுஞ் சமானமாவார்கள்; ஆனால் கிணற்றருகில்நின்று விழுந்த சிறுபிள்ளைகள் திரும்பவும்பிறந்து செல்வத்தை அடைவார்கள்; பெரியோர்களை நிந்தித்த கொடியவாயையுடையநாய்கள் நிந்தைசெய்த ஒவ்வொருசொல்லுக்கு ஒவ்வொருநரகத்திலுழன்று வருந்துவார்கள். (எ-று.)

கிணற்றில் விழுந்தார்க்குப் பின்னர் நற்கதியுண்டு; பெரியோர்களைத்தூஷித்தவர்களுக்கு நரகமேகாணியென்பது கருத்து. (௨௧)

கலிங்கச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௨௨௧.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது,

# கலியகல் சருக்கம்.

(வேறு.)

பூதநாயகர் திருமுதுகுன்றினிற் புகழைச்
சூதனேதுமென் றிருடிகடொக்குநின் றுரைப்ப
வோதுவான்றிக ழுருத்திரசங்கிதை தன்னி
லாதிநாளினி லருங்கலிதொலைத்தவப் புராணம்.

(இ - ள்.) நைமிசாரணியவாசிகளாகிய முனிவர்களனைவருஞ் சேர்ந்து சூதமுனிவரைவணங்கி நின்று ஓ சுவாமி! சகலநாயகனாகிய பரமசிவன் எழுந்தருளியிராநின்ற அழகியவிருத்தகிரியின்பெருமையைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்கையில் அந்தச் சூதமுனிவரும் பிரகாசிக்கின்ற ஸ்காந்தத்



தில் உருத்திரசங்கிதையிற் சொல்லப்பட்டிருக்கின்றதாய்முற் காலத்தில் அரியகலியைத் தொலைத்தருளிய அந்தச்சரித்திரத்தைச் சொல்லுகின்றார். (க)

சனற்குமாரனே தலைவனாமுனிவர்கள் செம்பொ
கனத்தமேருவி னான்முகன்கழலிணை யிறைஞ்சி
மனக்கருத்தினை யுரைப்பதாய்நின்றனர் மலரோ
னினத்துளோர்மனக் கவலைகளென்கொலென் றிசைத்தான்.

(இ - ள்.) சனற்குமாரமுனிவர்முதலிய முனிவர்களெல்லாரும் பெருமைபொருந்திய மகமேருகிரியினிடத்திற்சென்று பிரமதேவருடைய இரண்டுபாதங்களையும் வணங்கித் தங்களுடைய எண்ணத்தைச் சொல்வதாக நின்றார்கள்; பிரமதேவரும் அங்ஙனம்கூட்டமாகநின்ற முனிவர்களைப்பார்த்து உங்களுக்குச்சம்பவித்த மனோதுக்கமென்னவென்று கேட்டருளினார். (எ-று) (உ)

அயனைநோக்கிநின் றருஞ்சனற்குமாரனு மறைவான்
மயருங்வன்கலி வசத்தினான்மாதவ ரியாருந்
துயரமுற்றனர் சூத்திரனாயினன் வேந்தன்
புயன்மறுத்தது பூசையுந்தேவர்கட் கிலதால்.

(இ - ள்.) அங்ஙனம்வினாவின பிரமதேவரைப்பார்த்துநின்று அரியசனற்குமாரமுனிவரும் சொல்லுகின்றார்; முனிவர்களெல்லாரும் மயக்கத்தைத்தருகின்ற வலிமைபொருந்திய கலியின்வசப்பட்டதினால் துன்பத்தையடைந்தார்கள்; அரசனும் சூத்திரனாகிவிட்டான், மேகமும் மழைமறுத்தது; அதனால்தேவர்களுக்குப் பூசையுமில்லை. (எ-று.) (ங)

தன்மதானமுந் தவங்களுமிறந்தன வேதக்
கன்மநீத்தனர் கண்டவர்மறைபடிக் கின்றார்.

மன்னரேவலின் மறையவர்நிற்கின்றார் மறையி
னன்மையெண்ணில ரோதிலர்நிந்தையே நவில்வார்.

(இ - ள்.) தனைக்களும் நாளைக்களும் அவர்களும் இல்லாமற் போய்விட்டன; வேதவழியாகச்செய்கின்ற சற்கருமங்களையும் ஒழித்துவிட்டார்கள்; கிரமமில்லாமல்கண்டவர்களெல்லாம் வேதபாராயணஞ் செய்கின்றார்கள்; அரசர்களுடைய ஏவலின்வழியே பிராமணர்கள் நடக்கின்றார்கள்; வேதங்களின்மேன்மையைச் சிந்திக்கின்றிலர்; அவற்றை ஓதுகின்றிலர்; நிந்தனையே சொல்லுகின்றார்கள். (எ-று.) (௪)

உத்தமக்குணம் விட்டனரியோகமும் விட்டார்
சித்திகெட்டையும் விட்டனர்செபங்களும் விட்டார்
புத்திமேற்புலன் போகலாற்பொருமையும் விட்டார்
முத்திதன்னிலுங் குடும்பநன்றென்றனர் முனிவர்.

(இ - ள்.) முனிவர்களெல்லாரும் உத்தமமாகிய குணங்களை விடுத்தார்கள்; யோகஞ்செய்வதையும் விடுத்தார்கள்; அஷ்டசித்திகளையும் விடுத்தார்கள்; செபஞ்செய்வதையும்விடுத்தார்கள்; விஷயவழியாக விவேகஞ்செல்லுதலால் சாந்தத்தையும் விடுத்தார்கள்; மோக்ஷத்தைப்பார்க்கிலும் குடும்பமே நன்மையையுடையதென்று வாதிக்கின்றார்கள். (எ-று.) (௫)

மாதவர்வார்த்தையு மைந்தர்வார்த்தைகளுமே மேலாய்ச்
சாதியில்லவர் பெரியராய்ச்சற்குரு வுடனே
வாதுசெய்குவர் மைந்தர்கள்வணங்கிய பூசை
நீதியில்லையாற் குத்திரபூசையே நினைத்தார்.

(இ - ள்.) மனையாளுடைய சொற்களும் பிள்ளைகளுடைய சொற்களுமே மேன்மையுடையனவாக, சாதியினர்கள் சரிதியிலுப-



ர்ந்தவர்களாக, சிஷர்கள் ஆசிரியர்களிடத்தில் தாங்கள்கற்ற கல்வியகங்காரத்தினால் தர்க்கஞ்செய்பவர்களானார்கள்; வளப்பம்பொருந்திய சிவபூசைவிதியைவிட்டு வஞ்சகமாகிய பூசையேசெய்கின்றார்கள். (எ-று.) (௬)

பொய்களேயொழிந் துண்மையாவரும் புகலார்
துய்யயாகமுஞ் சூத்திரர்செயும்படி தொடுத்தார்
மையல்வேட்கையு மங்கையர்கோட்டியுஞ் சூதும்
வெய்யமாதனந் தேடலுமாயினன் வேந்தன்

(இ - ள்.) எவர்களும் அசத்தியவசனத்தைப் பேசுகின்றதேயல்லாமல் சத்தியவசனத்தைப் பேசார்கள்; சூத்திரர்களெல்லாம் பரிசுத்தமாகிய வேள்விகளைச்செய்யும்படி தொடங்கினார்கள்; அரசனானவன்மோகவிருப்பமும் ஸ்திரீகள்சங்கமமும் சூதாடுவதும் நடுவுநிலைமையில்லாமல் மகாகொடுமையான வழியில் திரவியத்தைத் தேடுவதும் ஆயினான். (எ-று.) (௭)

ஒருவர்செய்யுமா சாரமற்றொருவர்செய்கின்றார்
தருமவேடத்தை யாவருந்தரிக்கிலரியாரு
மிருவர்காண்பரு மொருவனையிகழ்ச்சிசெய் கின்றார் [ர்
பொருளின்மேற்கருத்தாயினர்மெய்ப்பொருள்போட்ட

(இ - ள்.) ஒருவர் செய்யத்தகுந்த ஆசாரங்களைச் செய்யத்தகாதவேறொருவர் செய்கின்றார்கள்; எவர்களும் புண்ணியவேடமாகிய சிவவேடத்தைத் தரிக்கின்றிலர்; பிரமவிஷ்ணுக்களாகிய இருவராலும் காண்டற்கரிய ஒருவனாகிய பரமசிவனை எவர்களும் தூஷிக்கின்றார்கள்; திரவியத்தேடுவதில் நினைவுகொண்டவர்களாகிய நித்தியானந்த வாழ்வை ஒருவரும் தேடிலர். (எ-று.)

போகவிட்டாரென்பது போட்டாரெனக் குறைந்துநின்றது. ()

குடும்பசாகரந் தன்னிலேகொலைகள வாதி
யிடும்பையாகிய முதலைவந்திழுத்தன வலைதாங்

விடும்படிக்குநீ மீகாமனாகிவில் லென்றார்
கடுக்கியக்கலி தொலைந்திளகான்முக னவில்வான்.

(இ - ள்.) கும்பமாகியசமுத்திரத்தில் கொலைகளவு முதலிய கொடுந் தொழில்களாலதிகரித்த துன்பமாகிய முதலைகள்வந்து எங்களை இழுக்கின்றன அவைகள் விட்டுநீங்கும்படியாக நீர் மாலுமியாகி நின்று கரையேற்றி இரக்ஷிக்கவேண்டுமென்று சனற்குமாரமுனிவர் விண்ணப்பித்தார்; அதுகேட்டுப் பிரமதேவரும் யாவரும் நடுங்குகின்ற அக்கலி நடுங்கி நீங்கும்படி ஒரு குக்ஷியைச் சொல்லுகின்றார். (எ-று.) (க)

கலியிலாப்பதி யென்றொருதலமுண்டு கருதி
னலியுமிக்கலி யெந்தநாளினு மில்லை
மலியுநோய்விடும் வன்னிபோற்சத்தியுஞ் சிவமு
நிலவுமத்தல நித்யகல்யாணமாய் நிகழும்.

(இ - ள்.) கலிநோயணுகப் பெறாதபதியென்று ஒருஸ்தலமிருக்கின்றது, சிந்திக்குங்கால் யாவரையும் வருத்துகின்ற இந்தக் கலியானது ஒருகாலத்திலும் அதிலில்லை; அன்றியும், அதிற்சென்றவர்களுக்கு அதிகரிக்கின்ற வியாதிகள் நீங்கிப்போம்; அக்கினியும் சூடும்போல் அபேதமாய்ச்சத்தியுஞ்சிவனும் பிரகாசிக்கின்ற அந்த ஸ்தலமானது எப்போதும் நித்தியமங்களமாய்விளங்கும். (எ-று.) ()

பழமலைப்பதி யாகியகலியிலாப் பதியின்
முழுதும்வித்தையுஞ் சித்தியுமுத்தியு மூண்டு
செழியபூசையாற் சிருட்டியாம்பெற்றன மாங்கே
வழுவின்மாயனும் வஞ்சரைவெல்வரம் பெற்றான்.

(இ - ள்.) விருத்தாசலஸ்தலமாகிய கலியிலாப் பதியினிடத்திற்போய் தரிசித்தவர்களுக்குச் சகலவித்தைகளும் சித்திகளும்



மோக்ஷமு முண்டாகும்; முற்காலத்தில் நாமும் அந்தஸ்தலத்தில் வனம்பொருந்திய சிவபூசைசெய்தபடியினால் சிருஷ்டித்தொழிலைப் பெற்றோம்; அல்லாமலும் குற்றமில்லாத விஷ்ணுமூர்த்தியும் அந்த ஸ்தலத்தில் சிவபூசைசெய்துவஞ்சகராகிய இராக்ஷதர்களைச்செயிக்கும்படியானவரத்தைப் பெற்றார். (எ-று.) (கக)

மத்தியார்ச்சுனத் திருந்ததேவலனுநாம் பெறாத
நித்தியத்துவம் பூசையாற்பெற்றன னினைக்கிற்
சித்தியாக்கின வர்க்கியன்சிவார்ச்சனை யாலே
பித்திலாமறை யத்தமுஞ்சித் தியும் பெற்றான்.

(இ - ள்.) திருவிடைமருதூரிலிருந்து தவஞ்செய்த தேவலமுனிவரும் பழமலையிற்சிவபூசைசெய்து நாம் அடையாத நித்தியத்துவத்தையும் அடைந்தார்; அல்லாமலும், நினைக்குமளவில் எண்வகைச்சித்திகளையுமுடைய யாக்கினவர்க்கியரென்னுமுனிவர் அந்த ஸ்தலத்தில் சிவபூசைசெய்ததனாலே மயக்கமில்லாத வேதார்த்தத்தையும் ஞானசித்தியையும் அடைந்தார். (எ-று.) (கஉ)

சுக்கிரன்சிவ பூசையாற்றொக்கதா னவர்க்கே
மெய்க்குருத்துவ மிருதசஞ்சீவனம் பெற்றான்
றக்கசித்திரச் சிகண்டியுஞ் சித்திகடரித்தான்
மக்கண்மித்திரக் கௌசிகன்மறைமுனி யானான்.

(இ-ள்.) சுக்கிராசாரியும் விருத்தாசலத்தில் சிவபூசைசெய்து அசுர கூட்டங்களுக்கெல்லாம் உண்மையான ஆசிரியத்துவமும் மிருதசஞ்சீவனமென்கின்ற மந்திரசித்தியும்பெற்றார்; சித்திரசிகண்டியும் அந்தஸ்தலத்திற் சிவபூசைசெய்து சகல சித்திகளையும் பெற்றார்; புத்திரமித்திரர்களோடுங்கூடிய விசுவாமித்திரமுனியும் சிவபூசைசெய்து வேதமுனிவரானார். (எ-று.) (கஈ)

வசிட்டனும்பழ மலையரைப்புதுமல ராலே
விசிட்டபூசையுஞ் செய்தனன்வேள்வியுஞ் செய்தா
னசிப்பில்வேள்வியின் முனிவரோடகத்திய னண்ணிப்
புசிக்கவாங்கின னவியினை முனிவரும் புசித்தார்.

(இ - ள்.) வசிஷ்டமுனிவரும் பழமலைநாயகரைப் புதியமலர்களைக்கொண்டு விசேடபூசைசெய்து யாகஞ்செய்தார்; அங்ஙனஞ் செய்த கெடாதயாகசாலையில் அகத்தியமுனிவரும் பலமுனிவர்களுடனே வந்து கையேந்தி அவிர்ப்பாகத்தை வாங்கிப்புசித்தார்; மற்றமுனிவர்களும் வாங்கிப்புசித்தார்கள். (எ-று.) (கச)

இந்திரன்முதற் கடவுளரேனைய தேவர்
சந்திரன்பகல் சதுர்மறைவந்தவி கொண்டார்
நந்தநாதனும் பழமலைநாதனும் வடிவாய்
வந்திருந்துதன் கையினால்வாங்கின னவியே.

(இ - ள்.) இந்திரன்முதலான அஷ்டதிக்குப்பாலகரும் மற்றைத்தேவர்களும் சந்திரனும் சூரியனும் நான்குவேதபுருடர்களும் அந்த யாகசாலையில்வந்து அவிர்ப்பாகத்தைக் கொண்டார்கள்; அப்பொழுது நமதுபெருமானாகிய பழமலைநாயகரும் நம்போல உருவங்கொண்டெழுந்தருளிவந்து அவர்களோடிருந்து தமது திருக்கரங்களால் அவிர்ப்பாகத்தை வாங்கிப்புசித்தார். (எ-று.) (கரு)

அண்டரந்தரா ளசுரரைவெல்லுவான் றிரண்டு
மிண்டிவந்தன ரசுரரும்வேலையி லொளித்தார்
கண்டகத்தியன் கடனீர்கையினால் வாங்கி
யுண்டபின்வெளி யாயினரசுரரை யொழித்தார்.

(இ - ள்.) அக்காலத்தில் அசுரர்களைச்செயிக்கும்படிநினைந்து சகலதேவர்களும் கூட்டமாகக் கூடினார்கள்; அப்பொழுது



அவ்வசுரர்களெல்லாரும் சமுத்திரத்தில் ஒளித்துக்கொண்டார்கள்; அதுகண்டு அகத்தியமுனிவரும் சமுத்திரசலத்தைக் கையில்வாங்கி ஆசமனமாக உட்கொண்டபின்பு அசுரர்கள்வெளிப்பட அவர்களெல்லாரையும் தேவர்கள் சங்கரித்தார்கள். (எ-று.) (கசு)

இவர்கண்மாத்திர மன்றுபெற்றேனைய முனிவோர்
தவர்கடேவர்க டலத்தினர்பிலத்தினர் தக்கோ
ரெவர்களும்முது குன்றரையிறைஞ்சிட வரங்க
ளவரளித்தனர் நீவிருஞ்செல்லு மென்றறைந்தான்.

(இ - ள்.) இஷ்டசித்திகளை யடைந்தவர்கள் நாம் இப்போது சொல்லிய இவர்கள் மாத்திரமல்ல; எல்லாரும் நினைத்தவரங்களைப் பெற்றார்கள்; அல்லாமலும் மற்றமுனிவர்களும் தபோதனர்களும் தேவர்களும் பூலோகத்தாரும் நாகலோகத்தாரும் மற்றைப் பெரியோர்கள்யாவர்களும் அந்தஸ்தலத்திற்சென்று பழமலைநாதரை வணங்க அவரும் அவர்களுக்குச் சகல வரங்களையும் கொடுத்தருளினார்; ஆதலால் நீங்களும் விருத்தாசலத்திற்குச் செல்லுங்களென்று சனற்குமாரமுனிவர் முதலிய சகலமுனிவர்களுக்கும் பிரமதேவர் அனுக்கிரகஞ் செய்தார். (எ-று.) (கஎ)

திசைமுகன்றிரு வாக்குபதேசமாக் கொண்டு
நசையினான்முது குன்றினின்முனிவர்க ணண்ணி
யிசையுமஞ்சன மலர்கடங்கரத்தினா லெடுத்து
வசையிலாதமுத் தாநதிப் புண்ணிய மடுவில்.

(இ - ள்.) அதுகேட்ட சகலமுனிவர்களும் பிரமதேவருடைய திருவாக்கை உபதேசமாகக்கொண்டு விருப்பத்தோடும் விருத்தாசலத்திற்குப்போய்ச்சேர்ந்து தங்களுக்கிசைந்த திருமஞ்சனமும் பத்திரபுஷ்பங்களும் தங்களுடைய கைகளா லெடுத்துக்கொண்டு குற்றமில்லாத திருமணிமுத்தாநதியின்கணுள்ள புண்ணியமடுவில் வந்து. (எ-று) (கஅ)

மூன்றுகாலமு மூழ்கிநம்முதுகிரி யிறையை
யேன்றபூசையு மியற்றினரவலஞ் செய்து செபித்தார்
மான்றிடுந்துயர் மாறினர்வரங்களும் பெற்றார்
தோன்றுஞானமுங் கலியிலாச்சுகத்தையு மடைந்தார்.

(இ - ள்.) திரிகாலங்களிலும் ஸ்நானஞ்செய்து ஈமது பழமலை நாதனை மேன்மையாகப்பூசித்து பிரதக்ஷிணஞ்செய்து செபமும் செய்து அவ்விசேடத்தால் மயக்குகின்ற துன்பத்தினீங்கிச் சகல வரங்களையும்பெற்றார்கள்; அதனால் பிரமஞானமும் உண்டாகிக் கலியில்லாத சுகத்தையும் அடைந்தார்கள், (எ-று.) (கக)

உலர்த்தியாக்கையை யொறுத்தலும்வெறுத்தலு மின்றித்
தலத்துமுக்கியஞ் சிறிதுகாலத்தினிற் றவங்கள்
பலித்தவென்றுதாங் தங்களிலதிசயப் பட்டுப்
புளப்படத்தலத் திருந்தனர் பூசையே புரிந்தார்.

(இ - ள்.) சரீரத்தையுலர்த்தி ஒருத்தலும் வெறுத்தலும் இல்லாமல்இந்த ஸ்தலத்தின்விசேஷத்தினால்சிறிதுநாளில்தபோபலன்கள் சித்தியாயிற்றென்று சகலமுனிவர்களும் தங்களுக்குள் ஆச்சரியப்பட்டு அந்த ஸ்தலத்தில் ஸ்திரமாகவிருந்து சிவபூசைசெய்தார்கள், (எ-று.) (உ0)

கலியகல்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-உருக.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பத்தாவது,

# சுவேதச் சருக்கம்.

வேறு.

அருமைமாதவ ரிடைவிடாதிருந்தன ரப்பா
லொருதுவாபர யுகத்தினிற்சுவேதனென் றொருவன்
குலகுலத்தினின் மன்னவனைம்பது கோடி
பிருதிவிப்பரப் பாண்டனன்பெருவப திருந்தான்.

(இ - ள்.) அந்தஸ்தலத்தில் அருமையாகிய மிக்கதவத்தையுடைய முனிவர்கள் இடைவிடாமல் சிவபூசை செய்திருந்தார்கள்; அப்பால், ஒரு துவாபரயுகத்தில் குருகுலத்திற்பிறந்துள்ள சுவேதனென்னும் பெயரையுடைய ஓரரசன் ஐம்பதுகோடி யோசனைவிசாலமுள்ள பூமிமுழுதும் ஏகசக்கிரத்தினால் ஒருகுடைநிழலில் அரசாக்ஷிசெய்து முதிர்ந்தவயதையுடையவனாகி இருந்தான் (எ-று.)

மகரவக்கரம் வல்லினத்தாரத்திடை யெழுத்தி
னிகலறுத்தின மாய்நகரத்தினிற் றூறு
யகரமாதியிற் றனையளித்தென்னவஞ் சகர்பொய்த்
துகளிலாவினர் தன்னினர் துறவர்பா னின்றான்.

(இ - ள்.) மரமென்னுமொழியின் ஈற்றமகரம் வல்லினஞ்சேருங்கால் சிலவிடத்து மரக்கோடெனமெலிர்து நிற்பினும்மாக்கோடு எனவலிர்து நிற்றலே மிகுதல்போன்று இவ்வரசனும் சத்துருக்களைக் கண்டவழித் தனதியற்கையுருவிழர்து வலிர்தும், அம்மகரம் இடையினஞ்சேருங்கால் 'மரம்யாது, மரம்வலிது, என ஒத்துநிற்றல்போன்று இவ்வரசனும்உண்மையாகிய மித்திராதியர்பால் ஒற்றுமையுடையனாகியும், மெல்லினத்ததாகிய நகாஞ்சேருங்கால் அம்மகரம் 'மாநன்று' எனத் தன்னிலையிழர்து கலப்புற்றும், உயிர்சேருங்கால் அம்மகரம் 'மாமழகியது, எனப்புணர்தல் போன்றுஇவ்வரசனும்பெரியோர்பால் தனதுசரீரத்தையே அவர்க்குரிமையாக ஒப்புவித்தும், அங்கனம் வாழ்ர்தான். (எ-று.) ஈண்டுக்கூறும் உவமான உபமேயங்கட்கு இயைர்தவுதாரணங்களை ஏற்றபெற்றிகொள்க.

"மகர வக்கரம் வல்லினத் தார்திடையெழுத்தி, னிகலறுத்தினமாக்கியே நகரம நீரு, வகர வக்கரத் தடக்கிட வொடுக்கிமற் றவற்றைத், துகளில் வல்லினத் தடக்குறர் துறவர்பா னின்றான்" எனப்பாடமோதி, மகாரவக்ஷரமாகிய மலத்தைவல்லினமாகிய சிகாரவக்ஷரமென்னும் சிவத்தினுலோட்டி இடையினமாகிய யகாரவக்ஷரமென்னும் ஆன்மாவில் பகையைநீக்கியொடுக்கி, அழிவெய்தும்படி நகாரவக்ஷரமாகிய திரோதாயியை வகாரவக்ஷரமாகிய அருளிலொடுக்கிப்பின், யகாரவகாரமென்னும் அவ்விரண்டையும் சிகாரவக்ஷரத்தொடுக்கிய சிவன்முத்தர்பால் அனுசரித்திருர்தான் எனப்பொருள்கொள்வதும் உண்டு.



இதனை "நகரமொடு மகரங்கள் சடர்தருங்கா ரணமா — னாடுமிலை நீங்கிவிடும் வகையையாவி னாதுங்கேன். வகாத்தி னகரமூரல் யகாத்திற் றூனே மகரமுநீங் கிடுமரிய சிகரமனு தன்னால், யகாலயம் வகாமுர்தான் சிகாத்தி லொடுக்க—மாகுமிறை நீங்கவுயிர் முத்தியெய்து மென்றே, தகாாறுங் கரியகுழ னகமாதுக் கிறைவன் றனதிரு வுளமகிழ்ந்து சாற்றினனன் குணர்ந்தே." என்னும் நிஷ்டானுபூதியானுமுணர்க. (௨)

வேற்றுமைப்பெயர் விரிந்தெனப்பலபெயர்க் கொருபேர்த்
தோற்றமென்னவே மாற்றலர்க்கனர்கமாய்த் தோன்றி
யாற்றுபேர்வினை யெச்சநேரலாவினர்க் குதவித்
தோற்றமெய்க்குயி ரெழுத்தெனத்துணைசெயூச் செறிந்தான்.

(இ - ள்.) ஒருபொருட்கு வேற்றுமைவகையால் பலபெயர், விரிர்தாற்போல அநேகம்பெயர்களையுடையனாய்ச் சத்துருக்களுக்கு அநேகனாகியும், பலபெயர்கட்கும் ஒருபொருளேதோற்றுமாறு போலத் தன்னையவாவினர்களுக்கு ஏகனாகியுதவியும், ஒற்றுக்கு உயிர் இன்றியமையாதவாறுபோலத் தான் சர்வான்மாக்களுக்கும் இன்றி யமையாதவனென்பதுதோன்ற எவ்வுயிரையும் காத்தும் விளங்கினான். (எ-று.)

பலபெயரெச்சங்கள் ஒருபெயரையும் பலவினையெச்சங்கள் ஒரு வினையையும் அவாவிநிற்றல்போலத் தன்னை அவாவிநிற்பவர்க்கெல்லாமென்பார் பேர்வினையெச்சநேரவாவினரென்றார். அஞ்சினர்க்குதவியென்பதும் பாடம். (௩)

கூப்பிலேம்பது கோடியோசனையுல காண்டோன்
பூப்பிரதக்கணம் பண்ணினான்பூங்குழற் றேவி
வாய்பிலக்தாண் மாண்டனண்மரணவே தனையைத்
தாப்பின்மன்னவன் கண்டனன்கொண்டனன் றளர்வே.

(இ-ள்.) குறைதலில்லாத ஐம்பதுகோடியோசனை விசால முள்ள பூமிமுழுதும் அரசாக்ஷிசெய்த சிவேதராஜனானவன் தனது மனையவளோடும் விதிப்படி பூப்பிரதக்ஷிணஞ்செய்தான்; அங்ஙனஞ்செய்தகாலத்தில் புஷ்பமாலையணிந்த அளகத்தையுடையமனையவள் இறந்தான்; அவன்பட்ட மாணவல்லைதலைய அருகிலிருந்த அவ்வரசன்கண்டு ஊசல்போல அலையும் மனத்தனர்ச்சியடைந்தவனாகி. (எ-று.) கூப்பு தாப்பு வலித்தல்விகாரம். தாம்பு ஊசல். (௪)

குதகுறுத்தமன் சுக்கிரன்பதந்தலைக் கொண்டான்
கதுமெனச்சிவ கதியுபதேசமும் பெற்றான்
விதிர்விதிர்ப்புடன் மிருதசஞ்சீவனம் பெற்றா
னெதுமச்சமி னெய்திடாத்தலமென வெழுந்தான்.

(இ-ள்.) சுவேதராஜன் சகலத்தையும்வெறுத்துச் சுக்கிரபகவானுடைய திருவடிகளைச் சிரமேற்கொண்டு அதிதீவிரமாகச் சிவசாயுச்சியத்தைத்தருகின்ற ஞானோபதேசமும்பெற்று அதிகநடுக்கத்தோடும் மிருதசஞ்சீவனமென்னும் மந்திரசித்தியும்பெற்று கொடூரமானயமவாதைபொருந்தாதஸ்தலம் எந்தஸ்தலமென்றுவிசாரித்துப் புறப்பட்டான். (எ-று) (௫)

காவிரிப்புனன் மூழ்கினன்கரிவன மிறைஞ்சிக்
காவிரித்தெழு தவத்துறைகனமழ பாடி
மாவிருக்குமை யாருடன்வதிட்ன்டயும் பணிந்தான்
மாவிருப்புறு முனித்துவம்வதிட்டையிற் பெற்றான்.

(இ-ள்.) சுவேதராஜன் காவிரிநதியில் ஸ்நானஞ்செய்து திருவானைக்காவை வணங்கிப் பூஞ்சோலைகள் விரிந்துவளர்கின்ற திருத்தவத்துறையும் பெருமைபொருந்திய திருமழபாடியும் இலக்குமிவாசஞ் செய்கின்ற திருவையாறும் திருவதிட்டையும்போய் வணங்கி, அந்தத் திருவதிட்டையென்னூர் தலத்தில் யாவரும் அதிக விருப்பங்கொள்ளுகின்ற சுவேதமுனிவனென்னும் பெயரைப் பெற்றான். (எ-று. (௬)



கிரியிராசனைக் கெழுமிமுக்காநதி மூழ்கித்
திரிவலஞ்செயூக் திருமுதுகுன்றனைப் பணிந்து
பரிவினூற்குறு முனிவையு பணிந்த நந் தவங்கள்
புரிதரத்தலம் புகன்றருள்செய்கெனப் புகன்றான்.

(இ-ள்.) சுவேதராஜன் மலைகளுக்குட் சிரேஷ்டமாகியவிருத்தாசலத்திற்குவந்து திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து அழகிய பழமலைநாதரை மூன்றுதரம்பிரதக்ஷிணஞ்செய்துவணங்கி அன்பினால் அகத்தியமுனிவரையும் வணங்கிநின்று; சுவாமி! அடியேன் தவங்கள் செய்யும்படி மேன்மையான ஒருஸ்தலத்தை அனுக்கிரகஞ்செய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான். (எ-று.) (௭)

விருத்தவெற்பினிற் றவஞ்செயின்மிருத்துவ மில்லை
திருத்துபிங்கலன் கோசிகன்றேவரிற் பெரியோர்
பெருத்தநான்முகன் பூசையாற்பெருவரம் பெற்றா
ரொருத்தராகிலும் வரம்பெறாதொழிந்தவ ரில்லை

(இ-ள்.) இந்தவிருத்தாசலத்தில் தவஞ்செய்தால் அவர்களுக்கு இறந்தற்றன்மையில்லை; அல்லாமலும் சகலசெல்வங்களையும் அனுபவிக்கும் குபேரனும் விசுவாமித்திரமுனியும் தேவர்களிற் சிறந்தவர்களும் பெருமைபொருந்திய பிரமதேவரும் சிவபூசை செய்துபெரிதாகிய வரங்களைப்பெற்றார்கள்; இந்தஸ்தலத்திலுவந்தவர்களில் வரம்பெறாமற் போனவர்கள் ஒருவருமில்லை. (எ-று.) (௮)

து-அனுபவம்.

அனுதிபாஞ்சயம் பிலிங்கமுமருளுரு கதியும்
வினவிவேலர்தம் மேவலானுமபிங் கணைந்து

பினுகியோகமுஞ் சித்தியுஞானமும் பெற்ரே
மனுதியா னுமித் தலத்திறமளக்கலாம் வரைத்தோ.

(இ - ள்.) அனுதியாகிய சயம்புலிங்கத்தின் பெருமையும், அருள் வடிவமாகிய திருமணிமுத்தாநதியின்பெருமையும், எனது ஆசிரியராகிய வேலாயுதத்தையுடைய சுப்பிரமணியக்கடவுள் அனுக்கிரகஞ்செய்யக்கேட்டு அவரது ஆக்கினையினுல் நாமும் இந்தஸ்தலத்திற்குவந்து பூசித்தபின்பு சிவயோகமுஞ் சகலசித்திகளும் பிரமஞானமும்பெற்ரேம், ஆதலால் இந்தஸ்தலத்தின்மகிமை மனமுதலானவைகளாலும் அளவிட்டுச்சொல்லலாகுமோ. (எ-று.) (௯)

நீயுநின்மனக் கலக்கமாயை நீக்கியித் தலத்திற்
றூயமா தவஞ் செய்யெனச்சொற்றனன் முனிவ
னூபன்னனு மகத்திய னுரைத்ததை நயந்து
காயவாழ்க்கையைக் கான லுங்கனவுமாய்க் கருதி

(இ - ள்.) நீயும் இந்தஸ்தலத்திலிருந்து உன்னுடைய மனேசஞ்சலத்தையொழித்துப் பரிசுத்தமாகிய மகாதவத்தைச் செய்வாயென்று அகத்தியமுனிவர்சொல்லியருளினுர்; அந்தச் சுவேதராஜனும் அகஸ்தியமுனிவர் சொன்ன வாக்கியத்தை உபதேசமாகக்கொண்டு சரீரவாழ்க்கையைக் கானற்சலமும் கனவிற்கண்டபொருளுமாக நினைந்து. (எ-று.) (௧௦)

சீதளப்பசுஞ் செம்பொனுல்வேய்ந்துநித் திலத்தாற்
பாதலப்பணி மணியினுற்பத்தியிற் குயிற்று
மீதலத்தினின் மின்னிளங்கொடிமுலைத் தடந்தோய்
மாதுளைத்திரு மலர்நிறமன்ன னுந் துறந்து.

(இ - ள்.) குளிர்ச்சியையுடைய பசுமைதங்கிய செம்பொற்றகட்டால்வேய்ந்து இடையிடையே முத்துக்களாலும் பாதாள



லோகத்திலுள்ள நாகரத்தினங்களினுலும் பத்திபத்தியாகப் பதிக்கப்பட்டிருக்கிற மேலுப்பரிகையினிடத்தில் இளமை பொருந்திய மின்னற்கொடிபோன்ற பெண்களுடைய ஸ்தனபாரத்திற் புணருகின்ற மாதுளம்புஷ்பத்தையொத்து விளங்கும் திருமார்பையுடைய சுவேதராஜனும் அத்தகைய இன்பமுதலியவற்றைத் துறந்து. (எ-று)

மூன்றுகாலமுந் தாநதிமுழ்கிநீ றணிந்து
தோன்றளிர்க்கையான் மஞ்சனங்கொழுமல ரேந்தி
யேன்றதம்பிரான் பூசைமுக்காலமு மியற்றி
யான்றதக்கிணஞ் செய்தெழுத்தஞ்சமே செபித்து.

(இ - ள்,) சுவேதராஜன் திருமணிமுத்தாநதியில் திரிகாலங்களிலும் ஸ்நானஞ்செய்து சரீரமுழுவதும் விபூதியைத்தரித்துக்கொண்டு தனதுமார்தளிரையொத்த கைகளாற் றிருமஞ்சனமும் வளம்பொருந்திய புஷ்பங்களுமெடுத்து உயர்வானபழமலைநாதரை மூன்றுகாலங்களிலும் பூசனைசெய்து மேன்மையான பிரதக்ஷிண நமஸ்காரங்களுஞ்செய்து பஞ்சாக்ஷரத்தையுஞ்செய்து செபஞ்செய்துமுடித்து. (எ-று.) (௧௨)

நிச்சயித்தநல் லடிசிலாநெய்தயிர் பாலா
னச்சுமின்சுவைக் கறியினுறுவைஞ்சுவைக் கனியால்
வைச்சபண்ணியஞ் சருக்கரைப்பானிய வகையா
லிச்சையின்படி யடியவர்பூசையு மியற்றி.

(இ - ள்.) சுவேதராசன் தன்மனதினுல் இனியவென்று நிச்சயஞ்செய்த நன்மைபொருந்திய போசனத்தினுலும் நெய்தயிர் பால்முதலியவைகளாலும் யாரும்விரும்பத்தக்க இனிதான சுவைபொருந்திய கறிவகைகளினுலும் நல்லமதுரமாகிய பழவகைகளினுலும் ரசம்பொருந்திய சிற்றுண்டிகளாலும் சர்க்கரை சுத்தோதகமுதலியவற்றுலும் சிவனடியார்கள்மனவிருப்பத்தின்படி திருப்திசெய்து பூசித்தும் (இருந்தான்.) (எ-று.) (௧௩

நாற்றிசைப்பயன் சுமந்துநாற்றிசைபெலா மின்னிச்
சிற்றவைம்புலன் கறுத்திருந்திவினை யிடித்துப்
போற்றுமன்பர்தாள் வீழ்ந்துபொற்பழமலை யேறித்
தோற்றுபொன்மழை பொருந்தசுவேதனுங் கொண்டல்.

(இ - ள்.) சுவேதராசனென்னும் மேகமானது நான்குதிசையிலுமுள்ள பொருள்களாகிய நீரைக்கிரகித்து நான்குதிசைகள்தோறும் கீர்த்தியாகிய மின்னலைப்பரப்பிக் கொடிய பஞ்சேந்திரியவிடயங்களைக் கோபித்தலாகிய கறுப்பையடைந்து பெரியதீவினைகளை யிடித்து யாவரும்வழிபடத்தக்க அடியவர் திருவடிகளிற்பணிந்து அழகிய விருத்தாசலத்திலேறித் தோன்றுகின்ற சுவர்ணமாகியமழையைச் சொரிந்தது. (எ-று.) (கச)

சுவேதனைக்கொண்டலென்றதற்கியையப் பயன்சுமத்தல்மின்னல் கறுத்தல் இடித்தல் கால்வீழ்தல்மலையேறல் மழைபொழிதலாதியவும் உருவகித்தார்.

சுந்தரர்க்கருண் முதுகிரிச்சோதியு மந்நாள்
வந்துநான்முகற் களித்தமந்திரத்தையு மியம்பி
நந்தமேனியிந் நகரமாநதிகளுக் கரசா
மிந்தமாநதி யிதிற்றவம்புரியென விசைத்து.

(இ-ள்.) சுந்தரமூர்த்திசுவாமிகள் ஓதிய திருப்பாடற்கிரங்கித் தியாகங்கொடுத்தருளிய பழமலைநாதரும் சுவேதராஜனிடத்திற்கு வந்து முற்காலத்தில் பிரமதேவருக்கு உபதேசஞ்செய்த மந்திரத்தையும் உபதேசித்து இந்தஸ்தலம் நமது வடிவமாகும்; இந்தத்திருமணிமுத்தாநதி நதிகளுக்கெல்லாம் அரசாகும்; இந்தஸ்தலத்தில் தவஞ்செய்வாயாக வென்றுசொல்லி. (எ-று.) (கரு)

அகிலகாரணன் மறைந்தனனத்திசை வணங்கி
யிகலறச்சிவ பூசைமாமகேசுர பூசை



சகலதானதன் மங்களுந்தருக்கினாற் பெருக்கிப்
புகலருந்தவ மகிழ்ச்சியாய்ப்புரிந்தனன் சுவேதன்.

(இ - ள்.) உலககாரணனாகிய பரமசிவன் மறைந்தருளினார்; அதுகண்டு சுவேதராஜனும் அந்தத்திசையைநோக்கி நமஸ்காரஞ் செய்து அஞ்ஞானவலிமைநீங்கும்படி சிவபூசையும்மகேசுரபூசையும் சகலதானதருமங்களும் களிப்பினால் விர்த்திபண்ணிச் சொலற்கரிய தவத்தைச்சந்தோஷத்துடன் செய்தனன். (எ-று.) (கசு)

குதலைபாங்குழக் கன்றுழிக்கொச்சையான் போல
வதிபவன்றொற்றிநின் றருள்செய்வான்சுவேதனே யுனக்குச்
சுதபனாமமுந் தந்தனநந்திதன் சுகமும்
பதமுந்தந்தன மென்றனன்சுவேதனும் பகர்வான்.

(இ - ள்.) மழலையையுடைய இளங்கன்றைநினைந்து இரங்கி வருகின்ற பசுவைப்போலப் பரமசிவனும் சுவேதமுனிவனுக்கிரங்கிப் பிரத்தியக்ஷமாகின்று கட்டளையிடுகின்றார்; ஓ சுவேதமுனிவனே! நாம் உனக்குச் சுதபனென்னும் பெயரையும் கொடுத்தோம்; அல்லாமலும் நந்திகேசனுக்குள்ள சுகத்தையும் பதவியையும் கொடுத்தோம் என்று திருவாய்மலர்ந்தருளினார்; அதுகேட்டுச் சுவேத முனிவரும் விண்ணப்பஞ்செல்கின்றார். (எ-று.) (கஎ)

கலிப்பிறப்பினாற் காதனாகிலு மடியேன்
சலிப்பிலேன்பிறப் பிறப்பினாற்றலைதடு மாறி
வலித்துநின்பத மறப்பனேல்மாறுகள் வருமேற்
பலிப்பிழுப்பனோ வென்றியான்பயந்தனன் பிறப்பை.

(இ - ள்.) அடியேன் வறியபிறவிவாதையினாலும் சமவாதையினாலும் நரகவாதையினாலும் சலிப்படையவில்லை; பிறப்பினாலும் இறப்பினாலும் இடமயங்கி அவற்றோடேன்பட்டு உம்முடைய திருவடிகளை மறந்துவிடுவேனாகில் மாறுகளுண்டாகும்; அதனால் இப்

போதகிடைத்துள்ள தபோபலத்தை இழந்துவிடுவேனேயென்று நினைந்து அடியேனும் பிறவிக்குப்பயந்தேன். (எ-று.) (கஅ)

பொன்றுமிப்பிறப் பொழித்தருள் புரிந்திடவேண்டு
மென்றுகூறுவா னுமையுடனின்றுபோ லென்று
நின்றிடும்படி வேண்டுநின்னிணையடி நேசங்
குன்றிடாவரங் கொடுத்திடவேண்டுமென் றுரைத்தான்


(இ-ள்.) நாசப்படுகின்ற இந்தப்பிறவித்துன்பத்தை நீக்கி இரக்ஷிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து சுவேதமுனிவர் பின்னையுஞ் சொல்லுகின்றார். சுவாமி! இப்பொழுது தரிசனங்கொடுத்ததுபோல எப்பொழுதும் இந்தஸ்தலத்தில் உமாதேவியாரோடு எழுந்தருளியிருந்து இரட்சிக்கவேண்டும்; அல்லாமலும் அடியேனுக்கு உம்முடைய உபயதிருவடியின்கண் அன்புநீங்காதிருக்கின்றவரமுங்கொடுத்துக் காக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார். ()

சுதபன்முன்னரே திரிபுரந்தூளெழ நகைத்த
வதிபனுஞ்சிரித் தப்படியாகுவ தென்று
முதல்வனின்றனன் சுவேதனுமுதல்வரம் பெற்றா
னுதவுந்தப்பிரா னடியவர்பூசையு முரைப்பாம்.

(இ-ள்.) சுவேத முனிவராகிய சுதபருக்கு முன்பு முப்புரங்களும் பொடியாகும்படி நகைசெய்த முதல்வனாகிய பரமசிவனும் நகைத்து அப்படியே ஆகக்கடவதென்று அருளினார்; சுவேதமுனிவரும் முதன்மையாகத் தானினைந்தவரத்தை பெற்றிருந்தார்; இப்பால் அந்தத்தலத்திலிருந்து சகல நன்மையையுந்தருகின்ற பரமசிவனடியார்களுக்குப் பூசைசெய்வதினாலுண்டாகிற பலனையுஞ் சொல்லுகின்றோம். (எ-று.) (உ0)

சுவேதச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-உஎக.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதினோராவது.

# அன்பர்பூசைச் சருக்கம்.

வேறு.

பதினெட்டதனிற் பதின்மூன்றாவது சிவகண்டத்
ததிகச்சிரகிரி யன்பர்கள்பூசையை யறைகின்றேன்
மதிபெற்றுளவோர் வணிகற்கொருநான் மகவுள்ளார்
முதிரக்காசித் தவசர்ச்சனைசெய் தான்முன்னோன்.

(இ-ள்.) புராணம்பதினெட்டினுள்ளே பதின்மூன்றாவது புராணமாகிய காந்தத்தில் சிவரகசிய கண்டத்திலுள்ள மேன்மையான பழமலையில் அடியார்களைப் பூசிப்பதினாலுண்டான பலனைச் சொல்லுகின்றோம்; பூர்வத்தில் விவேகமிகுந்துள்ள ஒருவைசியனுக்கு நான்குகுமாரர்களுண்டு; அவர்களிற் பிரதமபுத்திரனானவன் தவமுதிர்ச்சி யடையும்படியாகக் காசிவாசிகனாகிய பெரியோர்கள்

வரக்காணில் அவர்களை விசுவநாதராகப்பாவித்துப் பூசைசெய் தான். (எ-று.) (க)

காசிப்பிரமன் கழலிற்புக்கான் மூற்றோன்றல்
வாசிச்சோமே சத்திரண்டா வானன்பர்
நேசப்பூசை நிறைந்தருள்பெற்றான் மூன்றாவான்
பாசத்தாருடை மக்களபறித்த தனத்தாலே.

(இ-ள்.) அங்ஙனம்பூசித்த பிரதமபுத்திரன் தேகாந்தத்தில் காசிவிசுவநாதருடைய திருவடியிற்சேர்ந்தான், இரண்டாவது புத்திரன் உயர்வுபொருந்திய சோமேச்சரமென்னூர் தலத்திலிருந்து வருகின்ற அடியார்களைக்கண்டு அன்புடனே சோமேச்சுரராகப் பாவித்துப் பூசைசெய்து தேகாந்தத்தில் அக்கடவுளுடையதிருவடியிலடைந்தான்; மூன்றாம்புத்திரன் பந்துக்களுடை யபிள்ளைகள்வியாபாரத்தினின்று பகர்பறியாகக்கொண்ட திரவியத்தினால். (எ-று) ()

தனபதியாகிக் கனகசபைப்பத் தர்க்கன்பாய்த்
தனமுமருச்சனை செய்திறைபாதத் திற்புக்கா
னினமொருசிறுவர் சிறுநனிகைக்கொண்டிடவெட்டிப்
பனவரைவெட்டிச் சிறுவரைவெட்டிப் பறிகொள்ளும்.

(இ-ள்.) குபேரனைப்போற் செல்வத்தின் மிகுந்தவனாகிச் சிதம்பரத்திலிருந்துவருகின்ற அடியார்களைக்கண்டு சபாநாயகராகப்பாவித்து நாள்தோறும் அன்பாகப்பூசைசெய்து தேகாந்தத்தில் அக்கடவுளுடைய திருவடியிற்சேர்ந்தான்; மற்றொருவனாகிய நான்காம்புத்திரன் யாரேனும் ஒரு சிறியவஸ்திரம் வைத்திருந்தாலும் அதையும் அபகரிக்கும்படி நினைத்து அவர்களை வெட்டியும் பிராமணர்களாயிருந்தாலும் சிறுபிள்ளைகளாயிருந்தாலும் நீக்காமல் வெட்டியும் அவர்களிடத்துள்ள பொருளைப்பறிப்பதே தொழிலாக இருந்தான். (எ-று.) (உ)



படருங்கொலைசெய்து திரும்பலபொருள் பறிநீடன்
விடருங்கடரும் வேசையர்நீசையர்க டாமுண்பா
ரடருங்கொலையா னதிபிழைமூடிப் பிணிமூடிக்
கடவும்பிரமக் கொலையதலைக்கக் களையானான்.

(இ-ள்.) துன்பப்படுத்துகின்ற கொலைபாதகத்தைச்செய்து திருடுகின்ற அந்தப் பலபொருள்களும் நல்லோர்களுக்கு அனுபவமாகாதபடி பழியாதகர்களும் தூர்த்தர்களும் கூத்தர்களும் வேசையர்களும் நீசர்களும் அநுபவிப்பார்கள்; இவனும் மிகுந்த கொலைத்தொழிலைச் செய்தபடியினால் இம்மையில் அதிகபாதகங்கள் மேலிட்டுப் பலவியாதிகளுமதிகரித்து அப்பாதகங்களால் தூண்டப்பட்ட பிரமஹத்திதோஷம் பிடித்துவருத்த அதனால் மூர்ச்சையாயினான். (எ-று.) (கச)

மைந்தன்படுதுயர் கண்டொருநாண் மூது மறையோன்முன்
றந்தையுரைப்பச் சகலபுராணக் கடன்மூழ்கு
மந்தணன்மொழிவா னமரருமுனிவரும் வரமெய்திப்
புந்திசெய்முதுகிரி சென்றாலிப்பிணி போமென்றான்.

(இ-ள்.) இப்படி நான்காம் புத்திரன் படுகின்றவருத்தத்தை ஒருநாள் பிதாவானவன்கண்டு ஒருவயோதிகரான பிராமணரை வணங்கிச் சொன்னமாத்திரத்தில் சகல புராணங்களாகிய சமுத்திரத்தில் முழுகியுள்ள அந்தப்பிராமணோத்தமரும்சொல்லுகின்றார்: நீங்கள் தேவர்களும் முனிவர்களும் தங்களுக்குவேண்டிய வரங்களைப்பெற்று இடைவிடாமல் தியானிக்கப்பட்ட மேன்மையுடைய விருத்தாசலத்திற்குச் சென்றால் இந்தவியாதிகள் நீங்குமென்று சொல்லியருளினார். (இ)

மறையவன்மொழியைப் பிரமாணித்தவன் மகனோடு
கிளைகிளையுடனும் வணிகனுமுதுகிரி சேர்புக்கா

னறைகமழ்முத்தா நதியினின்மூழ்கிச் சிரவெற்பி
னிறையுடனுமைதனை யெய்திவணங்கின ரிவரெல்லாம்.

(இ - ள்.) அந்தப்பிராமணருடைய சொல்லைப் பிரமாணமாகக் கொண்டு அந்தவைசியனும் தன்னுடைய புத்திரனோடும் நிறைந்த சுற்றத்தாரோடும் கிரமமாக விருத்தாசலத்திற்குப் போயினான்; வாசனை பரிமளிக்கின்ற திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து பழமலையின் கண்ணெழுந்தருளிய பரமசிவனையும் பெரியநாயகி யம்மையாரையும் இவர்களெல்லாரும்போய் வணங்கினார்கள். (எ-று.)

நாடோறும்வணிகனு மைந்தனுமுத்தா நதிமூழ்கித்
தேடருநாற் றடனெட்டுவலஞ்செய்து சிவனேயுன்
றுடனைநம்பின மென்றுவணங்கித் தகுதொண்டர்
நீடியபூசையு நித்தமியன்றார் நெறியோடே.

(இ - ள்.) அந்தவைசியனும் அவனுடையகுமாரனும்நாடோறும் திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்துயாவராலும் தேடுதற்கரிதாகிய பழமலைநாதரை நூற்றெட்டுப் பிரதக்ஷிணஞ்செய்து எமதுகர்த்தாவாகிய பரமசிவனே! உம்முடைய திருவடிகளையே நம்பினோமென்று துதித்துவணங்கிச் சிறப்புப்பொருந்திய அடியார்களது மேன்மையான பூசையையும் தினந்தோறும் விதிமுறையாகச்செய்தார்கள். (௭)

மடமுங்கட்டிப் பொருளுநிரப்பினர் வருதொண்டர்க்
கிடமும் பூசையு மியல்பினளித்துப் பரிவாலே
யடருங்கனமுந் துகிலும்மமுது மருளன்புந்
திடமுஞ்செறியடி யவரிச்சைப்படி செயுநாளில்.

(இ - ள்.) அந்தஸ்தலத்தில் மடமாயப் பிரதிஷ்டையுஞ்செய்வித்து அதற்குவேண்டியதிரவியங்களும் வைத்தார்கள்; அல்லாமலும்



அவ்விடத்துவருகின்ற அடியார்களுக்கு இடமுங்கொடுத்து அவர்களைவிதிப்படிபூசித்து வணங்கி ஜீவகருணையும் சிவபத்தியும் மனோவுறுதியும் வாய்ந்த அந்த அடியார்களுடைய மனவிருப்பத்தின்படி மிகுந்த பொருள்களும் வஸ்திரங்களும் அமுதும் அன்பாகக் கொடுத்து வருகின்ற காலத்தில். (௮)

ஒருவருடத்திற் பிணியும்பிரமமு மொழிவாகிக்
கருதருசிவனடி யவர்மேல்வைத்த கருத்தாலே
மருவருசிவனடி மைந்தனடைந்தான் வணிகனுடன்
கருவளர்கிளைஞரு மதுவழியாகக் கதிசேர்ந்தார்.

(இ - ள்.) அந்தவைசியனுடைய குமாரன் ஒருவருஷத்தில் சகலவியாதிகளும் பிரஹத்திதோஷமும் நீங்கி மனத்தினால் நினைத்தற்கரிய பரமசிவனடியார்களிடத்தில்வைத்த அன்பினால் தனது பிதாவோடும் பொருந்துதற்கரிதாகிய பரமசிவனுடைய திருவடிகளிற் சேர்ந்தான், அவன்வமிசத்திலுண்டான சுற்றத்தாரும் அதுவேவழியாக மோக்ஷத்தைப் பெற்றார்கள். (எ-று.) (௯)

வேறு.

இந்தவணிகர்நால்வரினு மிளையோன்பெற்றபேறதனை
யந்தமில்லாக்குறுமுனிவ னரியசுவேதமுனிக்குரைப்ப
வந்துமுனிவனேவலினான் மணிமுத்தாறுதனின்மூழ்கி
யெந்தைபெருமான்முதுகுன்றணிகணைத்தாமரைத்தாள்மணிந் [தேந்தி.

(இ - ள்.) இந்தவைசியகுமாரர்கள் நாலுபேரினும் இளையவன் பெற்ற உயர்ந்தபதவியை அழிவில்லாத அகத்தியமுனிவர் அரிதாகிய சுவேதமுனிவருக்குச்சொல்ல அவரும் அகத்தியமுனிவரது ஆக்கினைவழியாக விருத்தாசலத்திற்குவந்து திருமணிமுத்தாநதி

யில் ஸ்நானஞ்செய்து எமது பிதாவாகியும் கடவுளாகியும் விளங்குகின்ற பழமலைநாதருடைய இரண்டு திருவடித்தாமரைகளையும் வணங்கித் தோத்திரஞ்செய்து. (எ-று.) (௧௦)

தன்பூசனையினிலாட்டியநீர் தன்னாற்சுவேதநதியாக்கி
யன்பர்பூசைபலகால மன்பாற்செய்யுநெறியாலு
மின்பமொழிகளவர்க்குரைக்கு மியல்பினாலுமிதத்துடனே
நன்பால்கறிகளல்லமுது நயந்துபடைக்குநண்பாலும்.

(இ-ள்.) தான்செய்தபூசையில் பரமசிவனுக்கு அபிஷேகஞ் செய்த திருமஞ்சனஜலத்தைத் தன்பெயரால் சுவேதநதியென்று சொல்லும்படிசெய்வித்துப் பலகாலமும் அடியார்கள்பூசையைஅன்போடு செய்துவருகின்ற கிரமத்தினால் அவர்களுக்கு இன்பமுண்டாக உபசாரவசனங்களைச்சொல்லுகின்ற தன்மையினாலும் இனிமையோடும் அவர்களுக்கு நல்ல பால்தயிர்களும் நல்ல அமுதும் சந்தோஷித்துப் படைக்கின்ற நட்பினாலும். (எ-று.) (௧௧)

நல்லமுதகுன்றுடையபிரா னயந்தசுவேதன்முற்றோன்றி
யல்லற்பிறவியறுத்தருளு மதனைநைமி சாரணியத்
தெல்லைமுனிவர்கேட்டுருகி யீசனடியார்செய்யத் [ன்
தில்லையிறைவன்முனிவர்கட்குத் திருக்கூத்தாடியருள்செய்தா

(இ-ள்.) நன்மைபொருந்திய பழமலையின்கண் ணெழுந்தருளிய பரமசிவன் திருவுளமகிழ்ந்து சுவேதமுனிவனுக்குமுன் பிரகாசித்துநின்று துன்பமாகியபிறவியை நீக்கியருளியமகிமையை நைமிசாரணியத் தலத்திலிருக்கின்ற முனிவர்கள் கேள்விப்பட்டு மனமுருகி அந்த ஸ்தலத்திற்குவந்து பரமசிவனடியார்களைப் பூசித்துவரும் பொழுது, சிதம்பரத்திலெழுந்தருளிவிளங்காநின்ற சபாநாயகரும் அம்முனிவர்களுக்குப் பிரத்தியக்ஷமாகி அழகிய நடனதரிசனம் கொடுத்தருளினார். (எ-று.) (௧௨)



சுமந்தமுனிவன்விருத்தகிரிச் சோதிப்புராணஞ்சொல்லுங்கா
லமைந்தசெய்தவன்மனனு மரசன்கேட்டுவரமுத்தி
சமைந்தமுத்தாநதிமூழ்கித் தானுமுடையான்றனைப்பணிந்து
கமஞ்சேர்பரமசிவனடியார் காதற்பூசைசெய்திருந்தான்.

(இ-ள்.) சுமந்தமுனிவர் விருத்தாசலப்பெருமானது புராணத்தைச் சொல்லுங்காலத்தில் தகுதிபெற்ற செய்த வன்மனென்னும் அரசன் கேள்விப்பட்டுவந்து, சகலநன்மையையும் மோக்ஷத்தையும் கொடுக்கும்படி பிரகாசிக்கின்ற திருமணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்து பழமலைநாதரைவணங்கிப் பரிபூரணசொரூபமாக விளங்குகின்ற பரமசிவனடியார்களையும் அந்தஸ்தலத்தில் அன்பாகப்பூசித்திருந்தான். (எ-று) (௧௩)

எந்தைபெருமானடியார்க ளியாவர்மனையிற்சென்றாலு
மந்தமனையின்முனிவர்குழா மமரர்குழாமுநெருங்கியிருந்
தந்தமனையிற்றிரவியங்க டாமேநின்றுகூத்தாடு
முந்துமடியார்பூசையினான் மூவேழ்சுற்றங்கரையேறும்.

(இ-ள்.) எமதுபிதாவாகிய பரமசிவனுடைய அடியார்கள் எவர்களுடையவீட்டிற் சென்றபோதிலும் அந்த வீட்டினிடத்தில் முனிவர் கூட்டமும் தேவர்கூட்டமும் வந்து நெருங்கும்; அல்லாமலும், அவ்வவர்கள்வீடுகளிலும் சகலசெல்வங்களும் தாமேவிர்த்தியாகும்; முதன்மையாகிய சிவனடியார்களைப் பூசித்த தபோபலத்தினால் அவர்களது இருபத்தொருதலைமுறையாயுள்ள சுற்றத்தார்களும் பிறவிக்கடலைநீந்தி மோக்ஷமாகிய கரையிலேறுவார்கள். ()

தலையானடந்துமுத்திநிலஞ் சார்தலொக்கும் பசுதன்மங்
கலையார்கரத்தான்சிவசரிதை காலானடத்தல்பறந்தடைதற்
றொலையேயொக்குஞ்சிவபூசை தொண்டர்பூசையாலினைதன்
மலையாவாயுவேகத்தான் மனவேகத்தான்ஞானநிலை.

(இ - ள்.) பசுதன்மத்தினால் மோக்ஷபூமியையடையக் கருதுவது தலையால்நடந்து அடைவதை யொக்கும்; மானை இடக்கரத்திற் றாங்கிய பரமசிவனுடைய திவ்வியசரித்திரனால் மோக்ஷபூமியை அடையக்கருதுவது காலால்நடந்து அடைவதை யொக்கும்; சிவபூசையினால் மோக்ஷபூமியை அடையக்கருதுவது சீக்கிரத்திற் பறந்து அடைவதை யொக்கும்; அன்பர்பூசையினால் மோக்ஷபூமியை அடையக்கருதுவது கெடாத வாயுவேகத்தினால் அடைவதை யொக்கும்; ஆன்மஞான நிலையில் மோக்ஷபூமியை அடையக் கருதுவது மனவேகத்தினால் அடைவதை யொக்கும். (எ-று,) (௧௯)

அன்பர்பூசைச்சருக்க முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்–௨௮௫.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பன்னிரண்டாவது

# சிவபூசாவிதிச் சருக்கம்.

வேறு,

சேயிழைகேட்காதன் சிவபூசைவிதியைச்சொல்லா
னாயுங்காற்சிவலிங்கத்தி னருச்சனையதிகநன்மை
யேயமுப்போதுஞ்செய்வா னிருபொழுதொருபோதேனுந்
தூயவாம்பூசைசெய்வான் சுத்தத்திற்பத்திநன்றும்.

(இ - ள்.) அனவர்த்தியைக்கேட்க காதசன்மா சிவபூசாவிதியை அருளுகின்றார்; ஆராய்ந்துபார்க்குமிடத்தில் சிவலிங்கபூசையானது எவ்வகைப்பட்ட பூசையிலும் அதிக நன்மையைத் தருவதாகும்; விவேகியானவன் இந்தப் பரிசுத்தமான சிவலிங்கப் பூசையை இயைந்த மூன்றுகாலத்திலும் செய்வான்; அங்ஙனஞ்செய்வது கூடாதாயின் இரண்டுகாலத்திலாகிலும் ஒருகாலத்திலாகிலும் செய்வான்;

அங்ஙனம் செய்பவனுக்குஅங்கசத்தியிலு அர்த்தக்காரணசத்தியாகியம் சற்பத்தியே மிகநன்மைதராகும். (எ-று.) (௧)

முச்சுடரிதயஞ்சென்னி முறைமணல்மண்மாநீறு
விச்சைபாங்கும்பங்கொன்றை வில்வநீர்குசைபால்வேதி
கைச்சுவரெழுத்துச்சாணங் கதிதிமமாதிபூசை
யிச்சையாற்செய்கவின்றே லளற்றினியானைக்கொப்பான்.

(இ - ள்.) சோமசூரியாக்கினியாகிய மூன்றுசுடர்கள் இருதயம் பிரமரந்திரம் திருமுறை மணல் மண் அரிசிமா திருநீறு ஞானசொரூபமாகிய பூரணகலசம், கொன்றை வில்வம் ஜலம் தருப்பை க்ஷீரம் வேதிகை சுவரிலெழுதியசித்திரம் பசுவின்சாணம் விளக்கமுற்ற என் முதலியவற்றுள் எவற்றிலாயினும் பரமசிவத்தை ஆவாகனம்பண்ணி அன்பினாற் பூசிக்கக்கடவன்; அங்ஙனம் பூசியாவிட்டால் சேற்றிலமுந்திய யானையைப்போலவே கரையேறமாட்டான் (எ-று.) (௨)

எத்தனைபடித்தானேனு மெத்தவஞ்செய்தானேனு
மத்தனையாகவெல்லா மடைவுடன்செய்தானேனு
மித்தனைப்பூசைசெய்யா னெடுஞ்செயற்போகமெல்லாஞ்
செத்தவர்களித்தாலொக்குந் தீங்கானின்மழையுமொக்கும்.

(இ - ள்.) பரமசிவனைப் பூசியாதவன் எவ்வளவு கல்விகற்றவனாயினும் எத்தெர்த்தவங்களைச் செய்தவனாயினும் எவ்வளவு யாகங்களுண்டோ அவ்வளவும் முறையாகச் செய்தவனாயினும் பரமசிவனைப் பூசியானேயாயின் அவனாற்செய்யப்பட்டமேன்மையானசெய்கைகளும் அவனநுபவிக்கின்ற சகலபோகபோக்கியங்களும் செத்தப்பிணமானவனுடைய செய்கைக்கும் அப்பிணமானவன் அநுபவிக்கப்பட்ட போகபோக்கியங்களும் சமானமாகும்; அல்லாமலும்



அக்கினிமயமாகிய காட்டிற்பெய்தமழையையும் ஒக்கும். (எ-று.)

கானல்மழையென்பதும்பாடம். (௩)

தவத்தினுக்கரசதான சங்கரன்பூசைசெய்யான்
சுவர்க்கநிரயகில்வீழ்வ னேனினுங்காகம்போல
வவத்தனுப்பேயும்பேயு மல்லுமிடியுஞ்சுற்றிச்
சுவர்த்தலைப்பூனைபோலச் சுற்றுவன்யோனிதோறும்.

(இ - ள்.) தவங்களுக்குள் தலைமைபூண்ட சிவபூசையைச்செய்யாதவன்பிரிவுபட்ட கொடியநரகத்தில் விழுவான்; அங்ஙனம் விழுந்துகிடப்பவன்விமோசனகாலமுண்டாகித் தேகமெடுத்தானாயினும் பட்சிசண்டாளமாகிய காக்கைபோலக் கருநிறமுடையவனாய்ப் பயனில்லாதவனாய் வியாதிகளும் பிசாசமும் வருத்தமும் தரித்திரமும் சூழப்பெற்றுச் சுவரினிடத்துள்ள பூனையைப்போலத் திகைத்துப் பலயோனிகள்தோறுஞ் சுற்றித்திரிவான். (எ-று.) (௪)

பூசையிலாதானுண்டி புழுப்பிணம்புலையன்கட்ட
மாசுளபாவமொக்கும் வாளினிற்றீயில்வீழ்ந்து
நாசமாவதுவேநன்று நற்குலம்பிறந்தானேனுந்
தேகவாரவிளத்தீண்டிற் றெரிசிக்கினினைக்கிற்பாவம்.

(இ - ள்.) பூசையில்லாதவனுண்ணப்பட்ட போஜனமானது புழுத்தபிணமும் புலையனுடைய கட்டமுமாகும்; மாசுபொருந்திய பாதகத்திற்குச் சமானமாகும்; அவன் வாளினிடத்தேனும் நெருப்பினிடத்தேனும் விழுந்து இறந்துபோவதே நன்மையாகும்; உயர்ந்தகுலத்திற் பிறந்தவனாயிருந்தாலும் அவனைச் சிவபூசைசெய்கின்ற பரிசுத்தர்கள் கையால்தீண்டினாலும் கண்ணாற்பார்த்தாலும் மனத்தால்நினைத்தாலும் பாவமுண்டாகும். (எ-று.) (௫)

உழலைசேர்காட்டுவேனிற் குதவியகற்பகத்தி
னிழறனையொக்கும்பூசை நிகழ்த்திடிற்றவர்தானங்
ளழலாறுவேள்விதீர்த்த மாடலுஞ்செய்தாலொக்குங்
கழலடைந்திடுவன்பின்னர்க் கணநாதனாவன்முன்னே.

(இ-ள்.) சிவபூசையானது, அடைந்தவர்கட்கெல்லாம் தாபத்தைத்தருவதான பாலைவனத்தின்கண் கோடையாற்படுகின்றவருத்தத்திற்கு உதவிசெய்த கற்பகவிருக்ஷநிழலுக்குச் சமானமாகும்; அப்படிப்பட்ட சிவபூசையைச்செய்தால் சகலதவங்களும் சகலதானங்களும் அக்கினியிற்செய்கின்ற சகலயாகங்களும் சகலதீர்த்தஸ்நானங்களும் செய்ததற்குச் சமானமாகும்; அங்ஙனஞ்செய்தவன் தேகாந்தத்தில் முன்புகணநாதனாகித் தெய்வவிமானத்திலேறி உலகமெங்குஞ்சஞ்சரித்துப் பின்பு பரமசிவனுடைய திருவடியிற் சேருவான்.

சிவலிங்கத்தொருகைநீர்பூச் செலுத்திடில்விருத்தவெற்பிற்
கவலையின்மருதுமேரு காசிசாகரத்திற்கங்கை
யிவர்பிரயாகைகேகை யிமகிரியாதிதன்னிற்
றவநெடுங்காலஞ்செய்து தருமமுஞ்செய்தாலொக்கும்.

(இ-ள்.) விருத்தாசலத்திலிருந்து சிவலிங்கத்தில் ஒருகைஜலம்விட்டு அபிஷேகஞ்செய்தாலும் ஒருபுஷ்பத்தைச் சாத்தினாலும் சஞ்சலத்தை நிவர்த்திக்கின்ற திருவிடைமருதூரிலும் மகமேருவிலும் வாரணாசியிலும் சமுத்திர தீரத்திலும் கங்காதீரத்திலும் யாவரும் விரும்பத்தக்க பிரயாகைநதியிலும் கேகைநதியிலும் இமயகிரிமுதலானகிரியிடங்களிலும் வசித்து நெடுநாள்தவஞ்செய்து தருமமுஞ்செய்ததற்குச் சமானமாகும். (எ-று.) (எ)

வெகுவிதவிரதஞ்சாந்தி மெய்ப்பரிமேதங்கோடி
தருபலனொருநாட்பூசை தனைச்செயின்மரணதுக்க



மிகலிலைமகவான்செல்வ மிவன்கொடுத்தவர்க்கேயுண்டா
மிகபதிசெல்வந்தானு மற்றவன்கொடுத்தாலுண்டாம்.

(இ-ள்.) ஒருநாள் சிவபூசைசெய்தால் வெகுவித விரதங்களும்சாந்திகளும் உண்மையாகிய கோடி அசுவமேதயாகங்களும் செய்தாலுண்டாகின்ற தகுதியான பலனுண்டாகும்; அவனுக்கு மரணவருத்தமென்னும் பகையில்லை; இந்திரபோகத்தை இவன் எவர்களுக்கு விரும்பிக்கொடுக்கின்றானோ அவர்களுக்குண்டாகும்; அங்ஙனம் தேவேந்திர போகம்பெற்றவன் பூலோகசெல்வத்தை எவர்களுக்கு விரும்பிக்கொடுக்கின்றானோ அது அவர்களுக்குண்டாகும். (எ-று.) (அ)

எந்தெந்தப்பதமிச்சித்தா னேனுங்காமியமிச்சித்தா
னந்தந்தச்செல்வமுண்டா மட்டமாசித்திவித்தை
நிந்தையிறேவராச நித்தியகல்யாணகீர்த்தி
சிந்தையாற்சலம்பூக்கொண்டு சிவனையர்ச்சித்தாலுண்டாம்.

(இ-ள்.) உள்ளன்பினால் திருமஞ்சனமும் பத்திரபுஷ்பமுங்கொண்டு பரமசிவனைப் பூசைசெய்தால் அங்ஙனஞ்செய்தவன் எந்தெந்தப்பதங்களை விரும்பினானோ எந்த எந்தசெல்வங்களை விரும்பினானோ அந்தந்தபதங்களும் அந்த அந்தசெல்வங்களும் அவனுக் குண்டாகும்; அல்லாமலும் அஷ்டமாசித்திகளும் வித்தைகளும் நிந்தையில்லாத தேவர்களுக்கும் அரசர்களுக்குமுரிய நித்தியமங்களமும் கீர்த்தியுமுண்டாகும். (எ-று.) (க)

வாசவன்மலரோன்மாயன் மகிழ்சிவபூசைசெய்து
தேசுடைக்கடவுளானார் திருவாணியிந்திராணி
யீசன்பூசையாலே யிருங்கவான்முகத்தின்மார்பிற்
பாசமின்மூவர்தம்பாற் பரிவிடம்பெற்றாரன்றே.

(இ - ள்) தேவேந்திரனும் பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் மகிழ்ச்சியைத்தருகின்ற சிவபூசைசெய்து பிரகாசம்பொருந்திய தேவர்களிற் றலைமைபெற்றார்கள்; அல்லாமலும் இலக்ஷ்மி சரஸ்வதி இந்திராணி இவர்கள்மூவரும் சிவபூசைசெய்து அதனால் இலக்ஷ்மியானவள் பந்தமில்லாத மூவர்களில் விஷ்ணுவினுடையமார்பிலும், சரஸ்வதியானவள் பிரமாவினுடையமுகத்திலும்இந்திராணியானவள் தேவேந்திரனுடைய பெருமைபொருந்திய தொடையிலுமாக அன்போடும் வசிக்குமிடம்பெற்றார்கள். (எ-று.) (௧௦)

ஆரிடந்தேவலிங்க மிராக்கதம்படிகந்தீர்த்தஞ்
சார்புடைச்சயம்புவெற்புத் தாபிதத்தியற்றிற்பூசை
யேருடைமறலிதானு மிவர்தமக்கடிமையாவன்
சேர்வர்சாரூபந்தேவர்க் கிறைபதினால்வர்காலம்.

(இ - ள்.) ஆரிடலிங்கம் தேவலிங்கம் இராக்ஷதலிங்கம் படிகலிங்கம் தீர்த்தலிங்கம் எவர்க்கும் பற்றுக்கோடாகிய சயம்புலிங்கம் மலையிலிங்கம் ஆகிய இவைகளிற் பூசித்தால் அழகுபொருந்திய யமதருமராஜனும் இவர்களுக்கும் அடிமையாவான்; அல்லாமலும் பதினாலு இந்திரர்கள் அரசுசெய்கின்ற காலபரியந்தம் சாரூபபதத்திற் பொருந்துவார்கள். (எ-று) (௧௧)

கண்டுபாவித்தபூசை கருத்தொன்றுச்செய்தபூசை
மிண்டினால்விரோதபூசை வித்தைமெய்த்தவங்கள்பத்தி
யுண்டதாம்புவியுமாள்வ ரொருநாளுமிடையறாமற்
றொண்டனாய்ப்பூசைசெய்வான் சுத்தமாமுத்திசேர்வன்.

(இ - ள்.) ஒருவர்செய்யக்கண்டு அதுபோற்பாவித்துச்செய்த பூசையினாலும், மனமொருமித்துச்செய்த பூசையினாலும், செருக்கினால் விரோதமாகச்செய்த பூசையினாலும், வித்தையும் உண்



மையாகிய தவங்களும் சம்பத்தியும் அவர்களுக்கு உண்டாகும், அல்லாமலும் உலகத்தையும் அரசுசெய்வார்கள்; அடிமைத்திறமுடையவனாகி ஒருநாளும் இடைவிடாமல் பரமசிவனைப் பூசிப்பவன் பரிசுத்தமாகிய மோக்ஷத்தைப் பெறுவான். (எ-று.) (௧௨)

நாய்க்கெரித்திடுவோனீச னன்றிகொன்றவனுக்கொன்றான்
றீக்குணன்விரதபங்கி சேயிழைமறையோர்க்கொன்றான்
பாக்கியபூசைசெய்யிற் பாவம்போய்ப்பானுபோல்வ
னாக்கவன்செல்வந்தானே செல்வமென்றறையும்வேதம்.

(இ - ள்.) சோறும் மாமிசமும் எரியிற்சமைத்து நாயையுண்பித்துத்தானுமுண்பவனானாலும் புலையனானாலும் ஒருவர்செய்தநன்றியை மறந்தவனானாலும் பசுவைக்கொன்றவனானாலும் கொடியகுணத்தை யுடையவனானாலும் விரதபங்கனானாலும் ஸ்திரீகளையும் பிராமணர்களையும் கொன்றவனானாலும் சகலபாக்கியத்தையுந் தருகின்ற இந்தச் சிவபூசையைச்செய்தானாகில் அவன் தனது பாதகங்கள் நீங்கிச்சூரியனுக்கொப்பாக விளங்குவான்; அல்லாமலும் அவன் தேடப்பட்டசெல்வமே செல்வமென்று நான்குவேதங்களும் முறையிடும் (எ-று.) (௧௩)

துறவிகடாமும்பூசை தொடுத்தவர்க்கொப்பான்று
மறவனும்மறவர்க்கூடி மருவினும்பூசைசெய்யி
லறவனுமவன்செய்பாவ மம்புயவிலைநீர்போலும்
பிறவிவேரறுக்கும்பூசை பெருவயித்தியனேடாக்கும்.

(இ - ள்.) துறவறத்தைப்பெற்ற பெரியோர்களும் சிவபூசையைச்செய்பவர்கட்குச் சமானமானவரல்ல; ஒருவன் வஞ்சகனாகி வஞ்சகரைக்கூடிச் சிநேகித்திருந்தானானாலும் சிவபூசைசெய்தால் புண்ணியனாவான்; அவன்செய்த பாதகங்களெல்லாம் கமலபத்தி

ரோதகம்போல அவனைவிட்டுப் பிரிந்துவிடும்; ஆதலால் ஜனன வியாதியை வேரோடொழிக்கின்ற இந்தச்சிவபூசையானது பெரிய வயித்தியனுக்குச் சமானமாகும். (எ-று.) (கச)

காலைமத்தியானஞ்சாயங் காலமுங்கடவுட்சேவை
மேலதாஞ்சுவர்க்கம்வாசி மேதமேபாவநாசஞ்
சாலநற்பலன்களுண்டாந் தலைவனைப்பிரதோடத்திற்
சீலமாய்வணங்கின்மூன்று சேவையிற்பலனுமுண்டாம்.

(இ-ள்.) காலைப்பொழுதிலும் உச்சிப்பொழுதிலும் மாலைப் பொழுதிலும் பரமசிவனை இடைவிடாமல் தரிசனஞ் செய்தால் முறையே மேலாகிய சுவர்க்கபோகமும் அஸ்வமேதயாக பலனும் பாவவிமோசனமுமாகிய மிகுந்த நன்மைபொருந்திய பலன்களுண் டாகும்; அன்றியும், பரமசிவனைப் பிரதோஷகாலத்தில் ஆசாரமாய் வணங்கினால் திரிகாலத்திலும் தரிசனஞ்செய்த பலனுமுண்டாகும். (எ-று.) (கரு)

குழந்தைதாய்தந்தைகர்ப்பங் குதிரைகோமறையோர்மாத
ரழுங்கவேகொன்றபாத மாலயக்களவுசெம்பொன்
பழங்களுற்கரந்தபாவம் பதின்மூன்றும்பிரதோடத்திற்
செழுஞ்சிவபூசைபண்ணத் தெரிசிக்கப்பரிசிக்கப்போம்.

(இ-ள்.) குழந்தையையும் தாயையும் தகப்பனையும் கருவை யும் குதிரையையும் பசுவையும் பிராமணர்களையும் ஸ்திரீகளையும் வருந்தும்படி யாகக்கொன்ற பாவங்களும், தன்வருத்த நிமித்தம் சென்மாந்தரங்களிற்செய்த சிவாலயப்பொருட்களவினாலும் செம் பொன்களவினாலுமுண்டான பாதகங்களும், பதின்மூன்றாந் திதி யில் பிரமதோஷகாலத்தில் மேன்மைபொருந்திய பரமசிவனைப்பூசி த்தாலும் தெரிசித்தாலும் பரிசித்தாலும் நீங்கிவிடும், (எ-று.) (கசு)



வானளவடைத்தபஞ்சிற் றீப்பொறிமானுமீசன்
மேனியைப்பிரதோடத்தின் மிகத்தரிசித்தார்பாவம்
பான்மையாம்பதின்மூன்றுநாட் பானுவத்தமிக்குமுன்பின்
னனதோரியாமந்தானே பிரதோடமாவதம்மா.

(இ-ள்.) பிரதோஷகாலத்தில் பரமசிவனுடைய திருமேனி யைக்கண்டு மிகுந்தஅன்பாகத் தெரிசனஞ்செய்தவர்களுடையபாத கங்கள் ஆகாயவளமாக அடைத்துவைத்துள்ளபஞ்சில் தீப்பொறி பட்டதை ஒக்கும்; பிரதோஷகாலமாவது எல்லாப்பான்மையையு முடைய திரயோதசிதினத்தில் சூரியன் அஸ்தமயனமாகுமுன் மூன்றேமுக்கால் நாழிகையும் அஸ்தமயனமாகுமுன் மூன்றேமுக் கால்நாழிகையுமாகிய ஒருஜாமப்பொழுதேயாகும். (எ-று) (கஎ)

அஞ்சினன்பழைக்காச்சென்று னாடல்பாட லுக்காச்சென்றான்
மிஞ்சியவிமலற்காணின் விஞ்ஞானந்தவங்களுண்டாம்
வஞ்சகமன்னன்றானும் வந்திக்கிற்பிரதோடத்திற்
செஞ்சவேபாவநீங்குந் தீண்டிற்சாரூபஞ்சேர்வன்.

(இ-ள்.) பிரதோஷகாலத்தில் ஒரு ஆபத்திற்குப் பயந்து போனவனாயினும், மழைக்கொதுங்கினவனாயினும், ஆடல்பாடல் களைப் பார்க்கப்போனவனாயினும், பரமசிவனைக்கண்டு தரிசிப்பா னாகில் அவனுக்குவிவேகமும் தவங்களுமுண்டாகும்; வஞ்சகத்தை யுடைய அரசனும் பரமசிவனைப் பிரதோஷகாலத்தில் வணங்கினால் அவன்செய்த பாதகங்கள்முழுதும் நீங்கிவிடும்; அல்லாமலும் பரம சிவனைப்பரிசித்துப் பூசைசெய்தால் சாரூபபதத்தைப்பெறுவான்.

நெய்தயிர்பால்தேனெண்ணெய் நிறைகருப்பிளநீர்கந்தந்
துய்யவாங்கனிநீராட்டிற் றோயம்பத்ததிகமற்றை

பையபின்மஞ்சனதி யொன்றுக்கொன்றதிகநாளுஞ்
செய்யசாரூபஞ்சேர்வன் றிகழ்பிரதோடகாலம்.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற பிரதோஷகாலத்தில் நெய் தயிர் பால் தேன் எண்ணெய்நிறைந்தகரும்பினிரதம் இளநீர் சந்தனம் பரிசுத்தமாகிய பழரசங்கள் ஆகிய இவைகளால் பரமசிவனை அபிஷேகஞ்செய்யும்பொழுது இடையிடையே அபிஷேகஞ்செய்யப் பட்ட சுத்தோதகம் தனித்தபிஷேகஞ்செய்யும்சுத்தோதகத்தினும் பதின்மடங்குவிசேடமாகும்; ஆகையால், சேர்த்துசொல்லப்பட்ட திருமஞ்சனமுதலியவற்றைக்கொண்டு அபிஷேகஞ்செய்யின் ஒன் றற்கொன்று விசேடமுடைத்தாய் நூறுபங்கதிகமாகும்; அங்ஙனஞ் செய்தவன் செவ்விதாகிய சாரூபபதவியையடைவான். (எ - று.)

வில்லநற்கனியினாட்டி யருச்சித்திளவெந்நீராட்டி
னல்லகோதானங்கோடி நல்கியபலனைப்பொருந்த
வல்லறீரபரபக்கத் தட்டமியெண்ணெய்நெய்யால்
வல்லவாசிவனுக்காட்டின் மற்றுமாதானங்கோடி.

(இ - ள்.) பிரதோஷகாலத்தில்நல்ல வில்வப்பழக் குழம்பினால் அபிஷேகஞ்செய்து வில்வபத்திரத்தைக்கொண்டு அருச்சித்துப் பின்பு இளவெந்நீரால் அபிஷேகஞ்செய்தால் நன்மைபொருந்திய கோடி கோதானஞ்செய்தபலனுக்குச் சமானமாகும்; வருத்தத் தைத் தீர்க்கின்ற அபரபக்ஷத்து அஷ்டமிதிதியில் பசுவினெய்யினா லேனும் அல்லது எண்ணெயினாலேனும் இயன்றமட்டும் பரமசிவ னுக்கு அபிஷேகஞ்செய்தால் கோடி கோதானஞ்செய்த பலனுக் குச் சமானமாகும். (எ - று) (௨௦)

அன்றுருக்காவினெய்யா லருங்காரெட்டயிலத்தாட்டிற்
றன்றுவனூறுகோடி காலந்தான்சிவலோகத்திற்



றன்றுனைத்திருநீறாட்டிற் சந்திரனாகிவாழ்வ
னன்றியான்றயிரையாட்டி னாரணனவன்றே.

(இ - ள்.) அந்த அஷ்டமிதிதியில் அப்போதுருக்கிய பசுவி னெய்யினாலேனும் அரிதாகிய கருமைபொருந்திய எண்ணெயினா லேனும் பரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்தால் நூறுகோடிகால மளவும் பரிசுத்தமாகிய சிவலோகத்திற்பொருந்துவான்; அல்லாம லும் தனக்குத்தானே ஒப்பாகிய திருநீற்றினால் அபிஷேகஞ்செய் தால் சந்திரனாகிவாழ்வான்; நன்மைபொருந்திய பசுவின் தயிரினால் அபிஷேகஞ்செய்தால் திருமாலாகுவான். (எ - று.) (௨௧)

பொன்னிறக்குளம்புகொம்பு பொதிந்துபட்டாடைபோர்த்து
துன்னுமானனந்தங்கோடி சூரியகிரகணத்தி [த்
னன்மைநான்மறைபோர்க்கீந்த நற்பலன்பசுவின்பாலா
லன்னுமட்டமியிலீசன் மணிமுடியாட்டின்மாதோ.

(இ - ள்.) நிலைபெற்றுள்ள அந்த அஷ்டமிதிதியில் பசுவின் பாலினால் பரமசிவனது திருமுடியில் அபிஷேகஞ்செய்தால் சுவர் ணத்தினாற் குளம்புகளும் கொம்புகளும் செய்தலங்கரித்து, பட்டுவஸ் திரத்தைப் போர்த்து நெருங்கிய அனந்தங்கோடி பசுக்களைச்சூரிய கிரஹண புண்ணியகாலத்தில் நன்மையாகிய நாலுவேதங்களையு முணர்ந்த பிராமணர்களுக்குத் தானஞ்செய்தலாலடையும் நல்ல பலனுண்டாகும். (எ - று.) (௨௨)

தேனையந்தாட்டிலெட்டாந் திதிதனிற்கடவுளாவன்
பானீயம்வருணனாவன் பானுவின்மதிசேர்முன்னா
ளூனமில்சோமவார மொன்றுநாட்பசுவின்பாலா
லானுகந்தானுக்காட்டி லழிவிலாப்பரமமுத்தி.

(இ - ள்.) அந்த அஷ்டமிதிதியில் பரமசிவனுக்கு விருப்புற்றுத் தேனபிஷேகஞ்செய்தால் அக்கினிதேவனாவான்; ஜலாபிஷேகஞ்செய்தால் வருணனாவான்; அல்லாமலும் சூரியனிடத்தில் சந்திரன் சேருகின்ற அமாவாசைக்குமுன்வரும் சதுர்த்தசிதிதியிலும் அமாவாசையில் குற்றமில்லாதசோமவாரக்கூடியநாளிலும் பசுவின் பாலினால் இடபவாகனத்தையுடைய பரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்தால் நருக்காலுமழிவில்லாத மேன்மைபொருந்திய மோக்ஷமுண்டாகும்.

அட்டமியபரபக்கத் தாதித்சவாரங்கூடின்
மட்டவிழிளநீராட்டில் வாசவன்பதத்திற்சேர்வன்
இட்டியபதினான்காய கிளர்திதிதன்னிற்றேனெய்
யெட்டயிலத்தாலிக்கா லாட்டினுவிறைவன்முத்தி.

(இ - ள்.) அமரபக்ஷத்து அஷ்டமிதிதியின் ஆதிவாரங்கூடிய நாளில் மட்டில்லாத இளநீரினால் பரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்தால் தேவேந்திர பதவியைப்பெறுவான்; நெருங்கிய சதுர்த்தசிதிதியில் தேனினாலும் நெய்யினாலும் எண்ணெயினாலும் கருப்பஞ்சாற்றினாலும் பரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்தால்சாயுச்சியபதவி அடைவான். (௨௪)

படுத்தகார்த்திகைமாதத்திற் பதினொன்றாந்திதிபூர்வத்திற்
கொடுத்துநெய்யாட்டிற்கோடி கிளையுடன்கயிலைசேர்வன்
வடித்தபஞ்சனத்தாற்றன்கை வைத்தபூவனத்திற்பூவாற்
றொடுத்தமந்திரமூலத்தாற் சுத்தனாய்ப்பூசைசெய்வான்.

(இ - ள்.) வடித்தெடுத்த திருமஞ்சனத்தினாலும் தன் கையினால் வைத்துள்ள நந்தவனத்திலெடுத்த புஷ்பங்களினாலும் செபிக்கின்றமூலமந்திரத்தினாலும் இடைவிடாமல் நாடோறும் பரிசுத்தனாகிச் சிவபூசைசெய்கின்ற ஒருவன் நன்மைபொருந்திய கார்த்திகைமாதத்தில் பூர்வபக்ஷத்து ஏகாதசிதிதியில் நெய்யைக்கொடுத்



துப் பரமசிவனுக்கு அபிஷேகம்செய்வித்தால் அவன் கோடிதலைமுறைகளிலுள்ள உறவினரோடும் கயிலாசத்திற் பொருந்தி வாழ்வான் (எ-று.) (௨௫)

பொன்பதின்கழஞ்சவேதம் பொதிந்தவர்க்களித்தாலொக்குந்
தன்னெருக்கொருபூச்சாத்திற் சகத்திரமொன்றுக்கொன்று
துன்னியவலரிவில்வ மதுமத்தந்தும்பைதர்ப்பை
வன்னிநாயுருவிகெய்தன் மற்றவைக்கதிகமாகும்.

(இ - ள்) தன்னாலுண்டாக்கிய ஒருவெள்ளெருக்கம்பூவை சிவலிங்கத்தில் தரித்துப் பூசித்தால் பதின்கழஞ்சுசுவர்ணத்தை நான்கு வேதங்களையுமறிந்த பிராமணர்கட்குத் தானஞ் செய்ததற்குச் சமானமாகும்; அல்லாமலும் நெருங்கிய அலரி வில்வம் தேனொழுகு கின்றகருஊமத்தை தும்பை தருப்பை வன்னி நாயுருவி கருநெய்தல் ஆகிய இலைகளைத் தரித்துப் பூசித்தால் ஒன்றுக்கொன்று ஆயிரமடங்கு அதிகமாகும். (எ-று.) (௨௬)

ஆயிரநெய்தற்பூவா லலங்கல்செய்தணிச்சாத்தின்
மேயவாம்பரமமுத்தி விளைந்திடுமியாதும்பூவாந்
தீயவாமணப்பூநாறுந் தீமலர்விழும்பூமொட்டுத்
தூய்தலாப்பூமயிர்ப்பூத் துளைத்தபூவலர்ந்ததாகா.

(இ - ள்.) ஆயிரம் கருநெய்தற் புஷ்பங்களால் மாலைதொடுத்துச் சிவலிங்கத்திற்குச் சாத்தினால் மேன்மைபொருந்திய மோக்ஷபதமுண்டாகும்; சிவலிங்கத்திற்கு எல்லாப் புஷ்பங்களும் தரிக்கலாகும், அன்னமாயினும், துர்க்கந்தம்வீசுகின்ற புஷ்பங்களும் மணமில்லாதபுஷ்பங்களும் தரையில்விழுந்தபுஷ்பங்களும் அரும்புகளும் பரிசுத்தமில்லாத புஷ்பங்களும் மயிர்ச்சிக்குண்டபுஷ்பங்களும் வண்டுகள்துளைத்தபுஷ்பங்களும் நன்றாய்மலர்ந்துவிட்ட புஷ்பங்களும் தரிக்கலாகாது, (எ-று.) (௨௭)

மலரின்றேலிலைகாய்புல்லு வனத்தினிற்பயிரின்பன்ன
மலதுநற்றியானநன்கா மல்லிருண்மத்தஞ்சாத்தி
னலசிவலோகஞ்சேர்வ னல்லநாயுருவிப்பன்னம்
பலனுளபதினுலாநாட் சாத்தினுற்பரனைச்சேர்வன்.

(இ - ள்.) முற்சொல்லிய புஷ்பங்களில் ஒன்றுமிலுங் கிடையாத காலத்தில் முன்சொன்னபுஷ்பச்செடிகளில் இலை காய் புல்லுகள் நந்தவனத்திற் பயிராகியுள்ள பத்திரங்களும் தரிக்கலாகும்; அவைகளுங் கிடையாதகாலத்தில் பாவனையாகத் தியானஞ்செய்தல் நன்மையாகும்; அல்லாமலும் அர்த்தராத்திரியில் கருவூமத்தம் புஷ்பஞ்சாத்தினுல் நன்மைபொருந்திய சிவலோகத்தைச் சேர்வான்; அதுவுமல்லாமல் தரிசித்தவர்களுக்குச் சர்வபவனையுந்தருகின்ற சதுர்த்தசிதிதியில் நன்மையாகிய நாயுருவின் பத்திரத்தைச் சாத்தினுல் பரமசிவனுடைய திருவடிகளிற் பொருந்துவான்(எ-று.)

நெய்யருங்குலியத்தூப நிமிரவேவோர்மாதப்போற்றிற்
செய்யவெட்டயிலத்தீபஞ் செலுத்திற்சாலோகஞ்சேர்வன்
பெய்யதரிப்பசுவினெய்யால் விளக்கிடிலொருகொழுந்துக்
குய்யவாயிரஞ்சதுர்த்த யுகஞ்சிவலோகம்வாழ்வன்.

(இ - ள்.) நெய்கலந்தகுங்குலியத்தூபம் அதிகரிக்க ஒருமாதபரியந்தம் பரமசிவனுக்கு இட்டாலும், செவ்விதாகிய எண்ணெய்த்தீபத்திருப்பணி செய்தாலும், அவன் சாலோகபதவியைப் பெறுவான்; அல்லாமலும் உண்மையாகிய பசுநெய்யினுல் விளக்கு வைத்தால் அவன்சுடர்க்கொழுந்து ஒவ்வொன்றிற்குப் பெருகின்ற ஆயிரஞ்சதுர்யுகபரியந்தம் சிவலோகத்தில்வாழ்வான். (எ-று.) (உக)

ஈனரேயெனினுமீச னெண்வகைப்பத்தியுள்ளார்
வானவர்தலைவனுவர் மறைவலோர்க்கில்லையாகி



லூனரேயாவரீச னுறைபுமாலயஞ்செய்வாரை
மானிடரென்பார்க்கன்றோ வைத்ததுநரகமெல்லாம்.

(இ - ள்.) பரமசிவனை எண்வகைப்பத்தியாற் பூசிக்கின்றபுண்ணியர்கள் ஈனஜாதியிற்பிறந்தவர்களானுலும் தேவர்களுக்கரசனுகியதேவேந்திரனுவார்கள்; பிராமணஜாதியிற்பிறந்தவர்களுக்கு அந்தப் பத்திமையில்லாவிட்டால்அவர்கள் ஈனராவார்கள்; அல்லாமலும் பரமசிவனமரும் சிவாலயத்திருப்பணி செய்கின்றவர்களைச் சிவனென்று நினையாமல் தம்மையொத்த மனிதர்களென்று சொல்லுகின்றவர்களுக்கல்லவோ எல்லாநரகங்களும் வைத்திருக்கின்றன.

எண்வகைப்பத்தியாவன நந்தவனம்வைத்தல். அம்மலர் பறித்தல், அம்மலர்களைமாலைதொடுத்தல், சிவஸ்துதிசெய்தல், சிவாலயமலகிடல், சிவாலயமெழுகல், சிவாலயம்விளக்கிடல், சிவனடியார்களைப் பூசித்தல் என்பனவாம். (உ௦)

கண்ணினுக்கினியபண்டங் கடவுளுக்களித்தானென்னிற்
புண்ணியவுலகஞ்சேர்வன் பூசையையிழந்தநாளி
லண்ணலைக்கோயில்சூழ்ந்து பணியிலர்ச்சனையதாகு [ன்
முண்மையாங்குருவாற்பெற்ற வுபதேசங்கொண்டேசெய்வா

(இ - ள்.) கண்ணுக்கினிமையானபண்டத்தைப் பரமசிவனுக்குப்பிரீதியாகக்கொடுத்தானுயின் அவன் புண்ணியலோகத்திற் பொருந்துவான்; அல்லாமலும் சற்குருவினுற்பெற்றுள்ள உபதேசவாக்கியத்தைக்கொண்டு சிவபூசைசெய்கின்றவன் யாதேனும் இடையூறினுல் சிவபூசையையிழந்தநாளில் சிவாலயத்திற்குப்போய்ப் பரமசிவனைப் பிரதக்ஷிணநமஸ்காரஞ்செய்து வணங்கினுல் சிவபூசைசெய்ததுபோல் ஆகும். (எ-று) (உக)

புத்திவித்தாரந்தன்னாற் பொருகலிவசத்தாற்பூண்ட
வித்தையாற்பொருளிச்சிப்பால் வேதத்தின்வழியைவிட்டுக்
குத்திரமார்க்கங்காட்டுங் குரவனும்புதல்வன்றானும்
பத்திரநரகில்வீழ்வார் பன்னிரத்தியாயஞ்சான்று.

(இ - ள்.) புத்திவிரிவினாலும் போராடுகின்ற தரித்திர வசத்தினாலும் கற்றன்ன கல்விவல்லமையினாலும் திரவிய இச்சையினாலும் வேதமார்க்கத்தை விடுத்து வஞ்சகமார்க்கத்தை உபதேசஞ்செய்கின்றகுருவும் அவ்வுபதேசத்தைக் கேட்கின்ற சீஷனும் இரண்டுபேர்நரகத்தில் தப்பாமல்விழுவார்கள்; இதற்கு வேதத்திற் பன்னிரண்டுஅத்தியாயம் சாக்ஷியாகும். (எ-று.) (௩௨)

பரம்பரையாசான்பாதம் பணிந்துபதேசங்கேட்பா
னுரம்பரன்றனையாசானை யொருமுகமாகக்காண்பான்
கரந்திரண்டாகக்காணிற் கற்பமாநரகில்வீழ்வன்
வரம்புளஞானவானை மற்றிறையாகக்காண்பான்.

(இ - ள்.) பரம்பரையாகவரும் ஞானசிரியருடைய திருவடிகளைவணங்கிப் பிரமோபதேசங்கேட்கின்ற சற்சீஷனானவன் ஞானமூர்த்தியாகும் பரமசிவனையும் சற்குருவையும் சமதிருஷ்டியாகக் கண்டுதரிசனஞ்செய்வான் அங்ஙனங்காணாது இரண்டுபடுத்திப்பேதமாகத்தரிசனஞ்செய்தால் கற்பகாலபரியந்தம்நரகத்தில்விழுவான்; அங்ஙனமே வேதவரைவையுணர்ந்தன்ன ஞானவானையும் இராஜதரிசனத்தாலுண்டாகின்ற பயகம்பனத்தோடு நின்று வழிபடுவான். (எ-று.)

இறையென்பதற்குச் சிவபெருமானெனப் பொருள்கொள்ளுதலுமாம். (௩௩)

தேவர்கண்முனிவர்மண்ணோர் சித்தர்கள்செய்தலிங்கம்
பாவனைசயம்புவாணம் படிகமேபஞ்சலோக
மாவகைபிரதங்காந்த மணிபொன்பானிரசதம்பொன்
யாவுநாற்சாதிக்காகு மிதரர்க்குமாதர்க்காகா.

(இ - ள்.) தேவர்கள் முனிவர்கள் மனிதர்கள் சித்தர்களாகிய இவர்களாற்றாபித்த இலிங்கங்களும் பாவனாலிங்கம் சயம்புலிங்கம் வாணலிங்கம்படிகலிங்கம் பஞ்சலோகங்களாற் செய்தலிங்கம் மிக்க தகுதியுடைய இரசலிங்கம் காந்தலிங்கம் ரத்நலிங்கம் வெள்ளிலிங்கம் சுவர்ணலிங்கமாகிய இவைகளனைத்தும் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நான்கு சாதியிலுள்ளவர்களுக்கும் பூசிக்கலாகும்; இவர்களல்லாத அன்னியசாதியிற் பிறந்தவர்களுக்கும் மாதர்களுக்கும் பூசிக்கலாகா. (எ-று.) (௩௪)

அரிவையர்க்கிதரசாதிக் கருணையினிலிங்கமாகுந்
தெரிவைபரிரசலிங்கந் தீண்டினுநரகஞ்சேர்வர்
விரிவுளபழுதுபின்னம் வெந்ததுவெடித்தலிங்கம்
பெரியநீர்வைப்பானின்றேற் பிணிபிறுன்மிடியாமேவன்.

(இ - ள்.) மாதர்களுக்கும் அன்னியஜாதிகளும் திருவண்ணாமலையிலுண்டான லிங்கத்தைப் பூசிக்கலாகும்; மாதர்கள் இரசலிங்கத்தைப் பரிசித்தாலும் நரகத்தில் விழுவார்கள்; அதுவுமல்லாமல் இந்தவிதிமார்க்கந்தெரிந்து பூசிக்கின்றவன் மிகுதியாகப் பழுதுபட்ட லிங்கத்தையும் வெந்தலிங்கத்தையும் வெடித்தலிங்கத்தையும் ஒருக்காலும் ஜலமாறாத நதி கூபம் தடாகமுதலியவற்றில் விட்டுவிடுவான்; விடாமல் பூசிப்பானாகில் வியாதியினாலும் தரித்திரத்தினாலும் வருந்துவான். (எ-று.) (௩௫)

மற்றுளதிசைகளாகா வடமுகமாயர்ச்சிப்பா
னுற்றுளவுபசாரத்தா லொருமைபாற்பூசைசெய்வான்

றெற்றெனவழிந்தான்பாவி றிண்டிறப்பிரதிட்டைசெய்வான்
சொற்றவாரிடலிங்கத்திற் சயம்பிற்ப்ரதிட்டைவேண்டா.

(இ - ள்.) சிவபூசைபண்ணுமிடத்து வடதிசைநோக்கியன்றி மற்றைத்திசைநோக்கியிருந்து பூசிக்கலாகாது; தனக்குக்கிடைத்துள்ள உபகரணங்களைக்கொண்டு மனவொருமையாற் பூசிக்கக்கடவன்; பிரசித்தியாக ஒழுக்கம்வழுவியமாதர்களும் பாதகர்களும் தீண்டினால் பிரதிஷ்டை செய்யக்கடவன்; கூறிய ஆரிடலிங்கத்திற்கும் சயம்புலிங்கத்திற்கும் பிரதிஷ்டை செய்யவேண்டியதில்லை. (எ-று.) விசேடம்பற்றி வடதிசையேகூறினும் கிழக்குநோக்கியிருந்து பூசித்தலுமாம். (௧௬)

இரண்டுநாட்பூசைநீங்கி னிரட்டிறச்செய்வான்மூன்று
மூரண்டினமதிகபூசை முயலுவான்மாதம்பக்கத்
திரண்டநாட்பூசைநீங்கிற் செழும்பிரதிட்டைசெய்வா
னரன்றனைக்கோயில்போற்றி யாசானாற்சாந்திசெய்வான்.

(இ - ள்.) இரண்டுநாளையபூசையை யாதேனுமிடையூறினாற் செய்யாதொழிந்தவன் நாலுநாளையபூசையைச் செய்யக்கடவன்; மூன்றுநாளையபூசை முட்டுப்பட்டாலும் அவ்வகையே இரட்டிப்பானபூசையைச் செய்யக்கடவன்; ஒருமாதம்ஒருபக்ஷம் அல்லது அநேகநாள் பூசைசெய்யாதிருந்தால் ஆசாரியரால் வனம்பொருந்தியபிரதிஷ்டைசெய்து சிவாலயத்திற்சென்று பரமசிவனைவணங்கிச் சாந்திசெய்து கொள்ளக்கடவன், (எ-று.) (௧௭)

சத்தியிற்சத்தன்கூடித் தாய்தந்தையாகிநின்ற
வுத்தமவிரதலிங்க மொன்றொருபத்துக்கோடி
யத்தகையிலிங்கமொக்கு மதனுழிப்பூசைசெய்தாற்
சத்துருநாசப்புத்தி முத்திகடாமேயுண்டாம்.



(இ - ள்.) சத்தியுஞ்சிவமும் ஒன்றாகக்கூடி உயிர்களுக்கு மாதாவும் பிதாவுமாகிப்பிரகாசிக்கின்ற உத்தமமாகிய ஒருரசலிங்கமானது ஏனைய அர்த்தகுதியவாகிய பத்துக்கோடி இலிங்கங்களுக்குச் சமானமாகும்; அந்த இரசலிங்கத்தினிடத்திற் பூசைசெய்தால் சத்துருநாசமும் விவேகமும் மோக்ஷமுமுண்டாகும். (எ-று.) ௧௮

இரதலிங்கத்திற்பூசை யியற்றியதீர்த்தங்கொண்டோர்
சரவுளபிணியுஞ்சன்மக் கவலைகளுமிடருநீங்கும்
பிரமன்மான்மகவான்மற்றோர் பெரும்பதமடையலாகும்
விரவுபாதகங்களெல்லாங் கனல்படுவிறகையாலும்.

(இ - ள்.) இரசலிங்கத்திற் பூசைசெய்த தீர்த்தத்தை உட்கொண்டவர்களுக்குச் சரீரத்தில்மறைந்துள்ள வியாதிகளும் பிறவிமூர்ச்சைகளும் சகலதுன்பங்களும் நீங்கிவிடும் பிரமபதமும்விஷ்ணுபதமும் தேவேந்திர பதமும் மற்றுமுண்டான பெரியபதங்களும் அடையலாகும்; அணுதியாய்ச் சேர்ந்துள்ள மகாபாதகங்களெல்லாம் அக்கினியாற்பற்றப்பட்ட விறகைப்போல் நாசமாய் விடும். ()

நீடியவிரதலிங்க நிந்தித்தார்நரகில்வீழ்வார்
காடியபிலப்பில்வந்தா ருய்நரிபூனையோந்தி
வாடியகழுகுகாக்கை வடிவமாய்ப்புலையர்க்காளாய்க்
கோடியகூனருமர் குருடராய்ப்பிறப்பரன்றே.

(இ - ள்.) பெருமைமிகுந்த இரசலிங்கத்தைத் தூஷித்தபேர்கள் நரகத்தில்விழுவார்கள்; அவர்கள் தெய்வகதியாய்க் குறித்த பிறவிக்குழியில்வந்தேறினால் நாய் நரி பூனை ஓணான் மெலிவடைகின்ற கழுகுகாக்கை இவைகளினுருவெடுத்துப் பின்பு மனிதராய்ப் பிறந்து சண்டாளர்க்கு அடிமைப்பட்டு வளைந்தகூனராகவும் ஊமராகவும் குருடராகவும் பிறப்பார்கள். (எ-று.) (௨௦)

அந்தியகாலந்தன்னி லணிவயிற்றிரதஞ்செற்
றந்தைதாய்பிறவுங்கோற ருன்சுராபானங்கோடல்
பந்தபாதகங்கணீங்கிப் பரிமேதபாகங்கோடி
யிந்தநற்பலனுமுண்டா யாவர்க்குமேலதாவன்.

(இ-ள்.) தேகாந்தத்தில் ஒருவனுடைய அழகியவயிற்றின்கண் இரசலிங்க நிற்குமானால் பிதாமாதாக்கள் முதலானவர்களைக் கொல்லுதல் மதுபானஞ்செய்தல் சென்மாந்தரத்திற் கட்டுப்பட்ட பாதகங்களாகிய இவைகளெல்லாம் நீங்கிக் கோடி அசுவமேதயாகஞ் செய்தாலுள்ள பலன்களுமுண்டாகி அவன் சகலருக்கும் மேலானவனாயிருப்பான். (எ-று.) (௬௧)

மனிதர்கண்முனிவர்தேவர் வகுத்தலிங்கத்துக்குண்டா
மினியநின்மாலியங்கண் மற்றைலிங்கத்துக்கில்லை
புனிதமாந்துளசியோடு பூசைநீருள்ளகொண்டாற்
றனிவரும்பிறவிநீங்குஞ் சாபம்போம்ஞானமுண்டாம்.

(இ-ள்.) இனியதாகிய நிர்மாலியங்கள் மனிதர்களாலும் முனிவர்களாலும் தேவர்களாலும் பிரதிஷ்டை பண்ணப்பட்ட இலிங்கங்களுக்கேயன்றி ஏனையலிங்கங்களுக்கு இல்லை; ஆனபடியினால் பரிசுத்தமாகிய நிர்மாலியதுளசியோடு அபிஷேகதீர்த்தத்தையும் உட்கொண்டால் தனித்தனியேவருகின்ற பிறவித்துன்பம் நீங்கும்; சாபங்கள் நீங்கும்; பிரமஞானமுண்டாகும். (எ-று.) (௬௨)

தத்துவஞானியோகி தனக்காநின்மாலியங்கள்
பத்தரல்லாதாருண்டாற் பதினாலிரந்திரர்கள்கால
மெத்தியநரகில்வீழ்வர் வேதத்தின் பூசைக்கில்லை
யத்தனின்மாலியங்க ளாகமபூசைக்குண்டாம்.




(இ-ள்.) தத்துவஞானத்தையறிந்த பெரியோர்களும் யோகீசுவரர்களும் நிர்மாலியங்களை உட்கொள்ளலாகும்; சிவனடியாரல்லாதவர்கள் உட்கொண்டால் பதினாலுதேவேந்திரர்களுடைய காலபரியந்தமும் வருத்தமேவிநின்ற நரகத்தில் விழுவார்கள்; பரமசிவனை வேதவிதியாற் பூசிக்கும் பூஜாதிரவியங்கள் நிர்மாலியமல்ல; சிவாகமவிதியாற் பூசிக்கும் பூஜாதிரவியங்களே நிர்மாலியமென்று சொல்லப்படும். (எ-று.) (௬௩)

அந்தணரலாதமூவ ராகமம்விதித்தவாற்றாற்
சிந்தையாற்சிற்பன்செய்த சிவலிங்கபூசைசெய்வா
ரிந்தமாதவத்தினோர்கட் கேதுமாலிங்கபேதம்
பந்தமில்திருநீற்றுண்மை பாக்கியஞ்செய்தீர்கேண்மின்.

(இ-ள்.) பிராமணர்களல்லாத மூன்றுசாதியாரும் சிவாகமங்களிற்சொல்லியவழியே சிற்பாசாரியன் மனப்பூர்வமாகச்செய்த சிவலிங்கங்களைப் பூசிப்பார்கள்; சிவலிங்கத்தைப் பூசிக்கும்படியான தவத்தையுடையவர்களுக்குமகாலிங்கபேதங்கள் ஏது? இல்லை: இப்பால் பந்தத்தைக்கெடுக்கின்ற திருநீற்றின் மான்மியத்தைக் கேட்கும் பாக்கியஞ்செய்தவர்களே கேளுங்கள். (எ-று.) (௬௪)

சிவபூசாவிதிச்சருக்கம் - முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௯௬௦.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதின்மூன்றாவது,

# விபூதிச்சருக்கம்.

(வேறு.)

விரதிவானப்பிரத்தன் வீட்டுளான்பிரமசாரிக்
கானுரைசெய்தவெண்ணீ றவரவர்தமக்கேயாகும்
பாதவர்பாழிநீறு மியாகத்திற்பயின்றநீறு
மரபின்மூவருக்குமாகு மறையவர்தமக்குமாகும்.

(இ - ள்.) சன்னியாசி வானப்பிரஸ்தன் கிருகஸ்தன்பிரமசாரி யென்னும் நால்வருக்கும் பரமசிவன், அநுக்கிரகித்தபடி அவரவர்களால் விளைவிக்கப்பட்ட வெண்ணீறு அவரவர்களுக்கே யாகும்; மேலான தவத்தையுடைய அடியார்களது மடாலயத்தில் விளைந்த நற்பநீறும் யாகசாலையில் விளைந்தநீறும் க்ஷத்திரியர்முதலிய முக்குலத்தவர்களும் தரிக்கலாகும்; பிராமணர்களுந்தரிக்கலாகும். (எ-று.)



நாட்டகன்னிருங்கோயிற் கருகருநீறுநல்லோர்
வீட்டினிற்சமைந்தநீறு மெல்லிபரித்தார்க்காகு
நாட்டுமுச்சந்திதோறு நாற்குலத்தவருநீற்றைத்
தீட்டிநீர்குழைத்துச்சாத்த செழுந்தவர்க்கென்றுமாகும்

(இ - ள்,) விறகினாற்விளைந்த நல்லநீறும்; சிவாலய மடைப்பள்ளியில்விளைந்த நினைத்தற்கரிய திருநீறும் பெரியோர்களதுமனையில் விளைந்த திருநீறும் மாதர்களும் அன்னிய ஜாதியோரும் தரிக்கலாகும்; திருநீற்றை வடித்துக்கொண்டு சலத்திற்குழைத்து நான்குகுலத்திலுள்ளவர்களும் மூன்றுகாலங்களினும் தரிக்கக்கடவர்கள்; வளமை மிகுந்த தவத்தை யுடையவர்களுக்கு எக்காலமு முரித்தாகும். (எ-று.) (௨)

மங்கையர்சந்நியாசி மறைவானப்பிரத்தன்றேவி
தங்கியபிரமசாரி சலத்தினிற்குழைக்கலாகா
வங்குபதேசமில்லா னந்தநீர்குழைக்கலாகா
துங்கவெண்ணீற்றையள்ளித் துகிலினால்வடித்துக்கொள்க.

(இ - ள்.) மாதர்கள் சந்நியாசி வேதமுணர்ந்த வானப்பிரஸ்தன் அவன்மனைவி நிலையுற்ற பிரமசாரி ஆகிய இவர்கள் சலத்திற்குழைத்துத் தரிக்கக்கூடாது; அல்லாமலும், ஆசிரியருபதேச மில்லாதவனும் அழகியநீற்றைச் சலத்திற்குழைத்துத் தரிக்கக்கூடாது; பரிசுத்தமாகிய வெண்மைபொருந்திய திருநீற்றைக் கையினாலன்றி வஸ்திரத்தினால் வடித்தெடுத்துத் தரித்துக்கொள்ளக்கடவர். எ-று.

மறைகளாகமத்திற்சொன்ன மாசிலாநீறுதன்னை
முறையுக்தானம்புரிந்தே மூவிசைரோன்றச்சாத்தி
னறைதருதீர்த்தமெல்லா மாடினார்பியாகஞ்செய்தே
யுறுபுவியடையத்தான முதவினார்பலனைபொக்கும்.

(இ-ள்.) நான்குவேதங்களிலும் சிவாகமங்களிலும் சொல்லிய களங்கமில்லாத திருநீற்றை முறையாகச் சரீரமுழுதும் உத்தூளனஞ்செய்து மூன்றுவிரல்தோன்றும்படியாகத் தரித்தால் அதன் பலன், புகழப்பட்ட சகல தீர்த்தங்களிலும் ஸ்நானம்பண்ணி நூறு யாகங்கள் செய்து பிராமணர்களுக்குத் திரிலோகமுழுதும் தானஞ்செய்தவர் அடையப்பட்ட பலனுக்கு சமானமாகும். (எ-று) (சு)

உச்சிமேனெற்றிகண்ட முடம்புரைகைகால்பின்ன
மெச்சிவெண்ணீறுமூன்று விரல்படச்சாத்தினிந்து
நச்செரிநயனமால் நாரியர்புலித்தோனவ்வி
யிச்சையாம்பரசயானைத் தோலுமாங்கெய்துமன்றே.

(இ-ள்.) உச்சி நெற்றி கழுத்து உடம்பு இடையின்பின்புறம் கைகால்களினுறுப்புக்கள் ஆகிய இவற்றில் வெள்ளியவிபூதியை விரும்பி மூன்றுவிரல்பொருந்தத் தரித்தால் அந்தந்தவுறுப்புக்களில் முறையே மூன்றாம்பிறையும், விரும்பத்தக்க அக்கினிக்கண்ணும், விஷமும், ஒருபாகத்திற்பெண்ணும், புலித்தோலும், கலைமானும், இச்சிக்கப்படுகின்ற மழுவும், யானைத்தோலும், வந்தெய்தும் எ-று. இங்ஙனம் கூறினமையால் சிவசாரூபம் எய்துமென்பது குறிப்பு.

பொட்டொடுசதுரஞ்சூலம் புரிந்திடலாகாநீற்றின்
மட்டவிழ்சந்தனாதி மண்ணிடலாகாநீற்றை
யிட்டவன்றன்னைநிந்தை யெண்ணினோனுடன்பட்டோனும்
திட்டமாநரகமெல்லாஞ் சிவனாணைதிரிவரன்றே.

(இ-ள்.) திருநீற்றை நெற்றியிற் பொட்டாகவும் சதுரமாகவும் சூலம்போலவும் தரிக்கலாகாது; திருநீற்றினிடத்தில் வாசனைவீசுகின்ற சந்தன முதலானவைகளையும் திருமண்ணையும்



தரிக்கலாகாது திருநீறு தரித்திருக்கின்றவனைத் தூஷிக்கவெண்ணினவனும்அவனோடுடன்பட்டிருந்தவனும் தகுதியாகிய எல்லாநரகங்களிலும் சிவனுடையதிருவாணைப்படிக்குத் திரிவார்கள். (எ-று.)

அந்தணராளர்தம்மை யரியரனடையாளத்தைச்
சுந்தரத்தோளிற்காய்ச்சிச் சுட்டிடிற்சூடுண்டானு
முந்தவேசுட்டான்றானு முழங்கெரிநரகில்வீழ்வ
ரிந்நாட்டவரையோட்டு மிராசனேயிராசனாவான்.

(இ-ள்.) விஷ்ணுவினடையாளமான சங்கு சக்கரத்தையும் சிவனடையாளமான சூலத்தையும் அக்கினியிற் காயவைத்தெடுத்துப் பிராமணர்களுடைய அழகிய தோள்களிலே சுட்டால் அதற்குடன் பட்டுச்சூடுண்ட சீஷனும் முதன்மையாயிருந்து சுட்ட ஆசிரியனும் சத்திக்கின்ற எரிவாய்நரகத்தில் விழுவார்கள்; அங்ஙனஞ் செய்தவர்களை இந்நாட்டைவிட்டுத் துரத்துகின்ற இராஜனே இராஜனாவான். (எ-று.) (எ)

வேறு.

கவுதமனைநிந்தைசெய்த காதன்மறையோரைத்
தவன்மிகுமுனிந்துநீவிர் தாழ்வுறுமண்ணிட்டுச்
சிவனையவனீற்றையருள் சேர்ந்தவடியாரைப்
புவனிதனினிந்தைசெய்து போம்நரகிலென்றான்.

(இ-ள்.) முற்காலத்தில் கௌதமமுனிவரைத் தூஷித்த காமியாபுத்தியையுடைய பிராமணர்களைப் பார்த்து அவர் மிகவும் கோபித்து நீங்களனைவரும் இழிவுபொருந்திய மண்ணைத்தரித்துப் பரமசிவனையும் அவரதுவிபூதியையும் அவரருள்பெற்ற அடியார்களையும் பூலோகத்திற்றூஷித்து அதனால் நரகத்திற் போகக் கடவீர்களென்றுசபித்தார். (எ-று.)

கௌதமமுனிவர் ஒருபஞ்சகாலத்திலே தமது தவப்பேற்றால் சோலைவாவிமுதலியவகுத்து நெல்விளைவுண்டாக்கி வந்த அந்தணர்க்கெல்லாம் அறுசுவையுண வாதிகளளித்துத் தாயினுமிகப் பேணிவருங்கால் காலநியமப்படிமழைபொழியத் தேசமுழுமையுஞ் செழித்தலின் அப்பிராமணர்தத்தம் நாட்டையடையவிரும்பி, தாம் செல்லுதற்கு அம்முனிவர் உடன்படாமையின் பசுவைக்கொன்றனரென ஒருதோஷம் அவர்மீதேற்றிச்செல்லத்துணிந்து மாயையால் ஒருபசுவையுண்டாக்கி விடுத்தனர். அதுதன்னாடி எதிர்வருதலை நோக்கி வழிவிலகுமாறு மெல்ல ஓட்டுதலும் விழுந்துமடிந்ததாக, அதனைத் தாம்கொன்றதாக நிந்தை கூறும்அம்மறையவரை நோக்கி அம்முனிவர் இவ்வாறு சபித்தனரென்பது புராணசரித்திரம். இதனைச் சூதசங்கிதை முதலியவற்றுட்காண்க. (எ-று.) (அ)

அப்படிசபித்தமையி னன்றுமுதலாகத்
துப்பிலிகணிந்தைசெய்வர் தூமறையைநம்பி
முப்புவனமும்புனையு மூவரொடுதேவ
ரெப்புவனமும்புனையு மெங்கடிருநீறே

(இ-ள்.) அங்ஙனம் கௌதமமுனிவர் சாபமிட்டபடியால் அந்தணர்முதலாக விவேகமில்லாதவைஷ்ணவர்கள் தூஷிப்பார்கள்; ஆனால், பரிசுத்தமாகிய வேதவாக்கியத்தைநம்பி எங்களுடைய திருநீற்றைத் திரிலோகத்திலுள்ளவர்களும் தரிப்பார்கள்; மும்மூர்த்திகளும் தேவர்களும் மற்றை எவ்வுலகத்திலுள்ளவர்களும் தரிப்பார்கள். (எ-று) (௯)

எண்டிசைகள்கீழுலக மேலுலகமெங்கு
மண்டுமறைபன்றியில் வழங்குவவவேத
முண்டுதிருநீறதை யுயிர்க்குறுதி முத்தி
விண்டுலகமாதிதரும் வேறவைபொய்யென்னும்.



(இ-ள்.) எட்டுத்திக்குக்களும் கீழேழும் மேலேழுமாகிய பதினான்குலகங்களும் மற்றைப்புவனங்களுமாகிய எவற்றினும் பரமப்பிரமாணமாக வழங்குவன நிறைந்தவேதங்களேயன்றி வேறில்லை; அத்தகையவேதங்களும் விபூதி அநாதியாகவுள்ளது; அதுவே உயிர்க்குறுதியாகிய முத்தியையும் திருமாலுலகமுதலிய பதவிகளையும் அளிக்கும்; அஃதல்லாதவைகளெல்லாம் பொய்ம்மைச் சாதனங்களென்று எனக்கூறநிற்கும். (ஆயின் இத்திருநீற்றின்பெருமை இசைக்கமுடியுமோ) (எ-று.)

எனவே, சாதனங்களுள்ளே இம்மை மறுமை வீடென்னும் மூன்றையும் எளிதிற்றரும் முதற்சாதனமாயுள்ளது திருநீறே; ஏனையவைகளும் சாதனம்போற்காணப்படினும் இதுபோல்வனவன்று! என்பதுகருத்து. (௧0)

உண்டியிபல்லபெங்குமுளா காதமஃதொப்ப
வெண்டிசையினோருமியல் பாபணிவர்நீற்றைப்
புண்டரமுமக்கமு மகிழ்ந்தபுனைவார்பாற்
பெண்டினையுடன்பரமர் பின்றிரிவரன்றே.

(இ-ள்.) உடற்குறுதியாகிய உணவருந்துதலை எவ்வுலகத்திலுள்ளாரும் சுபாவமாகக் கொள்ளுதல்போல, உயிர்க்குறுதியாகிய திருநீற்றையும் எட்டுத்திசையிலுள்ள யாவர்களும் சுபாவமாகத் தரிப்பார்கள்; அப்படிப்பட்ட விபூதித்திரிபுண்டரத்தையும் உருத்திராக்கமணிகளையும் உவந்துதரிக்கின்றவர்களிடத்து விட்டுநீங்காமல் பரமசிவன் உமாதேவியாரோடும் அவர்கள்பின்னே திரிவார். (எ-று.) (௧௧)

முத்திபெனுமங்கையை முயன்றுவசமாக்கி
னுத்தமமணிமந்திர மருந்துகளுமுண்டா
மத்தகைதனைப்பகர்வ மஞ்சுபதநீறு
சுத்தரணிதண்டிகை தரிக்கில்வசமாவாள்.

(இ - ள்.) முத்தியென்கின்ற மங்கையை முயற்சிசெய்து வசப்படுத்தவேண்டுமாகில் அதற்குத்தகுந்த மணிமந்திர அவுஷதங்களுமுண்டு; அவையாவையெனில் பஞ்சாட்சரமும் விபூதியும் சத்தர்கள்தரிக்கின்ற உருத்திராக்ஷ கண்டிகையுமாம்; இவைகளால் பேரின்பத்தைத்தருகின்ற மோட்சமங்கையானவள் வசப்படுவாள், (எ-று.) (கஉ)

வயமாக்கினேனென்பதற்கு வயமாக்கவேண்டில் எனக்கொள்க.

நீற்றினொடுகண்டிகை நினைந்துபுனைவார்தம்
பேற்றினளவென்னவர் பிறந்ததுவேசென்மம்
போற்றியவர்கேட்குதவு பூசையதுபூசை
யாற்றவுளநற்கொடையு மக்கொடையதாமால்.

(இ - ள்.) விபூதியுடனே உருத்திராக்ஷகண்டிகையையும் இது வேசிவமுத்திரையென்று தியானஞ்செய்துதரிக்கின்றவர்கள் பெற்ற பேற்றுக்கு என்ன அளவை சொல்லுவோம்; அவர்களெடுத்த ஜென்மமேஜென்மம்; அவர்களைவணங்கி அவர்களைப்பூசிக்கின்ற பூசையே பூசை; அவர்களுக்குக்கொடுக்கின்ற உயிர்க்குறுதியான நல்லதியாகமே தியாகமாகும், (எ-று.) (கங)

நீறுபுனைவார்வினையை நீறுசெய்தலாலே
வீறுதனிநாமமது நீறெனவிளம்புஞ்
சீறுநாகத்துயிர்ச்செலாவகைமருந்தாக்
கூறுடையதேவிகையின் முன்னிறைகொடுத்தான்.

(இ - ள்.) விபூதியானது தன்னைத் தரிக்கின்றவர்களுடைய சகலவினைகளையும் நீறாகச்செய்தலினால் அதற்குப் பரிசுத்தமான ஒப்பற்ற நாமமானது திருநீறென்று வேதஞ்சொல்லும்; அந்தத் திருநீற்றை ஆன்மகோடிகள் சீறுகின்றநரகத்தில் விழாதபடிக்குச்



செனனவியாதிக்கு ஒளஷதமாகப் பூர்வத்தில் பரமசிவன் தமது இடப்பாகத்தையுடைய உமாதேவியார்கையில் கொடுத்தருளினார், (எ-று.) (கச)

நோயகலும்வர்தவினை நுந்துவினையெல்லாம்
போயகலும்வெண்பொடி புனைந்தவிடனேமுற்
பேயகலும்வஞ்சக பிறப்பினொடிறப்பின்
றுயகலுநன்மைக டழைத்துவருமன்றே.

(இ - ள்.) வெண்மைபொருந்திய விபூதியைத் தரித்தவுடன் சரீரசம்பந்தமான வியாதிகளுநீங்கும்; இச்சனனத்திலீட்டியவினைகளும் இச்சனனமெடுத்தற் கேதுவாகி இதிற்செலுத்திய முற்சனனங்களி லீட்டியவினைகளும் விட்டொழியும்; நெடுநாளாகத்தொடர்ந்த பைசாசமுதலியவும்விலகும்; வஞ்சிக்கின்றபிறப்பிறப்புக்களும் பற்றறத் தொலையும்; சகலநன்மைகளும் தழைத்தோங்கும். (எ-று)

தீர்த்தமுளதிற்பெரிய தீர்த்தமஃதில்லை
யேத்தரியசெல்வமு ளதிற்பெரியதில்லை
பேர்த்துரைமருந்தினு ளதிற்பெரியதில்லை
தீத்தவுறுபண்டிதரு ளீற்றதிகரில்லை.

(இ - ள்.) சகலதீர்த்தங்களுள்ளும் இந்த விபூதியிற்பெரிதான தீர்த்தமில்லை; துதிக்கப்பட்ட அரியசெல்வங்களுள்ளும் இதிற்பெரிதானசெல்வமில்லை; வேறுவேறாகச் சொல்லுகின்ற ஒளஷதங்களுள்ளும் இதிற்பெரிதான ஒளஷதமில்லை; சகலவியாதிகளையுந் தீர்க்கவருகின்ற வைத்தியர்களுள்ளும் இதிற்பெரிதான வைத்தியரில்லை. (எ-று.) (கரு)

பந்தவஞ்ஞானன் பராசரன்வசிட்டன்
மைந்துடைவியாதன்முதன் மாமுனிவர்சந்தி

தந்தமி லுணர்ந்துதரு மந்தவமெவைக்கும்
வெந்தபொடிசேர்க்கினவை வீணெனவுரைத்தார்.

(இ-ள்.) பற்றுடைய பிரமதேவர் திருமால் பராசரமுனிவர் வசிட்டமுனிவர் வலியவியாதமுனிவர் முதலிய பெருமைபெற்ற முனிவர்களும் இருநூற்றிதேவரும்ஆகிய இவர்களெல்லாம் தங்களில் ஆலோசித்தறிந்து தருமம் தவமுதலானவைகளுக்கும் விபூதியொன்று இல்லாவிட்டால் அவைகள் பயனில்லனவாகுமென்று சொன்னார்கள். (எ-று.) (கஎ)

வேகரிதுடன்முறுக வெந்ததுசிவப்பு
மாகரிதுவெண்மையுள தத்தனையுமுத்தி
போகமுதலாகுதலிற் பூதியெனலாகு
மேகவருண்மேவலினி ரக்ஷையெனலாமால்.

(இ-ள்.) கன்றாய் வேகாதவிபூதியும் வெந்துகரிந்த விபூதியும் சிவந்தவிபூதியும் தரிக்கலாகாது; விபூதியில் தவளநிறம் எவ்வளவு உண்டு அவ்வளவும் மோக்ஷத்திற்கு ஏதுவாகும்; சர்வ ஐசுவரியத்துக்கும் காரணமாதலினால் விபூதியெனவும் ஒப்பற்ற திருவருளுடைமையால் இரக்ஷையெனவும் பெயர் கூறப்படும். (எ-று.)

அன்றியும், சிவபெருமானைத் தோற்றுவித்தலால் பசிதமெனவும், பாவங்களைப்போக்கலால்பசுமமெனவும், மலங்களினின்றும் நீக்கலால் க்ஷாரமெனவும் பெயர்பெறும் என்க. (கஅ)

விபூதிச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௩௪௮.

---



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதினைன்காவது.

# உருத்திராக்கச்சருக்கம்.

திரிபுரரெனும்பெயர் திருந்தசுரராலே
யரியயன்முதற்சுர ரழிந்துதுயரெய்தி
வரியுழுவையுரிபுனையும் வானவனைநோக்கி
யுரியதவமாவருட மாயிரமுறைந்தார்.

(இ-ள்.) திரிபுராதிபரென்று வழங்குகின்ற பெயரையுடைய அசுரரால் விஷ்ணுமூர்த்தி பிரமதேவர்முதலான சகலதேவர்களும் மனவலிமையழிந்து துன்பத்தையடைந்து வரிபரந்த புலித்தோலை ஆடையாகத்தரித்தருளிய பரமசிவனைக்குறித்து ஆயிரந்தேவவருஷ பரியந்தம் சிவதரிசனமுண்டாதற்குரிமையான பெருமைபொருந்தியதவத்தைச் செய்தார்கள். (எ-று.) (க)

வன்றிரிபுராதியர்செய் வாதைதனைநோக்கி
யன்றுவிடைமேலரனு மம்பிகையும்வந்து
வன்றிறன்முராரியயன் வானவரைநோக்க
மென்றுளிகண்முக்கணினும் வீழ்ந்தவெமர்வாழ.

(இ - ள்.) அங்ஙனம் அவர்களெல்லாருந் தவஞ்செய்தகாலத்தில் பரமசிவன் கொடிய திரிபுராதியர் செய்கின்ற வருத்தத்தைக் கண்டு உமையவளோடும் இடபவாகனத்தின்மேலெழுந்தருளிவந்து மிக்கபலத்தையுடைய விஷ்ணுமூர்த்தி பிரமதேவர்முதலான சகல தேவர்களையும் பார்க்கும்பொழுது அவர்கள்படுந்துன்பத்திற்குச் சகியாமைகாரணமாக மிருதுவாகிய நீர்த்துளிகள் எம்போல்வாரெல்லாம் உய்யும்படி பரமசிவனுடைய மூன்றுகண்களிலும் இருந்து விழுந்தன. (எ - று.)

தாரகாக்கன் கமலாக்கன் வித்துன்மாலியென்னும் மூவரும் கோடிவருடம் தவம்புரிந்து, பிரமதேவரால் பொன் வெள்ளி இரும்புகளாலாகியமூவரண்கள் முறையே சுவர்க்கம் அந்தரம் பூமியென்னுமிடங்களில் நிலைபெற்றிருந்து வேண்டுமிடங்கட்கு உடன்வரவும், அவை ஆயிரம்வருடத்திற்கொருமுறை ஒருமுகூர்த்தநேரம் ஒருங்குசேரவும், அக்காலத்தில் ஒருவனைவிடுத்து அழித்தாலன்றி வேறு எவ்வகையாலும் அழியாதிருக்கவும், திருமாலாதி தேவர்களெதிர்க்கினும் தமக்குத்தோற்றோடவும் வரம்பெற்று, மயனால்வகுக்கப்பட்ட மாளிகைகளோடுகூடிய அவ்வரண்களிலிருந்துகொண்டு விபூதிருத்திராக்ஷதாரணங்களும் பஞ்சாக்ஷரசெபமுமுடையோராய் விதிப்படிசிவபெருமானைப் பூசித்தாராயினும், அவர் அசுரகுலத்திலுதித்தமையால் தேவர்களுக்கு எண்ணில்லாத இடுக்கண்களைச் செய்தவர்; சிவபெருமான் அத்தேவர்படும்பாட்டைநோக்கி ஆற்றாராய்க் கண்ணீர்பொழிந்து புன்முறுவலக்கினியால் அத்திரிபுராதியரைத் தகித்தனரென்பது புராணசரித்திரம்.



இப்புராணத்தில் "திரிபுரனெனும்பெயர் திருந்தகணுநேல" என்பதும், "வன்றிரிபுரன்புரியும்வாதை" என்பதும் பாடமேயாயினும் திரிபுராதியர்செய்யும் துயர்க்கிரங்கித்தேவர்பொருட்டுக் கண்ணீர்சொரிந்தனரென்பதே நூற்றுணிபாகலின் திரிபுரனென்னும் பாடமே கொள்ளப்பட்டன. (௨)

உருத்திரன்விழித்துளிக ளையுருத்திராக்கத்
திருத்திரவிசந்திரன் றிருந்தழனற்கண்ணி
னருத்தியிதுவேபதயிரண் டாறுபதினாறு
பொருத்தொருபான்மேனிசெம்மை பொன்றவளங்காரே.

(இ - ள்.) பரமசிவனுடைய மூன்றுகண்களிலுமிருந்துண்டான நீர்த்துளிகளே உருத்திராக்ஷமணிகளாகும்; அவற்றுள் திருத்தமாகிய சூரியநேத்திரத்திலுண்டான விருப்பமிருந்த மணி பன்னிரண்டு பேதமுடையது; அதற்கு நிறம்; செம்மையும் பொன்மையும் சந்திரநேத்திரத்திலுண்டானமணிபதினாறுபேதமுடையது; அதற்குநிறம் வெண்மை; பிரகாசிக்கின்ற அக்கினி நேத்திரத்திலுண்டான மணி பொருந்தமாகியபத்துப்பேதமுடையது; அதற்குநிறங்கருமை. (எ-று)

சூரியநேத்திரம் பொழிந்தநீரினின்று கபிலநிறமணியும் அதினின்று செந்நிறமணியும் அதினின்று பொன்னிறமணியும் உதித்தனவென்பதும், அவற்றுள் கபிலநிறமணியும் செந்நிறமணியும் க்ஷத்திரியர்க்கும் பொன்னிறமணி வைசியர்க்கும் உரியவென்பதும், உதிக்கும்போதே அவ்வம்மணிகளோடு அவ்வவற்றிற்குரிய மரங்களும் உதித்தனவென்பதும் சிவாகமநூற்றுணிபென்க. (௩)

வெண்மைமறையோருரிமை வேந்துரிமைசெம்மை
வண்மைவணிகர்க்குமன் வகுத்ததொருபொன்மை
யுண்மையுளருக்கிருக் குள்ளதகறுப்பே
மூண்மணிகளாய்க்குமர முப்பதுடனெட்டே.

(இ - ள்.) பிராமணர்களுக்குரிமை வெண்ணிற மணிகளும், க்ஷத்திரியர்களுக்குரிமை செந்நிறமணிகளும், வளமைபொருந்திய வைசியர்களுக்குரிமை முன்சொல்லப்பட்ட பொன்னிறமணிகளும் உண்மையுடைய சூத்திரர்களுக்குரிமை கருநிறமணிகளுமாம்; அல்லாமலும் முட்களையுடைய உருத்திராக்கமணிகள்போலவே அவை காய்க்கின்றமரங்களும் முப்பத்தெட்டு விதங்களாகும். (எ-று.) (௪)

ஒருமுகமிரண்டுமுக முஞ்சிவசொருப
மருவுபறைபோர்பசு வதைத்தபழிபாறு
பருமையுளமூன்றுமுக மக்கினிசொருபம்
பெருகவணியிற்றெருகுதி பெண்களபழியாறும்.

(இ - ள்.) ஒருமுகமணிகளும் இருமுகமணிகளும் சிவசொருபமாகும்; அவற்றுள் ஒருமுகமணிகளைத் தரித்தால் பொருந்திய பிராமணர்களைக் கொன்றபாதகமும் இருமுகமணிகளைத் தரித்தால் பசுவைக்கொன்ற பாதகமும் நீங்கும்; அருமையாகியமூன்று முகமணிகள் அக்கினிசொருபமாகும்; அந்தமணிகளை அதிகமாகத்தரித்தால் அனேகமாதர்களை வதைசெய்தபாதகங்கள் நீங்கும். (எ-று.) (௫)

நாலுமுகநான்முகவ னாவதைகண்மாறும்
காலவனலஞ்சுமுக மூண்வழுவுகாலும்
வேலனுருவாறுமுகம் வேதர்வதைமாறு
மேலெழுமுகங்கள்சேட னெமகாவேகும்.

(இ - ள்.) நாலுமுகமுள்ளமணிகள் பிரமதேவருடைய சொருபம்; அந்தமணிகளைத்தரித்தால் மனிதர்களைவதைசெய்த பாதகங்களைக்கும்; ஐந்துமுகமுள்ளமணிகள் காலாக்கினி சொருபம்; அந்தமணிகளைத்தரித்தால் உணவின்றீங்குகள் நீங்கும்; ஆறுமுகமணிகள் சுப்பிரமணியசொருபம்; அந்தமணிகளைத்தரித்தால் பிரம



ஹத்தி மகாபாதகங்களைக்கும்; தகுதிபெற்ற ஏழுமுகமுள்ளமணிகள் ஆதிசேஷசொருபம்; அந்தமணிகளைத்தரித்தால் பொன்களவினாலுண்டான பாதகங்கள் நீங்கும். (எ-று) (௬)

அட்டமுகமானைமுக னைகுருதாரந்
தொட்டதறுமொன்பது முகம்வடுகன்றோற்ற
மெட்டுபரன்முத்தியொடு புத்தியிடைக்கையிற்
கட்டினொருகோடிமறை யோர்வதைகள்காலும்.

(இ - ள்.) எட்டுமுகமுள்ளமணிகள் கணபதிசொருபம்; அந்தமணிகளைத்தரித்தால் குருதாரத்தைத்தீண்டினபழிநீங்கும்; ஒன்பதுமுகமுள்ளமணிகள் வைரவசொருபம்; அந்தமணிகளைத்தரித்தால் சிவசாயுச்சியமும் வீவேகமுமுண்டாகும்; அவற்றை இடக்கரத்தில் மாலையாகக் கோத்துத்தரித்தால் ஒருகோடி பிராமணர்களைக் கொன்ற பாதகங்கள் நீங்கும். (எ-று.) (௭)

பத்துமுகமாயவன் பசாசமிருகம்போ
மத்தர்பதினொன்றதி மகம்பலனளிக்கு
மொய்த்தசுடரீராறு முகத்திறைவர்பூணின்
மெத்தவயாகபலன் மெய்க்கொலைகளேகும்.

(இ - ள்.) பத்துமுகமுள்ளமணிகள் விஷ்ணுமூர்த்தி சொருபம்; அந்தமணிகளைத்தரித்தால் பைசாசவாதையும் மிருகவாதையும் நீங்கும் பதினொருமுகமுள்ளமணிகள் ஏகாதசருத்திரர் சொருபம்; அந்தமணிகளைத்தரித்தால் அதியாகஞ்செய்தபலனுண்டாகும்; பன்னிரண்டு முகமுள்ளமணிகள் பன்னிருசூரியர்சொருபம்; அந்தமணிகளைத்தரித்தால் அளவில்லாத அசுவமேதயாகபலனுண்டாகி அவயவபங்கம்பண்ணின பாதகங்களுநீங்கும். (எ-று.)

பன்னிரு முகமணிகளைத்தரித்தால் துஷ்டமிருகம் ஓடும்; இஃதப்பலனெய்தும் என்பதும் நூற்றுணிப்பு. (௮)

கந்தர்பதின்மூன்றுமுக மூர்த்துகனபோகஞ்
சிந்தனையிலெட்டுவகைச் சித்திகளுமுண்டாந்
தந்தைதமர்தாய்குழவி தம்பிதனையன்மனையாள்
வந்தகருமாய்த்தவதை மாறுமதுபூணின்.

(இ-ள்.) பதின்மூன்றுமுகமுள்ளமணிகள் சுப்பிரமணிய சொரூபம்; அந்தமணிகளைத்தரித்தால் கனப்பொருந்திய போகங்களும் சிந்தித்தபடி எண்வகைச்சித்திகளு முண்டாகும்; அன்றியும்; பிதாவையும் சகோதரரையும் மாதாவையும் குழந்தையையும் தம்பியையும் தமையனையும் மகளையும் உதித்தவள்கருவையும் வதைத்த கொலைபாதகங்களெல்லாம் நீங்கும். (எ-று.)

பதின்மூன்றுமுகக்கண்டிக்குப் பரமசிவனதிதெய்வமென்பதும் உண்டு: இதனை "வழொடிரு மூன்றுமுகக் கண்டியரி தாமதமூன் றாழினலத்தார்க் குறமதனைத்-தாழ்வறவே, சென்னிமிசைத் தாங்கிடுக தெய்வம் பரமசிவ, னென்னாலும் புத்திமுத்தி யுண்டு" என்னும் உருத்திராக்கவிசிட்டத்தாலும் உணர்க. (௯)

மிக்கபதின்மூன்றினுக்கு மேலுமுகமில்லை
தக்கசிகையொன்றுதலை மாலையுராலொன்பா
னக்கலையிரட்டிகள மாங்குர நூற்றெட்டாங்
கைக்கணிகள்பன்னிரண்டு காதினிலவ்வாறே.

(இ-ள்.) உயர்வாகிய பதின்மூன்றுமுகமுள்ள மணிகளுக்கு மேற்பட்ட மணிகளில்லை; அம்மணிகளைத்தரிக்குங்கால், தகுதியாகிய சிகையினிடத்தில் ஒருமணியும், சிரசில் மாலையாக முப்பத்தாறு மணியும், கழுத்தில் முப்பத்திரண்டுமணியும், மார்பில் நூற்றெட்டு மணியும் கைகளின்மணிக்கட்டுகளில் தனித்தனி பன்னிரண்டு மணியும், காதுகளில் அவ்வாறுமணியும் (தரிக்கலாகும்.) (எ-று)



இவையன்றியும், உரையிற்கோட்டலென்னுமுத்தியால் செவிக்குத்தனித்தனி ஒவ்வொன்றும் புயத்தில் தனித்தனி பதினாறும் மார்பில் ஐம்பதும் சொன்னதும் உண்டு. (க0)

ஆயிரமியாகபல னப்படிதரிக்கிற்
றாயமணியோர்பொதி சுமைக்கழுதையொன்று
போயடவிவிந்தமலை புக்குயிரிழந்து
மேயதுகைலாயமலை மேலநூறுகற்பம்.

(இ-ள்.) சிகையாதிகளில் கூறியபடி தரித்தவர்களுக்கு ஆயிரம் யாகஞ்செய்த பலனுண்டாகும்; முற்காலத்தில் பரிசுத்தமாகிய ஒரு உருத்திராக்ஷப் பொதியைச்சுமந்த ஒரு கழுதையானது ஆரணியத்திற்சென்று விந்தபர்வதத்தைச்சேர்ந்து பிராணனைவிட்டு கைலாசகிரியில் நூறு கற்பகாலபரியந்தம் நிலைபெறவாழ்ந்திருந்தது (எ-று.)

நருமதாநதிதீரத்திலே ஆபிடமென்னுநகரிலுள்ள விசுவசித்தென்னும்வணிகன் கங்கையாடவிரும்பிப் பிரயாணப்பட்டு இடபம் ஒட்டகமுதலியவற்றில் சரக்குகளையேற்றுங்கால், ஓர் கழுதையின்மேல் உருத்திராக்கப்பொதியையேற்ற, அது விந்தியமலையில் ஏறமுடியாமல் வீழ்ந்திறந்தது. அத்தருணத்தே அதனைப்பற்ற இயமதூதனணுகலும், அவனைத்துரத்திச் சிவகணத்தலைவர் விமானத்திலேற்றிக் கைலையையடைவிக்க; அது, உருத்திராக்கவடப்பொதி சுமக்கப்பெற்ற புண்ணியவிசேடத்தால் நூறுகற்பகாலம் அப்பதவியில்வாழப்பெற்றதென்பது சரித்திரம். இதனை உபதேசகாண்டம் உருத்திராக்கமான்மியச் சருக்கத்துட் காண்க. (கக)

வெள்ளிகனகந்தரளம் வித்துருமமாதி
யள்ளினிடனன்றுமுக மொன்றுவதுநன்று
மௌளரியநற்குலமு மெக்குலமுமென்றுங்
கொள்ளுவதுநன்றணியி னஞ்சபதங்கூறில்.

(இ - ள்.) இரசதம் சுவர்ணம் முத்து பவளம் முதலானவைகளை இடை இடையே இட்டு மணிகளின் முகத்தோடு முகம்பொருந்தக் கோத்துத்தரிப்பது நன்றாகும்; அதுவுமல்லாமல் இகழ்ச்சியில்லாத நல்லகுலத்திற் பிறந்தவர்களும் இழிவான எச்சக்குலத்திற் பிறந்தவர்களும் எப்போதும் தரிக்கக்கடவர்; பஞ்சாக்ஷர தியானஞ் செய்து தரிக்கின் நன்மையாகும். (எ-று.) (கஉ)

புண்ணியமியற்றினிறை பூசைநியமத்தி
னண்ணுதவமாதிகளி னண்ணினவைநன்று
மெண்ணரியபாதகரு மீனவுயிரியாவுங்
கண்மணிவிழைந்தணியிற் கண்பெறுவதுண்மை.

(இ - ள்.) புண்ணியங்களைச் செய்கின்ற காலத்திலும், சிவபூசை நியமங்களைச்செய்கின்ற காலத்திலும், நிலைபெற்றதவங்களைச் செய்கின்ற காலத்திலும், அந்த உருத்திராக்ஷ மணிகளைத்தரித்தால் நன்மையாகும்; அல்லாமலும், அளவிறந்த பாதகங்களைச் செய்தவர்களும் இழிவையுடைய எல்லாவுயிர்களும் உருத்திராக்ஷமணிகளை விரும்பித் தரித்தால் ஞானக்கண்ணைப்பெறுவது சத்தியம். (எ-று.)

மூழ்கினுமலங்கள்சலம் விழ்கினுமுலைக்கண்
மாழ்கினுமருந்தினும் வருந்தினுமுறக்கஞ்
சூழ்கினுமொர்சூதகந் தொடக்கினுமிறைக்கட்
டாழ்வடமணிந்திடுவர் சத்தியதவத்தோர்.

(இ - ள்.) உண்மையான தவத்தையுடைய பெரியோர்கள் ஸ்நானஞ் செய்யும்போதும் மலவிசர்க்கம் சலவிசர்க்கம் செய்யும்போதும் மாதர்களுடைய முலைகளிடத்து முயங்கி மயங்கும்போதும், புசிக்கும்போதும், வருந்தும்போதும், உறங்கும்போதும், ஒரு சூதகம் தொடர்ந்தபோதும், உருத்திராக்ஷத் தாழ்வடத்தைத் தரித்திருப்பார்கள். (எ-று.) எப்போதும் தரித்திருப்பரென்பது கருத்து.



சகத்திரமணித்திரள்கள் சாமுனணிவார்கண்
மகத்துவமுரைப்பரிது வண்சிரசகாது
தொகுத்தகளமார்பிருகை தோளிருமணிக்கட்
டகத்தணியினக்கவட முக்கணுளவாகும்.

(இ - ள்.) இறந்துபோகுமுன் திரட்சியாகிய ஆயிரமணிகளைத் தரிப்பவர்களுடைய மகிமையை அளவிட்டுச் சொல்வதரிதாகும்; அல்லாமலும், கோத்த உருத்திராக்ஷமாலைகளை வளம்பொருந்தியசிரசிலும் காதுகளிலும் கண்டத்திலும் மார்பிலும் இரண்டுகைகளிலும் தோள்களிலும் இரண்டுமணிக்கட்டுகளினிடத்திலும் தரித்தால் மூன்றுகண்களையுடைய சிவசொரூபமாவார்கள். (எ-று.) (கரு)

தொகுத்த அக்கவடமெனக் கூட்டுக.

அக்கவடமஞ்சடீந மோதியணிவாரேன்
முக்கணுடையானவரை மோகமொடுசாரும்
புக்கவிடமுத்திதரி சித்தவர்கள்புத்தேள்
ருக்கலணியிற்பிறவி குன்றுமருளொன்றும்.

(இ - ள்.) உருத்திராக்ஷமாலையைப் பஞ்சாக்ஷர தியானஞ்செய்து தரிப்பார்களாயின் அங்ஙனம் தரிப்பவர்களைவிட்டு நீங்காமல் திரிநேத்திரத்தையுடைய பரமசிவன் விருப்பத்தோடு உடனிருப்பர்; அவர்கள் சென்ற ஸ்தலமெல்லாம் மோக்ஷஸ்தலமாகும்; அவர்களைத் தரிசித்தவர்களெல்லாரும் தேவர்களாவார்கள்; நாய்தரித்தாலும் அதற்கும் பிரவித்துன்ப நீங்கும், ஞானமுண்டாகும். (எ-று.)

நாதனவர்த்தியைக்கிர் நற்கதையுரைத்தான்
காதலினிறைஞ்சிவிழி கால்செவிசிரங்கை
பேதமிலர்க்காமிவையிப் பேசுமுறுப்பில்லோர்க்
மேதினுறுநற்கதிக ளீதறைதியென்றுள்.

(இ-ள்.) காதசன்மாவானவர் அனவர்த்தியைக்கு, அன்பர் பூசை சிவபூசை விபூதி உருத்திராக்ஷசின்னங்களைத் தரித்தல் முதலியவற்றின்பலன்களைக் கூறினார்; கூறலும், அவள் அன்பொடு வணங்கி, அண்ணலே! தரிசித்ததற்குக்கண்களும் வலம்வருதற்குக் கால்களும் புகழ் கேட்டற்குச்செவிகளும் வணங்குதற்குத் தலைகளும் அருச்சித்தற்குக் கைகளும் (இங்ஙனமே வழிபடுதற்குரிய பிற வுறுப்புக்களும்) பின்னமறப் பெற்றவர்களுக்கே சிவபூசை முதலியவை சித்திக்கும்; கூறிய இவ்வுறுப்புக்களைப் பெறாதார்க்கு எவ்வகையால் முத்தியெய்தும்? இதனையும் உணர்த்தியருள வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டாள். (எ-று.) (௧௭)

உருத்திராக்கச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௩௯௫.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதினைந்தாவது,

# சிவகீர்த்திச்சருக்கம்.

வேறு.

மதுமலர்க்குழலாய்கலியுகவலியால் வாழ்த்திபெறுவதற் கரிது, பதிகளிலொழிந்துபலிப்பிலையவற்றுட் பழமலையல்லது பலியா, முதலொருவருடமிருக்கவக்கதையை மொழிந்திடக் கேட்டிடத்துதிக்கத், துதிகளைக்கேட்கவந்தியகாலர் துதித்திட முத்தியையடைவார்.

(இ-ள்.) தேனொழுகுகின்ற புஷ்பமாலிகையை யணிந்த அளகபாரத்தையுடைய அனவர்த்தியையே நீகேட்பாயாக; கலியுக வலிமையினால் சகல சிவாசிகளும் இம்மைக்குவேண்டியவரங்களையும், மறுமைக்குரிய முத்தியையும்பெறுவது அருமையாகும்; அவை

கள் விசேடமுற்றஸ்தலங்களிலல்லாமல் வேறொருவிதத்திலுஞ் சித்திக்கமாட்டா; அந்தஸ்தலங்களுள்ளும் விருத்தகிரிஸ்தலத்திலல்லாமல் வேறொரு ஸ்தலத்தில் எளிதிற் சித்தியா; ஆதலால், அந்தஸ்தலத்தில் சடம்நீங்கு முன்பாக ஒரு வருஷபரியந்தம் வசித்தாலும், அந்தஸ்தலபுராணத்தைப்படித்தாலும், படிக்கக்கேட்டாலும், துதித்தாலும், ஸ்துதிக்கக் கேட்டாலும், தேகாந்தத்தில் துதிசெய்தாலும், மோக்ஷத்தைப் பெறுவார்கள். (எ-று.) (௪)

அரகரசம்புசங்கரமகேச வம்பிகைபாகமாதேவ, புராக நீலகண்டவென்றுரைக்கிற் புனிற்றிளங்கன்றினுக்காக்கள், வருவதேபோலச் சிவன்விரைந்தோடி வந்திடுமரத்தின் மேற் பறவைக், கொருகலேபோலப் பாதகமனைத்து மோட்டிடும் விடுசென்றடைவார்.

(இ-ள்.) ஒருவர் அரகரா! சம்போ! சங்கரா! மகேசா அம்பிகைபாகா! மஹாதேவா! புராந்தகா! நீலகண்டா! என்று துதித்தால் பிறந்த இளங்கன்றுகளுக்கிரங்கிவருகின்றபசுக்களைப்போலப் பரமசிவனும் அதிசீக்கிரத்தில்வந்து காப்பார்; மரத்தின்மேலிருந்த பட்சிகள் பறந்துபோவதற்கு ஒருகல்லே போதுமானதுபோல, சிவநாமங்களை யுச்சரித்தலே பாதகங்களையெல்லாம் நீக்கிவிடும்; ஆகையால் தேகாந்தத்தில் மோக்ஷத்தைப் பெறுவார்கள். (எ-று.)

சிவசிவவென் பாரவர்முனேநிருத்தஞ் செய்திடுமறலி யும்பணியு, மவரைவிட்டகலானம்பிகைபாக ஞானமவர்முகத்திருக்குந், தவனைக்கண்ட பனியெனப்பாவஞ் சரிந்திடும் பவக்கடலழுந்தார், புவனியின்மரண காலையிற்புகலிற் புலையருமடைவர்சாரூபம்.



(இ-ள்.) சிவசிவவென்று மனமாரத் துதிசெய்பவர்களுக்கு எதிரே உமையவளை இடப்பாகத்திலுடைய பரமசிவன் அவர்களை விட்டு நீங்காமலெப்போதும் திருநடனஞ்செய்தருளுவர்; அவர்களை யமனும் வணங்குவான்; அவர்கள் முகத்தில் நான்குவேதங்களுமிருக்கும்; அவர்கள்செய்த பாவமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல நீங்கிப்போம்; அவர்கள்பிறவிக்கடலில் மூழ்கமாட்டார்கள்; பூமியின்கண் நீசர்களானாலும் மரணகாலத்தில் அங்ஙனம் துதித்தால் அவர்களும் சாரூபபதவியைப் பெறுவார்கள். (எ-று.) (௫)

திருத்தமாபொருத்தன் செவிப்புலன்கேட்கச் சிவசிவ வென்றிடிற்பவனே, மெரிக்கியிடிபோலெரிந்திடும்பாவ மிறப் பொடுபிறப்பெலாமிரியு, மொருத்தன்வாயாரச் சிவவென மூக்கா லுரைத்திடிலொருரையதற்குக், கருத்தன்வாழ் பதத்தி லிருத்திடுமிரண்டுங் கடவுண்மேற்கடன்களாய் நிற்கும்.

(இ-ள்.) ஒருவனுடைய செவியினிடத்திற் றெளிவாகக்கேட்கும்படி சிவசிவவென்று திரிகரண சுத்தியுடனேசொன்னால் அவனது பாதகங்களெல்லாம் இடிவிழுந்தபனைபோல எரிந்துபோம்; அவனது இறப்பும் பிறப்பும் நீங்கிப்போம்; ஒருவன் தன்னுடைய வாயாரச் சிவவென்று மூன்றுதரஞ் சொன்னால் அம்மூன்றில் ஒரு மொழிக்கு அவனைப் பரமசிவன் தமதுலகமாகிய சிவலோகபதத்தில் வைப்பார்; மற்றை இரண்டுமொழியும் பரமசிவன்மேற் கடன்களாகவிருக்கும். (௬)

பூசைகடருமமற்றவனேனும் புராரியைப் புகழ்ந்திடி னவன்பாற், கர்சினிசெய்யாள் கலைகுடிகொள்ளுங் கதிகளும் பலித்திடுமுயிர்ப்பி, ஞேசையாலரன்பேருரைத்திடின்மலமே லுயரிடிபோல்வினையிடியு, மாசையான்முத்திப்பெண்கொளப் போவார்க் கவ்வுரை வாக்கியமாகும்.

(இ - ள்.) பூஜைகளும் தருமங்களும் செய்யாதவனாயினும்பரம சிவனைத்துதிசெய்தால் அவனிடத்தில் பூதேவியுஞ்சீதேவியும் சரஸ்வதியும் குடியாக இருப்பார்கள்; இவர்களுக்கு சகலபதவியுமுண்டாகும்; சுவாசவொலியால் சிவனது திருநாமத்தை உச்சரிப்பார்களாகின் அவர்களுடைய தீவினைகள் இடிவிழுந்தமலைபோல் இடிந்து போகும்; அல்லாமலும்; மோட்சானந்தப்பெண்ணை அன்பாற்கொள்ளப் போகின்றவர்களுக்கு அந்தச் சொல்லே சுபவாக்கியமாகும். (எ-று.) (௫)

இயன்றமாத்திர மஞ்செழுத்தையுமோதி யிடபயீசர்
தனைத்தொட்டு, முயன்றிருகொம்பி னடுவினிற்பரனை முதற்
பிரதோடமேகாணிற், பயன்றருந்தருமந் தவமெலாமடையும்
பதத்தினிற் பதம்படநடந்து, வியன்றுதிதியான மஞ்சலியா
லும் விரவினோர்வலம்பலகோடி.

(இ - ள்.) முதன்மையாகிய பிரதோஷகாலத்தில் தம்மாலியன்றமாத்திரம் பஞ்சாக்ஷரசெபஞ்செய்து நந்திகேசருடைய பீஜத்தைப் பரிசித்துக்கொண்டு இரண்டு கொம்புக்கும் மத்தியில் பரமசிவனைத் தரிசனஞ்செய்தால் சகலதருமங்களும் பயன்றரும்; தவமுழுமையும் சித்தியாகும்; பாதத்திற்பாதம்படும்படி மெல்லநடந்து மேன்மைபொருந்திய தோத்திரம் தியானம் கரங்குவித்தலோடு ஒருதரம் பிரதக்ஷிணம்செய்தால் பலகோடி பிரதக்ஷிணஞ்செய்த பலனுண்டாகும். (எ-று.) (௬)

முதல்வலமொன்றுக் கவமிருத்தேகு மூன்றிற்கோர
நோய்தீரு, மதிகமாமைந்திற்புத்திராதிகளா, முந்தணர்கொலை
யறுநூறிற், சதமொருபத்தே யிந்திரனவன் றனியிடம்வலம்
வரிற்பிறவிக், கதமறும்வலமுமிடமுமாய்நடக்கிற்கருதினொன்
றெவ்வொருகோடி.



(இ - ள்.) ஒருதரம்பிரதக்ஷிணஞ்செய்தால் அவமிருத்துவு நீங்கும்; மூன்றுதரம்பிரதக்ஷிணஞ்செய்தால் கொடுமையாகிய வியாதிகணீங்கும்; ஐந்துபிரதக்ஷிணஞ்செய்தால் அதிகமாகியசந்தான முதலிய சம்பத்துகளுண்டாகும்; அறுநூறு பிரதக்ஷிணஞ்செய்தால் பிரமஹத்தி மகாபாதகநீங்கும்; ஆயிரம்பிரதக்ஷிணம் செய்தால் தேவேந்திரனாவான்; ஒப்பற்ற இடமாகப் பிரதக்ஷிணஞ்செய்தால் பிறவித்துன்ப நீங்கும்; வலமும் இடமுமாகப் பிரதக்ஷிணஞ் செய்தால் ஒருபிரதக்ஷிணத்திற்கு ஒருகோடிபிரதக்ஷிண பலனுண்டாகும். (எ-று.) (௭)

தனிவிடை வலம் வரின் என்பதும் பாடம்.

உண்மதில்வலமொன் றெவ்வொருகோடி புறமொன்று
கோடிபத்தாகு, மண்படவணங்கி வணங்கியேநடக்கின் மற்ற
திற்கோடிபத்தாகு, மண்ணமப்ரகப்பிரதக்ஷணமொன்றேயனந்
தநூறுபிரங்கோடி, பண்ணினனவனேர்மூட்டினதெனி
னும் பராபரபதமவன்காணி.

(இ - ள்.) கருப்பக்கிருகத்தைச்சூழ்ந்த உண்மதிலை ஒருதரம் பிரதக்ஷிணஞ்செய்தால் அக்கருப்பக்கிருகத்தைக் கோடிபிரதக்ஷிணம் செய்ததாகும்; மூன்றும்பிராகாரமாகிய புறமதிலை ஒருதரம் பிரதக்ஷிணம் செய்தால் அக்கருப்பக்கிருகத்தைப் பத்துக்கோடி பிரதக்ஷிணம் செய்ததாகும்; சரீரத்தில் மண்படவிழுந்து வணங்கி வணங்கித் தண்டப் பிரதக்ஷிணஞ்செய்தால் அதனினும் பத்துக்கோடி பங்கு அதிகமான பலனுண்டாகும்; ஒருதரம் சமீபித்த அங்கப்பிரதக்ஷிணஞ் செய்தால் அதனினும் அளவில்லாத நூறுயிரங்கோடிமடங்கு அதிகமானபலனுண்டாகும்; அங்ஙனஞ்செய்பவன் ஒப்பற்றமூடனாயினும் உயர்ந்தசிவபுரம் அவனது காணியாகும். ()

மருவுசந்நிபாசிபிடம்வரப்பிரம சாரிதான்வலம்வரமற்றை,
யிருவரும்வலமுமிடமுமாய்நடக்கி விலக்கமுநீரைந்துகோடி,
கருதொருகோடியிரண்டு கோடியதால் கருங்கொலைப் பாதக

ரேனு, மொருவலம்வருவாரிரவியையொப்பா ருணர்வினோர் வலஞ்செயலொழியார்.

(இ - ள்.) பொருந்தியசந்நியாசிகள் இடமாகவும், பிரமசாரிகள் வலமாகவும், வானப்பிரஸ்தன் கிரகஸ்தன் இவர்களிருவரும் வலமுமிடமுமாகவும், பிரதக்ஷிணம் செய்வார்களாகில், அவ்வொவ்வொன்றே சந்நியாசி பத்துக்கோடிபிரதக்ஷிணமும், பிரமசாரி கோடிபிரதக்ஷிணமும்; மற்றையிருவரும் இரண்டுகோடி பிரதக்ஷிணமும் செய்ததாகும்; கருவைக்கொலைசெய்த பாதகராஹனும் இந்த விதிப்படி ஒருதரம் பிரதக்ஷிணஞ்செய்தால் அவர்கள் சூரியனுக்கொப்பாகப் பிரகாசிப்பார்கள்; ஆதலால், அறிஞர்கள் பிரதக்ஷிணஞ்செய்வதை எப்போதும் விடார்கள். (எ-று.) (௯)


அக்கொடுதிருநீ றணிக்தெழுத்தைந்து மறைந்தரன் பூசையுமியற்றிச், செக்கர்மேனியனை வலஞ்செய்துவணங்கிச் சிதம்பரமுதுகிரியொன்றிற்,பக்கமாயடியார்பூசையுஞ்செய்து பணிவிடை யியன்றவாறியற்றித், தக்கவாறிரத பரணைநாட் கொள்வோர் தமையலாற்சிவனையா மறியோம்.

(இ - ள்.) உருத்திராக்ஷகண்டிகையும் விபூதியும்தரித்துப் பஞ்சாக்ஷரஜெபஞ்செய்து சிவபூசைசெய்து அர்நிவண்ணனாகிய பரமசிவனைப் பிரதக்ஷிணஞ்செய்துவணங்கிச் சிதம்பரத்திலாயினும் விருத்தாசலத்திலாயினும் அன்பர்களாகிய அடியார்கள் பூசையும் செய்து தம்மாலியன்றமாத்திரம் திருப்பணிசெய்து தேகார்த்தத்திலும்தகுதியாக இரதத்தை உட்கொள்பவர்களையல்லாமல் வேறொருசிவனை யாம் அறியோம். (எ-று.) (௧௦)

எனவே, அவரே சிவமெனத்தக்கவரென்பது கருத்து.

சிவகீர்த்திச்சருக்கம் - முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௨௭௦.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதினொருவது,

# கோபர்வதச்சருக்கம்.

வேறு.

சிற்பரமன்முதுகுன்றன் றிருக்கதைகேட்கவிவள்
ளிற்பனோலிற்கலனோ வெனச்சிந்தைநெகழுமாதே
முற்படாநீரருள்செய்தீர் முதுகுன்றிற்கோவரையி
னற்கதைகேட்விழைமென வனவர்த்தியர்துரைத்தாள்.

(இ - ள்.) அனவர்த்தியென்பவன் நாதசன்மாவைவணங்கி இவாமீ! சின்மயவடிவான பழமலைநாதருடைய அற்புதசரித்திரத்தைக் கேட்குந்தகுதியுடையவனோ அல்லனோவென்றசற்றாயினும் திருவுளத்திற்குறியாமல் யான் கேட்குமுன்னமே நீர் அனுக்கிரகஞ்

செய்தீர்; அதுபோலவே பழமலையின்கணுள்ள கோபர்வதத்திறுடைய தன்மைபொருந்திய சரித்திரத்தையும் அனுக்கிரகஞ்செய்யுமென்று அன்பாக விண்ணப்பஞ்செய்தான். (எ-று.) (க)

வரைக்கரசாங்கோவரையை வாயளக்குந்தகைமைத்தோ
வுரைக்கின்றேமெனநாத னுரைக்கின்றான்கயிலையினு
னரைத்தவிடைமேற்கொண்டு நற்கணங்கள்புடைசூழ
விரைக்கமழுமுதுகுன்றின் விரைந்தனந்தான்விமலேசன்.

(இ-ள்.) அங்ஙனம் விண்ணப்பஞ்செய்தபொழுது நாதசன்மா கிருபைகூர்ந்து ஓ அனவர்த்தினையே! கேட்பாயாக; மலைக்கரசாகிய கோபர்வதத்தின்பெருமையானது நமது வாயினால் அளவிட்டுச் சொல்லும் தகுதியுடையதோ; ஆயினும் யாமறிந்தமாத்திரம் சொல்கின்றோமென்று திருவாய்மலர்ந்தருளுகின்றார்; பூர்வத்தில் பரமசிவன் கயிலைமலையிலிருந்து வெண்மைபொருந்திய இடபவாகனரூடராய் நல்ல சிவகணங்கள் புடைசூழ்ந்துவர வாசனைவீசுகின்ற மலர்ச்சோலைகள் நிறைந்துள்ள விருத்தகிரிக்கு விரைவாக எழுந்தருளிவந்தார். (எ-று.) (உ)

தாருவனமுனிவர்செய்யுந் தவத்தினையுமவர்மாத
ரேருடையபதிவிரத வியல்பினையுஞ்சோதிப்பான்
காருருவத்திருமால்கன் னிகையின்வரச்செல்கின்றோம்
நீயிருமினெனவுமையை நிறுத்தினன்வடகீழ்பால்

(இ-ள்.) அப்படி யெழுந்தருளிய பரமசிவன் உமாதேவியை நோக்கி யாம் தாருகவனமுனிவர்செய்யப்பட்ட தபோவலிமையையும் அவர்களது பத்தினிமார்களுடைய பதிவிரதன்மையையும் சோதிக்கும்படி திருவுளங்கொண்டு மேகவண்ணனாகிய திருமால் மோகினிரூபமாகிவர நாம் போகின்றோம்; நீவிரனைவரும் இவ்வி



டத்திருப்பீராகவென்று கட்டளையிட்டு உமாதேவியை விருத்தகிரிக்கு வடகீழ்த்திசையிலுள்ள ஓர்வனத்தில்நிறுத்தியருளினார். (எ-று)

முற்காலத்திலே தாருகவனமுனிவர் கருத்தாவொருவரில்லை அவரவரியற்றும்யாகாதிகன்மங்களே பயனளிப்பனவென்னும்மீமாஞ்சமதக் கொள்கையுடையராய் யாவரையும் இங்ஙனமே போதித்துக்கெடுக்கும் நிலைமையையும் அவர்கற்பித்த அக்கொள்கையின் வழிநின்று கற்பிற்வழாது அவர்மனைவியரும் யாவரையும் அவமதித்தொழுகலையும் சிவபெருமான் திருவுளத்திற் கொண்டு திருமாலை மோகினியுருவாய்ச்சென்று அம்முனிவரை மயக்கவிடுத்துத் தாம் பிக்ஷாடன மூர்த்தியாய்ச்சென்று அம்முனிவர்மங்கையரைமயக்கிப் பின்னர் அவரை நல்வழிப்படுத்தினரென்பது சரித்திரம். (ங)

தனியிருப்பதெங்ஙனெனுந் தையலாள்மெய்வருடிப்
புனிதனகைசெய்தருளிப் புகழ்நந்திதனைநிறுத்தி
யனிதமிலாச்சிவனகன்றா னவ்வளவிலந்தவனத்
தினியதொருசிவலிங்க முமையம்மையெதிர்கண்டாள்.

(இ-ள்.) அதுகேட்டுத் தனிமையாக இவ்விடத்திலிருப்பது எப்படியென்று விண்ணப்பஞ்செய்தருளிய உமாதேவியைப் பார்த்து மெல்லென நகைத்துச் சரீரத்தைத்தடவிக்கொடுத்து யாவராலும் புகழப்பெற்ற நந்திதேவரை உடன் இருக்கும்படிநிறுத்தி அழிவில்லாத அப்பரமசிவன் சென்றருளினார்; அங்ஙனஞ்சென்றவளவில் தேவியாரும் அந்தவனத்தின்கண் ஒருசிவலிங்கத்தை எதிரே கண்டருளினார். (ச)

உத்தமமாமீசான கங்கையுமங்கெதிர்கண்டாள்
புத்திதரும்புகழ்நந்தி யேவல்செயப்பூசித்தா
ளத்தலமுநந்திபெய ராலேகோபருப்பதமாய்ச்
சத்திபெயராற்சத்தீச் சரமுமாய்த்தழைத்ததுவாம்.

(இ - ள்.) உமாதேவியார் சிவலிங்கங்கண்டவுடன் அவ்விடத்தில் உத்தமமாகிய அந்த ஈசானதிக்கில் ஒரு தீர்த்தத்தையுங்கண்டு மனங்களித்து தம்மைத்துதித்தவர்களுக்கு அறிவைத்தருகின்ற புகழையுடைய நந்திதேவர்பணிசெய்ய அந்தச் சிவலிங்கத்தைப் பூசித்தார்; அதனால், அந்தஸ்தலம் நந்திதேவருடையபெயரால் கோபர்வதமென்றும் சத்தியினுடையபெயரால் சத்தீச்சரமென்றும் இரண்டு திருநாமங்கள் தழைக்கப்பெற்றது. (எ-று.) (௬)

அவ்வளவிற்றருவள மகன்றருணர்கோடிகுழாஞ்
செவ்வொளிபோற்சத்தீசன் றிருவுருவிற்சிவன்றோன்ற
நவ்விவிழியாள்பணிந்து பூசித்தாளவஞ்சிறக்க
மெய்வரங்கேளெனப்பரமன் விளம்பினானுமைகேட்டாள்.

(இ - ள்.) அங்ஙனம்பூசித்தபொழுது பரமசிவன் தாருகாவனத்தை விட்டு நீங்கிக் கோடிசூரியர்களுடைய சிவந்தபிரகாசம்போல் சத்தீச்சரமென்னும் சிவலிங்கத்தினிடமாகப் பிரகாசித்துத்தரிசனங் கொடுத்தருளினார் அதுகண்டு மான்போன்றகண்களையுடைய உமாதேவியாரும் வணங்கிப் பூசிக்கப் பரமசிவன் மகிழ்வுகொண்டு உனக்கு நன்மையுண்டாகும்படியாக உண்மையான வரங்களைக் கேளென்று திருவாய்மலர்ந்தருளின அளவில் உமாதேவியார் விண்ணப்பஞ்செய்கின்றார். (எ-று.) (௭)

யானுகந்துபூசிக்கு மினியகோபருப்பதத்திற்
றானதருமஞ்செய்வார் சகலதிருப்பெறவேண்டும்
ஞானகங்கைமூழ்கினவர் ஞானமேபெறவேண்டும்
பானுமரைப்பதம்பணிவார் பதம்பெறவேண்டுவதென்றாள்.

(இ - ள்.) நான் சந்தோஷமாய்ப் பூசிக்கின்ற இனிமையான இந்தகோபர்வதத்தில்வந்துதான தர்மங்களைச் செய்கின்றவர்களெல்லாம் சர்வ செல்வங்களையும் அடையவேண்டும்; ஞானசொரூபமாகிய இந்த ஈசானகங்கையில் ஸ்நானஞ்செய்தவர்களெல்லாருஞ்சிலஞானத்தை யடையவேண்டும்; அல்லாமலும், சூரியனைக்கண்டுமலர்கின்ற தாமரைமலர்போலும் உமது திருவடிகளை வணங்குகின்றவர்களெல்லாம் உமது திருவடிப்பேறாகிய சாயுச்சியபதத்தை அடையவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தார் உமாதேவியார். (எ-று.)



சிவனுங்கேட்டுமையவட்குச் சிறந்தவரங்கொடுத்தருளிப்
புவனமெலாநந்திவரைப் புகழ்பொலியப்புரிந்தருளிப்
பவனுமவன்றேவியுடன் பணிந்தவர்க்குப்பரிந்தளிப்பா
னவனொளிதிற்பிழையாம லவர்களெலாகதிபெறுவார்.

(இ - ள்.) அதுகேட்டருளிப் பரமசிவனும் தேவியார் கருத்தின்படி உயர்ந்த அவ்வரங்களை அநுக்கிரகஞ்செய்து, கோபர்வதத்தின் கீர்த்தியானது சகலபுவனங்களிலும் பிரகாசிக்கும்படிசெய்து, தாமும் தம்முடைய தேவியாரோடு தம்மை வணங்கினவர்களுக்கெல்லாம் சகல நன்மையையுங்கொடுத்துக்காத்தருளுவர்; இப்படிப்பட்ட அந்தஸ்தலத்தில் எளிதாகப்போய்க் கதியைப்பெறாதவர்களோ அரிய தவங்களைச்செய்து கதியடையப் போகிறார்கள். (எ-று.) (௮)

ஈசானகங்கையினீ ராடிபிறைதாள்பணிந்து
மோசாதேநூற்றெட்டுப் பிதக்கணஞ்செய்தர்ச்சனைசெய்
தாசானுற்பன்னிருநா ளூபீரல்லஞ்செழுத்தைத்
தேசாகச்செபித்தவர்கள் சிவனிணைபதம்பெறுவார்.

(இ - ள்.) கோபர்வதத்தில் ஈசானகங்கையில் ஸ்நானஞ்செய்து பரமசிவனது திருவடிகளைவணங்கி மௌனமாக நூற்றெட்டுப் பிரதக்ஷிணஞ்செய்து அருச்சனைசெய்து ஆசாரியாற்பெற்ற செவ்

வியபஞ்சாக்ஷரத்தை ஞானமுதிரப் பன்னிரண்டுலக்ஷம் ஜெபஞ்செ ய்தால் அவர்கள் சிவாக்ஞைப்படிக்குச் சிவபதவியைப் பெறுவார் கள். (எ-று.)

(௰)

தணவாதேபசுரையிற் றங்கிவரம்பெற்றோருங்
கணாதரானவருங் கதியினருமளவில்லை
புணர்வாயதவர்கருணை பூரணருமங்கிருப்ப
ருணர்வாகச்சேவைசெய்வார்க் குற்றவரமுந்தருவார்.

(இ-ள்.) கோபர்வதத்தைவிட்டு நீங்காமல் வசித்திருந்து வர ங்களைப்பெற்றவர்களும் அதில் கணாதரானவர்களும் மோட்சத் தைப்பெற்றவர்களும் இவ்வளவினரென்று அளவு சொல்லமுடி யாது; அல்லாமலும் தகுதிபெற்ற தவங்களைச்செய்து முடித்தவ ராகிய கருணைபரிபூரணரென்னும் ஒருகணாதரும் அங்கிருக்கின் றார்; அறிவு வொற்றுமைப்பட்டுச் சேவை செய்தவர்களுக்கு அவர் கள்விரும்பிய சகலவரங்களையும் அவர்கொடுத்தருளுவார். (எ-று.)

தேட்டமுறப்பூசித்துச் செபித்துண்டிதனைவிட்டுக்
காட்டசமாதியிலிருக்குங் கணாதபூரணரை
நாட்டமுறப்பார்த்திருந்தா னொருபாவிநயந்தவனை
யாட்கொள்ளும்படியிவன்றா னாரோவென்றாராய்ந்தார்.

(இ-ள்.) பரமசிவனை அன்போடுபூசைசெய்து ஜெபஞ்செய்து உணவையொழித்து தம்பத்தைப்போல அசைவின்றிச் சமாதியிலி ருக்கின்ற கணாதராகிய கருணைபரிபூரணரை ஒருபாவியானவன் கண்கள்பொருந்தப் பார்த்திருந்தான்; அந்தப் பாவியையும் கருணை பரிபூரணரானவர் தடுத்தாட்கொள்ள நினைத்து இவன் யாவனெ ன்று திருவுள்ளத்தில் ஆலோசித்தருளினார். (எ-று.)

(௧௧)

இப்பாவியின்பெயர் சுருவிருத்தனென்பது.



பெண்வதையுங்கோவதையும் பிறவதையும்பெரும்பவமும்
பண்ணினவனெனநினைந்து பரலோகமில்லையந்தோ
தண்ணியவனெனத்தூரச் சந்நிதியினிற்பித்தார்
நண்ணியசந்நிதியினொடு நாளாகநின்றளவில்.

(இ-ள்.) ஸ்திரீவதையும் கோவதையையும் மற்றும்பலவதை களையும் அநேகபாதகங்களையும் செய்தவனென்று தெரிந்து ஐயோ இவனுக்கு மோட்சமில்லையே! இவன் மிகுந்தாழ்ந்தவன்! என்செய லாமென்றுநினைத்து அவனைத்தமதுசந்நிதானத்தில் தூரமாக நிற் கும்படி செய்தருளினார்; அங்ஙனமே அவன்கருணைபரிபூரணரது சந்நிதானத்தில் அனேகநாளாக நின்றதாலத்தில். (எ-று.)

(௧௨)

பாம்பின்றோலுரிந்ததுபோற் பவன்றன்பாதகங்கள்
போம்பரிசினுற்கருணை பூரணரையும்பணிந்து
தாம்புனலுளசானதனின் மூழ்கியோகியையும்
வாம்புனற்செஞ்சடையரையுங் கூடவேவலஞ்செய்தான்.

(இ-ள்.) அந்தப்பாவியாகிய பிராமணன் தன்னுடையபாத கங்களெல்லாம் பாம்பினதுதோலுரிந்ததுபோல் நீங்கிப்போயின மையால் கருணைபரிபூரணரையும்வணங்கி, அலைகளைமோதுகின்ற நீர்நிறைந்த ஈசானகங்கையில் ஸ்நானஞ்செய்து, அந்தக் கருணைபரி பூரணரையும் தாவுகின்றகங்கையைத்தரித்த சிவந்தசடைமுடியை யுடைய சந்திசேகரரையும் கூடப்பிரதக்ஷிணஞ் செய்தான். (எ-று.)

கருவகற்றுமீசான கங்கையினிற்றினமூழ்கித்
திருவருளோர்பாகனுட னியோகியையுந்தினம்பணிந்து
சுருதிகணந்தண்ணீர் தனையருந்தித்தவவடிவாய்
மருங்ககன்றபின்யோகி மறையவனைவரவழைத்தான்.

(இ-ள்.) மேலும் அந்தப்பிராமணன் பிறவியைக்கெடுக்கின்ற ஈசானகங்கையினில் நாடோறும் ஸ்நானஞ்செய்து அருளுருவமாகிய உமாதேவியார் வீற்றிருக்கும் இடப்பாகத்தையுடைய சதீச்சுரரையும் கருணைபரிபூரணரை நாடோறும் வணங்கிச் சருகுகள் புல்முதலிய திரணங்கள் தண்ணீர்முதலியவைகளைப்புசித்துத் தவவடிவாகிச் சகலபிராரத்தியும் ஒழிந்தபின்பு அந்தப்பிராமணனைக் கருணைபரிபூரணர் சமீபத்தில் வரவழைத்தார். (எ-று.) (கச)

எந்தநாடுன்பெயரென் னிந்தவனத்தேன்வந்தாய்
முந்தவுரையென்றுரைப்ப மொழிகின்றனெடுந்தூரஞ்
சந்தரநாடென்பெயருந் தருவிருத்தன்மறைபவனான்
வந்ததுவுமிவ்விடத்தில் வழிபறிக்கவென்றுரைத்தான்.

(இ-ள்.) (வரவழைத்த அந்தப்பிராமணனைப்பார்த்து) நீ எந்தத்தேசம்? உன்பெயரென்ன? நீ இந்தவனத்திற்கு எதைக் குறித்துவந்தாய்; இவைகளைவிவரமாக நீ முன்னேசொல்வாயென்று கருணைபரிபூரணர் திருவாய்மலர்ந்தருள; அந்தப் பிராமணன் சொல்லுகின்றான்; ஓ! சுவாமி அடியேனிருப்பது வெகுதூரமாகிய சந்தரதேசம்; என்பெயரும் தருவிருத்தன்; பிராமணர்குலத்திற் பிறந்தவன்; நான் இந்தவனத்திற்குவந்ததும் வழிமறித்துப் பறிப்பதற்கேயென்று விண்ணப்பஞ்செய்து பின்னுஞ்சொல்லுகின்றான். ( )

பாவியானழியாத பலமரபுதாமுமில்லை
பாவியான்றிருடாத பலகளவுதாமுமில்லை
பாவியான்கொல்லாத பல்லுயிர்கடாமுமில்லை
பாவியான்பண்ணாத பாதகங்கடாமுமில்லை.

(இ-ள்.) இவ்வுலகத்திலிருக்கின்ற முறைமையாகிய பலமரபுகளில் பாவியாகிய நான் அழித்துவிடாத மரபுகளுமில்லை; பலகளவுகளில் நான்செய்யாத களவுகளுமில்லை; பலவுயிர்களில் நான் கொலைசெய்யாத உயிர்களுமில்லை; பலபாதகங்களில் நான்செய்யாதபாதகங்களும் இல்லை. (எ-று.) (கசு)



காவினையுமென்னுடைய கடுங்கொலையுங்கடுஞ்சினமும்
விரகினையுங்காணினஞ்சி விழலுடையோருளநடுங்கு
மாநடுங்குமண்ணடுங்கு மாதர்மனநடுநடுங்கு
நரனடுங்குஞ்சுரனடுங்கு நமனடுங்குமெனச்சொன்னான்.

(இ-ள்.) அடியேன் செய்கின்ற வஞ்சகத்தையும் கொடிய கொலைத்தொழிலையும் கடுமையாகிய கோபத்தையும் உபாயத்தையும் பார்க்கின் மகாபராக்கிரம சாலிகளுள்ளமும் நடுங்கும்; அல்லாமலும், என்னைக்கண்டால் மரங்களும் நடுங்கும்; மண்ணும் நடுங்கும்; மாதர்களுள்ளம் மிகநடுங்கும்; மனிதர்களும்நடுங்குவார்கள்; தேவர்களும் நடுங்குவார்கள்; இயமனும் நடுங்குவானென்றுசொல்லிப் பின்னையும் விண்ணப்பஞ்செய்கின்றான், (எ-று.) (கஎ)

குருடனுக்குக்கண்பெறுவான் குணதீர்த்தங்கிடைத்ததுபோ
மருளனுக்குவெளிப்பட்டீர் மனத்தெளிந்தேனின்னமுநா [ன்
னிருளனுகாவழிதன்னை யிதுவென்றுகாட்டியக்காற்
றெருள்பெறுவேனெனயோகி திருப்பாதங்களின்வீழ்ந்தான்.

(இ-ள்.) பிறவிக்குருடனுக்குக் கண்கிடைக்கும்படியாக ஒரு புண்ணியதீர்த்தம் கிடைத்ததுபோலப் பாவியாகிய அடியேன்முன் தேவரீர் வெளிப்பட்டுத்தோன்றினீர்; அதனால் அடியேனும் சித்தத்தெளிவைப்பெற்றேன்; ஆதலால் இனிமேலும் அடியேன் அஞ்ஞானத்திற் செல்லாத உண்மைஞானவழியை இதுவென்று உபதேசஞ்செய்தருளினால் ஆன்மஞானத்தைப் பெற்றுக்கிருதார்த்தனாவே

னென்று சொல்லிக் கருணைபரிபூரணருடைய திருவடித்தாமரை களில் விழுந்து நமஸ்காரஞ்செய்தான். (எ-று.) (கஅ)

என்றுநீயித்தலத்தி லெய்தினும்புன்பாவ
மன்றகன்றதெம்முடைய வருண்ஞானப்பார்வையினுந்
சென்றுகங்கைமூழ்குதலாற் சிவன்சத்திதிருநோக்க
னன்றிகிடைத்திருக்கின்றாய் நமைப்பகலாயெனவுரைத்து.

(இ-ள்.) வணங்கிநின்ற பிராமணனுக்கு இரங்கிக் கருணைபரி பூரணர் ஓ பிராமணனே! நீ இந்தக் கோபர்வதமென்னும் திவ்விய ஸ்தலத்திற்கு எப்பொழுதுவந்தாயோ அப்பொழுதே உன்னுடைய பாதகங்களெல்லாம் நீங்கிவிட்டன; அல்லாமலும், எமது கிருபா ஞானதிருஷ்டியினாலும் தினந்தோறும்போய் ஈசான கங்கையில் முழுகினபடியினாலும் சந்தீச்சுரர் சிற்சத்தி இவர்கள் திருவருட் பார்வையினாலும் நீ சகலநன்மையும் பெற்றிருக்கின்றாய்; ஆகலால் நீஎப்போதும் நம்மைவிட்டு நீங்காமல் இருப்பாயென்று பணித்து. (எ-று.) (க௯)

தஞ்சநியமங்களுநற் றவத்திறமு முண்மையுட
னஞ்செழுத்து முபதேச மருளினனவ்வழியில்
விஞ்சுதவமிகமுடுகி மெய்ஞ்ஞானியாயிறைவன்
கஞ்சமலர்ச்சேவடிக்கே கலந்தொன்றியுடனானான்.

(இ-ள்.) பற்றுக்கோடாகிய சகல நியமானுஷ்டானங்களையும் சிறந்த தவத்தின் கூறுபாடுகளையும் பஞ்சாக்ஷரத்தையும் உள்ளபடியே உபதேசஞ்செய்தருளினார்; அந்தப்பிராமணனும் அவர் அனுக் கிரகித்தருளிய உபதேசவழியாக மேன்மையான தவத்தில் மிகவு முடுகின்று மெய்ஞ்ஞானத்தையுடையவனாகிச் சந்தீசருடைய திருவடித்தாமரைகளில் இரண்டறக்கலந்து ஒற்றுமைப்பட்டு அத்து விதானந்த நிலையைப் பெற்றான். (எ-று.) (உ௦)




நந்திகோபருப்பதத்தி னரர்சுரர்களியாரேனும்
வந்தவர்கண்மூன்றுநாண் மகிழ்ந்துநியமத்துடனே
சந்தமறத்துறந்திருக்கிற் சண்ணுதலோன்பதமடைவர்
பந்தமுடனிருந்தவரும் பரமன்றன்வடிவாவர்.

(இ-ள்.) நந்திதேவருடையபெயரால் விளங்குகின்ற கோபர் வதத்தினிடமாகவந்தவர்கள் மனிதர்களானாலும் தேவர்களானாலும் மற்றெவர்களானாலும் அந்தஸ்தலத்தில் மூன்றுநாள் வரைக்கும் விஷயவாசனையையொழித்து நியமத்தோடு வசித்திருந்தால் அவர் கள் சந்தீச்சரருடைய திருவடியைப் பெறுவார்கள்; குடும்பத் தோடு வசித்திருந்தவர்களும் சிவசாரூபபதவியை அடைவார்கள். (எ-று.) (உக)

கோபர்வதச்சருக்கம் - முற்றிற்று.

ஆகத்-திருவிருத்தம்-[illegible].



உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

## பதினேழாவது,

# பிருடிச் சருக்கம்.

வேறு.

காதன்மாதுமுன்னேந்துவானொரு நாலுவேதமபேரர்பிருடிதன்
மரதர்மாதுநன்முருசியென்பவண்மகதமென்பெருநாட்டினோ
பேதபூப்பிரதக்கணத்தினிற் பிரணவப்பதிவந்தனர் [ர்
மீதுவாரகையேகிவித்துருமத்துமேவினர்கங்கையே.

(இ - ள்.) நாதசன்மரி அனவர்த்தியைப்பார்த்துச் சொல்லுகின்றார்; ஓ அனவர்த்தியையே! நீ கேட்பாயாக; பூர்வத்தில் ஒப்பற்ற நான்குவேதங்களுந்தெரிந்த பிருடிதனென்னும் ஒருபிராமணன் உண்டு; அவனது காதன்மிக்கமனேயவளும் நல்லமுருசியென்னும் பெயரையுடையவள், அவர்கள் மகதமென்கின்ற பெரிய தேசத்திலுள்ளவர்கள், அவர்களிருவரும் நானுபேதங்களையுடைய



பூமியைப் பிரதக்ஷணஞ்செய்யும்படி நினைத்துவருகையில் முன்னே பிரணவஸ்தலத்திற்குவந்து பின்பு மேலான துவாரகாபுரிக்குச்சென்று வித்துருமமென்னும் தலத்திற்குப்போய் கங்கையை அடைந்தார்கள். (எ-று.) (க)

கனகலந்திரியம்பகந்திருவிக்கிரமங்கழுக்குன்றமே
வினவுசாய்வனம்வெள்வனம்வதரிவனஞ்சதுர்மறைவன
நனிவருங்கடவூர்குடந்தைநன் ஞாகவீச்சரமாதவை
யினியராமனதீச்சரங்குமரித்துறைக்கணிமெய்தினர்.

(இ - ள்) கனகலம் திரியம்பகம் திருவிக்கிரமம் திருக்கழுக்குன்றம் சொல்லுகின்ற திருச்சாயாவனம் திருவெண்காடு திருவதரியாச்சிரமம் திருமறைக்காடு நன்மைமிகும் திருக்கடவூர் திருக்குடந்தை திருநாகேச்சரம் திருமாதவை இனிமையான இராமேச்சரம் கன்னியாகுமரித்துறை என்னும் தலங்களில் அடைந்து தரிசித்தார். (எ-று.) (உ)

இராமேச்சரமேயன்றி இராமனதீச்சரமென்னும் தலத்தைக் கொள்ளினும் பொருந்தும், கனகலமுதலியதலங்களை முறையாகக் கூறாது செய்யுட்கிணங்கக் கூறுகின்றார்.

சவணவக்கிரம்பகவநற்புரி ஆதிதருங்கணயுதிதல
மிவருங்கோகரணஞ்சயிந்தவ மென் னுநற்பதியுற்றபின்
றுவரைவந்தனரவரையங்கொரு சுந்தரச்சிவயோகிதான்
றவனமாயினிரெங்ஙனேகினிர் சாற்றுமென்றனன்சாற்றுவார்

(இ - ள்.) பின்பு சவணவக்கிரம் நன்மைபொருந்திய பகவபுரி ஆதிபெற்றவிநாயகபுரி யாவரும் விரும்பும் கோகரணம் சயிந்தவம் என இங்ஙனம்புகழ்பெற்ற திவ்வியஸ்தலங்களைத்தரிசித்தபின்பு துவாரகாபுரிக்குவந்தார்கள்; அவ்விடத்தில் வசிக்கின்ற அழகியஒரு

சிவயோகியார் அவர்களைக்கண்டு நீங்கள் இவ்வளவு சிரப்பிரயாசமுண்டாகும்படி எவ்விடத்திற்குப் போனீர்கள் என்றுகேட்க; அவர்கள் சொல்லுகின்றார்கள். (எ-று.) (௯.)

பிருடிதன்னுரைதருவன்மாதவ பிருதுவிப்பிரதக்கண
முருசியாளொடுபசமனுலயமுற்று மேக்கினனுன்பதத்
தெரிசனத்தையுமுற்றனன்னென வந்தயோகசிரித்துநீர்
பெருகுசித்திதலங்களுற்றிலிர் பெரிதுகானடைவந்திரால்.

(இ - ள்.) பிருடிதனவன் சொல்லுகின்றான்; மகாயோகீச்சுரரே அடியேனும் முருசியென்னும் என்மனைவியும்பூப்பிரதக்ஷிணமாகச் சிவாலயமுழுவதும் தெரிசித்துவந்தோம்; அல்லாமலும் உம்முடையபாததரிசனமும் பெற்றேமென்று சொன்னவளவில் அந்தயோகீச்சுரர்நகைசெய்து நீங்கள் விமானத்தில் வாராது பெரிதும் கால்நடையாகவந்ததாகலின் மேம்பட்டசித்தியைத்தக்க தலங்களுள் ஒரு தலத்திற்காகிலும் போகவில்லையென்றுசொல்லி. (எ-று.) (௫௰)

சென்றவன்றுவிமானமுற்றிடு தெய்விகத்தலமுண்டோ [ன்
வென்றுரைத்தனனிருவருந்தொழுதேதுதானெனவோதுவா
றுன்றுகண்டகிபீமையச்சுதை தூயகிட்டிணைவேணியே
மன்றல்கர்ணிகைசரயுநன்மதை மாகளங்கரிகாளமே.

(இ - ள்.) சென்றபொழுதே தெய்வவிமானம் வருகின்றதெய்வீகத்தலங்கள் அநேகம் இருக்கின்றனவென்று சொல்லியருளினார்; அதுகேட்டு அவ்விரண்டுபேரும் வணங்கிநின்று அந்தஸ்தலம் எது எது எமக்குத் தெரியச்சொல்லவேண்டுமென்றுகேட்க; அந்தயோகீச்சுரர் சொல்லுகின்றார்; நெருங்கியகண்டகி பீமை அச்சுதைசுத்தமாகிய கிருஷ்ணவேணி மங்கலநிறைந்த மணிகர்ணிகை சரயு நர்மதை மாகாளம் காகாளம். (எ-று.) (௫௧)

இதில் செய்யுட்கிணங்கத் தீர்த்தமும் தலமும் கலந்துவருதலின் கண்டகி முதலியவற்றைத் தீர்த்தமாகக்கொள்க.



பாவநாசம்விசாலைசத்திர பாகைபற்புதைபுரமியூர்
தேவனாலவாய்சிராப்பளி சிந்துகோமதிகிரணியே
காவிரிக்கரைகற்குளம்பிர வாளமேமயூரமதாகை
மாவனஞ்சிகிதுறையணுமலைகமலை யாலயமம்பலம்.

(இ - ள்.) பாவநாசம் விசாலை சத்திரபாகை அற்புதை புரிதிபுரி திருவாலவாய் திருச்சிராப்பள்ளி சிந்து கோமதி கிரணி காவிரிபெருமைபெற்ற கற்குளம் பிரவாளம் திருவுறையூர் திருவானைக்காதிருமயிலாடுதுறை திருவண்ணாமலை திருவாரூர்சிதம்பரம். (எ-று.)

திருத்திசத்திரரேகைதொன்மழ பாடிசுந்தரமாமலை
திருத்துரைப்பத்தலமங்கலத்திரு வாஞ்சியந்திருமருதரோ
அருத்தன்வெண்ணிமயூரமாவடு துன்நிறைக்கமழ்கோடிகா
விருத்தவெற்பொடுகோபருப்பத மிக்கதென்றுவிளம்பினான்.

(இ - ள்.) திருத்துருத்தி சத்திரரேகை பழமையாகிய திருமழபாடி சுந்தரகிரி திருத்தமாகிய நெய்த்தானம் திருமங்கலம் திருவாஞ்சியம் திருவிடைமருதூர் பரமசிவனெழுந்தருளிய திருவெண்ணிதிருமாயூரம்; குளிர்ச்சிபொருந்திய திருவாவடுதுறை மணங்கமழ்கின்ற திருக்கோடிகா விருத்தாசலம் கோபருப்பதம் இவைகளெல்லாம்முக்கிய ஸ்தலமென்று சொல்லியருளி. (எ-று.) அரோ அசை.

அத்தலங்களிலேயிடாவிடி னரிதுநற்கதியென்றன
னெய்த்தனம்வழிநடையினுமினியேகுதற்கரிதுன்னருட்
சித்திதந்தருளென்றனர்சிவ யோகியுள்ளமகிழ்ந்துநீ
ரித்தகைத்திருநேற்றைநெற்றியி லிட்டமாத்திரைதன்னிலே.

(இ - ள்.) அத்தலங்களிற்சென்று தரிசியாதுவிட்டால் மோக்ஷமடைப்பது அரிதென்று சிவயோகி சொல்லியருளினார்; அதுகேட்டு நாங்களிருவரும் வழிநடந்த பிரயாசத்தினால் மிகுந்த இளைப்

புற்றிருக்கின்றோம்; இனி எங்களால் நடக்கமுடியாது; ஆதலால் உமது கிருபாநோக்கம் வைத்தருளிக்காக்கவேண்டுமென்று சொன்னார்கள்; அ[illegible] யாரும் மனமகிழ்ந்து நீங்கள் இந்த [illegible] பொருந்திய திருநீற்றை நெற்றியில் தரித்துக்கொண்டு [illegible]. (எ-று.) (அ)

நல்லவாகியகோபருப்பத நண்ணுவீரொருமூன்றுநா
ளல்லல்சிந்திடவரனையர்ச்சியு மகிலசித்தியுமனையுமென் [ண
றோல்லைநீற்றையளித்தனன்னதை யுண்மையென்றவர்வாங்கி
நெல்லைநெற்றியிலிட்டனர்பசு வரையிலெய்தினரிருவரும்.

(இ-ள்.) நன்மைபொருந்திய கோபர்வதத்தை அடைவீர்; அடைந்து அவ்விடத்தில் உங்களுடைய பிறவித்துன்ப நீங்கும்படி மூன்று நாள் பரமசிவனைப் பூசைசெய்யுங்கள்; அங்ஙனம்செய்தால் சகலசித்திகளும் உண்டாகுமென்றுசொல்லி விரைவாக விபூதிப் பிரசாதங் கொடுத்தருளினார்? அதைஅவர்களிருவரும் உண்மையென்று இரண்டுகைகளாலும்வாங்கி நெற்றியி லணிந்துகொண்டனர்; உடனே கோபர்வதத்திலடைந்தனர். (எ-று.) (க)

கங்கைமூழ்கினர்மங்கைநாயகர் கழல்பணிந்தனர்மூன்றுநா
ளங்கணித்திரையுண்டிவிட்டன ரஞ்செழுத்தையுமோதினா
ரெங்களையருமெங்களம்மையு மிடபவாகனராகியே
தங்குகாட்சிகொடுத்தனரவர் தாமகிழ்ந்துபணிந்தனர்.

(இ-ள்.) அங்கே ஈசான கங்கையில் ஸ்நானம்பண்ணிச் சத்தீச்சுரருடைய திருவடிகளைவணங்கி மூன்றுநாள்பரியந்தம் உண்டியும் உறக்கமும் இல்லாமலிருந்து பஞ்சாக்ஷர ஜெபஞ்செய்தார்கள்; அப்பொழுது எமதுபிதாவாகிய சத்தீச்சுரரும் மாதாவாகிய சிற்சத்தியும் இடபவாகனரூடராயெழுந்தருளிப் பிரத்தியட்சமாகத் தரிசனங்கொடுத்தருளினார்; அதைக்கண்டு அவர்களிருவரும் மனங்களித்து நமஸ்கரித்து நின்றார்கள். (எ-று.) (௰)



வரங்கள்கேளுமினென்றனன்சிவன் மங்கையுமறைவலுமா
கரங்கள்கூப்பிவணங்கியேபவக் கடல்கடந்திடுமாறெமக் [ய்க்
கிரங்கிநின்சரணங்கடந்தரு ளென்றுவேண்டினர்நல்கியே
தரங்கியாதுநம்யோகிசொற்படி தலமுலாவுகவென்றனன்.

(இ-ள்.) நிற்பவர்களைநோக்கிப் பரமசிவன் உங்களுக்குவேண்டியவரங்களைக் கேளுங்களென்று திருவாய்மலர்ந் தருளினார்; அது கேட்டு முருசியும் பிருடிதனும் கைகளை அஞ்சலியாகக் கூப்பி வணங்கி சுவாமி! தேவரீர் அடியேங்களுக்காக இரக்கமுற்றுப் பிறவிச் சமுத்திரத்தை நீந்தும்படி உமது திருவடிகளைத் தெப்பமாகக் கொடுத்துக் காத்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தார்கள்; பரமசிவனும் அங்ஙனே அந்தவரத்தைக்கொடுத்தருளி நீங்கள் மனஞ் சலியாமல் நமதுயோகியினுடைய வாக்கியப்படி ஸ்தலவாசஞ் செய்யுங்கள் என்றுபணித்து. (எ-று.) (கக)

உமாபதிச்சிவனருளினொளி யால்விளங்குகளங்கமில்
விமானநல்கினன்பிருடிதன்சிவன் மேனியாயினனுமைதனைச்
சமானமாயினன்முருசியுந்தடை யின்றியெங்குமுலாவியே
தமர்திடந்தினர்கோபருப்பதர் தக்கசேவடிபுக்கனர்.

(இ-ள்.) உமாபதியாகியபரமசிவன் தமதுகிருபையினால் திவ்வியப்பிரகாசம்பொருந்திய களங்கரகிதமான ஒருதெய்வவிமானத்தையும் கொடுத்தருளினார்; அதில் ஏறினவுடனே பிருடிதன் சிவசாரூபம் பெற்றனன்; முருசி சத்திசாரூபம்பெற்றனள்; இப்படிச் சாரூபம் பெற்ற இருவரும் ஒருதடையுமில்லாமல் எந்தஸ்தலங்களினும் வாசஞ்செய்து பின்பு தமது சிற்சத்தியாகியஉமையவளை இடப்பாகத்திலுடைய சத்தீச்சுரரது தகுதிபெற்ற திருவடிகளிற் சேர்ந்தார்கள். (எ-று.) (கஉ)

பிருடிச்சருக்கம்-முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௬௦அ.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## பதினெட்டாவது,

# சசிவன்னச் சருக்கம்.

வேறு.

காரணர்தம்மைநோக்கி நம்பர்தாமருளிச்செய்வார்
சீரணிதவத்தினோர்கள் சேவையின்பெருமைகேளா
யோரணிபாவவெச்ச னென்றொருமறையோன்மைந்தன்
றாரணிதன்னிற்பாவி சசிவன்னனென்பான்மன்னோ.

(இ - ள்.) திருமாலைநோக்கிப் பரமசிவன் திருவாய்மலர்ந் தருளுகின்றார்; ஓ விஷ்ணுவே! சிறப்புப்பொருந்திய தவத்தை யுடைய பெரியோர்கள் தரிசனத்தின்பெருமையைக் கேட்பாயாக; அழகுமிகுந்த பாகவெச்சனென்று சொல்லுகின்ற ஒருபிராமண



னுடையகுமாரன் உலகத்திற் கொடிதான பாவங்களைச்செய்தவன் சசிவன்னனென்னும் பெயரையுடையவன். (எ - று.) (க)

பத்தரையுன்னையெம்மைப் பரவுவேதத்தைநீற்றை
மெய்த்தருமத்தைநிந்தை விளம்புவதன்றன்கல்வி
நித்தமுங்களவுசெய்த னியமமாமடுத்தார்தம்மைக்
குத்திரஞ்செய்தழுனே குலாசாரமாவதம்மா.

(இ - ள்.) அடியார்களையும் உன்னையும் எம்மையும் யாவருந் துதிக்கப்பட்ட வேதத்தையும்திருநீற்றையும் உண்மையாகிய அறத் தையும் நிந்தைசொல்வதே அவனுக்குக் கல்வியாகும்; தினந்தோ றும் களவுசெய்வதே அவனுக்கு நியமமாகும்; அடுத்தவர்களை வஞ் சித்துக்கெடுப்பதே அவனுக்குக் குலாசாரமாகும். (எ - று.) (உ)

மாதரைக்கிளைஞர்தம்மை வாலரைக்கருவைக்கோவை
வேதியர்தம்மைக்கொல்லும் விரதமேவிரதநல்ல
நீதிகளுடையோர்வீட்டி னெருப்பிட்டும்விடங்களிட்டும்
பாதகப்பொடிகடூவிப் பறிப்பதேயவன்றன்கேள்வி.

(இ - ள்.) ஸ்திரீகளையும் சுற்றத்தாரையும் வாலிபரையும் கருப் பத்தையும் பசுக்களையும் பிராமணர்களையும் கொல்லுகின்ற விரதமே அவனுக்கு விரதமாகும்; நல்லநீதியையுடையவர்களின் வீட்டில் நெருப்புவைத்தும் அவர்களுக்கு விஷமருந்துகளையூட்டியும் சொக் குப்பொடிகளைத் தூவியும் அவர்களிடத்துள்ள பொருள்களைப்பறித் துக் கொள்வதே அவனுக்குக் கேள்வியாகும். (எ - று.) (௩)

பத்திரமெழுதியேவற் பணியினர்போலச்சென்று
குத்திரஞ்செய்துகோளுங் குறளையுமுரைத்துமுன்னை
மித்திரர்போலச்சென்று விருந்துண்டுகளவுகொண்டு
சத்துருவாகப்பேசித் தனிப்பழிதீராநின்றான்.

(இ - ள்.) பொய்யாகக் கடன்பத்திரமெழுதி ஒருவனுடைய வலலாளனைப் போலப்போய்க்கடன்கேட்டுவஞ்சனைசெய்து அவன் மேற்புறங்கூறியும் கோள்சொல்லியும் பழைய சினேகிதனைப்போலப் போய் விருந்துபுசித்து அவர்கள்வீட்டில் களவுசெய்து பின்பு சத்துருவைப்போலப்பேசியும் இகாற்றபழிப்புச் செயல்களில் நீங்காதிருக்கின்றான்.

நிறைந்தபொய்யோலைகாட்டி நிலங்களுந்தனமுங்கொண்டு
மறைத்தவவேடங்கொண்டு வழிக்கரைவருத்தியிட்டும்
பறைச்சியைமனைவியாக்கிப் பாதகரிணக்கஞ்செய்து
மிறைச்சியுமவிலுங்கள்ளு மீயலுமருந்தாநின்றான்.

(இ - ள்.) பொய்யைநிறைத்து எழுதிய சீட்டைக் காண்பித்துப்பூமிகளையும் பொருள்களையும்அபகரித்துக்கொண்டும், பிராமண சந்நியாசிவேடங்கொண்டு வழிக்கரையில் இருந்து வழியே வருகின்றவர்களை வருத்தஞ்செய்து அவர்களிடத்துள்ள பொருள்களைப் பறித்துக்கொண்டும், புலைச்சியை மனையாளாக்கிக்கொண்டு பாதகர்களோடு சினேகஞ்செய்தும், மாமிசமும் அவிலும் கள்ளும் ஈயலும் உணவாகப் புசித்துக்கொண்டும் இருந்தான். (எ-று.) (௫)

சுரர்களாயிவன்றன்வர்க்கஞ் சுவர்க்கத்தையடைந்தோரெல்
தாமிலாநரகில்வீழ்ந்தார் சசிவன்னன்செய்தபாவ [லார்
முரண்முயலகனும்பேயு நோயுமாய்மொய்க்கவீழ்ந்தா
னரகமும்வருவனென்று நடுங்கிடத்தொடங்கிற்றம்மா.

(இ - ள்.) இவனுடைய குலத்திலுள்ளவர்களில் தேவர்களாய் சுவர்க்கத்திற்குப் போனவர்களெல்லாரும் கொடுமையாகிய நரகத்தில் விழுந்தார்கள்; சசிவன்னன் தான்செய்தபாவங்களே வலிதாகிய முயலகவியாதியும் பசாசமும் மற்றெல்லாவியாதிகளுமாகிச் சூழ்ந்துவருத்த மூர்ச்சித்தவனாய்க்கிடந்து வருந்தினான்; நரகமும்இவன்



நம்மிடத்தில்வருவானே இவனைச்சுமந்து எப்படி நாம் சகிப்பதென்று நடுங்கத் தொடங்கிற்று. (எ-று.) (௬)

வெறுத்திடவொருவன்செய்த பாவங்கண்மிக்கஞான்று
பொறுக்குமோதெய்வமிம்மை தன்னிலேபுடைத்துப்பின்னர்
மறுத்திடாநரகில்வாட்டும் புண்ணியமலிக்கஞான்று
கிறுத்துமோவிம்மைகாட்டு நெருப்புநீர்மிகுதிபோலும்.

(இ - ள்.) யாவரும் வெறுக்கும்படியாக ஒருவன்செய்த பாதகங்கள் அதிகமாகமேலிட்டகாலத்தில் தெய்வம்பொறுக்குமோபொறுக்காமல் இகத்திற்றானேவருத்தி மறுமையிலும் ஒருவராலும் தடுக்கப்படாத கொடியநரகத்தில் வீழ்த்திவருத்தும்; அதுபோலப் புண்ணியங்கள் மேலிட்டகாலத்திலும் அதன்பயனைக்கொடாது நிறுத்துமோ நிறுத்தாமல் இகத்திலே காண்பிக்கும்; அஃதெங்ஙனமெனில், நெருப்பு மிகுந்தால் நீரடங்குவதுபோலும் நீர்மிகுந்தால் நெருப்படங்குவதுபோலும். (எ-று.) (௭)

சசிவன்னன்றந்தையென்பான் றரையிடைப்பணிந்துபோற்றி
யிசையுளதேவபத்த னென்னுமாதவனைநோக்கி
விசையுளமைந்தன்செய்த வினையெலாம்விளங்கச்சொன்னான்
கசிவுடைத்தேவபத்தன் கருணையாலுபதேசிப்பான்.

(இ - ள்.) சசிவன்னன்படுகின்ற துன்பத்தை அவன் பிதாவாகிய பாவவெச்சன்கண்டு மனஞ்சகிக்காதவனாகிக் கீர்த்தியுள்ள தேவபத்தரென்னும் ஒரு பெரியவரைப்பார்த்துப் பூமியில்விழுந்து வணங்கித் துதித்துநின்று குரூரமான தனதுபுத்திரன்செய்த சகல தீவினைகளையும் நன்றாகத்தெரியும்படி விண்ணப்பஞ் செய்தான்; அதுகேட்டு அன்பையுடைய அந்தத்தேவபத்தரும் கிருபையினால் அநுக்கிரகஞ் செய்கின்றார், (எ-று.) (௮)

அழுங்கியபாவவெச்ச வருண்முதுகுன்றன்முத்தி
வழங்குவான்வைத்தகந்தி வரையுநாற்காதவெல்லைச்
செழுந்திருமலையாள்பூசை செய்தசத்தீச்சரத்திற்
றொழும்புபட்டயனார்பூசை தொடுத்துப்பின்சிருட்டிபெற்றார்

(இ-ள்.) வருத்தங்கொண்ட பாவவெச்சனென்னும் பிராமணனே நீகேட்பாயாக; இருபாவடிவமாகிய பழமலைநாதர் சகலவுயிர்களுக்கும் மோக்ஷத்தைக் கொடுக்கும்பொருட்டு வைத்திருக்கின்ற கோபர்வதமும் நாற்காதவழியிலிருக்கின்றது; செழுமைபொருந்திய அழகியபர்வத ராஜபுத்திரியாகிய உமாதேவிபூசித்த அந்தச் சத்தீச்சரத்தில் முன்பு பிரமதேவரும் தொண்டுபூண்டு சிவபூசை செய்து பின்பு சிருஷ்டித்தொழிலைப்பெற்றார். (எ-று.) (௯)

பூருவமகவான்பூசை புரிந்துவானரசனானா
னேருறுமிந்திராணி பூசைபாலவனைச்சேர்ந்தா
டாருகாசுரன்பூசித்துத் தானவர்க்கரசனானா
னாருறுவெள்ளிபூசித் தவர்புரோகிதனுமானான்.

(இ-ள்.) பூர்வத்தில் தேவேந்திரன் அந்தஸ்தலத்தில் பூசைசெய்துசுவர்க்கலோகத்திற்கு அதிபதியாயினான்; அழகுபொருந்திய இந்திராணியானவள் பூசைசெய்து அந்த தேவேந்திரனைப் புருஷனாகப்பெற்றாள்; தாருகாசுரன் பூசைசெய்து அசுரர்களுக்கு அதிபதியாயினான்; நண்ணிய அறிவுமிக்கசுக்கிராசாரியர் பூசைசெய்து வேண்டியசித்திகளை அடைந்ததுமன்றி அந்த அசுரர்களுக்குக் குருவுமாயினார். (எ-று.) (௧௦)

உருவசிபூசையாலே யுயர்மகவானைச்சேர்ந்தா
ளிருமலகந்திவெற்பி னீயுநின்மகனும்போகித்



தருமதானங்கள்செய்து சத்திநாதனையும்போற்றிப்
பருவரைதனின்மார்க்கி பராயணரிருப்பர்கேண்மோ.

(இ-ள்.) உருவசியானவள் பூசைசெய்து உயர்ந்த தேவேந்திரனைக்கூட்டினாள்; இத்தகைய அந்தப் பரிசுத்தமாகியகோபர்வதத்திற்கு நீயும் உன்குமாரனும்போய் தருமதானங்களைச்செய்து சத்தீச்சுரரையும் வணங்கித்துதித்துப் பின்பு அந்தப் பருத்தகோபர்வதத்தில் மார்க்கிபராயணரென்னும் பெரியவரிருக்கின்றார்; அவரைப்பற்றிக் கூறுவோம் கேட்பாயாக. (எ-று.) (௧௧)

போற்றியென்பது அடுத்தசெய்யுளில் பண்ணின் என்பதனோடு முடிந்தது.

அந்தமாயோகிதன்னை யானதசேவைபண்ணின்
மைந்தனோயகலுமென்றான் மறைமுனிவாக்கைநம்பி
யிந்தமால்வரையினண்ணி யீசானகங்கையாடித்
தந்தையுமகனுஞ்சத்தித் தலைவனைப்பணிந்துபோற்றி

(இ-ள்.) அந்தபெருமைபெற்ற யோகீச்சுரரையும் நீங்காதிருந்து தரிசனஞ்செய்தால் உன்குமாரனுடைய பிணிகளெல்லாம் நீங்கி விடுமென்று அனுக்கிரகஞ்செய்தார், அந்த தேவபத்தருடைய திருவாக்கை உபதேசமாகநம்பி பாலவெச்சனும் அவன்குமாரனும் இப்பெருமையையுடைய கோபர்வதத்தினை அடைந்து ஈசானகங்கையில் ஸ்நானஞ்செய்து சத்தீச்சுரரை வணங்கித் துதித்து. (எ-று.) (௧௨)

பரமதேசிகமார்க்கி பராயணர்தம்மைப்போற்றி
யுரமுறப்பணிந்துசேவை யுற்றபின்மைந்தன்செய்த
கரவுடைப்பவங்கள்சொன்னான் கடைக்கணால்யோகிநோக்க
விரவுபாதகங்களெல்லா மேவிடாதகன்றவன்றே.

(இ-ள்.) பரமாசாரியாராகிய மார்க்கிபராயணரைத்துதித் துப்பூமியிற் சரீரம்பொருந்தவணங்கித் தரிசனஞ்செய்தபின்பு பாவ

வெச்சனென்னும் பிராமணன் தன்புத்திரன்செய்த வஞ்சகமுள்ள பாதகங்களை விண்ணப்பஞ்செய்தான்; அதுகேட்டு அந்த மார்க்க பாராயணர் தமது கிருபாகடாக்ஷத்தினால் பார்த்தமாத்திரத்தில் அவனிடத்திற்சேர்ந்துள்ள சகலபாதகங்களும் மேவிடாமல் நீங்கி விட்டன. (எ-று.)

புணர்ந்தபாவமெலாம் பரிபூரணமுணர்ந்த ஞானிவிழிபடவோடுமே" என்பது பிரமாணம். (கஉ)

யோகிதன்பூசைக்கேற்ற வுபகரணங்கள்செய்தும்
போகமார்பசுக்கண்மேய்த்தும் பொற்பதப்பிடித்துநின்றான்
வேகியபவங்களீங்க வியாதியும்வலியும்பேயு
பேகியவுடனேபின்னர்ப் பரிகலச்சேடமீந்தார்.

(இ-ள்.) அதன்பின்பு சசிவன்னன் அந்தயோகீச்சுரருடைய பூசைக்குத்தகுந்த உபகரணங்களைச் சேர்த்தும் செல்வத்தைத் தருகின்ற பசுக்களைமேய்த்தும் அவரது அழகிய திருவடிகளைப் பிடித்தும் இருந்தான்; அங்ஙனமிருக்குங்காலையில் அவன்செய்துள்ள கொரோமாகிய பாவங்களெல்லாம் நீங்க உடனே பலவியாதியும் பிரதானமானமுயலகவலியும் பசாசும் நீங்கின; பின்பு அந்த யோகீச்சுரர் தமது பரிகலப் பிரசாதம்கொடுத்தருளினர். (எ-று)

பரிகலச்சேடங்கொண்டு பதத்தினிற்பூசைசெய்தா
னரியசீர்யோகிசாத்தி யடியிணைதலைமேல்வைத்துத்
தெரிவுறவுபதேசித்தார் திவ்வியஞானம்பெற்றுத்
தரிவுளமுத்திபெற்றான் றந்தையுமுத்திபெற்றான்.

(இ-ள்.) சசிவன்னன் பரிகலப்பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு அவரது திருவடியிற் பூசைசெய்தான்; அவ்வணம்பூசை செய்தவளவில் அந்தயோகீச்சுரர் அரிதாகியதிருநீற்றை அவனது



நெற்றியலணிந்து இரண்டுபாதங்களையும் அவன்சிரசின்மேற்சூட்டிப் பிரமோபதேசத்தைத் தெளிவுபொருந்த உபதேசித்தார்; அதனால் திவ்வியஞானத்தையடைந்து நித்தியமாயுள்ள மோக்ஷத்தைப்பெற்றான்; அவனதுபிதாவாகிய பாவவெச்சனும் மோக்ஷத்தை எய்தினான். (எ-று.) (கரு)

பிதிர்க்களுநரகைவிட்டுப் பெருஞ்சிவலோகஞ்சேர்ந்தார்
கதிச்சசிவன்னன்மாதற் புலைச்சியுங்கதியிற்சேர்ந்தாள்
மதித்திருமாலேகேளாய் மாதவர்பெருமைதன்னைத்
துதிக்கரிதின்னுஞ்சொல்வோஞ் சவலையென்றொருத்திவேசி.

(இ-ள்.) அவனுடைய பிதிர்க்களும் நரகத்தைவிட்டுப் பெரிதாகிய சிவலோகத்திற் சேர்ந்தார்கள்; அங்ஙனமுத்தியைப்பெற்ற சசிவன்னனுடைய ஆசைமனைவியாகிய பறைச்சியும் கதியைப்பெற்றாள்; ஆதலால் அறிவின்முதிர்ந்த விஷ்ணுமூர்த்தியே கேட்பாயாக; பெரியோர்களுடைய பெருமையைச் சொல்லதரிதாகும்; ஆயினும் இன்னமுஞ்சொல்லுகின்றோம்; சவலையென்னும் பெயரையுடைய ஒருவேசை இருந்தாள். (எ-று.) (கசு)

நகையினானகைக்கப்பண்ணு நடையினானடையைமாற்றுந்
தகையினாற்றகைவுசெய்யுந் தனத்தினாற்றனத்தைவாங்கு
மிகையினால்விழித்துநோக்கி விழித்திடப்பண்ணுமிந்த
வகையினான்மனிதரோவானவர்களுமஞ்சுவாரால்.

(இ-ள்.) அவள்தனதுநகைக்கின்றநகைப்பினால் ஞானவலிமையையுடையவர்களுள்ளத்திலும் காமம்விளையச்செய்து அவரைப் பிறர் நகைக்கும்படிசெய்வாள்; தனதுநடையினால் அவர்கள்ஞான நடையையும்தமோறச்செய்வாள்; தனதுஅழகினால் அவர்களைப் புறத்திற்செல்லவொட்டாமல் தடுத்துவிடுவாள்; தனது ஸ்தனங்க

னால் அவர்கள் கல்விப்பொருளையும் பறித்துக்கொள்வான்; வஞ்ச கநிறைந்தகண்களால் விழித்துப்பார்த்து எவர்களையும் பிரமிக்கச் செய்வான்; இப்படிப்பட்ட தன்மையினால் அவனைக்கண்டால்மனிதர்கள்மட்டுமோ தேவர்களும் பயப்படுவார்கள். (எ-று.) (கஎ)

வழுவிலாப்பொருண்மிக்குள்ளார் மணந்தவர்த்தணந்தஞான்
மழும்விழுமாசைகூறி யருக்கிடுநல்லோர்க்காணிற் [று
றொழுதுளையிருத்துநஞ்சிற் சோரமுஞ்செய்யுமன்றித்
தழுவியும்பொருளைவாங்குந் தவறினாற்கொறல்செய்யும்.

(இ - ள்.) குற்றமில்லாத அதிகதிரவியத்தையுடையவர்கள் கூடிப் பிரிந்தகாலத்திலும் அழுவன்; அல்லாமலும் ஆசைப்பெருக்கங்கூறி அவர்கள்மேல்விழுவன்; அச்சமுற்றவன்போல் நிற்பன்; நல்லவர்களைக்கண்டால் கும்பிட்டழைத்து மனையிலுள்ளிருக்கச் செய்வன்; அவர்கள் நித்திரைசெய்தால் அவர்களிடத்துள்ள பொருள்களைக் களவுசெய்வன், அவர்வளைக்கூடியும் பொருளைப் பறிப்பன்; அதற்குத்தவறினால் கொன்றுவிடுவன். (எ-று) (கஅ)

வேசிதானிளைஞர்க்காணில் விருந்திட்டுமருந்தையிட்டும்
பாசமாய்த்தழுவிப்பொய்யே பழமைபாராட்டிச்சேர்ந்தும்
வாசமர்பொடிகளிட்டும் வதைசெய்தும்வாழுநாளி
லாசினாற்பிணிகண்மூடி யவயவமழிந்துபோனாள்.

(இ - ள்.) அந்தவேசையானவன் வாலிபரைக்கண்டால் விருந்துசெய்தும் மருந்திட்டும் அவர்களை அன்புபோலத் தழுவிப் பொய்யாகப் பழமைபாராட்டிக்கூடியும் அவர்களுக்கு வாசனைபொருந்திய சொக்குப்பொடிகளைத்தூவியும் அவர்களைக்கொன்றும் இப்படி வாழுகின்றகாலத்தில் அவன்செய்தபாதகங்களால் வியாதிகள் மூடிக்கொண்டு அவயவங்கள் அழிந்துகின்றான். (எ-று.) (கசு)



வருத்தமேலிட்டஞான்று மாதவரொருவர்நண்ண
வருத்தியாற்பணிந்துபாதம் விளக்கிநல்லமுதமூட்டித்
திருந்தியகந்தஞ்சாத்திச் சேடமுந்தீர்த்தந்தானுங்
கருத்தினாற்கொண்டாளன்று கடும்பிணிதீர்ந்ததன்றே.

(இ - ள்.) அவ்வனம் துன்பமேலிட்டகாலத்தில் அந்தவேசையானவன் மகாதவத்தையுடைய ஒரு சிவயோகியார் எழுந்தருளிவர அவரைக்கண்டு ஆசையால் வணங்கிநின்று அவருடையதிருவடிகளை அபிஷேகஞ்செய்து அவருக்கு நன்மையான திருவமுது ஊட்டித் திருந்தமாகிய சந்தனம்பூசிப் பின்பு பரிகலப்பிரசாதமும் பாததீர்த்தமும் அன்பாக உட்கொண்டான்; அப்பொழுதே அவனைச்சூழ்ந்த கொடியவியாதிகளெல்லாம் நீங்கிவிட்டன. (எ-று.) (உ0)

அவண்மனந்தெளிந்தாளென்னை யடிமைகொண்டருளுமென் [ரு
னிவனுபதேசம்பண்ணி யிருபதந்தலைமேற்சூட்டப்
பவமறுத்தெம்மைச்சேர்ந்தாள் பாசத்தோர்சுவர்க்கஞ்சேர் [தார்
கவுரியிற்பற்றத்தொண்டர் காதலினிருப்போமென்றார்.

(இ - ள்.) அதன்பின்பு அந்த வேசையானவன் சித்தசுத்தியுள்ளவனாகி அவரைவணங்கி ஓ சுவாமி! என்னையடிமைகொண்டு காத்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தான்; அதுகேட்டு அந்த சிவயோகியாரும் அவ்வனமே ஞானோபதேசஞ்செய்து இரண்டுதிருவடிகளும் அவன் சிரசின்மேற் சூட்டினவளவில் பிறவிநீங்கி எமது திருவடியிற் சேர்ந்தான்; அவனது சுற்றத்தாரும் சுவர்க்கத்திற்போனார்கள்; ஆகையினால் உமையவளிடத்தில் நாம் வைத்திருக்கும் விருப்பைப்பார்க்கிலும் பத்தர்களிடத்தில் அதிக விருப்புவைத்திருப்போமென்று அருளிப் பின்னும் கட்டளையிடுகின்றார். (எ-று.)

மாயனேதொண்டர்க்கீந்த வளமெலாநமக்கேயாகு
மேயவரிடத்தேயாமும் விருப்பமாயிருப்பதென்று
ஞாபனும்பூசைபண்ணி யடியிணைதலைமேல்வைத்து
நேயமாமுண்மைகேட்டு நிருத்தமுமன்றிற்கண்டான்.

(இ - ள்.) ஓ விஷ்ணுவே! நீ கேட்பாயாக; அடியார்களுக்குச் செய்த சகலநன்மைகளும் நமக்குச்செய்தவாகும்; நாமும் அவர்களிடத்திற்றானே எப்போதும் விருப்பமாகப் பொருந்தியிருப்பதென்று அநுக்கிரகஞ்செய்தருளினார்; அதுகேட்டு அந்த விஷ்ணுமூர்த்தியும் பரமசிவனைப் பூசித்து இரண்டு திருவடிகளையும் சிரமேல் வைத்துக்கொண்டு அன்பதிகரிக்கும் மெய்ஞ்ஞானவுபதேசத்தைப் பெற்றுச் சிதம்பரத்தில் நடனதரிசனமும் பெற்றார். (எ-று.) (உஉ)

கருக்குழிவேண்டிற்கொல்லுங் காலனைவேண்டிற்செக்கி
னொருக்குணவேண்டினந்த நேசரைநிந்தைசெய்மின்
றிருக்கிளர்செல்வம்வேண்டிற்றிகழ்முத்திவேண்டிற்றொண்ட
வருக்கமேபோற்றுமென்று மறைந்தனன்மன்றுளாடி. [ர்

(இ - ள்.) பிறவிக்குழியைவேண்டினால் கொல்லுகின்ற யமனைவேண்டினால் செக்கினிடத்தில் நெருக்குண்ணவேண்டினால் நமது அடியார்களை நிந்தைசெய்யுங்கள்; இலக்குமிவிலாசம் பொருந்திய செல்வம்வேண்டினால் பிரகாசிக்கின்ற மோக்ஷம்வேண்டினால் அடியார்கள் கூட்டத்தை வணங்குங்கள் என்று அநுக்கிரகஞ்செய்து சிதம்பரத்தில் நடனஞ்செய்தருளிய பரமசிவன் சிதாகாசத்தில் மறைந்தருளினார். (எ-று.) (உஉ)

புராரிதான்மறைதல்கண்டு போதகவுறைப்பினாலே
முராரிமுன்னிற்றல்போல முதல்வனைப்பணிந்துபோற்றிக்



காரிம்மலர்கள்கொண்டு கழலிணைபூசைசெய்து
காரிவைகுந்தஞ்சென்று நயந்தனனுண்மைநிட்டை.

(இ - ள்) திரிபுராந்தகராகியபரமசிவன் மறைந்தருளினதைக் கண்டு உபதேசவுறுதியினால் அப்பரமசிவன் முன்னே நிற்பதுபோலக்கொண்டு முரனையழித்தவரும் சாத்திகமூர்த்தியுமாகிய திருமால் அவரை வணக்கித்துதித்துக் கைகளில் வண்டுகள் மொய்க்கின்ற புஷ்பங்களைக்கொண்டு இரண்டுதிருவடிகளையும் பூசித்து வைகுந்தத்தையடைந்து உண்மைநிஷ்டையிலிருந்தார். (எ-று.)

முன்றிருமாலுக்கீந்த முதுகுன்றிலுபதேசித்து
மன்றிலேயாடல்செய்யும் வழக்கினான்மன்றுங்குன்று
மொன்றெனவறிந்தோமன்றி யுயர்மன்றிற்றிருக்கூத்தாடிக்
குன்றிலேயிருப்பபோமென்ற கொள்கையுமிதனாற்கண்டோம்.

(இ - ள்.) முற்காலத்தில் விஷ்ணுமூர்த்திக்கு இந்தவிருத்தாசலத்தில் உபதேசஞ்செய்து சிதம்பரத்தில் திருநடனதரிசனங் கொடுத்தருளியமுறைமையால் சிதம்பரமும் விருத்தாசலமும் ஒன்றென்றுதெரிந்தோம்; அல்லாமலும் உயர்ச்சிபொருந்திய சிதம்பரத்தில் திருநடனஞ்செய்து விருத்தாசலத்தில் வீற்றிருப்போமென்று பரமசிவன் முன்திருவாய்மலர்ந்தருளிய தன்மையையும் இதனாலறிந்தோம். (எ-று.) (உ௪)

இரதமாகுளிகைநன்றே விரும்புபொன்னாகுமின்னம்
வரமுளமிருதசஞ்சீவனமுண்டேன்மடிந்தாருய்வ
ரனருள்பெற்றானந்த பதவியுமடைவர்நல்ல
குரவனேசிரமைந்தன் பெருமைதான்கூறற்பாற்றோ.

(இ - ள்,) இரசகுளிகையானது நன்மையுள்ளதாயிருந்தால் இரும்பு பொன்னாவது சத்தியம்; மேன்மையான மிருதசஞ்சீவன

மென்னும் மந்திரசித்தியும் மருந்துமிருந்தால் இறந்தவர்கள் பிழைப்பார்கள் அவைபோல வலமிருந்த சற்குருவினிடத்தால் எவர்களும் சிவகடாக்ஷம்பெற்று சாலோகசாமீப சாரூபசாயுச்சியமென்னும் நான்குபதத்தையும் பெறுவார்கள்; அங்ஙனம் சற்குருதரிசனம் பெற்ற சற்சிஷனதுபெருமை எம்மால் அளவிட்டுச்சொல்ல முடியுமோ. (எ-று.) (உக)

(வேறு.)

அத்தன்விருத்தகி ரிக்கதைதனைத்தொழு தர்ச்சனைசெய்
தவர் பற்றிவரைந்தவர், சத்தமுரைத்தவ ரத்தமுரைத்தவர்
சந்நிதிசொன்னவர் தஞ்செவியுற்றவ, ரெத்தனைமாதர்களைத்
தனைவேதிய ரீன்றவராயின மெக்கொலைசெய்யினு, மெத்திய
பொன்சிவ னத்தமெடுக்கினும் வெண்சுரையுண்கினு மேவி
லரர் பாவம்.

(இ-ள்.) பரமசிவனுக்குரிய விருத்தாசல புராணத்தை வணங்கிப்பூசித்தவர்கள் அதைவிடாமல் எழுதினவர்கள் அதை ஓசையாகப்படித்தவர்கள் அதற்குப் பொருள்சொன்னவர்கள் அதைச் சிவசந்நிதானத்திற் றறிவித்தவர்கள் அங்ஙனஞ்சொல்லிப்பதைத் தங்கள் செவியினிடமாகக் கேட்டவர்கள் இவர்களெல்லாரும் எவ்வளவுஸ்திரீகள் எவ்வளவுபிராமணர்கள் தாய்தந்தைகள் பசுக்கள்முதலிய எண்ணக்கொலைபாதகங்களைச் செய்தாலும் பிரகாசிக்கின்றபொன்னையும் சிவாலயப்பொருளையும் களவுசெய்தாலும் மதுபானஞ்செய்தாலும் அவைகளால் ஒருபாவத்தையும் பொருந்தார்கள். (எ-று.) (உஎ)

ஒப்பியபாதக மத்தனையுப்புரை கத்துரிபோல வொருக்
கியருக்கனை, செப்பிருளெப்படி யப்படியாகுவ செத்தனை
வேண்டின சத்தனையுப்பவர், கைப்படுமுத்திகள் வித்தைகள்



சித்திகள் கைப்படுமிக்கதை செப்புமிடத்தினி, லப்பனுமம்
மையு மத்தலமேவுவ ரந்தியகாலமும் வந்தெதிர்நிற்பார்.

(இ-ள்.) அவர் தம்மாற்பொருந்தியசகலபாவங்களும் பாம்பினுடையதோல் உரிபட்டுப்போவதுபோலவும், சூரியனுடைய சந்நிதியிற் பட்ட இருளெப்படிபோமோ அதுபோலவும் நசிக்கப்பெறுவார்கள்; அல்லாமலும் எவற்றைவிரும்பினாலும் அவைகளெல்லாம் அவர்களுக்குக் கைவசமாகும்; மோக்ஷமும் வித்தைகளும் சித்திகளும் கைவசமாகும்; இந்தப்புராணத்தைப் படிக்கின்றஸ்தானத்தில் பரமசிவனும் சிற்சத்தியும் அதுவேஸ்தலமாக எழுந்தருளியிருப்பார்கள்; அன்றியும் தேகாந்தத்திலும் வந்து தரிசனமளிப்பார்கள். (எ-று.) (உஅ)

சத்துருநாசமடைந்தளகேசன் றனக்கிணையாவர் மலர்த்
திருமேவுவர், வித்தகராகுவரிம்மையின்வெம்மைகள் வேந்த
சிராசிகள் பாம்புபசாசுகள், பத்திரமாமிரு கப்பயமற்றிருபத்
தொருகோடி யவர்க்குளகால்வழி, யத்தனையும்பத மெய்து
வர் புத்தக மங்கைதரிப்பினு மப்படியாமால்.

(இ-ள்.) சத்துருவாதையில்லாமல் செல்வத்திற் குபேரனுக்கொப்பாக வாழ்வார்கள்; அன்றியும் இலக்குமிவசிக்கப் பெறுவார்கள்; ஞானசொரூபராவார்கள்; இவ்வுலகில் வெவ்விதான கொடுமைகளும் இராஜபயமும் சோரபயமும் சர்ப்பபயமும் பசாசபயமும் அஸ்திரபயமும் மிருகபயமும் இல்லாமல் மறுமையில் தாமும் தங்கள் வமிசத்தில் இருபத்தொருகோடி கால்வழியிலுள்ளவர்களும் மோக்ஷத்தை எய்தப்பெறுவார்கள்; அல்லாமலும் இந்தப்புத்தகத்தைக் கைகளில்வைத்திருந்தாலும் பூர்த்தப்பலனைப்பெறுவார்கள். (எ-று) (உக)

வேறு.

இங்கண்மும்மழை பெய்கசெழும்புவி
பொங்கிவாழ்க புரவலனோங்குக

நங்கள்சங்கரன் பூசைநலம்பெற
சங்கரன்னடி யார்கடழைக்கவே.

(இ - ள்.) மாதந்தோறும் மும்மாரி பொழியக்கடவன; செழுமை பொருந்திய உலகம் செல்வமிகுந்து வாழக்கடவது; இந்த உலகத்தையாளுகின்ற அரசன் வாழக்கடவன்; நமது பரமசிவனுடைய பூசையானது சிறக்கக்கடவது; பரமசிவனடியார்கள் எப்போதும் தழைத்துவாழக்கடவர்கள். (எ - று.) (௯௦)

சசிவன்னச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௪௩௮.

விருத்தாசலபுராணம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

ஞானக்கூத்தசுவாமிகள் திருவடிவாழ்க.

S. K. M. PRESS, Madras.

58967
O23:38.2n
N28 V.